வருடாந்த செயலாற்றல் அறிக்கை - 2010



விவசாயத் திணைக்களம்

பேராதனை

இலங்கை

பதிப்பு

விவசாயத் திணைக்களம்
பேராதனை
இலங்கை
2010

இந்த வருடாந்த செயலாற்றல் அறிக்கை இலங்கை, பேராதனை, விவசாயத் திணைக்களத்தின் முன்னேற்றக் கண்காணிப்பு, மதிப்பீட்டு அலகினால் ஆங்கிலத்தில் தொகுத்து எழுதி, தமிழாக்கம் செய்யப்பட்டு, விரிவாக்கப் பயிற்சிப் பிரிவினால் கணினியில் வடிவமைத்து, எண்மான (டிஜிரல்) முறையில் அச்சிடப்பட்டது.

சிறிய பந்திகளை விமர்சிக்கவும், மதிப்பீடு செய்யவும், மேற்கோள் காட்டுவதற்குத் தவிர ஏனைய உரிமைகள் யாவும் ஆக்கியோருடையதே. விவசாயப் பணிப்பாளர் நாயகத்திடம் முன் அனுமதியின்றி இவ் அறிக்கையின் எப்பகுதியையும் மீள் பிரசுரிக்கவோ, அல்லது நிழற்பட பிரதியெடுக்கவோ அல்லது இலத்திரனியல் முறையாக சேமிக்கவோ கூடாது. வர்த்தக நோக்கமற்ற விடயங்களுக்கான அனுமதி சரியான காரணமின்றி நிராகரிக்கப்படமாட்டாது. இலங்கை விவசாய திணைக்களம் வர்த்தக நோக்கமற்ற விடயங்களுக்கு இவ் அறிக்கையைப் பயன்படுத்துவதற்கு கட்டணம் அறவிடுவதில்லை. விவசாய ஆராய்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் இக்கட்டுப்பாடு எவ்விதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது என நாம் நம்புகின்றோம்.

தூரநோக்கு

தேசத்தின் சுபீட்சத்துக்காக விவசாயத்தில் உன்னத நிலையை அடைதல்

பணிக்கூற்று

மேம்படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்பத்தினை அபிவிருத்தி செய்து பரவலாக்குவது தொடர்பான சேவைகளை விவசாயிகளை முன்நிலைப்படுத்தி அதன் சகல பங்குதாரர்களுக்கும் பெற்றுக் கொடுப்பதன் மூலம் தேசத்தின் உணவுப் பாதுகாப்பையும் போஷணைப் பாதுகாப்பையும் உத்தரவாதப்படுத்திய நிலைபேரானதும் சமநிலையான துமான விவசாய அபிவிருத்தியை எய்துதல்.

பணிப்பாளர் சபை

திரு.கே.என்.மான்கோட்டே (விவசாயப் பணிப்பாளர் நாயகம்)

டாக்டர்.டி.எம்.என்.திஸாநாயக்க

திரு.கே.எம்.வகுன்தெனிய

டாக்டர்.ஏ.ஏ.எல்.அமரசிங்ஹ

திருமதி.ஜயன்தி அபேகுனவர்தன

திரு.சுனில் கோவின்னகே

திரு.கே.பியசேன

பொறியியலாளர்.எம்.எச்.எம்.ஏ.பன்டார

திரு.ஏ.எம்.ரி.பீ.அதிகாரி

திரு.ஜீ.விக்ரமசிங்ஹ

சரிபார்த்தவர்

ஆர்.சிவநேசன்

ஒருங்கிணைப்பாளர்

பி.சீ.பீரிஸ்

பக்க வடிவமைப்பு

டி.எஸ்.பாரிஸா

மொழி பெயர்ப்பாளர்கள்

ஆர்.சிவநேசன்

எஸ்.பெரியசாமி

எஸ்.சிவநேசன்

எம்.தவபாலசந்திரன்

ஏ.ஜீ.சீ.பாபு

என்.பரராஜசிங்கம்

எம். ஆர்.எம்.ரம்சி

சீ.பீ.சத்தியமூர்த்தி

ஜீ.தர்மரத்னம்

எம்.கே.எப்.சியாதா

ஜே.எம்.ராஜு

எம். ஆர்.எம்.பவாஸ்

எம்.சீ.எப்.சபீரா

எஸ்.எல்.ரொசறிதாஸன்

தொழில்நுட்ப உதவி

ஈ.எம்.ஐ.சீ.கே.வேரபிட்டிய

எம். ஆர்.எம்.பவாஸ்

பொருளடக்கம்

முன்னுரை ...

1 வானிலை அறிக்கை ... 1

2.1 வயற்பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவகம், மஹாஇலுப்பள்ளமை ... 13

2.1.1 அவரைத்தானியம், எண்ணெய் விதைப் பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம், அங்குணுகொலபெலஸ்ஸ ... 23

2.1.2 பிராந்திய விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம், அரலகன்வில ... 31

2.1.3 பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம், கிளிநொச்சி ... 37

2.2 பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவகம், கண்ணொறுவை ... 41

2.2.1 தாவர வைரசு சுட்டியிடல் நிலையம், ஹோமாகம ... 61

2.2.2 பழப்பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம், ஹொரனை ... 69

2.2.3 உணவு ஆராய்ச்சி அலகு, கண்ணொறுவை ... 77

2.2.4 பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் பண்டாரவளை ... 81

2.2.5 பிராந்திய விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம், மாகந்துர ... 85

2.2.6 பிராந்திய விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம், சீத்தாஎலிய ... 89

2.2.7 விவசாய ஆராய்ச்சி நிலையம், தெலிஜ்ஜவில ... 95

2.2.8 விவசாய ஆராய்ச்சி நிலையம், கிராந்துருகோட்டை ... 99

2.3 நெல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவகம், பத்தலகொட ... 103

2.3.1 பிராந்திய விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம், போம்புவளை ... 119

2.4 பண்ணை இயந்தரிமயமாக்கல் ஆராய்ச்சி நிலையம், மஹஇலுப்பள்ளம ... 123

3 தொழில்நுட்ப சேவை நிலையங்கள்

3.1 விதை அத்தாச்சிப்படுத்தல் தாவர பாதுகாப்பு நிலையம், கண்ணொறுவ ... 127

3.1.1 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை கண்ணொறுவை ... 131

3.1.2 தாவர பாதுகாப்புச் சேவை, கண்ணொறுவ ... 139

3.1.3 தேசிய தாவர தடுப்புக்காப்புச் சேவை, கட்டுநாயக்க ... 145

3.1.4 பீடைநாசினிகள் பதிவாளர் அலுவலகம், பேராதனை ... 153

3.1.5 தாவர மரபணு முலவளங்கள் நிலையம், (தா.ம.வ.நி), ... 159

3.2 விதை, நடுகைப்பொருள் அபிவிருத்தி நிலையம், பேராதனை ... 167

3.3 சமூக, பொருளாதார திட்டமிடல் நிலையம், பேராதனை ... 183

3.4 முன்னேற்றக் கண்காணிப்பு, மதிப்பீட்டுப் பிரிவு, பேராதனை ... 191

3.5 இயற்கை வள முகாமைத்துவ நிலையம், பேராதனை ... 195

3.6 விரிவாக்கல், பயிற்சி நிலையம், பேராதனை ... 201

4 துணைச் சேவைகள்

4.1 நிருவாகப் பிரிவு, பேராதனை ... 217

4.2 பொறியியற் பிரிவு, பேராதனை ... 223

4.3 நிதிப் பிரிவு, பேராதனை ... 227

5. வெளியீடுகளும், வெளியீட்டு விரிவுரைகளும் .. 233

6. விவசாயத் திணைக்கள சிரேஷ்ட அலுவலர்கள் .. 243

7. தொழில்நுட்ப அலுவலர்களின் தகைமைகள் .. 255

முன்னுரை

விவசாயத் திணைக்களத்தின் பணிகள் மூலம் ஆண்டொன்றில் அடையப்பெற்ற முன்னேற்றம் தொடர்பாக இவ் வருடாந்த செயலாற்றல் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. சென்ற ஆண்டுகளைப் போன்று மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் மேம்படுத்தப்பட்ட விவசாய தொழில்நுட்பத்தினை விருத்தி செய்தலும் பரவலாக்குதலும், அத்துடன் நிலைபேறான விவசாய அபிவிருத்தியை அடைவதற்குத் தேவையான சேவைகளை வழங்குதலையும் நோக்காகக் கொண்டு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. 2010 ஆம் ஆண்டுக்கான எமது வரவு செலவுத்திட்ட நிதியொதுக்கீடு ரூபா 2312 மில்லியன்களாகும்.

2010 ஆம் ஆண்டில் விவசாய உற்பத்தியையும் அதன் உற்பத்தித் திறனையும் மேம்படுத்தல், இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களுக்கு செலவிடப்படும் அன்னியச் செலாவணியை குறைத்தல், சேதனப் பசளை உபயோகத்தை ஊக்குவித்தல், உயர் தரமுடைய விதை, நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்தலும் விநியோகித்தலும், உயர் கலப்பின விதைகளை விருத்தி செய்தல் ஆகியவற்றின் மீது விஷேட கவனம் செலுத்தப்பட்டது. அரிசியில் சுயதேவைப் பூர்த்தியை அண்மித்துள்ள நாம் இறக்குமதியை கட்டுப்படுத்தும் நோக்கில் அரிசியின் தரத்தினை மேம்படுத்துவதிலும் ஏனைய உணவுப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் முன்னுரிமையளித்துள்ளோம்.

திணைக்களத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக பல்வகையிலும் பங்களிப்புச் செய்த சகல திணைக்கள ஊழியர்களிற்கும் நான் நன்றியுடையவனாவதோடு இவ் அறிக்கையை தயாரிப்பதில் ஒத்துழைத்த சகல அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

கே.என்.மான்கோட்டே

விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

1. வானிலை அறிக்கை

2009/2010 பெரும்போகம் (செப்ரெம்பர்–பெப்ரவரி), 2010 சிறுபோகம் (மார்ச்–ஆகஸ்ட்) ஆகிய காலப்பகுதியில் இலங்கையின் பல்வேறு விவசாய காலநிலை வலயங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 13 விவசாய வானியல் நிலையங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட வானிலை தரவுகளை சுருக்கமாகக் காட்டுகின்ற இவ்வறிக்கையினை விவசாயத் திணைக்களத்தின் இயற்கை வள முகாமைத்துவ நிலையத்தின் விவசாயக் காலநிலை அவதானப் பிரிவு தயாரித்துள்ளது.

தாழ்நாட்டு ஈரவலயம்

போம்புவெல (WL$_{1b}$)

பெரும்போகத்தில் பருவகால மழைவீழ்ச்சி, இப்பிராந்தியத்தின் நீண்டகால சராசரியுடன் ஒப்பிடும் போது எதிர்பார்த்ததை விட 20% குறைவான தொகையாகும். இவ்வலயத்தில் இப்பருவகால மழைவீழ்ச்சிக் குறைவுக்கு சாதாரண மழை வீழ்ச்சி ஒக்டோபர் – ஜனவரி மாதங்களில் குறைந்து காணப்பட்டதே காரணமாகும். அதே நேரம் நவம்பர் மாதத்தில் குறிப்பிட்டளவு அதிகமாக எதிர் பார்த்ததை விட கூடி இருந்தது. எவ்வாறாயினும் மழை வீழ்ச்சி பரம்பல் நம்பகத்தன்மையற்றதாயினும் இது விவசாய உற்பத்தியில் மற்றய காலநிலை காரணிகள் இவ்வலயத்தில் சாதகத் தன்மையைக் கொண்டிருந்ததால் விஷேசமாக சாத்தியமான ஆவி–ஆவியுயிர்ப்பில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

மாறாக பருவகால மொத்த மழைவீழ்ச்சி 2010 சிறுபோகத்தில் 48% ஆனது ஒப்பீட்டளவில் அதன் நீண்ட கால சராசரியை விட கூடுதலாகும். இது நிலைமைக்கு மாறான நேர்மையான மழை வீழ்ச்சி மார்ச் – ஜூன் வரையான காலப்பகுதியில் தென் மேற்கு பருவமழையின் காலத்திற்கு முன்னரே அனுகூல பூர்வ பலமான வீழ்ச்சியின் காரணமாகும். அதே நேரம் ஏனைய விவசாய வானிலை காரணிகளான சாத்தியமான ஆவியுயிர்ப்பு, காற்று வேகம், ஈரப்பதன், மணித்தியாலயத்தின் பிரகாசமான சூரிய வெளிச்சம் என்பன 2010 சிறு போகத்தில் வெற்றிகரமான பயிர் உற்பத்திக்கு உகந்த காரணிகளாக அப்படியே மாறாமல் இருந்தன.

மத்திய நாட்டு ஈரவலயம்

பேராதனை (WM$_{2b}$)

இப்பிராந்தியத்தில் கிடைத்த மொத்தமான பெரும்போக மழைவீழ்ச்சி நவம்பர் – டிசம்பர் காலப்பகுதியில் எதிர்ப்பார்த்ததை விட 35% அதிகமாக, சாதாரண மழைவீழ்ச்சியை விடவும் அதிகமானதாக இது கிடைத்தது. வழக்கமான வரட்சி காலநிலையும் இரவில் குளிரும் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் நிலவியது. 2009/2010 பெரும்போகத்தில் பயிர்ச்செய்கையின் வலுவான வளர்ச்சிக் கட்டங்களின் போது மண் ஈரப்பதன் அழுத்தத்தை கூட்டக் கூடிய சந்தர்ப்பங்கள் அரிதாகவே காணப்பட்டது.

பருவகால சராசரி மொத்த மழைவீழ்ச்சி 2010 சிறுபோகத்தில் அதன் நீண்டகால சராசரியுடன் ஒப்பிடுகையில் 60% உயர்வாகக் காணப்பட்டது. இதற்கு காரணம்; ஏப்ரல், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் பெறப்பட்ட சாதாரண மழை வீழ்ச்சியின் உயர்வே ஆகும். வழக்கமான ஆகஸ்ட் மாதத்தின் வரட்சி இக்காலங்களில் காணப்படவில்லை. ஆயினும் இக்காலத்தின் ஒவ்வொரு மாதத்தினதும் மழை வீழ்ச்சி சாத்தியமான ஆவி–ஆவியுயிர்ப்பிலும் (முழு காலத்திற்கும்) அதிகமாகவே இருந்தது.

மலைநாட்டு ஈரவலயம்

சீத்தா எலிய (WU$_3$)

2009/2010 பெரும்போகத்தின் மொத்த பருவகால மழை வீழ்ச்சி 1244 மி.மீ. ஆகும். அதாவது நீண்டகால சராசரியை விட 16% அதிகரிப்பாகும். போகத்தின் நவம்பர் –டிசம்பர் மாதங்கள் இரண்டும் சேர்ந்து உயர்ந்த மழை வீழ்ச்சியை பெற்றபோதிலும் ஜனவரி – பெப்ரவரி மாதங்களில் வழமைக்கு மாறாக வரட்சியே காணப்பட்டது. எதிர்பார்க்கப்பட்டது போலவே இக்காலங்களில் ஒவ்வொரு மாதத்தினதும் சாதாரண மழையின் போது சாத்தியமான ஆவி–ஆவியுயிர்ப்பு மிகக் குறைவாக இருந்தது. வளிமண்டலத்தின் குறைந்த ஆவியாதல் நிலைமைகளின்கீழ் மண் ஈரலிப்பு அழுத்தங்களை விருத்தி செய்யும் சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாகவே காணப்பட்டன. இக்காலங்களில் உயர்ந்த வெப்பநிலை 15° C இல் இருந்து 24° C வரையும் தாழ்ந்த வெப்பநிலை 7° C- 15° C வரையும் உறைபனி நிகழ்வு அற்ற சாதாரண பருவகாலத்திற்கு மாறான நிலைமை காணப்பட்டது.

சிறுபோக பருவகால மழை வீழ்ச்சி இப்பிராந்தியத்தில் 2010 ல் 1,125 மி.மீ ஆக உயர் வடைந்தது. இது நீண்ட கால மொத்த சராசரி மழைவீழ்ச்சியின் 45% அதிகரிப்பாகும். இவ் அதிகரிப்பானது மார்ச், மே, ஜூன் மாதங்களில் வழமையை விட உயர்ந்த மழைவீழ்ச்சியினால் பெறப்பட்டதாகும். இருந்தும் இக்காலத்தின் போது மழை வீழ்ச்சியின் பரம்பலும் மற்றய விவசாய வானிலை கட்டமைப்புகளும் வெற்றிகரமான பயிர் வளர்ப்பிற்கு உகந்த இணைப்பாக அமைந்தது இப்போகத்தின் போது ஆகக் கூடிய வெப்பநிலை 19° C – 24° C ஆகவும் தாழ்ந்த வெப்பநிலை 6° C – 16° C இருந்தது.

தாழ்நாட்டு இடை வலயம்

பத்தலகொட (IL_{1a})

2009/2010 பெரும்போகத்தில் சராசரி மொத்த மழைவீழ்ச்சி 12%. அதன் மொத்த நீண்டகால சராசரியுடன் ஒப்பிடுகையில் எதிர்பாரத்ததை விட குறைந்த அளவாகும். இது பிரதானமாக இப்பிரா ந்தியத்தில் ஒக்டோபர்– ஜனவரி மற்றும் பெப்ர வரி மாதங்களில் நிலவிய வரட்சியினால் ஆகும். இருந்தும் இப்பிராந்தியம் ஒப்பீட்டளவில் அதிக மழைவீழ்ச்சியை டிசம்பர் மாதம் பெற்றது. அதே நேரம் சராசரி மாதாந்த சாத்திய ஆவி–ஆவியுயிர் ப்பு ஒவ்வொரு மாதமும் பெற்ற மழைவீழ்ச்சியின் போது மிகவும் தாழ்ந்தே காணப்பட்டது. மற்றைய விவசாய வானிலை காரணிகள் வழமைபோல் உகந்ததாக இருந்தன.

2010 சிறுபோக மழைவீழ்ச்சி 1124 மி.மீ ஆனது இப்பிராந்தியத்தின் நீண்டகால சராசரியின் 62% அதிகரிப்பை காட்டுகிறது. இவ் குறிப்பிடத்தக்க சாதகமான சீரற்ற அதிக மழை வீழ்ச்சிக்கு ஏப்ரல் தொடக்கம் ஜூலை மாதங்களில் மேற்காவுகைச் செயற்பாடுகள் பிரதான காரணமாக அமைந்தன. அத்துடன் மேலான சார்பு நிலைமைகளும் அதிக ரித்த தென்மேற்கு பருவப்பெயர்ச்சி கால நடவடி க்கைகளுமாகும். இப் பருவகாலத்தின் போது ஒவ்வொரு மாதத்திற்குமாக பெறப்பட்ட மொத்த மழைவீழ்ச்சியானது திறள் சாதகமான ஆவி–ஆவியுயிர்ப்பினாலும் இப்பிராந்தியத்தில் மழையை நம்பிய, மற்றும் சிறு நீர்ப்பாசன திட்ட மேட்டுநில நெற்செய்கையினாலும் மண் ஈரலிப்பில் தகைப்பு ஏற்பட வாய்ப்பில்லை.

தாழ்நாட்டு இடை வலயம்

மொனராகலை (IL_{1c})

நிலைமைக்கு மாறான எதிர்மறை மழை வீழ்ச்சியினால் செப்டெம்பர் – ஜனவரி காலப்பகுதியில் 13% குறைவான மழை வீழ்ச்சியே 2009/2010 பெரும்போகத்தில் இப்பிராந்தியத்தில் பதிவானது. எவ்வாறாயினும் இக்குறைவான மழை வீழ்ச்சி குறிப்பிட்ட அளவிற்கு தாக்கங்களை பயிர்ச் செய்கையில் ஏற்படுத்தவில்லை. ஏனெனில் எதிர் பார்க்கப்பட்டதிலும் பார்க்க மேலான மழைவீழ்ச்சி கிடைத்ததனால் ஆகும்.

2010 சிறுபோகத்தின் போது மொத்த பருவகால மழைவீழ்ச்சி 878 மி.மீ. ஆனது அதன் நீண்டகால சராசரியிலும் 55% உயர்வாகும். இக்குறிப்பிடத்தக்க சாதகமான நிலைமைக்கு மாறான பருவகால மழைவீழ்ச்சியானது மார்ச், மே, ஆகஸ்ட் மாதங்களின் சாதாரண மழை வீழ்ச்சியின் அதிகரிப்பினாலாகும். இதன் காரணமாக ஜூன், ஜூலை மாதகாலங்களிற்கு மட்டும் எதிர்மறையான மழை வீழ்ச்சியை அதன் சராசரி சாத்திய ஆவி–ஆவியுயிர்ப்பிற்கு மேலாக பெற்று குறுகிய கால பயிர்களுக்கு உகந்த காலநிலையை உருவாக்கியது.

கிராந்துருக்கோட்டை (IL_2)

2009/2010 பெரும்போகத்தில் சிறந்த, பரம்ப லுடன் கூடிய 1,687 மீ.மீ மழையை இவ்விவசாயச் சூழலியல் வலயமானது மொத்த மழைவீழ்ச்சியாகப் பெற்றது.

சிறுபோகத்தில் கிடைத்த மொத்த மழை வீழ்ச்சி 678 மி.மீ. ஆனது இதன் நீண்டகால சராசரியை விட 60% அதிகமாகும். இப்பிராந்தி யத்தில் இது மார்ச், ஏப்ரல் மற்றும் ஜூலை மாதங் களில் அபூர்வமாக ஏற்படும் வானிலை மாற்றங்களால் கிடைக்கும் அதிக மழையினாலாகும்.

மத்திய நாட்டு இடை வலயம்

குண்டசாலை (IM_{3a})

இப்பிராந்தியத்தின் 2009/2010 பெரும்போக சராசரி மொத்த மழைவீழ்ச்சி 918 மி.மீ. ஆகும். இது நீண்டகால சராசரியின் 14% உயர்வாகும். இதற்குக் காரணம் ஒக்தோபர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் கிடைக்கப்பெற்ற சாதாரண மழைவீழ்ச்சியின் அதிகரிப்பே ஆகும். இச்சாதகமான மழைவீழ்ச்சி மாற்றங்களுடன் இப் பிராந்தியத்தின் மற்ற எல்லா விவசாய வானிலை காரணிகளும் பயனுள்ள பயிர்ச்செய்கைக்கு உதவும் கூட்டிணைப்பை சுட்டிக்காட்டுகிறது.

2010 சிறுபோக பருவகாலத்தின் மொத்த சராசரி மழைவீழ்ச்சி எதிர்பார்த்ததிலும் பார்க்க 20% கூடுதலாக ஏப்ரல், ஆகஸ்ட் மாதங்களில் கிடைத்தது. மற்றய விவசாய வானிலை காரணிகளும் பயிர் வளர்ச்சிக்கு சாதகமாக அமைந்தது.

மலைநாட்டு இடை வலையம்

பண்டாரவளை (IU_{3C})

இப்பிராந்தியத்திலே 2009/2010 மொத்த பெரும்போக மழைவீழ்ச்சி இதன் நீண்டகால சராசரியுடன் ஒப்பிடும் போது 25% ஆக குறைந்து காணப்பட்டது. எனினும் மொத்த சராசரி சாத்தியமான ஆவி-ஆவியுயிர்ப்பு மதிப்பீடுகள் இக்காலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் கிடைத்த மழைவீழ்ச்சியிலும் பார்க்க மிகவும் பின்னடைவாக மண் ஈரலிப்பு தகைப்புக்களை விருத்தி செய்யும் நிலைமைகளை தவிர்த்து நின்றது. இப்பருவ காலத்தில் அதிக வெப்பநிலை 19° C - 29° C ஆகவும் குறைந்த வெப்பநிலை 9° C - 19° C ஆகவும் இருந்தது. மார்ச், ஏப்ரல், மே, ஆகஸ்ட் மாதங்களில் சாதாரண மழைவீழ்ச்சியை விடக் கூடுதலாகப் பெற்ற மொத்த சிறுபோக மழை வீழ்ச்சியை அதன் நீண்டகால சராசரியுடன் ஒப்பிடுகையில் சுமார் 52% அதிகரித்துக் காணப்பட்டது. இந்த அழுத்த ஆவி-ஆவியுயிர்ப்பு மதிப்பீடுகள் மழைவீழ்ச்சியை விட பெரும்பாலான பருவ காலப்பகுதியில் மிகவும் பின்னிலையில் இருந்தது. இக்காலநிலை மழையை நம்பிய மரக்கறிப் பயிர்ச்செய்கைக்கு சாதகமாக இருந்தது. சிறுபோகத்தின் போது அதிகூடிய வெப்பநிலை 23° C - 30° C வும் ஆகக் குறைந்த வெப்பநிலை 11° C - 20° C ஆகவும் காணப்பட்டது.

உலர் வலயம்

மகா இலுப்பள்ளமை (DL_{1b})

DL_{1b} வலயத்தின் வடமத்திய பகுதியினது பெரும்போகத்தின் மொத்த மழைவீழ்ச்சி 743 மி.மீ. ஆகும். இது இதன் நீண்டகால சராசரியுடன் ஒப்பிடுகையில் 26% குறைவாகும். தாமதமான தொடக்கத்துடன் குறைந்தளவு மழைவீழ்ச்சி செப்ரெம்பர்-ஒக்ரோபர் மாதங்களில் பெறப்பட்டமையே இக் குறைவுக்குக் காரணமாகும். எவ்வாறாயினும் வளிமண்டல நீர்த் தேவையானது மழை வீழச்சியை பெற்றுக்கொண்ட ஒவ்வொரு மாதத்தின் செழிப்பான பருவங்களிலும் மிகவும் பின்தங்கியே காணப்பட்டது.

2010 சிறுபோகத்தின் மொத்த மழைவீழ்ச்சி அதன் நீண்டகால சராசரி 384 மி.மீ. உடன் ஒப்பிடும் போது 44% கூடுதலாகும். இவ்வதிகரிப்பிற்கான காரணம் இப் பருவகாலத்தில் ஜூன் மாதத்தைத் தவிர முழு பருவத்திலும் பெற்ற அதிகரிப்பினாலாகும். வளி மண்டல நீர் தேவையானது மழை காலங்களின் முதல் மூன்று மாதங்களிலும் மிகவும் கீழ் நிலையிலேயே இருந்தது. இருந்தும் குறுங்கால மேட்டுநிலப் பயிர்கள் மண் ஈரப்பதன் தகைப்பு நிலைமைகளுக்கு உட்படாமல் நன்றாக தழைத்தோங்கியிருக்கலாம்.

அங்குணுகொலபெலஸ்ஸ (DL_{1b})

DL_{1b} வலய விவசாயப் பிராந்தியத்தின் தென் பகுதி அண்ணளவாக 14% குறைவான மழைவீழ்ச்சியையே 2009/2010 பெரும்போகத்தில் பெற்றது. இந்நிலைமைக்குக் காரணமாக மாறான எதிர்மறை மழைவீழ்ச்சி அமைந்தது. இது பிந்தி துவங்கிய செப்டெம்பர், ஒக்தோபர் மாதங்களில் சாதாரண குறைந்த மழைவீழ்ச்சியினால் ஆகும். அதேவேளை இப்பருவத்தின் மொத்த அழுத்த ஆவி-ஆவியுயிர்ப்பு வளமான போக காலத்தின் போது மாதாந்த மழை வீழ்ச்சியை விடக் குறைந்து காணப்பட்டது.

மொத்த சராசரி மழைவீழ்ச்சி 630 மி.மீ. ஆனது அதன் 45% அதிகரிப்பை 2010 சிறுபோகத்தில் காட்டியது. இந் நேர்மறை நிலைமைக்கு மாறான அதிக மழைவீழ்ச்சி அதன் ஏப்ரல், மே மாதங்களின் பருவ மழையினால் கிடைத்தது. ஏப்ரல் மாதத்தைத் தவிர அதன் அழுத்த ஆவி-ஆவியுயிர்ப்பு பருவ காலத்தின் மற்றைய மாதங்களில் பெய்த மழையை விட அதிகளவில் காணப்பட்டது. எனவே மழையை நம்பியே மே மாதத்தின் பிந்திய பகுதியில் பயிர் செய்யப்பட்ட மேட்டுநில மானாவாரிப் பயிர்கள் மேலதிக நீர்விநியோகம் கொடுக்கப்பட்டமையினால் மண் ஈரப்பதன் தகைப் பிற்கு உட்படவில்லை.

அரலகன்வில (DL_{2b})

செப்டெம்பர், ஒக்தோபர், மற்றும் ஜனவரி மாதங்களின் குறைந்த மழைவீழ்ச்சிக் காரணமாக 2009/10 பெரும்போகம் சாதாரண பருவ மழையின் 14% குறைவைப் பெற்றது. டிசம்பர் மாதத்தில் பெய்த மழை மிகவும் நன்றாக எதிர்ப்பார்க்கப்பட்ட அளவு கிடைத்ததால் அதன் நிலைமைக்கு மாறான எதிர்மறை வீழ்ச்சியை ஈடுசெய்தது. நீருக்கான வளிடண்டலத் தேவையையும் கூட பருவகாலத்தின் பயிர்ச்செய்கையின் போது ஒவ்வொரு மொத்த மாதாந்த மழை வீழ்ச்சியை விடக் குறைவாகவே இருந்தது. எனவே மேட்டுநில பயிர்ச்செய்கையில் மண் ஈரப்பதன் தகைப்பு நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் மிக அரிதாகவே காணப்பட்டன.

சிறுபோகத்தில் ஏப்ரல், மே மாதங்களில் சாதாரண மழையின் அதிகரிப்பினால் மொத்த சராசரி மழை வீழ்ச்சி 40% மாக இருந்தது. ஆனால் பருவகாலத்தின் பின் பகுதியில் வளிமண்டல ஆவியுயிர்ப்புத் தேவை மழைவீழ்ச்சியை விட அதிகமாகக் காணப்பட்டது. இதனால் சிறுபோகப் பயிர்கள் நிரப்பு நீர்பாசனத்தினால் தழைத்தோங்கியது. இயற்கையில் இப் பிராந்தியத்தில் சிறுபோகம் நிலைக்காது. ஆனால் காலநிலை பதிவுகள் 2010 சிறுபோகத்திற்கு நியாயமாக அமைந்ததைக் காட்டுகிறது. இதே போன்ற காலநிலையே 2010 இல் இப்பிராந்தியத்திற் கருகேயுள்ள அதன் அடுத்த பிராந்தியமான IL_2 ல் நிலவியது.

வீரவில (DL_5)

மற்றைய பிராந்தியங்களைப் போலவே DL_5 உலர் வலயத்தின் ஏனைய பகுதிகளுக்குச் சமனாக, விதி விலக்கற்ற முறையில் 29% குறைந்த மொத்த சராசரி மழைவீழ்ச்சியாக 823 மி.மீ ஐ 2009/2010 பெரும்போகத்தில் பெற்றது. இது அதன் நீண்ட கால சராசரியிலும் குறைவாகும். இக்குறைவான மழைவீழ்ச்சி பிரதானமாக செப்டெம்பர், ஒக்தோபர் மாதங்களில் கிடைத்தது. எவ்வாறாயினும் அதிக மழைவீழ்ச்சி பெறப்பட்டது நவம்பர் மாதத்தில் ஆகும்.

அட்டவணை 1.1 2009/10 பெரும்போகம், 2010 சிறுபோகம் ஆகியவற்றின் மொத்த மழைவீழ்ச்சி (மி.மீ)

விவசாய வானியல் அவதான நிலையம்	விவசாய சூழலியல் வலயம்	பெரும்போகம் 2009/10 செப்-பெப்	பத்து வருட சராசரி (1999-08)	சிறுபோகம் 2010 மார்ச் - ஆகஸ்ட்	சிறுபோகம் பத்து வருட சராசரி (1999-08)
போம்புவளை	WL_{1b}	1257.1	1571.9	2097.3	1421.1
பேராதனை	WM_{2b}	1278.1	946.62	1505.3	944.3
சீத்தாஎலிய	WU_3	1244.2	1075.6	1125.5	778.1
பதலகொட	IL_{1a}	913.5	1032.2	1124.4	694.8
மாகந்துர	IL_{1a}	1059.6	1095.6	1162.4	915.7
மொனராகலை	IL_{1c}	1096.8	1265.8	877.8	565.3
கிராந்துருகோட்டை	IL_2	1687.4	1651.4	687.3	428.1
குண்டசாலை	IU_{3c}	918.3	795.5	698.6	586.1
பண்டாரவளை	IM_{3a}	771.97	1038.3	916.8	590.6
மகா இலுப்பள்ளமை	DL_{1b}	743.3	1006.5	552.7	384.2
அங்குனகொலபெலஸ்ஸ	DL_{1b}	650.1	758.9	630.1	432.8
அரலகன்வில	DL_{2b}	1302.7	1515.4	507.3	362.0
வீரவில	DL_5	584.6	823.1	293.8	306.9

அட்டவணை 1.2 மாதாந்த மொத்த மழைவீழ்ச்சி (மி.மீ.) 2009/2010

விவசாய வானியல் அவதான நிலையம்	2009				2010							
	செப்.	ஒக்டோ.	நவம்.	டிசம்.	ஜனவரி	பெப்ர.	மார்ச்	ஏப்ரல்	மே	ஜூன்	ஜூலை	ஆகஸ்ட்
போம்புவளை	253.4	109.9	538.3	230.7	33.8	91.0	221.3	406.2	714.8	338.6	251.0	165.4
பேராதனை	169.4	397.5	372.4	294.9	36.4	7.7	119.2	450.6	126.5	203.0	302.4	303.6
சீத்தாஎலிய	165.2	230.6	350.0	352.3	108.0	38.1	170.4	196.9	218.4	255.1	133.0	151.7
பதலகொட	117.9	209.4	223.7	304.5	55.8	1.7	127.3	311.5	298.5	128.1	160.9	98.1
மாகந்துர	292.6	150.3	270.4	262.6	77.9	5.8	94.8	320.2	498.5	149.7	83.6	15.6
மொனராகலை	16.0	222.9	468.6	271.9	94.2	23.2	159.2	172.7	308.8	49.4	26.4	161.3
கிராந்துருகோட்டை	50.4	211.7	414.3	767.7	171.3	72.0	92.3	311.1	71.2	40.9	116.4	55.4
குண்டசாலை	71.3	238.3	240.3	306.3	45.6	16.5	42.7	255.1	94.2	78.6	79.6	148.4
பண்டாரவளை	27.5	136.2	263.9	285.7	47.6	11.0	192.8	259.1	240.9	51.1	137.6	35.1
மகா இலுப்பள்ளமை	1.0	114.4	312.4	215.0	68.6	31.9	95.4	236.5	63.2	2.6	55.9	99.1
அங்குனகொலபெலஸ்ஸ	79.4	42.2	339.6	155.6	14.2	19.1	35.3	172.0	203.9	73.9	42.5	102.5
அரலகன்வில	25.6	117.3	336.4	652.9	123.7	46.8	21.8	149.6	221.8	35.4	31.8	46.9
வீரவில	22.1	65.1	329.9	146.2	15.3	6.0	18.5	146.0	79.5	14.4	11.9	23.5

அட்டவணை 1.3 பத்து வருட மாதாந்த சராசரி மழைவீழ்ச்சி (மி.மீ.) 1999 - 2008

விவசாய வானியல் அவதான நிலையம்	மாதம்											
	செப்.	ஒக்டோ.	நவம்.	டிசம்.	ஜனவரி	பெப்ரவரி	மார்ச்	ஏப்ரல்	மே	ஜூன்	ஜூலை	ஆகஸ்ட்
போம்புவளை	298.5	536.2	295.2	193.0	157.5	135.1	139.6	282.5	434.0	224.5	152.6	188.0
பேராதனை	132.9	249.0	263.6	161.2	99.3	74.0	145.4	305.3	119.4	153.2	126.7	94.3
சீத்தா எலிய	151.7	243.1	240.3	187.5	203.0	95.2	100.7	167.4	134.4	148.9	123.4	103.3
பதலகொட	114.4	335.7	275.5	148.7	107.7	84.9	120.8	250.2	92.9	96.3	63.3	71.3
மாகந்துர	163.4	419.9	263.7	92.7	73.3	83.8	136.8	246.9	194.2	151.9	85.5	100.4
மொனராகலை	107.7	292.6	344.1	236.8	207.8	123.1	83.8	252.8	78.9	32.3	54.2	63.3
கிராந்துருகோட்டை	79.8	186.3	439.7	426.5	441.3	214.3	117.3	161.9	48.4	18.3	32.4	49.8
குண்டசாலை	78.7	176.5	216.5	164.1	121.4	82.6	114.7	184.4	68.4	90.4	60.6	67.6
பண்டாரவளை	126.4	286.1	259.4	166.8	144.3	80.5	114.7	215.3	112.0	49.5	44.6	54.5
மகா இலுப்பள்ளமை	92.6	273.1	268.1	185.6	117.2	106.1	84.5	183.8	55.1	23.7	19.7	17.5
அங்குனகொலபெலஸ்ஸ	97.0	166.6	228.1	124.5	87.7	72.0	111.4	104.5	75.3	47.9	41.9	51.8
அரலகன்வில	69.2	266.5	399.2	364.3	302.7	162.2	77.3	125.4	48.3	28.0	33.4	49.7
வீரவில	48.9	167.9	292.0	160.6	95.9	65.9	69.8	125.0	44.6	17.9	14.5	35.1

அட்டவணை 1.3 பத்து வருட மாதாந்த சராசரி மழைவீழ்ச்சி (மி.மீ.) 1999 – 2008

	மாதம்											
விவசாய வானியல் அவதான நிலையம்	செப்.	ஒக்டோ.	நவம்.	டிசம்.	ஜனவரி	பெப்ரவரி	மார்ச்	ஏப்ரல்	மே	ஜூன்	ஜூலை	ஆகஸ்ட்
போம்புவளை	298.5	536.2	295.2	193.0	157.5	135.1	139.6	282.5	434.0	224.5	152.6	188.0
பேராதனை	132.9	249.0	263.6	161.2	99.3	74.0	145.4	305.3	119.4	153.2	126.7	94.3
சீத்தா எலிய	151.7	243.1	240.3	187.5	203.0	95.2	100.7	167.4	134.4	148.9	123.4	103.3
பதலகொட	114.4	335.7	275.5	148.7	107.7	84.9	120.8	250.2	92.9	96.3	63.3	71.3
மாகந்துர	163.4	419.9	263.7	92.7	73.3	83.8	136.8	246.9	194.2	151.9	85.5	100.4
மொனராகலை	107.7	292.6	344.1	236.8	207.8	123.1	83.8	252.8	78.9	32.3	54.2	63.3
கிராந்துருகோட்டை	79.8	186.3	439.7	426.5	441.3	214.3	117.3	161.9	48.4	18.3	32.4	49.8
குண்டசாலை	78.7	176.5	216.5	164.1	121.4	82.6	114.7	184.4	68.4	90.4	60.6	67.6
பண்டாரவளை	126.4	286.1	259.4	166.8	144.3	80.5	114.7	215.3	112.0	49.5	44.6	54.5
மகா இலுப்பள்ளமை	92.6	273.1	268.1	185.6	117.2	106.1	84.5	183.8	55.1	23.7	19.7	17.5
அங்குனகொலபெலஸ்ஸ	97.0	166.6	228.1	124.5	87.7	72.0	111.4	104.5	75.3	47.9	41.9	51.8
அரலகன்வில	69.2	266.5	399.2	364.3	302.7	162.2	77.3	125.4	48.3	28.0	33.4	49.7
வீரவில	48.9	167.9	292.0	160.6	95.9	65.9	69.8	125.0	44.6	17.9	14.5	35.1

அட்டவணை 1.4 மாதாந்த அழுத்த ஆவி-ஆவியுயீர்ப்பு (மி.மீ.) 2009/2010

விவசாய வானியல் அவதான நிலையம்	2009				2010							
	செப்.	ஒக்டோ.	நவம்.	டிசம்.	ஜனவரி	பெப்ரவரி	மார்ச்	ஏப்ரல்	மே	ஜூன்	ஜூலை	ஆகஸ்ட்
போம்புவளை	81.6	86.8	55.2	71.9	74.4	76.2	101.7	86.4	76.9	76.9	64.5	67.0
பேராதனை	74.4	86.8	50.4	59.5	89.3	112.0	121.5	84.0	71.9	74.4	71.9	69.4
சீத்தா எலிய	50.4	69.4	38.4	47.1	69.4	91.8	104.2	67.2	57.0	59.5	54.6	*
பதலகொட	84.0	86.8	60.0	62.0	84.3	91.8	111.6	81.6	89.3	86.8	79.4	86.8
மாகந்துர	91.2	89.3	67.2	69.4	96.7	100.8	109.1	86.4	84.3	81.8	111.6	99.2
மொனராகலை	122.4	109.1	50.4	54.6	69.4	85.1	109.1	81.6	91.8	86.8	91.8	91.8
கிராந்துருகோட்டை	103.2	106.6	62.4	*	67.0	69.4	94.2	*	101.7	*	96.7	104.2
குண்டசாலை	96.0	81.8	48.0	52.1	64.5	96.3	104.2	76.8	101.7	71.9	94.2	81.8
பண்டாரவளை	67.2	71.9	40.8	39.7	59.5	71.7	79.4	64.8	64.5	69.4	69.4	9.4
மகா இலுப்பள்ளமை	100.8	76.9	38.4	37.2	54.6	67.2	96.7	64.8	79.4	89.3	94.2	94.2
அங்குனகொலபெலஸ்ஸ	112.8	131.4	60.0	76.9	101.7	112.0	129.0	110.4	99.2	106.6	109.1	124.0
அரலகன்வில	168.0	131.4	55.2	49.6	67.0	69.4	91.8	91.2	109.1	119.0	124.0	129.0
வீரவில	144.0	133.9	79.2	*	74.4	94.1	106.6	91.2	91.8	109.1	121..5	129.0

* – தரவு கிடைக்கவில்லை

அட்டவணை 1.5 உயர்வு, இழிவு வளி வெப்பநிலை (°C) 2009/2010

விவசாய வானியல் அவதான நிலையம்	2009								2010															
	செப்.		ஒக்டோ.		நவம்.		டிசம்.		ஜனவரி		பெப்ரவரி		மார்ச்		ஏப்ரல்		மே		ஜூன்		ஜூலை		ஆகஸ்ட்	
	உ	இ	உ	இ	உ	இ	உ	இ	உ	இ	உ	இ	உ	இ	உ	இ	உ	இ	உ	இ	உ	இ	உ	இ
போம்புவளை	30.4	24.0	31.2	22.9	30.4	22.7	31.0	22.6	31.5	21.7	31.8	22.4	32.3	22.8	32.2	23.8	31.4	23.7	30.7	23.3	30.3	23.5	29.9	25.1
பேராதனை	29.2	21.3	30.6	20.5	29.6	20.6	29.0	20.8	29.4	19.7	31.9	19.2	33.4	20.8	32.8	22.1	31.3	22.3	29.8	22.0	29.3	21.5	28.7	21.6
சீத்தாஎலிய	19.1	12.9	20.5	11.9	19.2	12.8	19.2	12.7	19.7	11.7	21.8	11.4	22.6	12.2	22.3	13.9	*	14.6	*	13.9	*	13.4	*	*
பதலகொட	31.2	23.8	32.3	22.6	31.1	22.7	30.1	22.5	30.1	21.4	32.8	21.2	35.3	22.2	34.1	24.1	32.6	24.4	31.1	24.0	30.7	23.5	30.5	23.5
மாகந்துர	30.6	24.2	32.1	23.6	31.3	23.3	30.5	23.3	31.7	22.3	34.0	22.4	34.9	23.6	33.5	24.6	32.3	25.4	31.6	25.0	31.1	24.7	31.3	24.9
மொனராகலை	36.4	*	35.2	*	29.9	*	30.9	*	30.7	*	32.6	*	35.6	*	35.0	*	34.4	*	34.0	23.1	34.4	22.0	34.7	22.1
கிராந்துருகோட்டை	34.7	23.6	34.6	23.1	31.0	23.2	29.7	23.2	29.9	22.1	31.2	22.2	33.9	23.0	34.6	24.6	35.1	24.9	*	*	*	23.7	34.8	23.7
குண்டசாலை	29.6	21.3	31.0	21.9	29.2	19.9	28.7	19.8	28.1	19.0	31.1	18.4	32.9	19.7	32.5	21.5	31.2	22.0	29.8	21.5	29.2	21.1	28.4	20.9
பண்டாரவளை	27.4	16.8	26.8	15.9	24.5	16.6	23.7	16.6	23.7	15.4	26.5	13.9	27.9	15.2	27.3	17.5	27.8	17.5	27.0	17.6	26.7	16.8	17.2	17.0
மகா இலுப்பள்ளமை	32.7	24.5	33.3	22.8	30.4	22.7	29.7	22.6	30.6	20.9	32.4	21.3	35.1	22.7	34.8	24.6	33.1	25.0	32.9	24.9	33.0	24.1	32.1	24.1
அங்குனகொலபெலஸ்ஸ	32.6	23.6	33.7	23.1	30.7	22.5	31.2	22.7	31.6	21.5	33.1	21.7	34.1	22.8	33.8	23.8	32.4	24.3	32.4	24.1	32.5	23.9	32.7	24.6
அரலகன்வில	35.8	23.2	35.7	22.3	31.5	22.6	30.4	22.6	31.0	21.3	32.3	21.3	35.3	21.9	36.7	23.6	36.0	24.0	35.1	24.2	34.0	23.5	34.4	227
வீரவில	34.5	24.6	34.9	24.2	31.4	23.4	32.8	23.1	31.9	23.8	32.6	23.6	35.0	24.1	34.4	24.7	32.9	25.2	33.6	25.1	34.5	24.6	34.5	24.4

* – தரவுகள் கிடைக்கவில்லை.

அட்டவணை 1.6 சாரீரப்பதன் (%) 2009/2010

விவசாய வானியல் அவதான நிலையம்	2008								2009															
	செப்.		ஒக்டோ.		நவம்.		டிசம்.		ஜனவரி		பெப்ரவரி		மார்ச்		ஏப்ரல்		மே		ஜூன்		ஜூலை		ஆகஸ்ட்	
	கா	மா	கா	மா	கா	மா	கா	மா	கா	மா	கா	மா	கா	மா	கா	மா	கா	மா	கா	மா	கா	மா	கா	மா
போம்புவளை	85	73	83	79	87	72	86	68	83	62	81	64	84	71	84	77	85	78	88	85	87	81	85	79
பேராதனை	74	66	83	76	83	73	77	66	73	57	75	49	83	63	83	70	82	75	83	77	82	73	83	76
சீத்தாஎலிய	83	85	87	95	86	91	81	88	83	92	63	75	71	76	79	81	87	85	95	91	92	85	94	90
பதலகொட	79	66	86	69	87	70	87	72	85	64	87	60	88	64	87	76	88	80	87	82	85	78	83	73
மாகந்துர	81	71	83	71	85	72	84	70	85	70	79	66	84	72	87	78	86	82	89	82	84	73	85	76
மொனராகலை	77	69	83	82	85	83	87	81	86	75	82	59	83	75	85	79	83	73	73	66	71	57	76	65
கிராந்துருகோட்டை	74	57	81	65	86	72	91	74	90	72	84	58	85	64	85	69	76	57	65	49	62	47	73	53
பண்டாரவளை	69	67	82	79	86	79	86	77	85	73	71	59	77	72	80	78	73	71	66	61	65	59	73	68
குண்டசாலை	69	66	82	72	84	72	82	69	78	65	74	48	76	58	80	68	76	67	77	69	74	67	77	69
மகா இலுப்பள்ளமை	75	57	85	69	89	74	91	76	91	68	88	53	87	55	83	63	79	62	81	62	78	57	80	62
அங்குனகொலபெலஸ்ஸ	76	66	79	74	85	79	83	76	83	69	81	68	81	73	80	72	78	73	82	73	79	68	81	73
அரலகன்வில	74	53	77	67	85	73	89	75	89	71	84	57	83	57	82	61	73	59	61	50	65	53	69	57
வீரவில	68	59	78	71	83	79	80	74	79	64	74	59	83	67	79	72	75	69	74	62	68	55	72	60

கா – 8.30 மணிக்கு வாசிப்பு

மா – 15.30 மணிக்கு வாசிப்பு

* – தரவுகள் கிடைக்கவில்லை

அட்டவணை 1.7 நாளொன்றில் பிரகாசமான சூரியக் கதிர்ப்பு மணித்தியாலங்கள் - 2009/2010

விவசாய வானியல் அவதான நிலையம்	2008				2009							
	செப்.	ஒக்டோ.	நவம்.	டிசம்.	ஜனவரி	பெப்ரவரி	மார்ச்	ஏப்ரல்	மே	ஜூன்	ஜூலை	ஆகஸ்ட
போம்புவளை	7.9	6.6	5.7	7.1	8.1	9.2	8.3	7.9	6.6	6.1	6.6	7.4
பேராதனை	8.0	5.1	4.8	6.2	7.8	9.0	6.8	6.7	5.9	5.2	5.0	5.3
சீத்தாஎலிய	5.9	3.8	4.1	4.8	6.9	8.9	6.5	5.8	4.8	4.3	4.2	3.0
பதலகொட	8.4	6.1	5.7	6.9	8.1	9.9	7.9	7.1	7.0	6.8	6.5	6.7
மாகந்துர	*	*	*	*	*	*	*	*	*	*	*	*
மொனராகலை	*	*	*	*	*	*	*	*	*	*	*	*
கிராந்துருகோட்டை	*	*	*	*	*	*	*	*	*	*	5.8	6.5
பண்டாரவளை	7.2	4.3	3.8	4.3	6.4	8.1	6.7	5.5	5.9	8.1	7.4	5.9
குண்டசாலை	7.9	5.5	4.4	5.9	7.5	9.1	7.1	6.2	5.6	5.6	*	*
மகா இலுப்பள்ளமை	8.5	5.4	5.2	5.1	7.0	9.0	7.6	7.1	6.6	7.3	7.0	6.8
அங்குனகொலபெலஸ்ஸ	*	*	*	*	*	*	*	*	*	*	*	*
அரலகன்வில	8.9	7.1	5.7	5.9	7.3	9.5	8.5	8.0	8.1	9.4	8.1	8.1
வீரவில	9.1	6.3	6.2	7.5	8.1	9.6	8.2	6.8	7.3	8.2	8.8	8.2

* - தரவு கிடைக்கவில்லை.

அட்டவணை 1.8 காற்றின் வேகம் (கி.மீ/மணி) - 2009/2010

விவசாய வானியல் அவதான நிலையம்	2008				2009							
	செப்.	ஒக்டோ.	நவம்.	டிசம்.	ஜனவரி	பெப்ரவரி	மார்ச்	ஏப்ரல்	மே	ஜூன்	ஜூலை	ஆகஸ்ட்
போம்புவளை	2.6	1.9	1.7	1.2	1.4	2.3	2.7	2.8	4.7	3.9	3.0	3.0
பேராதனை	1.6	0.8	0.8	2.5	4.1	2.3	0.7	0.7	0.8	0.9	0.9	0.7
சீத்தாஎலிய	11.1	7.8	6.9	5.2	7.2	6.0	6.1	6.1	12.6	17.2	17.2	16.6
பதலகொட	6.0	3.7	3.3	4.5	5.1	4.6	3.2	4.2	8.0	9.1	9.1	8.5
மாகந்துர	5.3	3.6	2.9	3.6	4.9	3.9	3.4	3.6	5.4	5.1	5.1	5.6
மொனராகலை	1.3	1.1	1.1	1.4	1.7	1.7	1.3	1.1	1.6	2.5	2.5	2.0
கிராந்துருகோட்டை	1.8	1.5	1.3	0.3	0.1	0.1	0.2	1.1	2.0	2.5	2.5	3.0
பண்டாரவளை	4.2	3.5	3.1	3.2	3.8	3.7	3.4	3.1	4.0	5.3	5.3	5.4
குண்டசாலை	1.8	1.0	0.9	1.0	1.2	1.0	1.2	1.7	1.6	1.7	1.7	1.6
மகா இலுப்பள்ளமை	7.3	3.6	3.5	4.4	5.1	4.2	2.9	4.1	7.6	10.0	10.0	9.9
அங்குனகொலபெலஸ்ஸ	5.8	4.6	3.7	4.1	5.5	5.1	4.7	5.0	6.5	6.1	6.1	6.7
அரலகன்வில	3.3	2.2	2.1	2.3	2.4	2.5	2.1	2.1	3.8	6.2	6.2	6.9
வீரவில	6.5	3.0	2.0	2.7	3.7	3.1	1.7	2.6	6.1	8.3	8.3	8.3

2.1 வயற் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம் (வ.ப.ஆ.அ.நி.) மஹா இலுப்பள்ளமை

வயற் பயிர்த் துறையில் உற்பத்தியை அதிகரி ப்பதற்கான தொழில்நுட்ப ஆக்கமும் அவற்றை விவசாயிகள் பின்பற்றுவதற்கான உபாயங்கள் தொழில்நுட்ப பிரசாரத்திற்கு உதவுதல் என்ற தொனிப்பொருளை இலக்காகக் கொண்டு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதே வயற் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் மஹாஇலுப்பள்ளமையின் கடமையாகும்.

மறு வயற் பயிர்களில் சுவைசரக்கு பயிர்கள் (மிளகாய், வெங்காயம்) அவரைத்தானியங்கள் (பயறு, கௌப்பி, உழுந்து), எண்ணெய் வித்துப்பயிர் கள் (நிலக்கடலை, சோயாஅவரை, எள்ளு, மற்றும் சூரியகாந்தி) பெருந்தானியங்கள் (சோளம், குரக்கன், இறுங்கு போன்றவை) அடங்கும்.

பிராந்திய ரீதியிலான முக்கியத்துவம் வாய்ந்த பழங்கள், மரக்கறிவகையின் உற்பத்தியை மேம்படுத்துவதிலும் ஈடுபட்டு வருகின்றது.

மேலும் அரச மற்றும் அரச சார்பற்ற விரிவாக்க அலுவலகங்களுடன் இணைந்து, புதிய தொழில்நுட்பங்களை பரப்புவதன் மூலம் நாட்டில் குறிப்பாக உலர் வலயப் பிரதேசங்களில் மறு வயற் பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பதிலும் வயற் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் மகாஇலுப்பள்ளம ஈடுபட்டு வருகிறது.

இதற்கு மேலதிகமாக வயற் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் மகாஇலுப்பள்ளம பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்களையும் முன்னெடு த்து வருகின்றது.

- பிராந்திய முக்கியத்துவம் வாய்ந்த மறு வயற் பயிர்கள், மரக்கறி பயிர்களின் இனவிருத்தியாளர் விதை உற்பத்தி.
- விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள்,மாணவர் கள் மற்றும் மறு வயற் பயிர்கள் உற்பத்தியில் ஆர்வமுடையவர்களுக்கான தொழில்நுட்ப ஆலோசனைச் சேவை
- மண் பரிசோதனைகளின் அடிப்படையிலான பசளைச் சிபாரிசு

பாதீடு

வெவ்வேறு தலைப்புக்கள் மற்றும் செயற்றி ட்டங்களின் கீழ் பெறப்பட்ட ஒதுக்கீடு மற்றும் செலவு விபரங்கள் கீழே அட்டவணையில் 2.1.1 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.1.1: வருடாந்த பாதீடு -2010 (ரூபா)

தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு%
மீண்டு வரும் செலவு	6,185,852	2,190,966	35
	18,896,746	16,857,271	89
மூலதன செலவு			
செயற்றிட்டங்கள்			
"நாம் பயிரிடுவோம் நாட்டை கட்டியெழுப்புவோம்	3,181,00	1,462,274	46
சேதனப்பசளை உற்பத்தி, பயன்பாடு மேம்படுத்தல்	2,300,000	1,134,000	49
கலப்பின சோள அபிவிருத்தி, உள்ளூர் சோள கலப்பின வர்க்கம் "சம்பத்" உற்பத்தி	2,700,000	1,787,091	66
CARP செயற்றிட்டம் - தரமான புரத கலப்பின வர்க்க அபிவிருத்தி	579,000	563,799	97
மிளகாய் மேம்படுத்தலில் விவசாய வர்த்தக அபிவிருத்தி	250,000	80,032	32
மறு வயற் பயிர்களில் HERP/ ESSP பாவனை	200,000	97,094	49
மொத்தம்	***34,292,598***	***24,172,527***	***70***

முன்னேற்ற அறிக்கை

பயிர் விருத்தி
சுவை சரக்கு பயிர்கள்

மிளகாய்

இனவிருத்தி பேதங்கள் MICH - 06 மற்றும் வரணியா தெரிவு என்பன வர்க்க வெளியீட்டு செயற்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவற்றின் முன்னேற்றமான இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளது.

MICH - 06

- இது பச்சை மிளகாய் உற்பத்திக்கு பொருத்தமானது
- >15 t/ha யில் உற்பத்தித் திறன் வாய்ந்தது.
- நடுத்தர பருமனுடைய (8–10 செ.மீ), கரும்பச்சை நிற பளபளப்பான தோற்ற முடைய காய்கள்
- மிளகாய் இலைச்சுருள் தாக்கத்திற்கு மிதமான எதிர்ப்புத் தன்மை கொண்டது.

வருணியா தெரிவு

- வீட்டுத்தோட்டச் செய்கைக்கு பொருத்தமானது.
- நீளமான, (15–18 செ.மீ) மஞ்சட்பச்சை நிறக்காய்கள் உடையது.
- காரத்தன்மை குறைவாகையால் பச்சை மிளகாயாகவும் மரக்கறியாகவும் பயன்படுத்த உகந்தது.

வெங்காயம்

- கலத்தேவ, தம்புள்ள மற்றும் கலேவல பிரதேசங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட கலப்பு வெங்காயத் தொகுதியிலிருந்து எட்டு புதிய பெரிய வெங்காய பேதங்கள் தெரிவு செய்யப்பட்டன. இந்த பேதங்கள் சிறுபோகம் – 2011 இல் தூய்மையாக்கப்படும்.
- நேரடியான விதை நடுகைக்குட்படுத்தப்பட்ட தம்புள்ள தெரிவு வெங்காயப் பயிர் மற்றும் வெளிநாட்டு வர்க்கம் ரெட் போல் (இந்தியாவில் நேரடி நடுகைக்கு விசேடமாக விருத்தி செய்யப்பட்டது) வர்க்கமும் ஒப்பீட்டுக்குட்படுத்தப்பட்டன. எதிர்பாராத மழை காரணமாக அவற்றின் விளைச்சல் அறுவடை செய்யப்படவில்லை. இப்பரிசோதனை மீண்டும் சிறுபோகம் – 2011 இல் செய்யப்படும்.
- 2009ம் ஆண்டு நவம்பர் 25 தொடக்கம் டிசம்பர் 21 வரையிலான காலப்பகுதியில் ரகங்கல மற்றும் ரிவஸ்சன் மேற்பகுதிகளில் நிலவிய வெப்பநிலை தம்புள்ள தெரிவு வெங்காயம் வர்க்கத்தில் வசந்தநிலைப்படுத்தலுக்கு உகந்ததாக காணப்பட்டது. இப்பரிசோதனை மீண்டும் காலபோகம் 2010/2012 மேற் கொள்ளப்பட்டு உறுதிப்படுத்தப்படும்.

அவரை இனத் தானியங்கள்

பயறு

- கலப்பு பிறப்பாக்க திட்டத்தின் பெற்றோர் மூலமாக தெரிவு செய்ய விரும்பத்தக்க இயல்புகளுடன் வழித்தாவரங்கள் (உயர்ந்த விளைச்சல் MYMV and CLS எதிர்ப்புத் தன்மையுள்ள, சீரான முதிர்வுத் தன்மையுள்ள, தாழ்இறுக்கமான விதை உள்ளடக்கம்) தெரிவு செய்யப்பட்டு தனி மற்றும் மூன்று கலப்பாக்க முறையில் விரும்பத்தக்க இயல்புகள் சிபாரிசு செய்யப்பட்ட இனங்களுக்கு (MI - 6, ARI) மாற்றீடு செய்யப்பட்டது.
- இறக்குமதி செய்யப்பட்ட பயறு, Chinut 72 எனும் வழித்தாவரம் விவசாய திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்ட MI - 5, MI -6 உடன் பரீட்சிக்கப்பட்டது. Chi nut 72 ன் விளைச்சல் ஏனைய சிபாரிசு செய்யப்பட்ட இனங்களுடன் ஒப்பிடுகையில் குறைவாகக் காணப்பட்டது. மேலும் இவ்வினம் (MYMV) மஞ்சள் சித்திர வைரஸ் நோய்க்கு உட்படகூடிய தன்மை யுடையது. இந்நோய் பயறு செய்கையில் முக்கியமான நோய் ஆகும்.
- தாவர கருமூலவள நிலையத்தில் (PGRC) இருந்து பெறபட்ட ACO 259, ACO219, AC2993, AC0099, AC3022, AC5179 ஆகிய பேதங்கள் விவசாயத் திணைக்களத்தினால் சிபாரிசு செய்யப்பட்ட இனங்களுடன் பரீட்சிக்கப்பட்டது. எந்த பேதங்களும் தெரிவு செய்யப்படவில்லை.
- ஏழு உறுதி செய்யப்பட்ட பயறு பேதங்கள் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க பரிசோதனைக்கு (NCVT) தெரிவு செய்யப்பட்டது. ஏற்றுக் கொள்ளப்பட்ட 8452 இனம் மிகக் குறைந்த வீதத்தில் கடின மான விதையை கொண்டுள்ளது. (<0.01%) இந்த இனம் கலப்பு பிறப்பாக்க பெற்றோராக பயன்படுகின்றது.

கௌபீ

- இரண்டு IITA வழித்தாவர பேதங்கள் பரீட்சிக்கப்பட்டது. வித்தியாசமான விவசாய காலநிலை வலயங்களில் (தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க பரிசோதனை) (NCVT) அனுசரணையின் கீழ் பரிசீலிக்கப்பட்டது. இப்பேதங்கள் கிட்டத்தட்ட பரீட்சிக்கும் இனங்களுடன் ஒத்த முன்னேற்றம் காணப்பட்டது. அதன் விளைச்சல் 2t/ha இந்த இனத்தை விரும்பி நுகர்வோரின் எண்ணிக்கை பரீட்சிக்கும் இனத்தை விட (Check varieties) கூடுதலாக காணப்பட்டது. மேலும் இவ்வழித்தாவரம் விவசாய நிலங்களில் அடுத்த போகத்திற்கு பரீட்சிக்கப்படும்.

- கலப்பு பிறப்பாக்கமும், தெரிவு நிகழ்வும் 2009 சிறுபோகத்திற்கு ஆரம்பிக்கப்பட்டது. முன்னேற்றமான சிபாரிசு செய்யப்பட்ட இனங்களுடன் மேலும் மதிப்பீட்டிற்கு ஆறு பேதங்கள் 15 F1 வழித்தோன்றல்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டன.

உழுந்து

- மூன்று சிறந்த வழித்தாவரம் அறிவதற்கு நல்ல இசைவாக்கம் உள்ளதா என அறிவதற்கு தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க பரிசோதனை செய்யப்பட்டது.

எண்ணெய் விதை பயிர்கள்

சோயா அவரை

- விளைச்சலையும் விரும்பத்தக்க இயல்புகளையும் கருத்தில் கொண்டு 16 வெளியூர் சோயா அவரை வழித்தாவரங்கள் மதிப்பீடு செய்யப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட இனங்கள் pb-01 உடன் ஒப்பீட்டு ரீதியில் நல்ல முன்னேற்றம் காண்பிக்கவில்லை.

- ஆறு பெரிய விதைகளையுடைய AVRDC மரக்கறிச், சோயா, அவரைத் தாவர வழி இனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன. இவற்றுள் இரண்டு நல்ல விளைச்சலை தந்தது. (07 தொன் பச்சைக்காய் / ஹெக்டயர்) இந்த பரிசோதனை முடிவுகளை உறுதிப்படுத்துவதற்காக மீண்டும் செய்யப்படும்.

நிலக்கடலை

- கமக்காரர்களுடைய நிலத்தில் விவசாயத் திணைக்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்ட நடுத்தர கால அளவுடைய பெரிய விதையுள்ள நிலக்கடலை பேதங்கள் நான்கு மதிப்பீடு செய்யப்பட்டன. ICGV 97045, ICGV 98396, ICGV93704 ஆகியன விவசாயிகள் அதிகம் விரும்புவனவாகக் காணப்பட்டன. இவை DUST ற்காக பரிசோதிக்கப்படுகின்றன.

தானியங்கள்

சோளம்

- 03 தரமான புரதமுள்ள சோளக்கலப்பினம் DUST சோதனைக்காக தெரிவு செய்யப்பட்டது.

- 31 வெளியூர் சோளக்கலப்பினங்கள் பரீட்சிக்கப்பட்டு அதில் 28 கலப்பினங்கள் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியனவாக உள்ளன.

- ஏழு குறிப்பிடத்தக்க குரக்கன் பேதங்கள் பரிசீலனைக்குப் பிறகு, 03 விளைச்சல் கூடிய இனங்கள் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க பரிசோதனைக்காக தெரிவு செய்யப்பட்டது.

- பொருந்தக் கூடிய 05 வெளியூர் கலப்பினம் (தினை, சாமை) பரிசீலிக்கப்பட்டது. அதனுள் முன்னேற்றமான PAC 501, PAC 509 ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மரக்கறிப் பயிர்கள்

- மேம்படுத்தப்பட்ட இரு பயற்றை பேதங்கள் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க பரிசோதனையில் (NCVT) 4 இடங்களில் மதிப்பீடு செய்யப்பட்டன. குறைந்த வயதுடைய, கூடிய விளைச்சலுடைய மேம்பாடுடைய பேதமான தாய் 01 (Thai - 01) வர்க்க அனுசரணை பரிசோதனைக்காக (VAT) தேர்வு செய்யப்பட்டது.

- இனக்கலப்புத் திட்டம் வெண்டியில் மஞ்சள் நரம்பு வைரஸ் (YVMV) எதிர்ப்புக்காக பிரபல்யமான எம்.ஐ.5 உடன் வைரஸ் எதிர்ப்புடைய காட்டு வெண்டியுடன் இனம் கலக்கப்பட்டது. இந்தத் திட்டம் 2011 க்கும் தொடருகின்றது.

- மூன்று மேம்படுத்தப்பட்ட வெண்டிப்பேதங்கள் மஞ்சள் நரம்பு சித்திர வடிவ வைரஸ் (YVMV) மற்றும் நுகர்வோர் ஏற்கக் கூடிய இயல்பு (எம்.ஐ.5 ஐ ஒத்த) தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க பரிசோதனையில் (NCVT) 4 இடங்களில் பரிசோதிக்கப்பட்டது. ஓ.கே.எஸ்.1 மற்றும் ஓ.கே.எஸ் 3 என்பன முன்னேற்றகரமான முடிவை தந்தன. அவை வர்க்க அனுசரனை பரிசோதனைக்காக தேர்வு செய்யப்பட்டன.

பழப் பயிர்கள்

திராட்சை

- வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட திராட்சை இனங்களான நயாக்கரா, பிரென்ஞ் MI, மஸ்கட் MI, இஸ்ரேல் நீலம் ஆகியன இன சேகரிப்புக்காக பராமரிக்கப்பட்டு வருகிறது.
- திராட்சையில் குறைந்த செலவில் கொடிகளை பழக்கப்படுத்துவதற்கான முறையை இனம் காண்பதற்கான ஆய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நான்கு சிபாரிசு செய்யப்பட்ட இனங்களான இஸ்ரேல் நீலம் (VI), மஸ்கட் MI (V2), பிரென்ஞ் MI (V3) மற்றும் கண்டாரா MI (V4) என்பன நான்கு வேறுபட்ட பழக்கப்படுத்தல் முறையில் GDC (ஜெனீவா இரட்டை வேலி இடைவெளி (2.6 மீ × 4மீ) ராட்டுரா (இடைவெளி 2.6 மீ × 4மீ) DG (இரட்டை குயொட்) (இடைவெளி 2.6 மீ × 4 மீ) மற்றும் பந்தல் (இடைவெளி 8 × 4மீ) என்பனவற்றில் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பரிசோதனை எதிர்வரும் போகங்களுக்கும் தொடரும்.

விளாத்தி

- கடந்த 6 வருடங்களாக எட்டு விளாமர குல வகைகள் மதிப்பீடு செய்யப்பட்டன. ஒரு விளாமர குலவகை முன்னேற்றகரமானதாக இனம் காணப்பட்டது.

வத்தகை

- இரண்டு வத்தகை ஒட்டுவகை இனங்களான "ஹன்டர்" மற்றும் "லன்தா" என்பன திலினவுடன் விளைச்சல், பழத்தின் தரம் என்பவற்றுக்காக மதிப்பீடு செய்யப்பட்டது. கன்ரர் இனம் மட்டும் ஏற்புடையதாக இருந்தது.

பயிராக்கவியல்

- நீர்பாசனத்தின் கீழ் சோளப்பயிருக்கு மேற்கட்டுப் பசளையாக பொட்டாசியம் இடுவதன் தாக்கம் ஆய்வு செய்யப்பட்டது. விளைச்சல் அதிகரிப்பு குறிப்பிடக்கூடிய விதத்தில் அமையவில்லை.
- மானவாரி பயிர்ச்செய்கையில் உழுந்தினை வீசி விதைப்பதில் உத்தம விதை அளவும் N மட்டமும் முறையே 62.5kg/ha ம், 30kg/ha சிறந்தது என கண்டுபிடிக்கப்பட்டது. இது தொழில்நுட்ப வெளியீட்டுக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.
- மூன்று தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட ஆராய்ச்சி வர்க்க பரிசோதனை (NCRVT) வேறுபட்ட புதிய நெல் இனங்களுக்காக மேற் கொள்ளப்பட்டது. தரவுகள் சேகரிக்கப்பட்டு நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம் (RRDI) பத்தலகொடவுக்கு இறுதி மதிப்பீட்டுக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

பயிர் பாதுகாப்பு

நோயியல்

- 'ஒஸாதா' குரக்கன் வர்க்கம் காலபோகத்தில் சிபாரிசு செய்யப்பட்ட விதை அளவுடனும் முறையான நாற்றுமேடை முகாமைத்துவத்துடனும் நாற்று நட்டு அல்லது வீசி விதைத்து செய்கை பண்ணுவதற்கு சிபார்சு செய்யப்பட்டது.
- தொகுதிப் பங்கசு நாசினிப் பிரயோகத்தில் பைராகுளோஸ்ரோபின் 250கி/லீ, புறோப்பி கோனசோல் 250 கி/லீ, தையோபனேற் மீதைல் 500 கி/லீ, ரெற்றாகொனசோல் 40 கி/லீ, மற்றும் ரெபியுகொனசோல் 250 கி/லீ என்பன சோளம் நட்டு 3 வது, 5 வது, 7 வது வாரங்களில் பிரயோகிப்பதன் மூலம் சோளத்தில் துரு நோயை கட்டுப்படுத்த சிபார்சு செய்யப்பட்டது. இது சாதாரண எதிர்ப்புடைய கலப்பின வர்க்கங்களான (சம்பத், ருவான், பண்டார) என்பவற்றில் மேற்கொள்ளப்பட்டது.
- வெங்காயப் பயிர் செய்கையில் புதிய பங்கஸ் நாசினிகளாகிய றைபுளாசைஸ்ரோவின் + ரிபியுகோனசோல் 75 WG பைராகுளோஸ்ரோவின் + மெற்றிராம் 60 WG மற்றும் புளோசினம் 500 கி/லீ, என்பன அந்திரக்னொஸ், ஊதா இலைப்புள்ளி நோய் என்பவற்றை கட்டுப்படுத்தக் கூடியதாக இருந்தது.
- கலப்பினச் சோள வர்க்கமான "சம்பத்" முதற்தடவையாக நாற்றழுகல் நோய்க்கு உட்பட்டமை அறியப்பட்டது. பெனிசிலியம் இனம் இந்நோய்க்கான காரணி (Peniallium spp) என இனம் காணப்பட்டது.

பூச்சியியல்

- மிளகாய்ப் பயிரில் (இரு பூச்சி நாசினிகள்) இலை சுருள் தாக்கத்தை குறைப்பதாக இனம் காணப்பட்டன. இப்பரிசோதனை முடிவை உறுதிப்படுத்துவதற்காக தொடர்ந்தும் மேற் கொள்ளப்படுகின்றது.
- தியாமெதோசாம் 70% WS ஐக் கொண்டு விதைப்பரிகரணம் செய்வதன் மூலம் இலைச்சுருள் தாக்கத்தைக் குறைக்கலாம் என காணப்பட்டது. மேலும் இப்பங்கசு நாசினியில் விதைப் பரிகரணம் செய்வதுடன் இலைகளுக்கு தெளிப்பதுவும் கூடிய வினைத்திறனாகக் காணப்பட்டது. இப்பரிசோதனை முடிவை உறுதிப்படுத்துவதற்காக மீண்டும் மேற் கொள்ளப்படவுள்ளது.
- கூடுதல் N பசளை பிரயோகம் சோளத்தில் தண்டு துளைப்பான் புழுவின் தாக்கத்தை அதிகரிப்பதாகக் காணப்பட்டது. இப் பரிசோதனை முடிவை உறுதிப்படுத்துவதற்காக தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ளது.

- பூச்சி நாசினிகளான தையாகுளோப்ரிட், இமிடகுளோப்ரிட் மற்றும் டைனோரேபியூரான் என்பன கௌபீயில் காய்களில் குத்தி உறிஞ்சும் முட்டுப்பூச்சி மீது வினைத்திறனாக காணப்பட்டது. பெரியளவிலான பரிசோதனையின் பின் இதற்கான சிபார்சு வழங்கப்பட உள்ளது.

களை முகாமைத்துவம்

- நீர் ஹைசிந் அதாவது குள வாழையைக் கட்டுப்படுத்த (Eichhornia crassipes) உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணியாகிய நோசேரினா வுறுசி (Necochetina bruchi) ன் குடித்தொகை ஆய்வு உலர்வலயத்தில் உள்ள நீர் நிலைகளில் 2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஐந்து குளங்களில் (குடகலத்தெவ, பல்லேகம, கிரிபிட்டியாகம, புத்தேகம, குடவில்வேவ) அறிமுகப்படுத்தப்பட்டது. இது நீர்கைசிந்தை கட்டுப்படுத்துவதில் வினைத்திறனாகக் காணப்பட்டது.

- ரொப்ராமெசோன் 336 கி/லீ, ஆனது சோள விதைப்பில் சைப்பிரஸ் ரொடன்டஸ் ஐ தவிர ஏனைய புல்வகைகளையும் அகன்ற இலைக் களைகளையும் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தியது.

- பெண்டிமெதலின் 445 கி/லீ, வெங்காயத்தில் பைரோ நஞ்சுத்தாக்கம் ஏதும் இல்லாமல் முக்கியமான சைபிரஸ் ரொட்டன்டஸ் ஐ தவிர ஏனைய களைகளை குறிப்பிடக்கூடிய விதத்தில் கட்டுப்படுத்தியது.

- காலபோகம் 2009/2010 சிறுபோகம் 2010 இல் நெற் செய்கையில் ஆறு புதிய களைநாசினிகள் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட களைநாசினி தேர்வு பரிசோதனையில் பரிசோதிக்கப்பட்டன. தரவுகள் சேகரிக்கப்பட்டு இறுதி மதிப்பீட்டுக்காக (RRDI) பத்தலகொடவுக்கு ஒப்படைக்கப்பட்டது.

மண் வளம்

- 6 தொன்/ஹெக் என்ற அளவில் கிளிசிறீடியாவை மண்ணுடன் சேர்த்து செய்கை பண்ணுவதன் மூலம் நீர்ப்பாசனத்தின் கீழ் சோளம் மற்றும் மிளகாய்ச் செய்கையில் சிபார்சு செய்யப்பட்ட N உரத்தின் அளவை 25% குறைக்கலாம்.

- வெங்காயம் மற்றும் சோளப்பயிர்ச்செய்கையில் ஒருங்கிணைந்த தாவர போசணையில்; ஏற்ற சேதனப்பசளையை இனங்காண்பதற்காக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பரிசோதனை முடிவு சணல் அல்லது மரக்கறி கௌபீயை, இடுவது மாட்டெரு அல்லது கூட்டெருவை இடுவதை விட முன்னேற்றகரமான பெறுபேற்றைக் காட்டியது. இப் பரிசோதனையின் முடிவை உறுதிப்படுத்துவதற்காக மீண்டும் மேற்கொள்ளப்பட உள்ளது.

- 10 தொ/ஹெ மாட்டெருவுடன் 10 தொ/ஹெ கிளிசிறிடீயா இலை (காற்றில் உலர்த்திய நிறை அடிப்படையில்) சேர்த்து இடுவதன் மூலம் விவசாயத் திணைக்களத்தால் சிபார்சு செய்யப்பட்ட அசேதன பசளை அளவுடன் சோளத்தின் விளைவில் ஒற்றுமையைக் காட்டியது. இது தொடர்ந்து மேற் கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவுகளால் உறுதிப்படுத்தப்பட்டது. இம் முறையானது எதிர் வரும் போகத்தில் வயல்களில் செய்து காட்டல் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.

- உயர்தரமான பாறை பொஸ்பேற் (HERP)ம் எப்பாவெல தனிசுப்ப பொஸ்பேறும் (ESSP) சோளப்பயிர்ச் செய்கையில் பரிசோதிக்கப்பட்டன. சிபாரிசு செய்யப்பட்ட மும்மை சுப்ப பொஸ்பேற்றுடன் ஒப்பிடும் போது (ESSP) ஒப்பிடக்கூடிய விளைவைத் தந்தது. எனினும் (HERP) இதில் தகுதியடையவில்லை. இப்பரிசோதனை முடிவை உறுதிப்படுத்துவதற்காக தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது.

நீர் முகாமைத்துவம்

- செங்கபில மண்ணில் (RBE) செய்கைபண்ணப்பட்ட கலப்பினசோளம், சம்பத், ஆகியவற்றின் உத்தம பாசன நீர் தேவையை அறிவதற்கான பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. வினைத்திறனான உயர் நீர்ப்பாவனை (IW/ CPE) விகிதம் 0.7, 1.15 மற்றும் 1.15 ஆக முறையே முதலாவது இரண்டாவது, மூன்றாவது மாதங்களில் காணப்பட்டது. முடிவை உறுதிப்படுத்துவதற்காக தொடர்ந்தும் இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகிறது.

- செங்கபில மண்ணில் (RBE) மிளகாய் செய்கையில் மண்நீர் பரம்பல் கோலத்தை மதிப்பீடு செய்ய பொருத்தமான சொட்டு நீர்ப்பாசன தொகுதியை அறியும் கற்கை ஆரம்பிக்கப்பட்டது. Lateral களிலிருந்து 25 செ.மீ தாவர இடைவெளி நடைமுறைப்படுத்தப்பட்ட போது பச்சை மிளகாய் விளைச்சல் வலுவற்றதாகக் காணப்பட்டது. முடிவை உறுதிப்படுத்துவதற்காக பரிசோதனை தொடர்கின்றது.

உணவு தொழில்நுட்பம்

- சாமை, சோளம், இறுங்கு, குரக்கன் என்பவற்றின் மாவை 100% பயன்படுத்தும் போது ஏற்கக் கூடிய தரமான கேக், பிஸ்கட் தயாரிக்க முடியும்.

- தவள மற்றும் MICP 01 என்பன MI 35 ஐ விட கூடுதலாக ஏற்கக் கூடிய தரமுடையதாகக் காணப்பட்டது.

விதை உற்பத்தி

உற்பத்தியாளர் விதை உற்பத்தி

மறுவயற் பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் உற்பத்தி செய்து விநியோகிக்கப்பட்ட உற்பத்தியாளர் விதை அளவுகள் அட்டவணை 2.1.2 ல் தரப்பட்டுள்ளது.

சான்றுப்படுத்தப்பட்ட விதையுற்பத்தி

நிலையமானது நாம் பயிரிடுவோம் நாட்டைக் கட்டி எழுப்புவோம் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் விவசாய திணைக்களத்தின் விதை உற்பத்தி திட்டத்துக்கு உதவுமுகமாக சான்றுப்படுத்திய விதை உற்பத்தியை ஆரம்பித்துள்ளது. 2009/2010 காலபோகத்தில் மற்றும் சிறுபோகம் 2010 ல் உற்பத்தி செய்யப்பட்ட மறுவயற்பயிர் சான்றுப் படுத்திய விதை உற்பத்தியை அட்டவணை காட்டுகிறது.

அட்டவணை 2.1.2: 2010 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்தியாளர் மற்றும் சான்றுப்படுத்திய விதை

பயிர்	இனம்	உற்பத்தியாளர் விதை உற்பத்தி (கிலோ)	சான்றுப்படுத்திய விதையுற்பத்தி (கிலோ)
சோளம்	CML -20		
	சம்பத் கலப்பின பெற்றோர்	580	
	CML -20		
	சம்பத் கலப்பின பெற்றோர்	233	
	சம்பத் F1	714	
	ரூவான்	100	600
குரக்கன்	ராவனா	05	
மிளகாய்	எம்.ஐ – பச்சை	02	
	கல்கிரியாகம தெரிவு	02	
	கே.ஏ – 2	02	
பயறு	ஆரி	25	60
	எம்.ஐ – 5	32	103
	எம்.ஐ – 6	25	610
பெரிய வெங்காயம் (இனவிருத்தி தாய்க்குமிழ்)	தம்புள்ள தெரிவு	40	
உழுந்து	MI - 1	25	25
	அனுராதா	15	487
சோயா அவரை	பி.பீ – 1	100	205
	பி.எம். 13	13	
கௌபீ	டவள	24	356
	எம்.ஐ.35	41	60
	வருணி	45	
	பொம்பே	05	
	விஜயா	10	10
மரக்கறிக் கௌபீ	பீ.எஸ் 1	13	
தக்காளி	கே.சி – 1	01	
மொத்தம்		***2051***	***2516***

தொழில்நுட்பம் விஸ்தரிப்பு

பயிற்சி திட்டம், விரிவுரை, வேலைக்களம், வயலில் செய்து காட்டல், பயிர் சிகிச்சை, வயல் விழா, தொழில்நுட்ப ஆலோசனை

- மறுவயற் பயிர்களில் 51 பயிற்சியும் செய்து காட்டலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதில் விவசாயிகள், மற்றும் பாடசாலை, தொழில்நுட்பக் கல்லூரி, பல்கலைக்கழக மாணவர் அடங்குவர். மொத்தமாக பங்கு பற்றியவர்கள் 1379.
- வளவாளர் பங்குபற்றலுக்காக 48 வயல் செய்து காட்டல், 19 வயல் விழா, 09 பயிர் சிகிச்சை, 03 கண்காட்சி என்பன நடைமுறைப் படுத்தப்பட்டது.
- தொழில் நுட்ப ஆலோசனைகள் 750 வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்டது.
- 12,500 தொழில்நுட்ப தகவல்களடங்கிய துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.
- மறுவயற்பயிர் விதைகளின் மாதிரிகள் 650 விவசாயிகளுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டது.

தொலைக்காட்சி / வானொலி நிகழ்ச்சிகள்

- 2010ம் ஆண்டில் 15 வானொலி நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன.

செய்தித்தாள் கட்டுரைகள்

- இவ்வருடம் செய்தித்தாளில் 03 கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன.

ஏனைய திட்டங்களும் சேவைகளும்

சோள விதை பொதியிடல் மூலப்பொருளை மதிப்பிடல்

- கலப்பின சோளமான சம்பத், உலோக பூச்சுள்ள பொலிதெலின் ரொப்தலேற் பொதியிடல் ஒப்பீட்டளவில் வுவன் பொலிபுறப்பலீன் ஐ விட 80% முளைக்கும் தன்மையை 6 1/2 மாதங்களுக்கு பேணக்கூடியதாக இருந்தது. கறுப்பு தடிப்பு குறைந்த பொலிதைலினும் வுவன் பொலிபுப்பலினும் தடிப்புக் குறைந்த பொலிதைலின் என்பவற்றில் முளைக்கும் தன்மை 3 மாதத்துக்கு உட்பட்ட காலத்திலேயே 80% உயர்வாக பேணக்கூடியதாக இருந்தது.
- சாதாரண உலோக பூச்சுள்ள பொலிதைலின் ரொப்லேற் பொதியுடன் ஒப்பிடுகையில் வெற்றிட உலோகப்பூச்சு பொலிதைலின் ரொப்தலேற் பொதியிடல் மூலம் 9 மாதம் வரை முளைதிறனை 1.5 தடவை பாதுகாக்கலாம். சோள கலப்பின வர்க்கமான சம்பத் விதை திறந்த மகரந்தச் சேர்க்கை சோளவர்க்கமான ரூவான் என்பன மேற்கூறிய பொதியிடல் முறை கள் மூலம் வேறுபாட்டைக் காட்டவில்லை.

சேதனப்பசளை உற்பத்தியையும் பாவனை யையும் மேம்படுத்தல்

கீழ் வரும் அளவு சேதனப்பசளை உற்பத்தி செய்து விநியோகிக்கப்பட்டது.

- கூட்டெரு உற்பத்தி – 5075 மெ.தொன்
- கூட்டெரு வளர்ப்பூடக விநியோகம் – 1160 கி.கி
- உலர் வலயத்தில் பசுந்தாட் பசளை அதிகம் கிடைக்கக் கூடிய இடங்களில் இந்த தொழில்நுட்ப விஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகள், பாடசாலை மாணவர்கள் விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் ஆகியோருக்காக செய்துகாட்டல்கள் மேற்கொள்ளப்பட்டது.
- மேலும் 75 கி.கி. சணல் *(Crotalaria juncea)* விதை உற்பத்தி செய்யப்பட்டதுடன் நிலையத்தின் பசுந்தாட் பசளை விதை உற்பத்திக்காக இவை பாவிக்கப்பட்டது.

மாதிரி கிராம திட்டம்

உள்ளூர் உணவு உற்பத்தியை உயர்த்தும் நோக்குடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் மூன்று கிராமங்கள் (கிரிபிட்டியாகம, திலகபுர, பின்பரா) இபலோகம பிரதேச செயலாளர் பிரிவில் கமத்தொழில் சேவை திணைக்களத்தின் உதவியுடன் தேர்ந்தெடுக்கப்பட்டன. 09 ஏக்கர் நிலப்பரப்பில் மண் பாதுகாப்பு அணை அமைக்கப்பட்டது.

மண் பரிசோதனை

- இடைமாகாண மற்றும் மாகாண பகுதிகளில் உள்ள அனுராதபுரம், மகாவலி 'H' பகுதிகளில் நூற்றிபண்ணிரண்டு மேட்டுநில மற்றும் வயல் நில மண்மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டு அவற்றின் அடிப்படையில் பசளை மற்றும் சேதன ப்பசளை சிபார்சுகள் வழங்கப்பட்டன.
- சல்வீனியா, குளவாழை என்பவற்றின் உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணியின் மாதிரிகள் விவசாயிகள் கமக்கார அமைப்புக்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு கொடுக்கப்பட்டது.

2011க்கான திட்டம்

ஆராய்ச்சித் திட்டம்

சுவை சரக்குப் பயிர்

- கலப்பின மிளகாய்/ அயன் மகரந்தச் சேர்க்கை மிளகாய் வர்க்கங்களிலும் வெங்காயத்திலும் புதிய கலப்புகள் செய்து மேம்படுத்தப்பட்ட கலப்பினங்களை மதிப்பீடு செய்தல்.
- மிளகாயிலும் பெரிய வெங்காயத்திலும் கருமுலவள சேகரித்தல், தேர்வு செய்தல், தூய்மைப்படுத்தல், என்பவற்றை மேற் கொள்வதோடு மேம்பட்ட பேதங்களிலும் பிராந்திய முக்கியத்துவமுடைய மிளகாய் உள்ளூர் இனத்தினது விதை பெருக்கத்தை மேற்கொள்ளல்.
- மேம்பட்ட கலப்பு செய்யப்பட்ட மிளகாய் பேதங்களிற்காக தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட பரிசோதனையை மேற்கொள்ளல்.
- சின்ன வெங்காயத்திலும் கலப்பு செய்யப்பட்ட மிளகாய் பேதங்களிலும் பரம்பரை முன்னேற்றத்தை ஏற்படுத்தல்
- மேம்படுத்தப்பட்ட கலப்பு பேதங்களுக்கான அனுசரணை வர்க்க பரிசோதனையை மேற் கொள்ளல்
- வெளியிலிருந்து தருவிக்கப்பட்ட கலப்பின மிளகாய் வர்க்கங்களை மதிப்பீடு செய்தல்
- மிளகாய் இலைச்சுருள் வைரஸ் நோய்கு எதிரான நிழல் மற்றும் திரவப்பசளையின் தாக்கமும் மேம்பாடும் பற்றி ஆய்வு.
- மிளகாய் இலைச்சுருள் சிக்கலுக்கு எதிராக விதை பரிகரணம் செய்தல் (Thiomethoxam 70%) பற்றிய பரிசோதனை மேற்கொள்ளல்.
- வெங்காயத்தில் பனிப்பூச்சி மற்றும் மிளகாய் இலைச்சுருள் சிக்கல் என்பவற்றை கட்டுப்படுத்தும் பூச்சிநாசினியை தேர்வு செய்தல்.
- மிளகாயில் முனை கத்தரித்தல் தொழில்நுட்பத்தை மேம்படுத்தல்
- மேம்படுத்தப்பட்ட வெங்காய பேதங்களினதும் மற்றும் தெரிவு செய்யப்பட்ட குலவகைகளின துமும் குமிழ் மற்றும் விதைப் பெருக்கத்தை மேற் கொள்ளல்.
- ஆற்றோரங்களில் பெரிய வெங்காயத்தில் வசந்தகால நிலைப்படுத்தலின் சாத்தியம் பற்றி ஆய்வு மேற்கொள்ளல்.
- வேறுபட்ட பயிராக்கவியல் முறையினூடு வெங்காய நுனிகருகலை கட்டுப்படுத்தல்.

அவரைப் பயிர்கள்

- பயறு, உழுந்து, கௌபீ, சோயா அவரை என்பவற்றுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை (NCVT) மேற்கொள்ளல்.
- பயறு, உழுந்து, கௌபீ, சோயா அவரை என்பவற்றின் மதிப்பீடும் தேர்வும்.
- பயறு, உழுந்து, கௌபீ, போன்ற பயிர்களில் உயர் இனக்கலப்பும் தேர்வு செய்தலும்.
- பயறு, உழுந்து, கௌபீ, போன்றவற்றிற்கான வர்க்க அனுசரணை ஆராய்ச்சி மேற் கொள்ளல்
- அவரைப் பயிர்களில் "அஸ்கோசைற்றா வெளிறல்" நோய்க்கான செய்முறை முகாமைத்துவத்தை அடையாளம் காணல்.
- கழுத்து அழுகல் நோய்க்கு எதிரான இயல்புள்ள கௌபீயை தேர்வு செய்தல்.
- கௌபீயில் கழுத்து அழுகலை முகாமை செய்வதற் காக சேதன மாற்றீடு, உழவு ஆழம், சூரிய ஒளிப்படுத்தல் என்பவற்றை இணைத்து ஆய்வு செய்தல்.
- மேம்படுத்தப்பட்ட கோழி அவரை (Chickpea) வர்க்கங்களின் விதை பெருக்கம் மேற்கொள்ளல்.
- மானாவாரியில் கொத்தணி விதை ஸ்தாபித்தல் முறையை மேம்படுத்தவதற்கான அவரைப் பயிரை வளர்த்தல்.

எண்ணெய் வித்துப் பயிர்

- இடைப்பட்ட வயதுடைய மேம்படுத்தப்பட்ட நிலக்கடலைப் பேதங்களை தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க பரிசோதனையில் மேற் கொள்ளல். (NCVT)
- மேம்படுத்தப்பட்ட நிலக்கடலை பேதங்களின் விதை பெருக்கத்தை மேற்கொள்ளல்.
- நிலக்கடலையில் மூலவுயிருரு மதிப்பீடு
- பெரிய விதையுள்ள, இடைப்பட்ட வயதுடைய நிலக்கடலை பேதங்களில் "DUST" மேற் கொள்ளல்.

தானியப் பயிர்கள்

- QPM சோளகலப்பினம் மற்றும் குரக்கன் குலவகைகளையும் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை மற்றும் வர்க்க அனுசரனை என்பவற்றில் மதிப்பீடு மேற் கொள்ளல்.
- வேறினக்கலப்பு மூலம் தோன்றிய கலப்புக்களிலிருந்து உள்முக கலப்பு சோள பேதங்களை அபிவிருத்தி செய்தல்.

- வெளியிலிருந்து தருவிக்கப்பட்ட "சுவீட் கோன்" வேறினக்கலப்புக்களை மதிப்பீடு செய்தல்.
- மேம்படுத்தப்பட்ட வேறினக்கலப்பு வர்க்கங்களின தும் பெற்றோர் சந்ததி பேதங்களினதும் விதை உற்பத்தியை மேற்கொள்ளல்.
- QPM உள்முக கலப்புப் பேதங்களை சுட்டி உதவி முறையில் தெரிவு செய்தல்.
- சோளத்தில், மடல் அழுகல் நோய்க்கான வர்க்கத் தேர்வு தொழில்நுட்பத்தை மேம்படுத்தல்.
- சோளத்தில் துரு நோய்க்கு எதிரான பங்கசு நாசினியை தேர்வு செய்தல்.
- சோள நீள்முஞ்சி வண்டைக் கட்டுப்படுத்துவத ற்கு தாவர தூள்களின் ஆய்வு கூட மதிப்பீடு மேற்கொள்ளல்.
- வேறுபட்ட அளவு நைதரசன் பசளைப் பாவனை சோளப்பயிரில் தண்டுகோதி தாக்கத்தில் ஏற்படுத்தும் விளைவைக் காணல்.
- மேம்படுத்தப்பட்ட சாமை மற்றும் தினை என்பவ ற்றின் மூலவுயிருருவைப் பேணல்.
- விதை அளவும் நடுகை முறையும் சூரக்கனில் எரிபந்த நோயை அதிகரிப்பதிலுள்ள தாக்கம் பற்றிய ஆய்வு.

மரக்கறிப் பயிர்கள்

- உயர் விளைவும் விரும்பத்தகும் இயல்புள்ள மஞ்சள் நரம்பு சித்திர வைரஸ் (YVMV) நோய்க்கு தாங்கும் தன்மையுள்ள அல்லது எதிர்ப்புள்ள வெண்டி வர்க்கத்தை விருத்தி செய்தல்.
- PGRCல் இருந்து பெறப்பட்ட பயற்றை இன தூய்மையை மதிப்பீடு செய்தலுடன், வர்க்கத்தை மேம்படுத்துவதற்கான சிறந்த பெற்றோர் பேதங்களை தெரிவு செய்தல்.
- கத்தரியில் தேசிய ஒருங்கிணைந்த வர்க்க பரிசோதனை மேற்கொள்ளல். (NCVT)
- கறிமுருங்கை செயன்முறைகாட்டல் துண்டத்தை பராமரித்தல்.
- வெண்டி, பயற்றையில் VAT மூலம் சிறந்த வழித்தோன்றல்களில் தெரிவு

பழப்பயிர்கள்

- திராட்சை மற்றும் மா மூலவுயிருருவைப் பராமரி த்தல்
- விளாத்தி மூலவுயிருருவை மதிப்பீடு செய்தல்.
- மூன்று திராட்சை வர்க்கங்களின் தாய்த் தாவர ங்களைப் பேணுதல்.
- பப்பாசியில் உள்ளூர் வேறினக்கலப்பு வர்க்கங் களை விருத்தி செய்தல்.
- திராட்சையில் கத்தரித்தல் முறைகளின் மதிப்பீடு
- "ட்றகன்பழம்" செய்து காட்டல் துண்டத்தை பராமரித்தல்.

நெல்

- வேறுபட்ட வயதுடைய நெல் பேதங்களின் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க பரிசோதனை மேற்கொள்ளல். (NCVT)
- வேறுபட்ட வயதுடைய நெல்பேத குழுமங்க ளுக்கான வர்க்க அனுசரனை ஆராய்ச்சியை மேற்கொள்ளல். (VAT)

களை முகாமைத்துவம்

- மிளகாயிலும் நிலக்கடலையிலும் கியூசலாப் – பி.ஈ.தைல் 50 கி/லீ, களைநாசினி யின் களைகட்டும் திறனையும் சோளத்தில் ஹலோசல்பியூரோன் – மீதைல் 75WG களை நாசினியின் களைகட்டும் திறனையும் பரிசோதித்தல்.
- Trigger (கார்பென்ராசோன் – ஈதைல் 6.5 கி/லீ + கிளைபோசேற் (a.e) 1799 கி/லீ ன் மழையுடன் விரைவில் களையை கட்டுப்படுத்தும் இயல்பை அறிதல்
- நெல் ஈர விதைப்பில் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட களைநாசினி தெரிவு பரிசோதனையை மேற் கொள்ளல்.
- அவரைப் பயிரில் களை கட்டுப்பாட்டில் ஈமாசெதனபர் களைநாசினியின் வினைத் திறன்.

மண்வளம், பசளை மற்றும் சூழல்

- HERP மற்றும் ESSP பிரயோகத்தில் சோளப்பயிர் காட்டும் துலங்கல் பற்றிய ஆய்வு
- "மைக்கோரைசா" வேர்பூஞ்சணக் கூட்டத்தின் மிளகாய்ப்பயிரில் வளர்ச்சி மற்றும் பழ விளைவு மதிப்பீடு.
- விவசாயிகளின் நிலத்தில் மிளகாய் மற்றும் சோளத்தில் உத்தம விளைவைப் பெறுவதற்கு உத்தம கிளிசிறிபீயா பிரயோகத்தையும் நைதர சன் பசளை அளவையும் இனம் காணல்.
- மிளகாய், சோளம், வெங்காயம் என்பவற்றி ற்கு ஏற்ற ஒருங்கிணைந்த தாவர போசணை பராமரிப்பு முறையை இனம் காணல்.
- வேலிப்பயிர்ச்செய்கை நிலங்களில் நீண்டகால மண்வளத்தை கண்காணித்தல்.
- சேதனப் பசளை மற்றும் இரசாயனப் பசளை சேர்க்கப்பட்ட மறுவயற்பயிர்கள் செய்கை பண்ணப்பட்ட செங்கபில மண்ணின் மண் வளத்தைக் கண்காணித்தல்.
- மண் பரிசோதனைத் திட்டம்.

நீர் முகாமைத்துவம்

- செங்கபில மண்ணில் வேற்றினக் கலப்பு சோள (சம்பத்)த்துக்கான பாசன நீர்த்தேவையை ஆய்வு செய்தல்.
- செங்கபில மண்ணில் சொட்டு நீர்ப்பாசன த்தின் கீழ் மண் நீர் விநியோகத்தை மதிப்பீடு செய்தல்.
- DL_{1b} விவசாய சூழலியல் வலையத்தில் நன்கு நீர்வடிப்புள்ள மற்றும் நீர்வடிப்பு குறைவான றோடஸ்ரல்ப் வகுப்பு மண்ணில் மிளகாய்ப்பயி ரின் வளர்ச்சி மற்றும் விளைவில் நீர்ப்பாசன இடைவேளை ஏற்படுத்தும் தாக்கம்.
- உலர் வலய மண்ணில் மிளகாய் மற்றும் வெங்காயத்துக்கான வினைத்திறனான நீர் முகாமைத்துவத்தை விருத்தி செய்தல்.

உணவுத் தொழில்நுட்பம்

- சோள வர்க்கங்களின் புரதத்தின் தரத்தை உறுதிப்படுத்தல்.
- கௌபீ மற்றும் சோயா பேதங்களில் புரதத்தின துமம், பண்படா கொழுப்பினதும் அளவை மதிப்பிடல்.
- வெதுப்பக உற்பத்திகளில் தானிய பயிர் மாவை பயன்படுத்தல்
- கற்றாளை உற்பத்தியை மேம்படுத்தல்
- MPET ஐ பயன்படுத்தி வேற்றினக் கலப்பு சோளவித்தின் சேமிப்பு காலத்தை உறுதிப் படுத்தல்.
- கிருமி நாசினியைக் குறைத்து பச்சை சோள பொத்தியை பெறுவதை உறுதி செய்தல்.
- உள்ளூர் சோள இனங்களை பாவித்து "கோன் பிளாக்" ஐ உற்பத்தி செய்தல்.
- வெள்ளித்தோல் வெங்காயத்திலிருந்து ஊறுகாய் போடல்.
- பச்சைமிளகாயின் களஞ்சிய காலத்தை மதிப்பீடு செய்தல்.
- உற்பத்தியாளர்களால் கையளிக்கப்பட்ட மறுவயற் பயிர், பழம், மரக்கறிப்பயிர் என்பவற்றின் வர்க்கங்கள் அல்லது இனக்கலப்பு பேதங்களின் தரத்தை மதிப்பீடு செய்தல்.

உற்பத்தியாளர் விதை உற்பத்தி

- மிளகாயில் சிபார்சு செய்யப்பட்ட இனங்களான கே.ஏ.– 2, எம்.ஐ.பச்சை, கல்கிரியாகம தேர்வு என்பவற்றில் உற்பத்தியாளர் விதை உற்பத்தி.
- சோளத்தில் பத்ரா, ரூவான் சம்பத்தின் பெற்றோர் பேதங்களுக்கான உற்பத்தியாளர் விதை உற்பத்தி
- குரக்கனில் ஒசாடா மற்றும் பயறில் எம்.ஐ–5, எம்.ஐ–6, ஆரி என்பவற்றில் உற்பத்தியாளர் விதை உற்பத்தி.
- உழுந்தில் எம்.ஐ–5, அனுராதா என்பவற்றில் மேற்கொள்ளல்.
- பயற்றையில் பி.எஸ்.1, தக்காளியில் கே.சி1, வெண்டியில் ஹரிதா, கௌபீயில் டவள, எம்.ஐ 35, வருணி, பொம்பே மற்றும் சோயா அவரை யில் பி.வி1, பி.எம் 13, போன்ற வர்க்கங்களில் உற்பத்தியாளர் விதை உற்பத்தி.
- சிபார்சு செய்யப்பட்ட வெங்காய இனமான டம்புள்ள வெங்காய இனத்தில் தாய் குமிழ்களையும் விதையும் உற்பத்தி செய்தல்.

உத்தியோகத்தர் பட்டியல்

பதவியணி	எண்ணிக்கை
ஆராய்ச்சி அலுவலர்	16
விவசாய அலுவலர்	01
நிகழ்ச்சி திட்ட உதவியாளர் (விவசாய)	06
ஆராய்ச்சி உதவியாளர்	17
விவசாய போதனாசிரியர்	10
ஆராய்ச்சி உப உதவியாளர்	09
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	15
அலுவலர் உதவியாளர் KKS	02
சாரதி	06
தாவர ஒட்டுநர்	01
களஞ்சிய அலுவலர்	01
சுற்றுலா விடுதி காப்பாளர்	01
உழவு இயந்திரம் திருத்தினர்	03
காவலாளி	10
சுத்திகரிக்கும் தொழிலாளி	01
தொழிலாளி (நிரந்தரம்)	136
ஒப்பந்த அடிப்படை தொழிலாளி	168
மொத்தம்	*403*

2.1.1 அவரைத்தானியம், எண்ணெய்ப் பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் அங்குணுகொலபெலஸ்ஸ

அவரைத் தானியங்கள், எண்ணெய்ப்பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம், அங்குண கொலபெலஸ்ஸவானது தெற்கு உலர் வலயத்தில் உள்ள முக்கியமான விவசாய ஆராய்ச்சி நிலைய மாகும். இது பிரதானமாக அவரைத் தானியங்கள், எண்ணெய்ப் பயிர்கள் என்பனவற்றின் ஆராய்ச்சி அபிவிருத்தி தொடர்பான உற்பத்திகளைக் கூட்டும் நோக்குடன் தொழில்நுட்பத்தை வழங்குவதாகும். சகல ஆய்வு நடவடிக்கைகளும் தேசிய மற்றும் பிராந்திய ரீதியான தேவைகளை நோக்கமாகக் கொண்டு பயிராக்கவியல், பிறப்புரிமையியல் தாவர இனக்கலப்பும், பயிர் பாதுகாப்பு, நீர் மற்றும் மண் முகாமைத்துவம் இதனுடன் இனவிருத்தியாளர் விதை மற்றும் நடுகைப்பொருட்கள், நிலத்தின் தன்மைக்கேற்ப பசளையிட சிபார்சு கள உத்தியோக த்தர்களுக்கும் விவசாயிகளுக்கும் தொழில்நுட்ப தகவல் வழங்கல் செயற்பாடுகளும் நடைபெறு கின்றன.

பாதீடு

வரவு செலவு விபரம் – 2010 ஆண்டிற்கான சொத்து வரவு செலவுத்திட்டமும் வெவ்வேறு தலைப்பீனங்களுக்கிடையே ஒதுக்கீடு மற்றும் செலவுகள் அட்டவணை 2.1.1 இல் தரப் பட்டுள்ளது.

அட்டவணை 2.1.1: வருடாந்த பாதீடு 2010 (ரூபா)

தலைப்பு	*ஒதுக்கீடு*	*செலவு*	*செலவு%*
மூலதன செலவு	3,868,554	1,613,762	42
மீண்டுவரும் செலவு	7,755,500	7,358,746	95
திட்டங்கள்			
கருத்திட்டம் 118/02/03/21/2502			
சேதனப்பசளை உற்பத்தி பயன்பாட்டை			
மேம்படுத்தல்	2,500,000	578,077	23
கலப்பின நெல், சோளம், பழவகை, மரக்கறி			
வர்க்க அபிவிருத்தி	425,000	419,012	99
"நாம் பயிரிடுவோம் நாட்டை கட்டியெழுப்புவோம்"	1,206,200	1,165,480	97
மொத்தம்	***15,755,254***	***11,135,078***	***71***

முன்னேற்ற அறிக்கை

உட்கட்டமைப்பு அபிவிருத்தி

நில அபிவிருத்தி

- தென்னை மற்றும் மா அபிவிருத்தியை அதிகரிக்கும் வகையில் பண்ணையின் வலதுகரையில் 5 ha நிலம் தென்னை மற்றும் மா நடுகைகளை விருத்தி செய்யும் வகையில் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆய்வுகூட அபிவிருத்தி

- சேதனப் பசளை பாவனைக்குரிய உற்பத்தியும் வெளிப்படுத்துகையும் தொடர்பான திட்டத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற நிதியினைப் பயன்படுத்தி மண் மற்றும் நீர்முகாமைத்துவ ஆய்வுகூடம் பகுதியாக தரம் உயர்த்தப்பட்டது.

பயிர் மேம்பாடு

எண்ணெய் விதைப் பயிர்கள்

நிலக்கடலை

- நிலக்கடலையில் அரும்பு அழுகல் நோய்க்கு எதிர்ப்புத்தன்மை கொண்ட மூன்று பேதங்கள் வர்க்க இசைவாக்க பரிசோதனைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.
- இசைவாக்க பரிசோதனையில் நடுத்தர வயதுள்ள உயர் விளைச்சலைத் தரும் (>2t/ha) இரு நிலக்கடலை வர்க்கங்கள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.
- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனையில் (NCVT) பெரிய வித்துக்களையுடைய (650mg), இடைப்பட்ட காலத்துக்குரிய (105 நாட்கள்) இனிப்பு பண்டங்கள் தயாரிக்கும் வகைக்குரிய நிலக்கடலை மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டது.
- கிழக்கு இலங்கையிலிருந்து பெறப்பட்ட (Vigna spp) பம்பரா (Bambara) நிலக்கடலையின் உற்பத்தி, செயலாற்றுகை பற்றிய கற்கை மேற்கொள்ளப்பட்டது.
- சிவப்பு ரெஸ்ரா நிலக்கடலை தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை (NCVT) மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டது.

எள்ளு

- உயர் உற்பத்தியை அபிவிருத்தி செய்யும் நோக்குடன், புதிதாக தெரிந்தெடுக்கப்பட்ட முப்பது (30) வெள்ளை வித்துக்களுடைய எள்ளு பேதங்களும் இருபத்தைந்து (25) கறுப்பு விதைகளைக் கொண்ட எள்ளு பேதங்களும் இயல்புபடுத்தப்பட்டது. அடுத்த போகத்தில் மேலும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.

கடுகு

- சிறந்த 6 முன்னேற்றகரமான கடுகு பேதங்கள் MYT யில் இருந்து தெரிவு செய்யப்பட்டு தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை NCVT இல் சேர்க்கபபட்டுள்ளது.

அவரைத் தானியங்கள்

கௌபி

- வர்க்க அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆரம்ப விளைச்சல் பரிசோதனையிலிருந்து, (PYT) F_6 பரம்பரையிலிருந்து வித்தியாசமான கலப்பினக் கௌபிகளில் இருந்து கூடிய விளைச்சலைத் தரும் (2000Kg ha) பேதங்கள் 16 தெரிவு செய்யப்பட்டன.
- நான்கு கூடிய விளைச்சல் தருகின்றதும் (2000Kg ha), விரும்பத்தக்க பயிராக்கவியல் இயல்புகளையும் கொண்ட கௌபீ பேதங்கள் மூலவுயிருரு மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டு தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனையில் சேர்க்கப்பட்டது.
- IITA நைஜீரியாவிலிருந்து பெறப்பட்ட வரட்சியைத்தாங்கக் கூடிய, விரைவாக முதிரக் கூடிய நோய்பீடைக்கு எதிர்ப்புத்தன்மையுள்ள பன்னிரெண்டு வெளிநாட்டு வர்க்கங்கள் உள்ளூர் நிலைமைகளில் வளரக்கூடிய வகையில் மதிப்பீடு செய்யப்பட்டது.
- 6 புதிய உள்ளூர் பேதங்கள் கமக்காரர்களின் வயல்களிலிருந்து சேகரிக்கப்பட்டன.
- கிடைக்கத்தக்க மூலவுயிருருக்களை வரட்சித் தெரிவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வரட்சியை தாங்கக் கூடிய மூலவுயிருருக்கள் தேர்வு செய்யப்பட்டது.
- மொனறாகலையிலுள்ள மூன்று விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் கௌபி பயிர்ச்செய்கையில் முக்கிய பிரச்சினைகள் வெளிக்கள ஆய்வு மூலம் அடையாளம் காணப்பட்டன.
- ஆராய்ச்சி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பின்வரும் பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டன. அவை, நோய்பீடைத்தாக்கம் விவசாயிகளின் அவதானிப்புக்குறைவு, நல்ல தரமான விதை கிடைக்காமை, புது இனங்கள் பற்றிய அறிவு குறைவாக இருத்தல், நிச்சயமற்ற மழைவீழ்ச்சி, நோய்ப்பீடை நிகழ்வு என்பனவாகும்.
- உலர் வலைய நிலமைகளில் தெற்கு பிரதேசத்தில் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க பரிசோதனை பரீட்சிக்கப்பட்டது.

பயறு

- பயிராக்கவியல் பண்புக்கும் விளைச்சல்களுக்கும் எழுபத்திமூன்று (73) மூலவுயிருருத் தோன்ற

ல்கள் ஏற்றுக்கொள்வதற்காக மதிப்பீடு செய்யப்பட்டன.

- உலர் வலைய நிலைமைகளில் தெற்கு பிர தேசத்தில் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க பரிசோதனையின் கீழ் பரீட்சிக்கப்பட்டது.

கொள்ளு

- ஆறு (6) கூடிய விளைச்சலைத்தரும் ஒரே மாதிரியான நிறங்களையுடைய விதைகளைக் கொண்ட முலவுயிருருக்கள் MYT கூடாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

உழுந்து

- உலர் வலய நிலைமைகளில் தெற்குப் பிர தேசத்தில் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

மரக்கறிகள்

தக்காளி

- உலர்வலய நிலைமைகளில் தெற்குப் பிர தேசத்தில் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

மரக்கறிக் கௌபி

- உலர் வலய நிலமைகளில் தெற்கு பிரதேசத்தில் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க பரிசோ தனை மேற்கொள்ளப்பட்டது.

பழங்கள்

அன்னாசி

- அன்னாசியின் தாய்த்தாவரத்திலிருந்து தொடர் ச்சியாக உறிஞ்சிகளை பெறுவதற்காக விருத்தி செய்யப்பட்டுள்ளது.

பயிர்ப்பாதுகாப்பு

- வயல் நிலையில் வேம்பை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளும் செயற்கையான பீடைநாசினிகளும் அறுவடைக்குப் பின்னான பயறு பீடைகளுக்கு எதிராக (காய்த்துளைப்பான்) மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பெரும்போக சிறுபோக இரு பருவங்களிலும் செயற்கையான பீடைநாசினி விதைக்கப்பட்ட பயறிலிருந்து பரி சோதிக்கப்பட்டது. வேம்பினை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட விதைச்சாறு எல்லாவற் றையும் விட அதிக செயற்திறனுடையதாக இருந்தது.
- தாவரத்திலிருந்து பெற்ற பயிர்பாதுகாப்பிகள் கௌபியில் Bruchids *(Callosobruchus maculates)* தாக்கத்திற்கு ஆய்வுகூட நிலைமையின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஒப்பீட்டளவில் தேங்காய் எண்ணெய் பரிகர ணம் செய்யப்பட்டதில் தாக்கம் குறைவாக காணப்பட்டது. சரியான நேரங்களில் பிர யோகிக்கப்பட்ட மிளகாய்த்தூளும் சித்திர னெல்லா எண்ணெய் பயன்படுத்துகையும் செய ற்கை பீடைநாசினியின் பயன்படுத்துகையுடன் ஒத்த தன்மையைக் காட்டியது.
- நிலக்கடலை காய் முட்டுப் பூச்சியின் கட்டுப்பா ட்டில் (Elasomolomus sordidus) காபோபியூர்டன் பாவனை விதைகளில் தாக்க வீதத்தை குறிப்பி ட்ட அளவு குறைந்தது. பதியப்பகுதிகளை அகற்றுதல், அவற்றை ஒழுங்குபடுத்துதல் சம னான தாக்கத்தை ஏற்படுத்தியது.
- கௌபிப் பயிரில் ஏற்படும் காய்துளைப்பானைக் கட்டுப்படுத்தலுக்கு மற்றவற்றுடன் ஒப்பிடுகையில் IPM முறைசெயல் திறன்மிக்கதாக இருந்தது. வேறு பயிர்ச்சாறுகளை விட இரசாயன முறை அற்ற வேம்பு வெள்ளைப்பூடு சோப்புக்கலந்த கலவை செயல்திறன் மிக்கதாகவும் விரைவாக பாவிக்கக் கூடியதாகவும் இருந்தது.

மண், நீர் முகாமைத்துவம்

- 10kg/ha சல்பர் பயன்படுத்துவதனால் 9% விளைச்சலின் அதிகரிப்பை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. பெரிய அளவிலான நிலக்கடலை விதைக்கு சல்பரின் தேவை ஆய்வு செய்யப்பட்டது. இதுவும் 10kg/ ha க்கு உட்படுத்தப்பட்டதாக இருந்தது.

விவசாய காலநிலை

- ஒவ்வொரு நாளும் விவசாய காலநிலைத் தரவுத்தளம் மீதான விபரங்கள் பதியப்பட்டு வருகின்றது.

அபிவிருத்தி நடவடிக்கைகள்

- கூட்டெருவும், பசுந்தாட் பசளை உற்பத்தியும்; வித்தியாசமான சேதன மீதிகளை பயன்படுத்தி 42 தொன் கூட்டெரு தயாரிக்கப்பட்டது.
- இரண்டு ஏக்கர் நிலத்திற்கு 100m ற்கு வேலிமுறை பயிர்ச்செய்கை ஸ்தாபிக்கப்பட்டது.

பசுந்தாட் பசளை பயிர்களின் விதை உற்பத்தி

சணல்	15 கி.கி
ஸெஸ்பானியா ரொஸ்ட்றாட்டா	01 கி.கி
மியுகுனா புறூரிகா (வந்துரு மீ)	03 கி.கி

தொழில்நுட்பப் பரிமாற்றமும் பயிற்சியும்

- "லபுதுவவில்" நடைபெற்ற தென்மாகாண விவசாய கண்காட்சியில் பங்குபற்றியமை.

- கொவி சதிய எனும் திட்டத்தில் வயற் பயிர்கள் ஸ்தாபித்தல் பராமரித்தல் ஊடாக விவசாய தொழில்நுட்ப பூங்காவிற்கு உதவப்பட்டது.
- பசுந்தாட் பசளை, சேதனப்பசளை உற்பத்தி தொடர்பாகவும் பழப் பயிர்ச்செய்கை, தாழ்நில, மரக்கறிப் பயிர்ச்செய்கை, வயல் பயிர்ச்செய்கை தொடர்பானவை இடம்பெற்றிருந்தன.

மாதிரி கிராமத் திட்டம்

- மஹ அலுத்தரம எனும் கிராமம் இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆரம்ப விழிப்பூட்டல் திட்டத்தினூடாக பயறு, கௌபி, நிலக்கடலை, எள்ளு செய்கையுடன் நில தயார்படுத்தல் தொழில்நுட்பம் ஆகியன அங்கு விரிவாக்கம் செய்யப்பட்டன. ஒவ்வொரு விதைகளுக்குமான மாதிரி விதைகள் வழங்கப்பட்டு சுய விதை உற்பத்தி அதிகரிக்கப்பட்டது.

விவசாயிகளுக்கான ஆலோசனையும் பார்வையிடலும்

- 175 விவசாயிகளுக்கு இந்த நிலையமூடாக தேவையான ஆலோசனைகளையும் அறிவுரைகளும் வழங்கப்பட்டன.
- வித்தியாசமான பயிர்களுக்கென 21 வகையான மண் மாதிரிகளின் பரிசோதனை செய்யப்பட்டது. இவை அனைத்தும் விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்டவை என்பதுடன் அவற்றிற்கான பயிர்களும் உரவகை சிபாரிசும் ஆராயப்பட்டன.

பயிற்சியும் வானொலி நிகழ்ச்சியும்

- கத்தரிப் பயிர்ச்செய்கையில் பூச்சி, நோய் கட்டுப்பாடு (Solanaceous crops) அவரையில் மஞ்சளாதல் தாக்கம் ஆகியன பற்றி ஆறு வானொலி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
- விவசாயக் கல்லூரி மாணவர்களுக்கு இழைய வளர்ப்பு தொடர்பான பயிற்சியும் மேற்கொள்ளப்பட்டது.
- தென்மாகாணத்திற்கான தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு வயற் பயிர்கள் தொடர்பான பயிற்சியும் வள ஆலோசகர்களினால் ஆலோசனை வழங்கப்பட்டது.
- தும்பை பாகல் மற்றும் நிலக்கடலைச் செய்கை தொடர்பான மூன்று பயிற்சி நெறிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.
- விவசாயத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட 15 பயிர் சிகிச்சைகளுக்கான வள ஆலோசகர்கள் வழங்கப்பட்டனர்.
- அண்ணளவாக உத்தியோகத்தர்களால் 30 வெளிக்கள பயணங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் பிராந்திய மட்டத்தில் காணப்பட்ட குறிப்பிட்ட பிரச்சினைகளும் தீர்த்துவைக்கப்பட்டன.
- பூச்சி நோய்கள் கட்டுப்பாடு தொடர்பாக பன்னிரண்டு பயிற்சி வகுப்புகள் விவசாயிகளுக்கு மேற்கொள்ளப்பட்டன.
- 370 விவசாயிகளுக்கும் 250 மாணவர்களும், 40 அரச உத்தியோகத்தவருக்குமாக கூட்டெரு தயாரிப்பு முறை பற்றி கொள்கை செய்முறை பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன.
- 5 கி.கி.வீதம் 5000 பைகள் கூட்டெரு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.
- மண்ணின் ஈரத்தன்மை பாதுகாப்பு, கூட்டெரு உற்பத்தி, மண்ணின் பசளைத்தன்மையைப் பராமரித்தல், உர பாவனை திறன் மண் மாதிரிகள் சேகரிப்பு, ஆய்வு கூட தொழில்நுட்பங்கள் தொடர்பாக 15 பயிற்சிகள் நடாத்தப்பட்டன.

வெளிநாட்டுப் பயிற்சிகள்

- எண்ணெய் விதைப் பிரிவு ஆராய்ச்சி உத்தியோகத்தர் Ms D.G.C. ஜீவனி, எண்ணெய் பயிர்ச்செய்கை பரந்த தொழில்நுட்ப பாவனை தொடர்பான சீன அரசின் மூன்று மாத பயிற்சி பெற்றார்.
- பங்களாதேசில் நடைபெற்ற சார்க் நாடுகளின் தேசிய விவசாய ஆராய்ச்சி முறை ஆலோசனைக் கூட்டத்தில் கலாநிதி பீ.வீரசிங்க கலந்து கொண்டார்.

விதைகளும், நடுகைப் பொருட்களும்

உற்பத்தி செய்யப்பட்ட விதை நடுகைப் பொருட்களின் அளவுகள் அட்டவணை 2.1.2 இல் காட்டப்பட்டுள்ளது.

பயிர்	இனம்	உற்பத்தியாளர் விதை	பதிவுசெய்யப்பட்ட விதை	அத்தாட்சிப்படுத்தப் பட்ட விதை (kg)
நிலக்கடலை	வளவை	36	274	–
	இந்தி	106	–	–
	ரிக்கிரி	87	–	–
	திஸ்ஸ	139	862	1,031
எள்ளு	மாலீ	05		
கௌபீ	தவள			663
	பொம்பாய்			750
பயறு	எம்.ஐ 5			644
சோளம்	சம்பத்			645

கீழ்வரும் நடுகைப் பொருட்களும் உற்பத்தி செய்யப்பட்டன

வாழை	4,650	தாவரங்கள்
தும்பைப்பாகல்	1,665	தாவரங்கள்
அன்னாசி	500	தாவரங்கள்

2011 ஆம் ஆண்டுக்கான திட்டம்

பயிர் விருத்தி

எண்ணெய் விதைப் பயிர்கள்

- நிலக்கடலையில் கலப்பு பிறப்பாக்கத்திற்கான பெற்றோர் குண இயல்புகளை அடையாளம் காணுதல்
- நிலக்கடலை, எள்ளு தொடர்பான உற்பத்தியாளர் விதை உற்பத்தி
- நிலக்கடலைக்கான வர்க்க இசைவாக்கப் பரிசோதனை
- நிலக்கடலைக்கான விளைச்சல் பரிசோதனை.
- நோய் எதிர்ப்புத் தன்மையை கொண்ட, கறுப்பு மற்றும் வெள்ளை நிற விதையுடைய அதிக விளைச்சலும் (1.8 – 2 t/ha) கூடிய இனக்கலப்பு பிறப்பாக்கத்திற்கான சிறந்த வர்க்கங்களை அடையாளம் காணுதல்.
- கூடிய விளைச்சலுடைய (>800kg/ha) கடுகு மற்றும் Rape விதை வர்க்க விருத்திக்கான மூலவுயிருரு மதிப்பீடு.
- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை (NCVT) கடுகு பேதங்கள்.
- அதிக விளைச்சலுடைய (>800kg/ha) கடுகு இனங்களின் அபிவிருத்தி.

அவரைத் தானியம்

- தெரிவு செய்யப்பட்ட உயர்வான விளைச்சலுடைய கௌபி பேதங்களின் பரிசோதனைகள்
- வயது குறைந்த பயறு இனங்களும் உயர்வான விளைச்சல் கௌபிக்குமான கலப்பு பிறப்பாக்க நிகழ்ச்சித் திட்டம்.
- நோய் பீடைக்கு எதிர்ப்புத்தன்மையுள்ள, உயர்வான விளைச்சலுள்ள வரட்சியை தாங்கி வளரும் தன்மையுடைய கலப்பு பிறப்பாக்க இரண்டாவது சந்ததி பேதங்களின் மதிப்பீடு.
- வரட்சியைத் தாங்கி வளரும் கௌபி வர்க்கங்களை அடையாளம் காணும் பரிசோதனைகள்.
- சேகரிக்கப்பட்ட கௌபீ மூலவுயிருருக்களை மதிப்பீடு செய்தலும் அவற்றினை பெருக்கலும்
- தெரிவுசெய்யப்பட்ட கொள்ளு, எள்ளு பேதங்களின் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க பரிசோதனை.

பழங்கள்

பாரம்பரிய முறையினூடாக சிபார்சு செய்யப்பட்ட வாழை வர்க்கங்களினதும் ட்ராகன் பழமரத்தினதும் அடிப்படை நடுகைப் பொருட்களின் உற்பத்தி.

மரக்கறிகள்

- கத்தரி பேதங்களின் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை.
- "ருகுனு" எனும் பூசணி உற்பத்தியாளர் விதை உற்பத்தி
- பூசணி மற்றும் தும்பைப்பாகல் மூலவுயிருரு சேகரிப்பும், கலப்புபிறப்பாக்கமும்
- வெண்டியில் கலப்பின வர்க்க விருத்தி
- சிபாரிசு செய்யப்பட்ட தும்பைப்பாகல் வர்க்கங்களான விசால், கேஸர ஆகியவற்றில் தாய்த்தாவர பராமரிப்பு
- தண்டுத்துண்டங்கள் மூலம் தும்பைப்பாகல் உற்பத்தி
- தும்பைப்பாகல் மூலவுயிருரு பராமரிப்பு.

பயிர்ப் பாதுகாப்பு

- வேம்பை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தியின் மூலமாக உழுந்து காய்துளைப்பானின் Bruchids வயல் முகாமைத்துவம்.
- தாவரத்திலிருந்து பெற்ற பயிர்பாதுகாப்பிகள் கௌப்பியில் Bruchids *(Callosobruchus maculates)* தாக்கத்திற்கு களஞ்சிய நிலைமையின் கீழ் மதிப்பீடு செய்தல்.
- காய் துளைப்பான் பூச்சியால் *(Elasomolomum sordidus)* ஏற்படும் பாதிப்பு (Pilot scale testing)
- பயற்றில் சித்திர வைரஸ் தொற்று ஏற்படும் போது செயற்கை பீடைநாசினிகளின் செயற்றிறனை ஒப்பிடுதல்.
- காய் துளைப்பானுக்கு எதிர்ப்புத் தன்மையுடைய கௌபீ மூலவுயிருருத் தெரிவு
- கௌபீயில் காய்துளைப்பானை கட்டுப்படுத்துவதற்காகப் பிரயோகிக்கக் கூடிய ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம்.
- மிளகாயில் ஏற்படும் இலைச்சுருளல் சிக்கலை கட்டுப்படுத்துவதற்கு பீடை பரிபாலன தொழில்நுட்பம்
- கௌபீயில் பனிப்பூச்சியைக் கட்டுப்படுத்துவதற்குரிய தாவரச் சாறுகளின் செயற்திறன் ஆய்வுகள்.
- எள்ளில் தண்டு மற்றும் வேர் அழுகல் *(Macrophomina phaseolina)* நோய்க்கு தாவரச் சாறுகளின் செயற்திறனுக்கான சாடிப்பரிசோதனை.
- நிலக்கடலையில் *Sclerritium rolfi* பங்கசுவை கட்டுப்படுத்துவதற்கு தாவரச் சாறுகளின் செயற்திறன் பரிசோதனை.
- நிலக்கடலையில் *Fusarium oxysporum* பங்கசுவை கட்டுப்படுத்துவதற்கு தாவரச் சாறுகளின் செயற்திறன் பரிசோதனை.

உயிரியல் தொழில்நுட்பம்

- "நேத்ராம்பழம்" வர்க்க வாழை விருத்திக்கு வளர்ப்பூடக நெறிமுறை அபிவிருத்தி.
- தாவர பீடை நாசினியாக பாவிக்கவுள்ள மருத்துவப் பயிர்களில் பங்கசிற்கு எதிரான திறன் மதிப்பீடும் தெரிவும்.
- "நேத்ராம்பழம்" வர்க்க 1000 வாழை உறிஞ்சிகளின் உள்ளக விருத்தி.

மண், நீர் முகாமைத்துவம்

- கலப்பினச் சோளத்தில் (சம்பத்) அதன் விளைச்சலிலும், வளர்ச்சியிலும் நைதரசன் மற்றும் நாகம் ஏற்படுத்தும் தாக்கம்.
- வித்தியாசமான சேதனப் பொருட்கள் மண்ணில் கிடைக்கக் கூடிய நைதரசன் மீது செலுத்தும் தாக்கம்.
- வேறு வயற் பயிர்களுக்காக ஒருங்கிணைந்த தாவர போசணைத் தொகுதி (IPNS) தயார் படுத்தல்.
- வித்தியாசமான மட்டங்களில் சல்பரானது நீர் ப்பாசன நிலக்கடலையின் வளர்ச்சியிலும், விளைச்சலிலும் செலுத்தும் தாக்கம்.

பணியாளர் பட்டியல்

பதவியணி	எண்ணிக்கை
மேலதிகப் பணிப்பாளர்	01
ஆராய்ச்சி அலுவலர்	09
பண்ணை முகாமையாளர்	01
ஆராய்ச்சி உதவியாளர்	13
விவசாயப் போதனாசிரியர்	08
நிர்வாக உத்தியோகத்தர்	01
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	06
சாரதி	07
அலுவலக சிற்றூழியர்	01
காவலாளி	12
தொழிலாளி (தரம் 11)	51
தொழிலாளி (தரம் 111)	04
ஒப்பந்தத் தொழிலாளி	76
திறமையுடைய தொழிலாளி	05
பொருளாதார உதவியாளர்	01
விவசாய மேற்பார்வை உத்தியோகத்தர்	01
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்	04
ஆராய்ச்சி ஆய்வுகூட உதவியாளர்	03
களஞ்சிய அலுவலர்	01
ஒட்டுனர்	01
சுற்றுலா விடுதிக் காப்பாளர்	01
உழவு இயந்திர இயக்குனர்	02

2.1.2 பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம், (RARDC) அரலகன்வில

இந்நிலையம் மஹாவலி வலையங்களான B,C,D, G மற்றும் கிழக்கு மாகாண, இடை மாகாண பிரதேசங்களுக்கு ஏற்ற தொழில்நுட்பங்களை பரவலாக்கலுக்கும் அபிவிருத்தி செய்தலுக்கும் பொறுப்பாக உள்ளது. தேசிய பிராந்திய முக்கியத்துவம் வாய்ந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்களில் கவனம் செலுத்துகின்றது. மேலும் இந்நிலையம் மறுவயற் பயிர்களின் ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருப்பினும் பிராந்திய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த நெல், பழப்பயிர்கள், மரக்கறிப்பயிர்கள் என்பவற்றையும் கையாள்கிறது. பயிராக்கவியல், பூச்சியியல், பிறப்புரிமையியலும் தாவர இனவிருத்தியும் தாவர இனக்கலப்பும், நோயியல், சமூகப் பொருளாதாரம், நீர் மற்றும் மண் முகாமைத்துவம் என வேறுப்பட்ட பிரிவுகளின் கீழ் ஆராய்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுகிறது.

பாதீடு

அட்டவணை 2.1.2.1: பாதீடு 2010 (ரூபா)

தலைப்பு	*ஒதுக்கீடு*	*செலவு*	*செலவு%*
மீண்டு வரும் செலவு	8,033,000	6,397,884	80
மூலதனச் செலவு	3,016,096	1,577,437	52
செயற்றிட்டங்கள்			
'அபி வவமு ரட்ட நகமு' வேலைத் திட்டம்	815,000	371,840	46
சேதனப் பசளை உற்பத்தி பயன்பாட்டை மேம்படுத்தல்	2,200,000	1,744,395	79
சமூக மட்ட விதை உற்பத்தி	75,000	60,000	80
வாழை நடுகைப் பொருள் உப திட்டம்	215,000	193,252	90
வீட்டுத் தோட்ட அபிவிருத்தி	70,000	16,912	24
மொத்தம்	***34,292,598***	***24,172,527***	***70***

முன்னேற்ற அறிக்கை

ஆராய்ச்சி

பயிராக்கவியல்

மிளகாய்

மிளகாய் பயிரில் மூன்று பேதங்கள் மதிப்பீடு செய்யப்பட்டது. தரவுகளின் அடிப்படையில் 'வரணியா' பேதம் உற்பத்தி கூடியதாக இனங்காணப்பட்டது.

நெல்

- நெற்பயிர் ஸ்தாபித்தல் நேரடி விதைப்பு, சாதாரண நாற்று நடல், நெற் செறிவாக்கல் முறை மற்றும் காற்றூட்டல் நிலைமையில் நெற்செய்கை ஆகிய 4 முறைகளில் At 307, Bg357, Bg379-2 மற்றும் Bg 300 ஆகியன அவற்றின் உற்பத்தி திறனுக்காக மதிப்பீடு செய்யப்பட்டன. நேரடி விதைப்பு கூடுதல் விளைவுடையதாகப் பதிவாகியது.
- இரசாயனப் பசளையை 25% ஆல் குறைத்து 10 தொன் ஹெக்ராயருக்கு என்ற அளவில் மேலதிகமாக கூட்டு பசளை சேர்த்து தகுந்த உர முகாமைத்துவத்தின் மூலம் நெற் பயிரில் மஞ்சளாதல் வெற்றிகரமாக கட்டுப்படுத்தப் பட்டது.
- நிற அட்டவணையின் அடிப்படையில் யூரியா பிரயோகம் நெல் மஞ்சளாதலை குறைத்தது.
- 3, 3½, 4½ மாத வயதுடைய புதிய நெற் பேதங்கள் நிலையான வர்க்கத்துடன் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட நெல் வர்க்கச் சோதனை திட்டத்தின் (NCRVT) கீழ் நெல் ஆராயச்சி அபிவிருத்தி நிலையத்தின் நெறிப்படுத்தலின் கீழ் காலபோகம் 2009/2010 சிறுபோகம் 2010ல் செய்கை பண்ணப்பட்டது.
- Bg 3026 பேதம் 5.67 t/ha விளைவையும் Bg 07-1350 (4 மாதம்) பேதம் 5.68 t/ha விளைவையும் Bg 379-2 என்ற வர்க்கத்தின் விளைவான 5.61 t/ha விளைவுடன் ஒப்பிடும் போது முன்னேற்றகரமாக இருந்தது.
- At 05-1621 (3 1/2 மாதம்) மற்றும் BW 03 - 1073 (3 மாதம்) ஆகிய பேதங்கள் ஏனைய சிபாரிசு செய்யப்பட்ட வர்க்கங்களுடன் ஒப்பீடுச் செய்யப்பட்டது.

- 2010ல் சிறுபோகத்தில் Bg 985 மற்றும் At 07-800 (3 மாதம்), என்பன 6.68 t/ha விளைச்சலையும் Ld 5-5-14 மற்றும் At 07-1440, என்பன 6.70 t/ha விளைச்சலையும் BW 05-1621 (3 1/2 மாதம்) 6.17 t/ha விளைச்சலையும் தந்தன.
- எல்லா புதிய பேதங்களும் பொதுவான நோய்கள் மற்றும் பீடைகளுக்கு எதிர்ப்புத்தன்மையைக் காட்டியன.
- இம் 3, 3 1/2 மாத பேதங்கள் VAT சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

பழப்பயிர் மற்றும் மரக்கறிப்பயிர்

- சாதாரணமாக நன்கு நீர்வடிப்புள்ள கல்சியமற்ற கபில மண்ணில் அணை வடிகால் அமைப்பின் கீழ் தோடை, கொய்யா, வாழை, பப்பாசி, மாதுளை, கட்டைமுருங்கை, என்பன வெற்றிகரமாக மண் அணைகளில் வளர்க்கப்பட்டது.

கௌபீ

- 'வருணி' மற்றும் 'டவள' ஆகிய இரு பேதங்களைக் கட்டுபாடாகக் கொண்டு தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க பரிசோதனை மறுவயற்பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் மேற் கொள்ளப்பட்டது. IJ 97k -499-39 பேதம் கூடிய விளைச்சலுடையதாகவும் விசேடமாக இலை சுரங்கமறுப்பான் தாக்கத்துக்கு எதிர்ப்பு உடையதாகவும் இருந்தது.

தாவர இனவிருத்தியும் பிறப்புரிமையியலும்

சின்ன வெங்காயம்

- ஐந்து புதிய பேதங்கள் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனைக்காக தேர்வு செய்யப்பட்டது.

தும்பை பாகல்

- சிறந்த நடுகைப் பொருட்களை பெற்றுக் கொள்ளும் பொருட்டு தாய்த் தாவரக் கொடிகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

பூச்சியியல்

நெல்

- உலர்வலயத்தில் செய்கை பண்ணப்படும் நெல் இனங்கள் மடல் சிற்றுண்ணி எதிர்ப்புக்காக சோதிக்கப்பட்டன. எனினும் எல்லா இனங்களும் பல்வேறு மட்டங்களில் தாக்கத்திற்கு உட்பட்டன. விசேடமாக சிறுபோகத்திலும் பார்க்க காலப்போகத்தில் குறைவாகத் தாக்கம் காணப்பட்டது.

பூங்கனியியல்

மா

- பத்து பேதங்கள் வயலில் கரு முலவள வங்கியாகப் பராமரிப்பதுடன் தேர்வு செய்யப்பட்ட 10 பேதங்கள் தேசிய ஒருங்கிணைப்புப் வர்க்க பரிசோதனைக்காக பெருக்கம் செய்யப்பட்டன

பப்பாசி

- திருத்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வடிகால் முறையின் கீழ் பப்பாசியை வர்த்தக பயிராக செய்கை பண்ணுவதற்கு சிபாரிசு செய்வதற்காக நீர் வடிப்பு குறைவான நிலையில் பரிசோதிக்கப்பட்டது.

தாவர நோயியல்

நெல்

- தேர்வு செய்யப்பட்ட ஐந்து தேர்வுப் பங்கசு நாசினிகள் நெல்லில் மணி நிறமாற்றமடைவதை தடுப்பதற்காக பரிசோதிக்கப்பட்டன. 'டைபென கோனசோல்' வெற்றிகரமாக பங்கசு தாக்கத்தைக் கட்டுப்படுத்தியது.

சின்ன வெங்காயம்

- சின்ன வெங்காயப் பேதங்களில் ஊதா இலைப்புள்ளி மற்றும் குமிழ் அழுகல் என்பவற்றின் எதிர்ப்புத் தன்மைக்குரிய பேத வகையை கண்டுக்கொள்வதற்கான தேர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மண் நீர் முகாமைத்துவம்

- கத்தரியில் வினைத் திறனுள்ள நீர்பாசன இடைவேளைக்காக IW/CPE விகிதத்தை பாவித்து மதிப்பீடு செய்யப்பட்டது. 1.5 IW/CPE விகிதம் உயர் விளைவுடையதாக காணப்பட்டது. எவ்வாறாயினும் 1 IW/CPE விகிதம் சேதனப்பசளை பாவித்த தோட்டங்களில் உயர் விளைவைப் பெற போதுமானதாகக் காணப்பட்டது.
- மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தின் பிரதான 'சுலுசு' ஊடாக மகாவலி B தொகுதியில் உள்ள வயலுக்கு வாய்க்காலின் மூலம் நீர் கொண்டு செல்லும் திறன் மதிப்பீடு செய்யப்பட்டது. நீர் கொண்டு செல்லும் உயர்திறன் 88.6% ஆக பிரதான வாய்க்காலில் அவதானிக்கப்பட்டது. எனினும் 73.92%, 59.31%, மற்றும் 30.81% விநியோகத் திறன்கள் முறையே பிரதான விநியோக வாய்க்காலிலிருந்து உப வாய்க்கால், உப வாய்க்காலில் இருந்து வயல் வாய்க்கால் மற்றும் வயல் வாய்க்காலிலிருந்து வயலுக்கு என்ற வகையில் பதிவாகியது.

களை விஞ்ஞானம்

- 2009/2010 பெரும்போகம் 2010 சிறுபோகம் என்பவற்றில் விண்ணப்பிக்கப்பட்ட நான்கு புதிய களைநாசினி ஒட்சிடையோசோன் Ec (றொன்ஸ்ரார் 25 Ec), இருஸ்பைரிபக் சோடியம் (நொமினி) ரில்லகோல்ட் மற்றும் புரொபனில் fb, எம்.சி.பி.ஏ 60% அடிப்படையாகக் கொண்டு பரிசோதிக்கப் பட்டன. பென்ராசோன் 48% E மற்றும் பினொச்சி-பி-ஈகைல் 60g Ec என்பன புரொபனில் fb எம்.சி.பி.ஏ 60% ஐ விட எல்லா களைகளையும் சுமாராகக் கட்டுப்படுத்தியது பென் டாமெலின் (Stomp) களைகளை கட்டுப்படுத்த தவறியது.

- சிபாரிசு செய்யப்பட்ட ஒரைசா சற்றைவா இனங்களான At 401, Bg94-1, Bg357 மற்றும் Bg 352 என்பவற்றில் முதலாவது காலப்பகுதியில் வேறுபாடுடைய பயிர் முளைத்தலில் களை இயல்பு விருத்தியாவதை பரிசோதனை உறுதி செய்துள்ளது.

அபிவிருத்தி

ட்றகன் பழம்

- மொத்தமாக 190 சாடி நாற்றுகள் வயல் நடுகைக்காக இந்த வருடம் விநியோகிக்கப் பட்டுள்ளது.

தும்பை பாகல் (Spine gourd)

- தாய்க்கொடியை விருத்தி செய்வதற்காக 26 சாடியிலிடப்பட்ட கொடிகள் விநியோகிக்கப் பட்டுள்ளன.

சுண்டைக்காய்

- நாட்டில் எல்லா பகுதிகளிலும் உள்ள விவசாயிகள் கோரிக்கைக்கு ஏற்ப 'பிந்து' இனத்தின் உற்பத்தியாளர் விதை விநியோகிக்ககப் பட்டுள்ளது. 550 கிராம் விதை (110ha) விற்பனை செய்யப்பட்டது. 562 கிராம் விதை (112 ha) இலவசமாகவும் வழங்கப்பட்டது.

ஏனையவை

சர்வதேச ஒன்றுகூடல் மற்றும் கருத்தரங்கில் பங்குகொள்ளல்

- கலாநிதி S.H.A. de சில்வா, பிரதிப்பணிப்பாளர் (ஆராய்ச்சி) அவர்கள் டாக்கா, பங்களாஷேஷ் 2010-10-12ம் திகதி ஒக்டோபர் மாதம் நடை பெற்ற SAARC-TCARD கூட்டத்தில் இலங்கையை பிரதிநிதிப்படுத்தி கலந்துக் கொண்டார்.

செயற்றிட்டங்களும் ஏனைய திட்டங்களும்

சேதனப் பசளை தயாரிப்பு, பயன்பாடு, மற்றும் அபிவிருத்தி

- இச்செயற்றிட்டம் வருடம் முழுவதும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. சேதனப் பசளை மாதிரி துண்டங்களுக்கும் பரிசோதனைத் துண்டங்களுக்கும் விநியோகிக்கப்பட்டது. 627 பேருக்கு சேதனப் பசளை தயாரிப்பில் பயிற்சி வழங்கப்பட்டது. துண்டுபிரசுரங்களும் சேதனப்பசளை வளர்பூடக மாதிரிகளும் வழங்கப்பட்டன.

வாழை நடுகைப் பொருள் உற்பத்தி உப செயற்திட்டம்

- விருத்தியாக்கிய 800 தாய்தாவரங்கள் நடுகைப்பொருள் உற்பத்திக்காக களத்தில் பராமரிக்கப்பட்டன.

வீட்டுத் தோட்டம்

- மாதிரி வீட்டுத் தோட்டம் அமைத்து பராமரிக்கப் பட்டது.

தொழில் நுட்ப பரிமாற்றம்

துண்டு பிரசுரம்

- வெங்காயம், பப்பாசி, ட்றகன் பழம், தும்பை பாகல் என்பவற்றில் புதிய தொழில்நுட்பங்களடங்கிய துண்டு பிரசுரங்கள் மக்களுக்கு விழிப்பூட்டல் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்டது.

வயல் விழாவும் பயிற்சியும்

- பதினொரு பயிற்சித் திட்டங்கள் நிலையத்தினுள் 627 பேருக்கு கூட்டுப் பசளை தயாரிப்பிலும் மேலும் 24 பயிற்சிகள் நிலையத்துக்கு வெளியேயும் நடத்தப்பட்டன. இவற்றில் விவசாய உத்தியோகத்தர்கள், உதவியாளர்கள், விவசாயிகள், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

பயிர் சிகிச்சை

- மகாவலி B,C,D மற்றும் G பிரதேசங்களில் 13 பயிர் சிகிச்சைகளையும் 35 வயற் பரிசோதனைகளையும் உரிய உத்தியோகத்தர்கள் மேற்கொண்டதுடன் 4 வயல் விழாவும் இந்த வருடத்தில் நடத்தப்பட்டன. பூச்சியியல், நோயியல், மண்விஞ்ஞானம் தொடர்பான வயல் பிரச்சினைக்குரிய தீர்வுகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

மாகாண மற்றும் மகாவலி தொழில்நுட்ப குழுகூட்டம்

- கோரப்பட்ட 9 தொழில்நுட்ப உதவிகள் மகாவலி மற்றும் மாகாண மட்டத்தில் தயார்ப்படுத்தல் கூட்டத்தில் வழங்கப்பட்டது. விவசாயிகளுக்கு களப்பிரச்சினை சம்பந்தமான தொழில்நுட்ப தீர்வுகள் வழங்கப்பட்டன. விசேடமாக மகாவலி B மற்றும் C பிரதேசங்களில் பயிர்பாதுகாப்பு சம்பந்தமான தீர்வுகள், மாதிரிகளை பகுப்பாய்வு செய்தல், கள விஜயத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டன.

சேவைகள்

மண் பரிசோதனை

- மொத்தமாக 320 மண் மாதிரிகள் பரிசோதிக்கப் பட்டு அவற்றிற்கேற்ப குறித்த பசளைச் சிபாரிசு வழங்கப்பட்டது.

2011 ஆம் ஆண்டுக்கான திட்டம்

பயிராக்கவியல்

- மா இனங்களில் நல்லியல்புள்ள மூலவுயிருருக்களை மதிப்பீடு செய்தலும் இயல்புகளை இனம் காணலும்
- பெரிய நெல் வயல்களில் நெல் மஞ்சாளாதலை கட்டுப்படுத்துவதற்கான தொழில்நுட்ப முகாமைத்துவம்
- களை நெல்லுக்கான தொழில்நுட்ப முகாமைத் துவம்
- சோளப்பயிரை அடிப்படையாகக் கொண்ட ஊடுபயிராக்கத்தின் பொருளாதாரமும் உற்பத்தியும்

பூச்சியியல்

- மகாவலி B பிரதேசத்தில் வெங்காயம் மற்றும் மிளகாயில் குத்தி உறிஞ்சும் பீடைகளின் முகாமைத்துவம்
- உலர் வலயத்தில் செய்கை பண்ணப்படும் நெல்லில், இலைச்சிற்றுண்ணி, மற்றும் மடற் சிற்றுண்ணிகளின் மதிப்பீட்டு ஆய்வு

பிறப்புரிமையியலும் தாவர இனவிருத்தியும்

- நுகர்ச்சி குறைவான பயிர்களில் பயிர் வர்க்க மேம்பாடு
- சின்ன வெங்காயம் மற்றும் நெல் (3, 3 1/2, 4 1/2 மாத) இனங்களின் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க பரிசோதனை
- RRDI இன் நெல் பயிருக்கான தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட களைநாசினி தேர்வு பரிசோதனை (NCHST) மேற்கொள்ளல்
- வேர் விடும் கொடி, வெட்டுத்துண்டுகள் உற்பத்தி
- 'சுண்டக்காய்' உற்பத்தியாளர் விதை உற்பத்தி

தாவர நோயியல்

- சின்ன வெங்காய அடியழுகல் மற்றும் நெல் மணிநிறமாற்றத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய பங்கசு நாசினியை தேர்வு செய்தல்

மண் மற்றும் நீர் முகாமைத்துவம்

- கல்சியமற்ற கபில மண்ணில் வெங்காயத்துக்கான IPNS திட்டத்தை மேம்படுத்தல்
- மண்ணில் பார உலோகங்களின் சேர்க்கையால் விவசாயத்தில் ஏற்படும் தாக்கம் பற்றிய ஆய்வு
- நீர் முகாமைத்துவ முறை மற்றும் பயிர்ச்செய்கை முறை என்பவற்றின் மூலம் இலங்கையில் நீர் பாதுகாப்பை மதிப்பிடுதல்
- பப்பாசியை வர்த்தகப் பயிராக செய்கை பண்ணுவதற்கு அங்கீகரிக்கக்கூடிய வினைத்திறனான வடிகால் அமைப்பு முறையை சிபார்சு செய்தல்
- நீண்ட கால அடிப்படையில் இரசாயப் பசளை, சேதனப் பொருள் பாவனை பயிரின் உற்பத்தி மற்றும் மண் வளத்தில் காணப்படும் இயல்பை மதிப்பீடு செய்தல்
- IW/ CPE விகிதத்தை பாவித்து கத்தரிக்கான பாசன நீரின் அளவை தீர்மானித்தல்
- கல்சியமற்ற கபில மண்ணில் வேறுப்பட்ட மண் பாதுகாப்பு முறைகள் மூலம் மண் அரிப்பு, நீரோட்டம் என்பவற்றின் தாக்கத்தை காணல்
- நீர்வடிப்பற்ற கல்சியமற்ற கபில மண்ணை மேட்டுநில பயிர்செய்கைக்கு ஏற்றவாறு மாற்றியமைத்தல்

களை விஞ்ஞானம்

- பிறப்புரிமையில் மற்றும் இனவிருத்தி மூலம் களைநெல்லை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை
- உள்ளூரில் கிடைக்கும் பொருள்கள் மூலம் கூட்டுப் பசளை தயாரித்தல், பயன்படுத்தல் அபிவிருத்தி செய்தல்

உத்தியோகத்தர் பட்டியல்

பதவி நிலை	எண்ணிக்கை
பிரதிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி)	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர் (SLAgS)	04
விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர்	01
நிகழ்ச்சி திட்ட உதவியாளர்	01
ஆராய்ச்சி உதவியாளர்கள்	03
விவசாய போதனாசிரியர்	04
மொத்தம்	13

2.1.3 பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், கிளிநொச்சி (RARDC)

பொருளாதார முக்கியத்துவம் உள்ள மறு வயற் பயிர்ச்செய்கை உடன் தொடர்பான விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் இப்பிராந்தியத்தில் (DL_1, DL_3, DL_4) பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், கிளிநொச்சியின் நிர்வாகத்தின் கீழ் திருநெல்வேலி, வவுனியா, முருங்கன், பரந்தன் ஆகிய பகுதிகளில் உள்ள விவசாய ஆராய்ச்சி நிலையங்களால் மேற் கொள்ளப்படுகின்றன. இது பிராந்தியத்தில் உள்ள விவசாயிகளின் பொருளாதார தேவைகளுக்கு ஊக்கமளிப்பதாகவுள்ளது. மகாஇலுப்பள்ளமையில் உள்ள மறு வயற் பயிர்ச்செய்கை ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் துணை நிலையமாக இது உள்ளது.

பயனுள்ள விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை கடந்த 15 வருட காலமாக மீள் குடியேற்றங்கள் செய்யப்படாமையால் நடத்த முடியாமல் உள்ளது. எப்படியிருந்த போதிலும் 2010 இருந்து சிறிது சிறிதாக பழைய நிலைக்கு மாறி வருகின்றது.

ஆரம்ப ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கை கள் பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலையம் கிளிநொச்சி, நெல் ஆராய்ச்சி நிலையம் பரந்தன் ஆகியவற்றில் தொடங்கப்பட்டுள்ளன. இவ் அறிக்கையில் கூறப்பட்ட நடவடிக்கைகள் வவுனியா மாவட்டத்திலுள்ள அனுசரனை ஆராய்ச்சி நிலையத்திலும், முருங்கனிலுள்ள ஆராய்ச்சி நிலையத்திலும் பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், கிளிநொச்சியிலும் மேற்கொள்ளப்பட்டவையாகும்.

பாதீடு

பாதீட்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகையும் மேற்கொள்ளப்பட்ட செலவுகளும் வெவ்வேறு தலைப்பின் கீழ் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.1.3.1: வருடாந்த பாதீடு – 2010 (ரூபா)

தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு %
மீண்டு வரும்செலவினம்	2,953,500	2,336,487	79
மூலதனம்	854,498	72,238	08
திட்டங்கள்			
"நாம் பயிரிடுவோம் நாட்டை கட்டியெழுப்புவோம்"	198,000	158,459	80
சேதனப் பசளை உற்பத்தியும், பயன்பாடும்	500,000	80,000	16
மொத்தம்	***4,505,998***	***2,647,184***	***59***

முன்னேற்ற அறிக்கை

நிலக்கடலை

வித்தியாசமான காலநிலை வலயங்களில் உகந்த புதிய வர்க்கங்களை தெரிவதற்காக 5 புதிய பேதங்களுடன் இந்தி, ரெட்டெஸ்டா, திஸ்ஸ வர்க்கங்கள் பரீட்சிக்கப்பட்டன. இவற்றில் ICGV 01270 முன்னேற்றமாகவும் 2010 சிறுபோக காலத்திற்கு குறிப்பிடத்தக்களவு ஏற்றதாகவும் மற்றும் ICGV 01270 2010 பெரும் போகத்திற்கு குறிப்பிடத்தக்க அளவு சிறந்ததாகவும் அடைவுகளைக் காட்டின.

உழுந்து

வித்தியாசமான காலநிலை வலயங்களில் உகந்த நோய் எதிர்ப்புத்தன்மை உள்ள புதிய வர்க்கங்களை தெரிவதற்காக 35 புதிய பேதங்களுடன் MI - 1 மற்றும் அநுராதா வர்க்கங்கள் பரீட்சிக்கப்பட்டன. இவற்றில் 10 புதிய பேதங்கள் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றகரமாக இருந்ததால் மேலதிக ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கௌபி

வித்தியாசமான காலநிலை வலயங்களில் உகந்த புதிய வர்க்கங்களை தெரிவதற்காக 3 புதிய பேதங்களுடன் பழைய வர்க்கங்கள் பரீட்சிக்கப்பட்டன. இவற்றில் IT 98K -205-8 குறிப்பிடத்தக்களவு முன்னேற்றகரமாக 2010 சிறுபோக காலத்திற்கு அமைந்திருந்தது.

நெல்

வவுனியா அனுசரணை ஆராய்ச்சி நிலையத்தில் 12 நெல் வர்க்கங்கள் ஆய்வு செய்யப்பட்டது. உள்ளூரில் புகழ்பெற்ற ஆட்டகாரி எனும் நெல் இனத்தின் பல வர்க்கங்கள் பரீட்சிக்கப்பட்டன. இவற்றில் கபில நிறத்தத்தி தாக்கத்திற்கும் எதிர்ப்புள்ளதும் சாய்வுத் தன்மை அற்றதாகவும் ஒரு பேதம் (105 நாள்) தெரிவு செய்யப்பட்டது. சிவப்பு நிற அரிசி மணிகளையுடைய இந்தப் பேதம் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட நெல் வர்க்க ஆராய்ச்சி சோதனையில் (NCRVT) பெரும் போகத்திற்கு 2010/ 2011) சேர்க்கப்பட்டது.

தேசிய ரீதியில் ஒருங்கிணைக்கப்பட்ட நெல் வர்க்க பரிசோதனை

தேசிய ரீதியில் ஒருங்கிணைக்கப்பட்ட நெல் வர்க்க பரிசோதனையில் (NCRVT) 3மாத, 3 1/2 மாத, 4 மாத வயதுடைய நெல் வர்க்கங்கள் வவுனியா, முருங்கன் அனுசரணை ஆராய்ச்சி நிலையங்கள் ஆகியவற்றில் மானாவாரியவும், நீர் பாசனத்துடனும் பயிர் செய்யப்பட்டது. இதன் முடிவுகள் நெல் ஆராய்ச்சி நிலையம் பத்தலகொடவிற்கு அட்டவணைப்படுத்தப்பட்டது. அத்துடன் மன்னார், வவுனியா மாவட்டத்திற்கு ஏற்ற வர்க்கங்கள் அடையாளம் காணப்பட்டன.

பயிர் பாதுகாப்பு

மிளகாய்

பனிப்பூச்சித்தாக்க எதிர்ப்பு வர்க்கங்களை தெரிவதற்காக 6 புதிய பேதங்களுடன் M 1-2 வர்க்கம் பரீட்சிக்கப்பட்டது. இவற்றில் TVC -5 ஆனது 4.6 t/ha விளைச்சலும் மற்றும் பனிப் பூச்சிதாக்கத்திற்கு எதிர்ப்புடையதாகவும் இருந்தது. மற்றும் வவுனியா மாவட்டதிற்கு TVC-1 மற்றும் TVC-3 ஓரளவு சிறந்த இனங்களாக தெரிவு செய்யப்பட்டன.

கத்தரி

அனுசரனை ஆராய்ச்சி நிலையம் வவுனியாவில் 3 பாரம்பரிய இனங்கள் பரீட்சிக்கப்பட்டன. ஈக்கு வெள்ளை, கத்தி பிடியன், அஞ்சலி (பிளாஸ்டிக்) அத்துடன் தின்னவேலிஊதா, என்பன தண்டு துளைப்பான், காய் துளைப்பானுக்கு எதிராக ஆய்வு செய்யப்பட்டது. இவற்றுள் ஈக்கு வெள்ளை எனும் இனம் நல்ல விளைச்சலை தருவதாகவும் (15.2 t/ha) மற்றைய இனங்களுடன் ஒப்பிடும் பொழுது காய், தண்டு தாக்கம் குறைவாக இருந்தது.

தாவர பிரித்தெடுப்புகளினதும் விவசாய இரசாயனங்களினதும் அவதானிப்பு கற்கை

- வேம்பு இலைகளின் புகை, பாவற்காய் பழ ஈ தாக்கத்தை 70% குறைத்தது.
- மொஸ்பிலான் எனும் இரசாயனம் பப்பாசியில் வெண்மூட்டு பூச்சி தாக்கத்தை குறைத்தது.
- நாய் உண்ணி இலையின் புகை, மாமர இலையில் தத்தியின் தாக்கத்தை 80 வீதம் குறைத்தது.

மண் நீர் முகாமைத்துவம்

மண் மாதிரிகள் பரிசோதனை

மன்னார் மாவட்டத்தில் உவர் தன்மை பாதிப்புள்ள இடங்களில் மண் மாதிரிகள் எடுக்கப்பட்டு அதன் pH மற்றும் CEC கணிப்பீடு செய்யப்பட்டு உவர் தன்மைக்கேற்ப தீர்வுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

விதை உற்பத்தி

நெல்

பரந்தன் ஆராய்ச்சி நிலையத்தில் ஆட்டகாரி எனும் நெல் வர்க்க தூய விதை 3 ஹெக்டயரில் உற்பத்தி செய்யப்பட்டது.

அடிப்படை விதை உற்பத்தி

விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், கிளிநொச்சியில் 2010 சிறுபோக காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட விதைகளின் அளவு கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.1.3.2

2010ம் சிறுபோக காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட அடிப்படை விதைகளின் அளவு

பயிர்	*வர்க்கம்*	*தொகை*
பாவற்காய்	தின்னவேலி வெள்ளை	06 கி.கி.
புடலங்காய்	தின்னவேலி நீளம்	02 கி.கி.
கத்தரி	தின்னவேலி ஊதா	03 கி.கி.
மிளகாய்	KA - 2	03 கி.கி.
தக்காளி	KC - 1	100 கிராம்

அட்டவணை 2.1.3.3 – "அபிவவமு ரட்ட நகமு மூலம் செய்கைபண்ணப்பட்ட விதை உற்பத்தி அளவு

பயிர்	*வர்க்கம்*	*தொகை*
சோளம்	ருவன்	50 கி.கி.
குரக்கன்	ஒஸாடா	50 கி.கி.

பழப்பயிர்களின் பராமரிப்பு

கதலி, கப்பல், மொந்தன், சாம்பல், இதரை மற்றும் கவன்டிஷ் வாழை வர்க்கங்களின் தாவர மூலவுயிருருக்கள் அனுசரனை ஆராய்ச்சி நிலையம் வவுனியாவில் பேணப்படுகின்றன.

சேதனப் பசளை உற்பத்தியும் பயன்பாடும்

பின்வரும் அளவுகளில் சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட்டது.

கூட்டெரு	– 15 தொ.
சணல் விதை	– 750 கி.
சணல் பசுந்தாள்	– 01 ஹெ.
கிளிசிறிடியா	– 0.2 ஹெ.

தொழில்நுட்ப பரிமாற்றம்

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் தென்றல் தேசிய சேவையில் நான்கு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன.

தொழில்நுட்ப ஆலோசனை

ஆராய்ச்சி உத்தியோகத்தர்களும் விரிவாக்க உத்தியோகத்தர்களும் நேரடியாக விவசாயிகளின் பண்ணைகளுக்கு சென்று பிரச்சினைகளை இனங் கண்டு தன்மைக்கேற்ப தீர்வுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

12 பாடசாலைகளிலிருந்து 870 மாணவர்கள் 22 ஆசிரியர்கள் 51 விவசாய டிப்ளோமா மாணவர்கள் யாழ் மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் அனுசர ணையுடன் விவசாயிகள் குழு ஒன்றும் பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தை பார்வையிட்டனர்.

அபிவிருத்தி நடவடிக்கைகள்

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி, நிலையம் கிளிநொச்சியில் பிரதான காரியால தொகுதி, விடுதி வகுப்பு – (IV) கட்டிடம், நிரந்தர வலை வேலி அமைப்பு என்பன மீள் அமைப்பும், புனரமைப்பும் செய்யப்பட்டது. துரித வடக்கின் மீள் அமைப்பின் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலையம் கிளிநொச்சியில் உயிரியல் ஆய்வு கூடமும், வலை வேலியின் ஒரு பகுதியும், வேலையாட்களுக்கு ஓய்வு அறையும், மூன்று குழாய்க்கிணறும், கட்டப்பட்டன.

2011ம் ஆண்டிற்கான திட்டம்

- மிளகாய்க்கு ஏற்படும் நோய்களிற்கு எதி ராக செயற்படும் செயற்திறன்மிக்க தாவரப் பிரித்தெடுப்பு பீடைநாசினிகளின் சூழலுடன் நட்புறவை பேணும் வகையிலான நோய் பரி பாலனம்.
- மிளகாய் பயிரில் ஏற்படும் முக்கிய பீடைகளின் தொகை பரீட்சிப்பு
- பயற்றை, பாகல், பயிர்ச்செய்கையில் ஏற்படும் பீடைகளுக்கு எதிரான தாவர பிரித்தெடுப்புப் பீடை நாசினிகளின் மீள் ஆய்வு
- நெமற்றோட்டைக் கட்டுப்படுத்தலுக்குரிய தொழில்நுட்ப அபிவிருத்தி.

- பனிப்பூச்சிக்கு எதிராக மிளகாயின் புதிய பேதங்களுடன் ஆரம்ப விளைச்சல் மாதிரித் துண்டம் அமைத்தல்.
- காய் துளைப்பானுக்கும், தண்டு துளைப்பானுக்கும், எதிரானதும் கூடிய விளைச்சலும் தரக்கூடிய உள்ளூர் கத்தரி இனங்களின் பரிசோதனை
- உழுந்து கருமூலங்களை வித்தியாசமான விவசாய காலநிலை வலயங்களில் பரிசோதித்தல்.
- உழுந்து விதையின் தரத்தை வித்தியாசமான களஞ்சிய சூழல்களில் ஆய்வு செய்தல்.
- தக்காளியின் வளர்ச்சியையும், விளைச்சலையும் வித்தியாசமான வரம்பு சால் நீர்ப்பாசனத்தின் கீழ் ஆய்வு செய்தல்.
- வத்தகையையும், பாகலையும் குழு நடுகை முறையில் பயிரிடுதல் மூலம் நீர் சேமிப்பு
- 3 1/2 மாத வயதுடைய உள்ளூரில் பிரசித்தமான சிவப்பு அரிசி இனத்தை வெவ்வேறு பயிர் அடர்த்தியுடன், வினைத்திறனை ஆய்வு செய்தல்.
- வட பிராந்தியத்தில் காற்றூட்டல் நிலைமையில் நெல் வர்க்கங்களின் முன்னேற்றத்தை ஆய்வு செய்தல்.
- பாரம்பரிய சிவப்பு மணியுடைய நெல் இனங்களை தூய்மைப்படுத்தல்
- மூலிகை பொஸ்பரசை T.S.P யுடன் ஒப்பீடு செய்தல்.
- வெங்காய மூலவுயிருரு பாதுகாப்பு
- உவர்த்தன்மையால் பாதிக்கப்பட்ட மண்ணை பரிசோதனை செய்தல்.
- தின்னவேலி வெள்ளை பாகலில் உற்பத்தியாளர் விதைகளை உற்பத்தி செய்தல்.
- காற்றூட்டல் நிலையில் செய்கைபண்ணும் நெல்லின் அடைவுகளை மதிப்பீடு செய்தல்
- நெல் வர்க்கங்களை தூய்மைப்படுத்தல்.
- வெங்காயச் செய்கையில் நெமற்டோட் தாக்கத்தையும் நோய்களையும், கிடைக்கக் கூடிய சேதனப்பசளைகளையும், சேதனப்பயிர்ச்செய்கை முறைகளையும் கொண்டு கட்டுப்படுத்தல் அத்துடன் தீங்கான இரசாயன நாசினிகளின் பயன்பாட்டையும் குறைத்தல்.
- வாழை, பலா, மா, இனிப்புத்தோடை, தேசி, மாதுளை, திராட்சை ஆகியவற்றில் நல்ல இனத்தெரிவை பேணுதலுடன் யாழ் மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கல்
- களை பராமரிப்பு ஆய்வு
- தக்காளி (KC - 1) வர்க்க உற்பத்தியாளர் விதை உற்பத்தி செய்தல்.
- உள்ளூர் வத்தைகையுடன் வத்தகைப் பயிரின் ஊடு பயிர்ச் செய்கை
- வேலி முறை பயிர்ச்செய்கை மூலம் பயிர்களின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தல்.

உத்தியோகத்தர் பட்டியல்

பதவிநிலை	*எண்ணிக்கை*
பிரதி விவசாயப் பணிப்பாளர் (ஆராய்ச்சி)	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர் பொறுப்பதிகாரி	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	06
விவசாயப் போதனாசிரியர்	07
ஆராய்ச்சி உதவியாளர்	02
உதவி ஆராய்ச்சி உதவியாளர்	02
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	01
காவலாளி	02
தொழிலாளி	36
மொத்தம்	58

2.2. பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம் (பூ.ப.ஆ.அ.நி.) - கண்ணோட்டம்

பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி திட்டங்களின் மூலம் தேசிய பூங்கனியியல் பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான பணிகளை நிர்வகிக்கின்றது. மரக்கறிகள், பழங்கள், காளான், வேர்கிழங்குப் பயிர்கள் மலர்ச்செய்கை என்பன இதன் நிர்வாகத்தின் கீழ் அடங்கும். ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள், மேம்படுத்தப்பட்ட புதிய இனவிருத்தி, மேம்படுத்தப்பட்ட பயிர் முகாமைத்துவ தொழில்நுட்ப நடவடிக்கைகள்,தாவர போசணைப் பரிபாலனம், பூச்சி பீடை பரிபாலனம், அறுவடைக்குப் பின்னான மற்றும் உணவு தயாரிப்பும் பதனிடலும், நடுகைப் பொருட்கள் உற்பத்தி, வீட்டுத்தோட்டம் ஆகிய செயன்முறைகளை மையமாகக் கொண்டுள்ளது.

பாதீடு

அட்டவணை 2.2.1: பாதீடு 2010-(ரூபா)

தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு %
மூலதனம்	23,613,862	13,346,003	57
மீண்டுவரும் செலவீனம்	48,757,000	44,037,420	90
திட்டங்கள்:			
ஒரு கிராமத்தில் ஒரு பயிர்	3,870,000	2,933516	76
பழங்கள், மரக்கறி பயிர்களின் கலப்பின விதை உற்பத்தி	3,060,000	1,989,493	65
சேதனப் பசளை தயாரிப்பும் அதன் பாவனையை அதிகரிப்பதற்கான செயன்முறைகளும்	13,400,000	8,650,347	65
பயிர் தலைவர்-மரக்கறி	8,000,000	5,367,335	67
மொத்தம்	***100,700,862***	***76,324,115***	***76***

முன்னேற்றம்

திட்டம்

- மரக்கறி, பழப் பயிர்களின் கலப்பின விதை உற்பத்தி

அதி உயர்ந்த தரமான மரக்கறி பழங்களின் கலப்பினங்களை விருத்தி செய்வதற்காக பெற்றோர் தாவரங்களைப் பேணல், சிபாரிசு செய்யப்பட்ட இனங்களைப் பேணல், கலப்பின உற்பத்தி ஆகிய பிரதான செயல் முறைகள் இதன் நிகழ்ச்சித் திட்டத்தில் அடங்குகின்றன. தக்காளி, கத்தரி, பீர்க்கு, கறி மிளகாய், கெக்கரி, பயற்றை, பாகல், பழங்கள் (பப்பாசி) ஆகிய பயிர்களில் இத்தகைய ஆராய்ச்சி நடை பெறுகின்றன.

விவசாய திணைக்களம் புதிய விருத்தி செய்யப்பட்ட கலப்பின விதை உற்பத்தியை பூ.ஆ.அ. நிலையத்துடன் இணைந்து தனியார் நிறுவனங்களின் தெரிவு செய்யப்பட்ட பண்ணை களில் ஆரம்பித்துள்ளது. 2010ல் உற்பத்தி செய்யப்பட்ட கலப்பின விதைகளின் பயிர் வாக்கங்கள் உற்பத்தி நிலையம், உற்பத்தி அளவு என்பன அட்டவணை 2.2.2 தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.2.2 கலப்பின விதை உற்பத்தி (2010)

பயிர் வர்க்கம்	நிலையம்	உற்பத்தியான தொகை கி.கி.
தக்காளி	வி.தி	9.23
(பாத்தியா)	தனியார் துறை	13.50
தக்காளி	வி.தி	14.88
(மகேசி)	தனியார் துறை	9.10
கத்தரி (அமன்டா)	வி.தி.	10.00

வி.தி – விவசாயத் திணைக்களம்

- பயிர் தலைவர் – மரக்கறி

இந் நிகழ்ச்சித் திட்டமானது மரக்கறி உறபத்தியினை அதிகரிப்பதற்காக அதிக விளைவு தரும் மரக்கறி இனங்களை அறிமுகப்படுத்துவதுடன், தரமான விதை, நடுகைப் பொருட்கள் கிடை க்கின்ற அளவு வினைத்திறனான ஒன்றிணைந்த பூச்சிபீடை முகாமைத்துவம், வர்த்தக ரீதியில் கமச் செய்கை, அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்ப முகாமைத்துவம், போசணைப் பொருட்களின் பெறுமதியை அதிகரிக்கும் விருத்தி அடைந்த தொழில்நுட்பம் என்பவற்றினூடாக ஆரம்பிக்கப்பட்டதொன்றாகும். தக்காளி, போஞ்சி, கத்தரி, பயற்றை, சிறகவரை, வெண்டி, உருளைக்கிழங்கு, வேர் கிழங்கு பயிர்களுடன் இலை மரக்கறிகளும் இலக்காகக் கொள்ளப்பட்டன.

- ஒரு கிராமம் ஒரு பயிர்

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோளானது பயிர் வலயங்களை ஸ்தாபித்து சாத்தியமான பழப்பயிர்களை இனம் கண்டு, தெரிவு செய்யப் பட்ட வலயங்களில் சாத்தியமான பழப்பயிர் களின் உற்பத்தியினை அதிகரிப்பதன் மூலம் நாட்டின் பழ உற்பத்தியை அதிகரிப்பதாகும். பின்வரும் அட்டவணை தெரிவு செய்யப்பட்ட பழப்பயிர்களின் நடுகைப் பொருட்கள் உற்பத்தியின் அளவைக் காட்டுகின்றது. பெருமளவில் இவை ஸ்தாபிக்கப்பட்ட பயிர் வலயங்களில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு உரிய மாகாண சபைகள் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.2.3 நடுகைப் பொருட்களின் உற்பத்தி

பழங்கள்	தொகை (நடுகைப் பொருட்கள்)
றம்புட்டான்	23,155
தோடை	4,000
தூரியான்	4,250
மா	7,450
அன்னாசி	91,970
பியர்ஸ்	2,450
மண்டறின்	3,360
திராட்சை	2,815
ஸ்ரோபறி	5,635
மாதுளை	2,500
மொத்தம்	147,585

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வெவ்வேறு தொகுதிகளில் ஸ்தாபிக்கப்பட்ட காளான் கிராமங்கள் (அட்டவணை 2.2.4) பயிற்சிகள், பயிற்சிக் கூடங்கள் மூலம் அண்ணளவாக 50 விவசாயிகள் காளான் உற்பத்தி சம்பந்தமாக பயிற்று விக்கப்பட்டுள்ளனர்.

அட்டவணை 2.2.4 ஸ்தாபிக்கப்பட்ட காளான் கிராமங்கள்

மாகாணம்	பி.செ.பிரிவுகள்	கிராமம்	நன்மைஅடைந்தவர்கள்
மாத்தறை	கம்புறுபிற்றிய	கம்புறுபிட்டிய மாலிம்பட	10
நுவரெலியா	நுவரெலியா	மீப்பிலிமான	10
கம்பஹா	வல்பிற்ற	வல்பிற்ற	01
குருநாகல்	பன்னல	எலபடகம, கொரவட்டுன்ன	15
கண்டி	குண்டசாலை	பால, தென்னகும்புற	10
	கங்கவட்டகோரல்ல	கென்கல, மலுவீகம	05

பி.செ – பிரதேச செயலாளர் பிரிவு

சேதன பசளையின் உற்பத்தியும் தரமுயர்த்தலும்

இத்திட்டத்தின் குறிக்கோளானது இலங்கை விவசாயிகளின் மத்தியில் சேதனப் பசளை பாவனையை அதிகரிப்பது ஆகும். இதன் பிரதான தொழில்பாடு அதிகளவில் உட்புகுத்தியை (Inoculum) உற்பத்தி செய்வதும், இவற்றை தமது சொந்த விவசாயப் பண்ணையில் சேதனப் பசளை உற்பத்தியை மேற்கொள்ளவுள்ள விவசாயிகளிடையே பகிர்வதுமாகும். சேதனப் பசளை அதன் மூலப் பொருட்கள் (கூட்டெரு உற்பத்தியில் பாவிப்பன) என்பன பகுப்பாய்வு செய்யப்பட்டன. வெவ்வேறு பயிர்களின் வினைத்திறனான சேதனப் பசளைப் பாவனைக்காக புதிய பொதிகளை விருத்தி செய்ய ஒன்றிணைந்த தாவர போசணை நடைமுறை நடாத்தப்பட்டது. அட்டவணை 2.2.5ல் 2010ல் நடாத்தப்பட்ட முயற்சிகளின் சுருக்கம் தரப் பட்டுள்ளது.

அட்டவணை 2.2.5 சேதன விவசாயத் திட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட பிரதான செயல் முறைகள்

செயல் முறைகள்	முன்னேற்றம்
பயிற்சிகள், கூட்டெரு தயாரிப்பின் விழிப்பூட்டும் நிகழ்ச்சிகள்	
விவசாயிகளுக்கான பயிற்சி (பங்கு பற்றியோர்)	1830
அலுவலர்களுக்கான பயிற்சி (பங்கு பற்றியோர்)	155
பாடசாலை மாணவர்கள் (பங்கு பற்றியோர்)	783
கூட்டெரு உற்பத்தி	
பசுட்தாட்பசளை பயிர்ச்செய்கை (ஹெக்)	5.95
கூட்டெரு உற்பத்தி (மெ.தொ.)	443.26
கூட்டெரு ஆராய்ச்சியும் பகுப்பாய்வும்	
(ஒன்றினைந்த தாவர போசனை முறைக்கான பொதியின் விருத்தியும் வேறு ஆராய்ச்சியும்)	21
பகுப்பாய்வு நிலையத்தின் ஆதார அமைப்பு	04
IPNS முறை செய்து காட்டல்	24

மாதிரி கிராமம் நிகழ்ச்சி திட்டம்

இந்த நிகழ்ச்சி திட்டத்தின் பிரதான குறிக்கோளானது விவசாயியின் வாழ்வாதாரத்தை உயர்த்த சரியான தொழில்நுட்பம், உற்பத்தி முறைகள், சிபாரிசு செய்யப்பட்ட பயிர் இனம், பூச்சி பீடை பரிபாலனமுறைகளை விவசாயிக்கு அறியச் செய்வது ஆகும். மாதிரிக்கிராமம் அமைப்பதன் மூலம் இதனை அடையலாம். மாதிரி கிராம விவசாயிகட்கு விதை நடுகை பொருட்களை குறைந்த விலையிலும் விவசாய அறிவூட்டல், திறமையுள்ள உத்தியோகத்தர்கள் மூலமும் வழங்கப்பட்டது.

மரக்கறிப் பகுதி

உற்பத்தியாளர் விதை உற்பத்தி

தக்காளி, பாகல், பயற்றை சிறகஅவரை போஞ்சி வர்க்கங்களின் உற்பத்தியாளர் விதை, உற்பத்தி செய்யப்பட்டது.தனியார் நிறுவனங்களின் வேண்டுதலுக்கு அமைய கலப்பின வர்க்கங்களான பார்த்தியா, மகேஸியின் பெற்றோர் வர்க்கங்களும் உற்பத்தி செய்யப்பட்டன.

அட்டவணை 2.2.6 பூ.ஆ.அ.நி. உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்தியாளர் விதைகள்

பயிர்	இனம்	அளவு(கி.)
தக்காளி	திலின	225
	ரஜித்தா	33
	ரி 24	26
	பாத்தியாவின் பெற்றோர்கள்	38
பாகல்	மாத்தளை கிறீன்	60
பயற்றை	கவரி	16
	பொலன்	18
சிறகவறை	கிறிஸ்னா	28

தக்காளி

விகார இனப் பெருக்கல் முறை மூலம் செரி போன்ற புதிய இனம் விருத்தி செய்யப்பட்டு லங்கா செரி என்னும் பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. இது ஒரு தொடர்ந்து வளரும் (தீர்மானிக்கப்படாத) இனமாகும். வயல்களில் பயிரிட பொருத்தமான தாகும்.

கலப்பின வர்க்கம் HF3 யும், விகார முறையில் விருத்தியான தீர்மானிக்கப்பட்ட வளர்ச்சியுடைய MI27 ம் சிறந்த வர்க்கங்களாக இனம் காணப்பட்டுள்ளன. இவை சூழலுடன் பொருந்தும் தன்மையை அறிவதற்கான சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

- அன்னிய நாட்டு வர்க்கங்களின் மதிப்பீடுகள்

இரு இனங்களான F ரைகிங் 5, மொங்கல் ஒப்பிடப்பட்ட வர்க்கங்களை விட அதிக (பழம்) விளைவை கொடுத்தன.F, 15043, Tm 701 ஸ்ரார் 9062, ஸ்ரார் 9064, என்பனவும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தன. NS 537, ஸ்ரார் 9012, ஸ்ரார் 9063, ஸ்ரார் 9065, இறக்குமதி செய்வதற்கு ஏற்றுக் கொள்ள முடியாது என கருதப்பட்டது.

கறிமிளகாய்

HCAI கலப்பினம் அதிக விளைவு தரும் கலப்பினமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

- அன்னிய நாட்டின் இனங்கள்

FST 403 (18.7 தொன்/கெ) HP210 (14.7 தொன்/கெ) அதிக விளைவு தந்தன. ரொனஸ் F_1 ம் 21348ம் ஏற்றுக் கெள்ளப்பட்டன. FST 102, FST 519 அதிக விளைவு தரும் குடை மிளகாய் இனங்களை போன்றது. பேர்பெற்றோ மக்னி பிசியோ ஏற்றுக் கொள்ளக்கூடியன. ஜலப்பினோ மாதிரி, ஊறுகாய்க்குப் பொருத்தமானது.

பீர்க்கு

சிறந்த கலப்பினங்கள் 02 இனம் காணப்பட்டன. தாய் தாவரங்கள் 06 பிறப்புரிமை தூய்மை பேணப்பட்டது. 12 கலப்பினங்களில் விதை பெறபட்டது.

NCVT இல் 2 இனங்கள் 2 இடங்களில் நடை பெறுகின்றன. VAT 3 மாகாணங்களில் நடைபெறுகின்றன.

போஞ்சி சிறகவரை

போஞ்சி NCVT 3 இடங்களில் நடை பெறுகின்றன.

போஞ்சியில் VAT நான்கு மாவட்டங்களில் நடை பெறுகின்றது

கெக்கரி

ஆரம்ப விளைவு சோதனை மூலம் பின்வரும் இனங்கள் H50, H51, H42, H44 இனம் காணப்பட்டன.

8 பெற்றோர் தாவரத்தின் இனத்தூய்மை பேணப்பட்டது.

12 கலப்புகளில் இருந்து விதைகள் பெறப்பட்டன.

4 இடங்களில் NCVT நடை பெறுகின்றது.

4 மாவட்டத்தில் VAT நடை பெறுகின்றன.

பாகல்

- 10 பெற்றோரின் இனத்தூய்மை பேணப்பட்டது. இரண்டு கலப்புகளில் இருந்து விதைகள் பெறப் பட்டன.
- அந்நிய நாட்டிலிருந்து பெறப்பட்ட 14 கலப்பின வர்க்கங்கள் பரிசோதிக்கப்பட்டு பெறுபேறுகள் பயிர் இணைப்பாளரிடம் கொடுக்கப்பட்டது.

கத்தரி

- ஒரு லெனைரி F1 கலப்பின வர்க்கம் உயர் விளைவு தரும் ஆற்றல், (> 30 தொன்) சிறந்த தரமான காய், பற்றீரியா வாடலுக்கு எதிர்ப்புத் தன்மை ஆகியவற்றை தொடர்ந்து 3 பருவங்களில் 5 இடங்களில் NCVT சோதனையில் காட்டியது. இது விவசாயிகளின் தோட்டங்களிலும் அவர் களின் சொந்தப் பராமரிப்பில் பொருந்தும் தன் மையையும் காட்டியது. அத்துடன் வெவ்வேறு விவசாய சூழல் வலயங்களுக்கான பொருந்தும் தன்மையை அறியும் சோதனை நடை பெறுகின்றது.

பயற்றை

- பயற்றையில் 13 கலப்பின வர்க்கங்களில் 3 கலப்பினங்கள் உயர் விளைவை MYT சோதனை யில் காட்டியது. இவை யாவும் அடி அழுகல் நோய்க்கு எதிர்ப்பு தன்மையை காட்டின.
- பயற்றையில் 9 தி.ம (OP) இனங்கள் உயர் விளைவையும் அடி அழுகல் நோய்க்கு எதிர் ப்பும் கொண்டிருந்தன. இவை பிரதான விளைவு சோதனைக்கு தரம் உயர்த்தப்பட்டன. (MYT)
- NCVT 4 இடங்களில் நடை பெறுகின்றன.
- VAT 4 மாவட்டங்களில் நடைபெறுகின்றன.

இலை மரக்கறி

அமரந்தசு (கீரை)

- இரண்டு உயர் விளைவு தரும் அமரந்தசு (கீரை) மூலவுயிர்கள் டியபாலகொட, தூய பச்சை அதிக எதிர்ப்பு ஒட்சி ஏற்ற தொழிற்பாட்டை முறையே 47.3, 42.1 கொண்டுள்ளன. டியபாலகொட அதிகளவில் கரோட்டின் முறையே 0.38 மி.கி./ச.மீ^{2} தூயபச்சை 0.2 மி.கி./ ச.மீ^{2} கொண்டுள்ளன.

பழங்கள் இழைய வளர்ப்பு பகுதி

பழங்கள்

வாழை

- எம்பன் வாழை 37 வர்க்கங்கள் 3 இடங்களில் பொருந்தும் தன்மையை மதிப்பிடும் ஆய்வு நடாத்தப்பட்டது.
- உயர்ந்த விளைவும் சிறந்த தரமும் பனாமா வாடல் நோயை சகிக்கும் ஆற்றலும் கொண்ட சீனிவாழை மூலவுயிர்களும் NCVT சோதனை க்கு தெரிவு செய்யப்பட்டன.

பப்பாசி

- இலங்கையில் விருத்தி செய்யப்பட்ட 6 கலப்பினங்களின் விளைவு தரம் என்பன வற்றை மதிப்பிட இரண்டு இடங்களில் 6 கலப்பினங்கள் ஸ்தாபிக்கப்பட்டன.
- கலப்பின உற்பத்திக்காக 3 வது சந்ததி மூலவு யிருரு வயலில் ஸ்தாபிக்கப்பட்டது.

றம்புட்டான்

றம்புட்டான் பசியால RYP மண்ணிலும் பூ.ஆ.அ.நி. RBL மண்ணிலும் ஒன்றிணைந்த தாவர போசணை முகாமைத்துவம் தொகுதி திட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட்டது. சில தெரிவு செய்யப்பட்ட மரங்களிடையே அவற்றின் 100 பழ ங்களின் நிறையில் வித்தியாசம் காணப்பட்டது. ஆராய்ச்சி அடுத்த பயிர்ச்செய்கை காலங்களிலும் தொடரப்படும் கதிர்வீச்சுக்கு உட்படுத்தப்பட்ட றம்புட்டான் அரும்புகள் பதிய முறையில் இனப் பெருக்கப்பட்டு விளைவு, தரம் ஆகிய இயல்புகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

பலா

- நல்ல இனங்களை அறிவதற்காக புதிய மூலவுயிர் மூலங்களின் மதிப்பீடுகள் தொடர் கின்றன.

மா

- நல்ல இனங்களை இனம்காண மூலவுயிருருக்களின் மதிப்பீட்டு சோதனை நடா த்தப்பட்டது. உயரம் குறைந்த கட்டை தாவரங்களை பெறுவதற்கு அடிக்கட்டைகளி டையே சிறந்த அடிக்கட்டையை மதிப்பிடல் தொடர்கிறது.

தூரியன்

- 6 மிகத் திறமையான மூலவுயிருருகள் மதிப்பிடப்படுகின்றன. நல்ல தரம், விளைவு என்பவனவற்றை தரக்கூடிய கலப்பு இனத்தை அறிய அயன் மகரந்தச் சேர்க்கை ஆய்வு நடாத்தப்பட்டது.

ஆனைக்கொய்யா

- ஒருங்கிணைந்த தாவர போசணை பரிபாலன முறையில் (IPNS) NPK பசளைகளை 50%, 25% குறைத்து, கூட்டெரு 10 தொன், 15 தொன் சேர்க்கப்பட்ட பரிகர ணங்களில் தண்டின் சுற்றளவும் தாவர அமைப்பின் விட்டமும் அதிகரித்ததை அறிய முடிந்தது.

குறைவான பாவனையில் உள்ள பழங்கள்

- நல்ல தரமான தூரியன் உக்கிரஸ, மோர, மாதன், பலா பழங்களின் நல்ல வர்க்கங்களை அறிமுகப்படுத்த மூலவுயிருரு சேமிப்பு, பாதுகாப்பு, மதிப்பீடு ஆகியன தொடர் கின்றன.

இழைய வளர்ப்பு

01. தாவரத்தின் மீள் சந்ததிகளை உருவாக்கும் முறை

மரக்கறி

லைகோபேர்ஸிகன்

- தக்காளியில் மகரந்தக் கூடு பகுப்பு மூலம் கலஸ் (Callus) (இனம் திலின) பெறப்பட்டது. இதன் மூலம் பெற்ற ஒரு மடிய (haploid) தாவர மீள் சந்ததிப் பரிசோதனை தொடர்கிறது.

ஸ்பதோகுளோட்டிஸ் பிஸிகாட்டா (நில ஓகிட்)

- கலப்பினம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. தாவரத்தை மீள உருவாக்குவதற்கு முயற்சிக்கப் படுகின்றது. புதிய (மலர்) பண்புகளுடன் கூடிய தாவரங்களை உற்பத்தி செய்வதற்காக இந்தக் கலப்பின மரபணு பரிகரணங்களுக்கு உட்படுத்தப்படலாம்.

பழங்கள்

வாழை

கோழிக்கூட்டின் கருச் செறிவூட்டல் அபிவிருத்தி தொடர்கிறது.

அம்பன் வாழையின் நோயற்ற ஆரம்ப அரும்பின் அதிக எண்ணிக்கையை (Foundation stocks) பெறுவதற்கு அம்பன் வாழையின் அரும்பு பிரிஇழைய பகுப்பு முறையினால் ஊடகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

வயல் மதிப்பீடு

- இழைய பகுப்பில் பெறப்பட்ட நேத்ரம் பழத்தின் இரண்டாவது தொகுதி தாவரங்கள் பூ.ஆ.அ.வயலில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. நுண் இனப்பெருக்கம் திறந்த வெளியில் தொடர் கிறது.
- இழைய வளர்ப்பில் பெறப்பட்ட அன்னாசி (மொரிசியஸ், கியு) தாவரங்கள் பூ.அ.அ.நி. வயலில் சோதனைக்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இருந்த போதிலும் இழைய வளர்ப்பில் பெறப்பட்ட தாவர நடுகை மூலம் உறபத்தியான பழங்களின் தரம், ருசி என்பனவற்றில் பிரச்சினைகள் எழுந்துள்ளன.

வாழை அன்னாசி அடிப்படை நடுகைப் பொருட்களின் உற்பத்தி

அட்டவணை 2.2.7: இழைய வளர்ப்புத் தாவரங்களின் தற்போதைய நிலை

பயிர்	வர்க்கம்	வழங்கப்பட்ட தாவரங்களின் எண்ணிக்கை	யாருக்கு	நோக்கம்	இல்லத்தில் உள்ள தாவர எண்ணிக்கை	திறந்த வெளியில் எண்ணிக்கை
வாழை	அம்புல்	170	வி.ஆ.நி. தெலிஜ்ஜவில	பயிர் தலைவர் (பழம்) நிகழ்ச்சி திட்டம்	305 (7 தாய் தாவரங்கள்)	246
	கட்டை	–	–	–	–	51
	அம்பன்	–	–	–	–	–
	புலத்திசி	–	–	–	27	12
	ரத்தம்பல	–	–	–	46	39
	சீனிவாழை	–	–	–	05 தாய்த் தாவரம்	–
	நேத்ரம் பழம்	–	–	–	67	120
அன்னாசி	மொரிசியஸ்	–	–	–	1086	1520
	கியு	–	–	–	242	220
வில்வம்	சுபுன்	10	பண்னை II	மதிப்பிடல்	–	420

விரிவாக்கம்

- ஒரு நாள் பயிற்சி ஆலோசனை சேவை 141
- விரிவுரை; பல்கலைக்கழக மாணவர்களுக்கான 02 விரிவுரை
- ஆலோசனை சேவைகள் 10
- மேற்பார்வைத் திட்டம் 03
- 2 மாதப் பயிற்சி ஒரு மாணவன்
- AVC நிலையத்தினாலும், சூழல் அமைச்சினாலும் பன்னல கங்குரான கெத்த, கேகாலை ஆகிய இடங்களில் ஒழுங்கு செய்யப்பட்ட 03 கண்காட்சிகளில் பங்கு பற்றப்பட்டது.

பூச்சியியல் பகுதி

ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்

- வெண் ஈயினால் போஞ்சியில் உட்புகுத்தப்படும் H.G.Y.M வைரசை கட்டுப்படுத்தும் பொதிகளின் மதிப்பீட்டில், மஞ்சள் அடையும் கொடிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. முன்னைய பருவகாலத்தில் இனம் கண்ட இரசாயனப் பரிகரணம், மற்றைய பரிகரணங்களை விட, மஞ்சள் நிறமாகும் கொடிகளின் எண்ணிக்கையை குறைத்தது இனம் காணப்பட்ட பொதியின் பாவனையால் போஞ்சியின் விளைவும் குறிப்பிடக் கூடியளவில் கூடுதலாக இருந்தது. இதனை உறுதிப்படுத்தும் பரிசோதனை நடைபெறுகின்றது.
- நான்கு பூச்சி கொல்லிகள் அதாவது காபோசல்பான் 20% SC, தயமெதாக்ஸாம் 25% WG, டினோட்ரிபியுரான் 20% WP, இமிடகுளோபிரிட் 70% ஆகியன வினைத்திறனாக போஞ்சி ஈயைக் கட்டுப்படுத்துவதாக அறியப்பட்டது.
- மேற்படி காபோசல்பான் 20% SC, ற்கு இறக்குமதி செய்யப்பட்ட பீர்க்கு கலப்பின வர்க்கங்கள் அனாமிக்கா, 041044, 038044, LER 533, பொனான்சாவுடன், நாகா, LA 33, LER 533 ஆகிய வர்க்கங்கள் சிறந்த பேறுபேற்றைக் காட்டின. இருந்த போதிலும் LER 533 காயில் மஞ்சள் புள்ளிகளையும் பொனான்சா வைரசினால் பாதிக்கக் கூடிய இயல்பையும் காட்டின.

- மெலன் ஈக்களை கட்டுப்படுத்துவதற்காக IPM நிகழ்ச்சித்திட்டம் மாத்தளை ஒவில விவசாயப் போதனாசிரியர் பிரிவில் 10 ஏக்கர் பரப்பளவில் பூசணிப் பயிர்கள் பயிரிடும் 7 விவசாயிகளின் பங்களிப்புடன் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. மெலன் ஈ தாக்கம் 2% க்கு குறைக்கப்பட்டது. உயர் இலாபம் பெறப்பட்டது.

- மெலன் ஈக்களை (பற்றோசிரகுக்கு பிற்றா) கட்டுப்படுத்தும் பொதிகளை வயல் ஆராய்ச்சிக்காகவும் செய்முறையில் விளக்கம் காண்பிப்பதற்காகவும் நான்கு தொடர்ச்சியான பயிர் செய்யும் பருவகாலங்களில் பரந்த அளவில் செய்யப்பட்டன. இவை வெற்றி அடைந்தன. இந்தப் புதிய தொழில் நுட்ப பொதியினால் காய்களில் ஏற்படும் கிருமி நாசினிகளின் மீதித்தாக்கம், சூழல் மாசு அடைதல், விவசாயி ற்கு ஏற்படும் நேரடி தீங்கு என்பன குறை வதுடன் லாபமும் கிடைத்தது.

- அதிக எண்ணிக்கையான வெண்டித் தாவர ங்களில் அசற்றாமிபிரிட் 20% SP சோதித்த போது மிகவும் வினைத்திறனாக வெண்டி, இலைத்தத்திகளை கட்டுப்படுத்தியது.

- சிபாரிசு செய்யப்பட்ட அஸ்பேற்று 75% SP மரக்கறிப் பயிர்களில் இலைத் தத்திகளை வினைத்திறனாக கட்டுப்படுத்தும் அதே நேரம் கத்தரியில் திரிப்ஸின் அளவைக் கூட்டுவதாக அறியப்பட்டது.

- மூலிகை தாவரத்தின் (கட்டு எலபட்டு சொலனம் சாந்தோகாபம்) சேமிப்பு பொருட்களை சேதப்படுத்தும் வண்டு Air-philus இனம் (சல்வனிடே, குக்குஜொய்டியா) இனங் காணப்பட்டது. கட்டுப்பாட்டு முறைகள் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

- கோவாவில் இலை உண்ணும் புழுக்களையும் மிளகாயில் இலைச் சுருள் சிக்கலையும் கட்டுப்படுத்தக் கூடிய புதிய பூச்சி கொல்லி லக்கிறோ நீம் பெரிய அளவிலான சோதனை க்குப் பின்னர் சிபாரிசு செய்வதற்காக பீடைநாசினி பதிவுக்கு பூரணமான அறிக்கை களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- Rynaxypyr (Coragen 18.5 SC) Spinosad உம் (Tracer 450 SC) தொடர்ந்து Lambda Cyhalothrin (Karate Zeon) ஆகியன வயலில் கத்தரியில் காய் தண்டு துளைப்பானை வினைத்திறனாகக் கட்டுப்படுத்தியது. பூச்சி நாசினி Tracer முன்பே சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. கரா ஜின், கறேற் பெரியளவில் பரிசீலித்த பின் னரே சிபாரிசு செய்ய முடியும்.

- போஞ்சி காய்துளைப்பான் றைனக்ஸ்பிர் (கொராஜின் 18.5 SC) வினைத்திற னாக வயலில் கட்டுப்படுத்தியது. சிபாரிசு செய்வதற்கு மேலும் சோதனை மேற்கொள்ள வேண்டும்.

- தக்காளியில் காய் துளைப்பான் தாக்கத்தினை பல பூச்சி நாசினிகள் வினைத்திறனாக கட்டுப்படுத்தியது. சிபாரிசு செய்வதற்கு முன்னர் மேலும் இந்தக் கிருமி நாசினிகள் சோதனை செய்யப்பட வேண்டும்.

- கடந்த 03 பருவ காலமாக வயலில் செய்யப்பட்ட சோதனைகள் கூம்பு வடிவ உட்பகுதி வெறுமையான நப்சக் தெளிகருவியில் விசிறும் முனை, சாதாரண பாவனையில் உள்ள முனை களை விட விசிறத் தேவையான கலவை அளவை 21 – 46% குறைத்ததுடன், மாறாத உயர் வினை த்திறனான தன்மையைக் கொண்டிருந்தது. அதனால் இந்தப் புதிய மேன்மையான நொசில் விவசாயிகளுக்கு கிருமி நாசினியின் பாவ னையை குறைக்கவும் வீனாதலை குறைக்கவும் சூழல் தீங்கடைவதை குறைக்கவும் இந்த புதிய நொசிலை விசிறல் முனையை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- உடன் பிரயோகிக்கப்படுகின்ற அண்மையில் அறிமுகமான புரத இரை (லக்றோபேயிற்) என்னும் நஞ்சுடன் கலந்து ஈக்கலைக் கவர ப்பட்டு கொல்ல, ஒன்றிணைந்த பழ ஈ கட்டுப் பாடு பரந்த அளவில் பாவிக்கப்படுகிறது. ஆய்வு கூடப் பரிசோதனை ஸ்பைனோகட் ற்கு பதிலாக அபாமெக்ரின் 1.8 EC புரே ாட்டின் பசையுடன் (லக்றோபேயிற்) கலந்து பாவிக்கலாம் எனக் காட்டப்பட்டுள்ளது.

- இரண்டு புதிய பழ ஈ இனங்கள் இலந்தை பழங்களிலும்; *காபோமியா, வேசுவிய ன்னா, பற்றோசிரா, பைரிபோலியா, சிற்றசு மசில் ஸ்கேல்; லெப்பிடோசாப்கெஸ் பெக்கி தோடைகளில்* கண்னொறுவையில் இனம் காணப்பட்டுள்ளன. இலை உண்ணும் புழு Stictoptera gri sea ஸ்ரிக்ரோபெற்றா கிறை ஸ்இயா கண்டியை சாந்த இடங்களில் மங்குஸ் ரினில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

புதிய பீடைகளின் சேதங்களும் கண்டு பிடித்தலும்

- இலுக்கும்புற இடங்களில் தக்காளிப் பழங்கள் துளைக்கப்பட்ட சேதம் புகார் செய்யப்பட்டுள்ளன. சேதத்துக் குரிய காரணம் அந்துப் பூச்சி Achaea janata (லெபிடொப்ரெறா; Noctuidae) முதன் முறை யாக தக்காளியில் பதியப்பட்டுள்ளது.

- உறிஞ்சும் பீடை சேதம் Idda pitchcha இல் முதன் முறையாக பி.வி.ஆ.அ.நிலையம் மகந்துறவில் பதியப்பட்டுள்ளது. சேதத்திற்கு காரணம் Copeltus Spp (Sangeuniolentus; Hemiptera; Heteroptera Lygacidae இது முதல் முறையாக பதியப்பட்ட பீடையாகும்.

- புதிய செதில் பூச்சி ரம்புட்டானில் அடையாளம் காணப்பட்டுள்ளது (பரகோகஸ் மாஜினாறசு). இது பப்பாசியில் தாக்கும் செதில் பூச்சி (பல்வினேறியா பிசி) போன்றது. (கெமிப்ரெறா: கொச்சிடே)
- அன்னாசியில் பழம் துளைத் சேதம் பி.வி.ஆ.அ.நி. மாக்கந்துறயில் முறையிடப்பட்டது. மாக்கந்துற ஆராய்ச்சி நிலையம் இலங்கையில் முதன் முறையாக மேற்கூறிய சேதத்தினையும் அதற்கான காரணி (காபோபைலஸ், கியுமிறலிஸ்) கொலியொப்ரெறா நிற்றிடியுலிடே என இனங் காணப்பட்டது.
- சீனி வாழையில் பீடைத்தாக்கம் ஒன்றை மகாவலி அதிகாரசபையின் விவசாய உத்தியோகத்தர் புகார் செய்தார். இது வாழைப் புள்ளி வண்டால் ஏற்பட்ட சேதம் என சந்தேகிக்கப்பட்டது. (அம்பிலிபெலற்றா நிற்றிடா, கெமிப்ரெறா, கொறிடே Amblypelta nitida; Hemiptera; Coreidae) சேதத்தின் அறிகுறிகளாவன பழங்களில் கறுத்த புள்ளிகள், தாக்கப்பட்ட பழங்கள் காலத்துக்கு முன்னரே பழுத்தல். பழுத்த பழம் கடினமாக/மென்மையற்றதாகவும் மண்ணிறமாகவும் காணப்படும்.
- 2009 ல் கல்பிட்டிய விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் 40 திராட்சைக் கொடிகள் இறந்தன. இது திரிப்ஸ் பூச்சியின் இலை, காம்பு துளிர்களில் கடுமையான தாக்கத்தினாலேயாகும். இதன் இனம் செலினோதிரிப்ஸ் றியுபுரோசின்சிறஸ் (Selenothrips rubrocinctus) சிவப்பு பட்டிகொண்ட திரிப்ஸ் என அடையாளம் காணப்பட்டது. இவை முதலாவதாக இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தாவர நோயியல், நுண் உயிரியல், களான் பகுதி

பற்றிரியா வாடலுக்கு எதிர்ப்புடைய மூலவுயிருருவைத் தெரிதல்

இறக்குமதி செய்யப்பட்ட 8 தக்காளி, 10 கறிமிளகாய், 3 கத்தரி கலப்பின வர்க்கங்கள் பற்றிரியா வாடலுக்கு எதிர்ப்புத் தன்மை காட்டுகின்றனவா என அறிய சோதனை செய்யப்பட்டது. சில இனங்கள் ஓரளவு எதிர்க்கும் இயல்பைக் காட்டின.

நோய் முகாமைத்துவத்துக்கான பயிர்களின் நோய்களை கண்டு பிடித்தலும் அதற்கு ஆலோசனை வழங்கும் சேவைகளும்

விவசாயிகளின் வயல்களில் இருந்தும் தனியார் பண்ணைகளிலிருந்தும் 500 க்கு மேற்பட்ட பழப்பயிர்கள், மரக்கறி, வேர்கிழங்குப் பயிர்கள், வாசனை திரவியங்கள், அழகியல் தாவரங்கள், வயற் பயிர்கள், புற்கள் ஆகியவற்றிலிருந்து மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதிக்கப்பட்டு நோயை அறிந்து, உரிய கட்டுப்பாட்டு முறைகளும் வழங்கப்பட்டன.

தக்காளியின் வளர்ச்சியிலும் விளைவிலும் கைற்றோசன்னின் (கதிர்வீச்சுக்குட்படுத்திய) கைற்றின் தாக்கம்

கைற்றோசன் ஒலிகோமோர், கைற்றோசன் பங்கசு நாசினி ஆகிய இரண்டு சேர்வைகளும் வயல் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன. கைற்றோசன் ஒலிகோமர் தக்காளியின் வளர்ச்சியையும் விளைவையும் கூட்டும் தன்மை கொண்டது. கைற்றோசன் பங்கசு நாசினி நோய்களை கட்டுப்படுத்தும் ஆற்றலையும் கொண்டது. இது வயல் நிலமைகளில் பரிசோதிக்கப்பட்டது.

கதிர்வீச்சுக்குட்படுத்தப்பட்ட கைற்றினின் தாக்கத்தினை நோய் உண்டாக்கும் பங்கசுவின் வளர்ச்சி, வித்திகளின் வேறுபாடுகளை அறிதல்.

நோயாக்கும் பங்கசு இழைகளின் வளர்ச்சியை குறைக்கவும் வித்திகளின் முளைத்தலை தடுக்கவும் வெவ்வேறு செறிவில் பதின்னொன்று கைற்றோசன் சேர்வைகளின் உயிர் சோதனை (bioassay) வெளியில் அறியப்பட்டது. சில கைற்றோசன் சேர்வைகள் பங்கசு இழைகளின் வளர்ச்சியையும் வித்தியின் முளைதிறனையும் தடுக்கும் தன்மையை கொண்டுள்ளன.

பூசணி குடும்பப் பயிர்களில் மஞ்சள் நிற மடைதலுடன், இணைந்த பல அறிகுறிகளுடன் தொடர்பான புதிய வைரசுக்களை இனம் காணல்

வைரசுக்கள் வெண் ஈக்களினால் கடத்தப்படுவன. இவை பாகலில் மஞ்சள் நிற மடைதலுடன் இணைந்த பல அறிகுறிகளுடன் தொடர்புடையவையாகும்.

அனுப்பப்பட்ட விதை உருளைக் கிழங்கின் மதிப்பிடலும் ஆய்வுகூடப் பரிசோதனையும்

பின்வரும் நோய்களின் கறுத்த செதில்கள்/ சொடுகுகள் இதன் நோய்க்காரணி Rhizoctonia solani வெள்ளி செதில் நோய் காரணி Helmintho sporium solani இத்துடன் வலை பின்னல் பொதுவான பொருக்கு (scabs) இதன் நோய் காரணி (strepto-myces species) இவை அதிகளவில் விதைகளில் காணப்பட்டன. மொத்தமாக 42 தொகுதியில் (lots) ஒரு தொகுதி மாத்திரம் (வர்க்கம் கிரேனாலா) ஏர்வீனியா அதிகளவில் தொற்றியதால் நிராகரி க்கப்பட்டது.

எலிசா முறையினால் பழங்கள் மரக்கறி களின் வைரசு அறிதல்

வைரசுடன் சம்பந்தமான பூசணி குடும்பப் பயிர்கள் பப்பாசி வாழை உருளைக்கிழங்கு சில களைகள் வயலில் இனம் காணப்பட்டன. நாட்டில் பல பாகங்களிலும் பூசணிகளில் அதிகளவு வைரசு தொற்றல் அவதானிக்கப்பட்டது. நோய்க் கார ணிகள் இனம் காணப்பட்டன. அத்துடன் கட்டுபாடு முறைகள் விவசாயிக்கு அறிமுகப்படுத்தப்பட்டன.

வெண்டியில் தூள் பூஞ்சண நோயைக் கட்டுப்படுத்தும் புதுப் பங்கசு நாசியின் பயனை மதிப்பிடல் டோமார்க் 40 ME (Tetraconazole ரெற்றகொனசோல் 40 கி/ லீற்றர் 1)

புது பங்கசு நாசினி டோமார்க் 40 ME ரெற்றாகொனசோல் 40 ME ரெற்றகோனசோல் 40g / லீற்றர்) வெண்டியில் தூள் பூஞ்சண நோயை வினைத்திறனாக கட்டுப்படுத்தியது.

புதிய பங்கசு நாசினிகளின் உயிர் வினைத் திறனை பூசணிப் பயிரில் கீழ்ப் பூஞ்சண நோய்க்கு எதிராக மதிப்பிடல்

4 பங்கசு நாசினிகளில் 2 புதிய பங்கசு நாசினி Azoxystrobin, Carbrio top வினைத்திற னாக பூசணிப்பயிர்களில் கீழ்ப் பூஞ்சண நோயை கட்டுப்படுத்தியது. ஆரம்பப் பரிசோதனைக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

புதிய பங்கசு நாசினிகளின் பயனை பூசணியில் தூள் பூஞ்சண நோய்க்கு எதிராக மதிப்பிடல்

இரண்டு புதிய பங்கசு நாசினிகள் Dormark 40mt Tetra Conazole 50% + Trifloxy Strobin 25% ரெற்றாகொனசோல் + ரைபிளோக்சி ஸ்ரோபின் வினைத்திறனாக தூள் பூஞ்சண நோயைக் கட்டுப்படுத்தியது.

சுக்கினி மஞ்சள் மொசாக் (ZYMV) வைரசு நோய்க்கு எதிராக கெக்கரி இனங்களை சோதித்தல்.

மாறசனாப் பிரதேசத்திலிருந்து ஒரு உள்ளூர் (ZYMV) தனிமைப்படுத்தப்பட்டது. இது விருந்து வழங்கி தாவரத்தில் எதிர்ப்புத் தன்மையை சோதனை செய்யப் பரீட்சிக்கப்படுகிறது.

பால் காளான் பயிரிடுவதற்கான தொழில்நுட்பம்

வைக்கோலை பயன்படுத்தி பால் காளான் செய்கைக்கான தொழில்நுட்பம் விருத்தி செய்யப்படுகிறது.

திரவ வித்தி

திரவ வித்தி மூலம் காளான் செய்கையை மேற்கொள்ளலாம். இதனால் செலவையும் நேர த்தையும் குறைக்கலாம்.

உலர்ந்த காளானில் இருந்து பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகள்

சாதாரண குடும்பத்திற்கு உலர் காளான் உற்பத்தி செய்ய சிறிய உலர்த்தியை பாவிக்கலாம். காளான் சீனிசம்பல், பொரித்த காளான் சம்பல் காளான் கலவை என்பன உலர் காளான்களைப் பயன்படுத்தி செய்யலாம். இது நுகர்வோரின் ஏற்கும் தன்மை அதிகரிப்பை நிச்சயப்படுத்தும்.

குறைந்த செலவில் வித்தி உற்பத்தி முறை தொழில்நுட்பம்

குறைந்த செலவில் வித்தி உற்பத்தி முறை தொழில்நுட்பம் விருத்தி அடைகிறது.

காளான் பயிர்செய்கை பற்றிப் படித்தலும் பயிற்சியும்

- 1000 க்கு மேற்பட்ட நபர்கள் உண்ணக்கூடிய காளான் பயிர்ச்செய்கைப் பற்றி பயிற்றுவி த்ததுடன் சிறிய அளவில் காளான் உற்பத்தி செய்வோரை பதிவு செய்வதற்காக 199 சான்றி தழ்கள் வழங்கப்பட்டன.
- 100 மேற்பட்ட அங்கத்தினருக்கு வைக்கோல் காளான் பயிரிடும் முறை பற்றிய பயிற்றுவிக்க ப்பட்டது. காளானில் பல விதத்தில் உணவு தயார் செய்தல் பற்றி 117 அங்கத்தவர்கட்கு செய்து காட்டப்பட்டது.
- தொழில்நுட்ப ஆலோசனைகள் 47 விவசாயிகட்கு கடிதம் மூலமும், 1024 தொலைபேசி உரையாடல் மூலமும், பூ.ப.ஆ.அ.நி வருகை தந்த 542 பேருக்கு வாய் மூலமும் வழங்கப்பட்டது.

- பத்தொன்பது க.பொ.த உயர்தர மாணவர்களது தனித் தனியான திட்டத்தின் மூலம் காளான் செய்கையின் தொழில் நுட்பம் பரப்பப்பட்டது. 02 பல்கலைக்கழக மாணவர் கட்கு அவர்களுடைய விடுமுறை நாட்களில் காளான் பயிர்ச்செய்கை பற்றிய பயிற்சி வழங்கப்பட்டது.
- 38 பல்கலைக்கழக மாணவர்கள், 07 விவசாயக் கல்லூரி மாணவர்கள், 13 உயர் பட்டப் படிப்பு மாணவர்களுக்கு காளான் பயிர்ச்செய்கை பற்றியும் வித்தி உற்பத்தி முறை பற்றியும் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இரண்டு கண்காட்சிகளில் பங்குபற்றப் பட்டது

தேசத்திற்கு மகுடம் பல்லேகல, வசந்தகாலம் நுவரெலியா

அரச தனியார் நிறுவனங்களின் தொடர்புடன் 383 அங்கத்தவர்கட்கு செய்து காட்டும் பயிற்சிக் கூடம் நடாத்தப்பட்டது.

தொழில்நுட்ப பரவல் முயற்சியில் இலத்திரனியல் ஊடகங்களின் பங்களிப்பு

05 வானொலி ஒலிபரப்பு நிகழ்ச்சியும் ("அஸ்வன்ன") 02 தொலைக்காட்சி நிகழ்ச்சியும் ("கொவி பிமட அருநல்லு") நடாத்தப்பட்டன.

விவசாய இரசாயனப் பகுதி

சேதன விவசாயம்

சேதன மரக்கறி பயிர்களில் போசணை முகாமைத்துவம்

சேதன மரக்கறிப் பயிர்ச்செய்கையில் மரக்கறி பயிரிட முன்னர் பசுந்தாட் பசளையை வளர்த்து, தொடர்ந்து பயிர் செய்யப்பட்ட பரிசோதனையில் வளர்ச்சியும் விளைவும் அதிகரித்துக் காணப்பட்டது. இந்த முடிவை உறுதிப்படுத்த வெவ்வேறு பயிர்களில் இவ்வாறான சோதனை தொடர்கிறது.

மரக்கறிச் செய்கையில் முற்றாக எரிபடாத நெல் உமியின் பாவனை

பகுதி எரிந்த/ முற்றாக எரிபடாத நெல் உமியின் 200 கிராம் தனித்தனியே NPK இனதும் கூட்டெரு இனதும் பரிகரணங்களை விடக் கூடிய விளைவைக் காட்டியது. பகுதி எரிந்த நெல் உமியின் நீண்ட கால பாவனையின் விளைவை அறி யும் முகமாக இப்பரிசோதனை தொடரப் படவுள்ளது..

சேதன மரக்கறிகளின் விளைவில் பத்திரக் கலவையாக பாவிக்கும் பொருட்களின் தாக்கம்

சேதன மரக்கறி உற்பத்தியில் வைக்கோல், பொலித்தீன், எரித்த நெல் உமி என்பன வினைத்திறனாக களைகளை கட்டுப்படுத்துகின்றன. அத்துடன் பயிரின் விளைவையும் கூட்டுகின்றன.

கூட்டெருவின் தொடர்ச்சியான பாவனை

கூட்டெருவினதும் NPK யினதும் ஒன்றிணைந்த பாவனை, கூட்டெருவின் தனியான பாவனையை விட அதிக விளைவைத் தந்தது.

கூட்டெருவின் தரத்திற்கான உயிரியல் சோதனை

கூட்டெருவின் தரத்தை மதிப்பிட உயிரியல் மதிப்பீடு எத்தகையது எனத் தீர்மானிக்க செய்யப்பட்ட சோதனையில் உயிரியல் மதிப்பீட்டுடன் இணைந்த இரசாயன பரிசோதனை தேவை என அறியப்பட்டது.

மண்புழு கூட்டெரு செய்கையினூடாக எப்பாவல பாறைப்பொசுபேற்றின் கரையும் தன்மையை முன்னேற்றல்

மண்புழு கூட்டெரு செயல் முறையானது எப்பாவல பாறைப்பொசுபேற்றின் கரையும் தன்மையைக் கூட்டியதுடன் மண்புழு கூட்டெருவுடன் E.R.P பாவனை விளைவையும் தாவரம் உள்ளெடுக்கும் P அளவையும் கூட்டியது.

ஒன்றிணைந்த தாவர போசணை முகாமைத்துவம்

அசேதனப் பசளைப் பாவனையைக் குறைத்தல்

வி.தி.சிபாரிசு செய்யப்பட்ட NPK யில் 75% உடன் 10 தொ/ஹெ கூட்டெருவும் இணைந்து உபயோகிக்கும் போது பெறப்பட்ட கோவா, பொன்னாங்காணி விளைவுகள் வி.தி. சிபாரிசு செய்யப்பட்ட NPK யுடன் 10 தொ/ஹெ கூட்டெரு பிரயோகித்த போது பெறப்பட்ட விளைவுடன் ஒத்ததாக இருந்தது. இருந்த போதிலும் இதனை உறுதிப்படுத்த மேலதிக கற்கை தேவையாகும்.

ஆய்வு நுட்பம்

மண் p ஐ பிரித்தெடுக்க எதிர் அயன் மாற்றீட்டு றெசின் ஸ்ரிப் முறையில் மதிப்பீடு

இம்முறையை பாவிக்கலாமா என அறியவும் இம்முறையின் திருத்தத்தை ஒல்சின் முறையுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும் இப்படிப்பு நடாத்த ப்பட்டது. இம்முறையானது தொடர்ச்சியாக மண்ணின் P பகுப்பு சோதனைக்கு திருந்திய முறைகள் மூலம் வெற்றிகரமாக பாவிக்கலாம். திருந்திய இம்முறை நேரத்தினையும் மின்சாரத்தினையும் சேமிப்பதுடன் பொருளாதார சிக்கனமானதாகும்.

இலை மரக்கறிகளின் வழமையான வளர்ப்பிலும் சேதன வளர்ப்பிலும் நைற் றேற்று நைதரசன் அளவை ஒப்பிடல்

சில இலை மரக்கறிகளில் NO_3^-N அளவினை வளமையான பயிர்ச்செய்கையிலும் சேதன பயிர்ச் செய்கையிலும் ஒப்பிட்ட போது சேதனப் பயிர் செய்கையில் பொன்னாங்காணியிலும் கங்கூனி லும் நைறேற்று – நைதரசன் அளவு குறைந்து காணப்பட்டது. இதே நேரம் வல்லாரையில் இரு பயிர்ச்செய்கை முறையிலும் ஒத்தளவாக இருந்தது. இருந்த போதிலும் அளவீடுகள் யாவும் ஏற்றுக் கொள்ளக் கூடிய மட்டத்திற் குள்ளேயே காணப்பட்டது. தொடர்ச்சியாக NO3-N என் மட்டத்தை அளவிடலும் விவசாயிகளுக்கு திருத்தமான/ சரியான பசளை பிரயோகம் பற்றிய ஆலோசனை வழங்கலும் இலை மரக்கறிகளில் NO3- N இன் அளவை ஏற்றுக் கொள்ளும் மட்டத்தில் பேண உதவும்.

செறிவாக மரக்கறி பயிரிடும் இடங்களில் நீரின் தரத்தைச் சோதித்தல்

நுவரெலியா (சன்டரென்ன கச்மென்ட்) வில் செறிவாக மரக்கறி பயிர் செய்யும் இடங்களில் நீரின் தரத்தை சோதித்த போது தரையின் மேற்பரப்பில் உள்ள நீரும் தரைக்குக் கீழுள்ள நீரும் மாசு அடைந்துள்ளதை நடாத்தப்பட்ட பரிசோதனை காட்டியது. இதற்கான காரணம் விவசாய உள்ளீடுகளும், அசுத்தப்படுத்தும் சில தாவரப் போசணைப் பொருட்களும் செறிவான மரக்கறிப் பயிர்ச் செய்கையுமாகும்.

மஹாவலி ஆற்றின் நீரின் தரம்

மஹாவலி ஆற்றின் நீர்ப்பாசனம், குடிநீர் ஆகியவற்றுக்குப் பயன்படும் நீரின் தரம் (பௌதீக இரசாயன அலகுகள்) வருடம் இரண்டு (2008 தை– 2009 மார்களி) பேராதனையைச் சார்ந்த 3 இடங்களிலிருந்து சோதிக்கப்பட்டது. pH மின் கடத்துத்திறன் கரைந்த ஒட்சிசன், குழம்பி சேறாக இருக்கும் நிலை, NPK , குளோறைட்டு, புளோறைட்டு, அமோனியம், நைதரேற்று மங்க னீசு, நாகம், செப்பு ஆகியவற்றின் அளவீடுகள் WHO நிபந்தனை அளவை விட குறைவாகவே காணப்பட்டது. இதே நேரம் குடிநீரின் அளவீடு WHO அளவை விட சற்று கூடுதலாக இருந்தது.

வேர்கிழங்குப் பயிர்கள், மலர்ச்செய்கை, வீட்டுத் தோட்டம் ஆகிய பகுதிகள்

வேர்கிழங்கு – வற்றாளை

தெரிவு செய்யப்பட்ட HORDI C -05 என்னும் இனம் சிறந்த தரத்தையும் மெல்லிய மஞ்சள் நிற மான சதையையும் அதிகளவில் விவசாயிகளால் விரும்பப்படும் இனமாகவும் காணப்படுகிறது.

உவர்த்தன்மையை தாங்கும் 3 வர்க்கங்களான CIP 440396, CIP 199043.4, CIP 19906.2 ஆகியன சர்வதேச உருளைக் கிழங்கு நிலையத்திலிருந்து பெறப்பட்டு தெரிவு செய்யப்பட்டனவாகும். இவை அதிக விளைவும் சிறந்த தரமும் கொண்டன வாகும்.

சேம்பு கிழங்கு

சேம்புக்கிழங்கை சோளத்துடன் ஊடு பயிர் செய்கையில் Tricho derma என்னும் நுண்ணுயிர் பீடைக் கொல்லியைக் கொண்டு மண்ணை பரி கரித்த போது அதிக விளைவும் கூடிய தரமான கிழங்கும் கிடைத்ததுடன் இலை மஞ்சளடையும் தன்மையும் குறைந்து காணப்பட்டது.

மலர்ச் செய்கை

இவ் வருடத்திற்கான ஆக்க முயற்சிகள் கீழே தரப்பட்டுள்ளன.

- அலங்காரத்துக்கு பயன்படுத்தச் சாத்தியமான 12 காட்டு தாவர வகை சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டன.
- உள்ளூர் சந்தையில் விற்பனைக்கு வழங்குவ தற்கு கிரிசாந்திமத்தின் அதிசிறந்த வர் க்கங்களை கண்ணொறுவைவில் அறிமுகப்படு த்தி பயிரிடப்பட்டுள்ளது.
- தேவநாரு மரத்தின் (Pine) இலைகளைப் பொடியாக்கி விருத்தி செய்த வளர்ப்பூடகம் வேரிடும் வெட்டு துண்ட உற்பத்தியில் வெற்றி கரமாக பிரயோகிக்கப்பட்டது இந்த ஊடகமும் இதன் ஏற்றுமதிக்கான தொழில்நுட்பமும் 2010ல் வெளியிடப்பட்டன.
- வீட்டுத் தோட்டத்துக்குப் பொருத்தமான 8 பயிர்களின் மூலவுயிர் மூலகங்களின் சிறப்பியல்புகளை இயல்புபடுத்தி, மதிப்பீடு செய்யப்பட்டது.
- கண்ணொறுவை பூ.ஆ.அ. நிலையத்தில் வீட்டுத் தோட்ட மாதிரி பராமரிக்கப்பட்டது.

- பசியால, வல்பிட்ட பண்ணைகளில் புதிய வீட்டுத் தோட்ட மாதிரிகள் ஸ்தாபிக்கப்பட்டன.
- 500 "கரித்த" என்னும் அகத்தி தாவரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.
- அரச, தனியார் நிறுவனங்களுடன் இணைத்து பொது ஜனங்களுக்கு பயிற்சிகள் மட்டகளப்பு திருகோணமலை கேகாலை கண்ணொறுவை ஆகிய இடங்களில் நடாத்தப்பட்டது.

விரிவாக்கல், பொருளாதாரத் தரவுகள் முகாமைத்துவம் பகுதி

ஆராய்ச்சி

இலங்கையில் வர்த்தக ரீதியில் விளாம்பழம் (Limonia acidissmaL) உற்பத்தி செய்வதற்கான சாத்தியத்தை மதிப்பிடல்

விளாமரம் வளரும் இடங்களை GPS முறையினால் பதிவு செய்து புவி (geo) ஸ்பேசல் (Spacial) பகுப்பு முறையை பாவித்து சாத்தியமான நில வரைபு வேலை ஆரம்பமாகியுள்ளது.

வடக்கு உலர் வலயத்தின் மேற்குப் பகுதி வடமேற்கு, தென் மாகாணங்களின் அதிகளவில் விளாமரம் வளர்கின்ற தன்மையும் இதே நேரம் பொலன்னறுவையில் சில பகுதிகளும், அனுராத புரம், அம்பாறை ஆகிய இடங்கள் ஓரளவு சாத்தியத்தையும் காட்டின. விளாமரங்களை வளர்ப்பதற்கு சில தடைகளாவன, மரத்தின் சில இயல்புகள், சிறந்த நடுகைப்பொருள் கிடையாமை சிறந்த இனம் இல்லாமை அத்துடன் பழங்களில் மிகக் குறைந்த விலை என்பன ஆகும்.

ARIMA (அரிமா) மாதிரி மூலம் இலங்கையில் மரக்கறி பயிரிடும் இடங்களையும், உற்பத்தியினையும் எதிர்வு கூறல்.

இலங்கையில் (1981–2008) 27 வருடங்களாக உற்பத்தி செய்யப்பட்ட வெவ்வேறு மரக்கறி வகைகளின் நிலப்பரப்பினதும் விளைவுகளினதும் தரவுகளை அரிமா மொடல் மூலம் பகுத்த போது மேல் நாட்டு மரக்கறிகள் யாவும் அவற்றின் உற்பத்தியும் நிலப்பரப்பும் காலத்துடன் அதிகரிக்கும் தன்மையும் காட்டிய அதேநேரம் பள்ள நாட்டு மரக்கறிகளில் சில காலத்துடன் குறைகின்ற தன்மையை காட்டின.

பயிர் நிலங்களின் பரம்பலும் அவற்றின் நில அளவும் பயிர்செய்கை முறைகளையும் மல்ரிரெம்போரல் றிமோட் சென்சிங் தரவுகள் மூலம் மதிப்பிடல்

இந்தப் படிப்பின் நோக்கமானது வெவ்வேறு பயிர்களை கொண்ட நிலப்பரப்பை விபரித்தல் பயிர்ச்செய்கை முறைகளை மதிப்பிடல், இதற்கு தேவையான செய்மதித் தரவுகள் நுட்பத்துடன் எடுக்கும் அலகுகள் என்பவற்றை மதிப்பிடலாகும். தரவுகள் ஒழுங்காக்கல் பகுதி முடிவடைந்து மிகுதி தொடர்கிறது.

பட்டதாரிக் கற்கை மாணவர்களது ஆராய்ச்சி திட்டம்.

வயம்ப பல்கலைகழகத்தின் இரண்டு பட்டதாரி கற்கை மாணவர்கள் தங்களுடைய இறுதி ஆண்டு ஆராய்ச்சி திட்டங்களான; (1) இலங்கையில் மரக்கறி பயிரிடும் நிலப்பரப்பும் மொத்தஉற்பத்தியின் அளவையும் அரிமா மொடல் மூலம் தெரிவு கூறல் (2) இலங்கையில் விளாமர பயிர் செய்கையின் சாத்தியமும் தடைகளும்
இவற்றை இவர்கள் பூர்த்தி செய்துள்ளனர்.

தரவுகளின் முகாமைத்துவமும் திட்டங்களை கையாளலும்

பின்வரும் முயற்சிகள் இவ்வருடத்தில் நடாத்தப்பட்டன.

- பூ.ஆ.அ. நிலையத்தினதும் அதனை சார்ந்த நிலையங்களினதும் இணைப்பாளராக அவற்றுக்குக் கிடைக்கும் அமைச்சினதும் திணைக்களங்களினதும் பௌதீக, சூழல் சம்பந்தமானவற்றை கையாளுகை மதிப்பிடல்
- நிரந்தர, மீளும் செலவுகட்கான முதல்களை நிலையங்களுக்கிடையில் இணைப்பாளராக இருந்து பகிர்தலும் அவற்றின் வளர்ச்சி அறிக்கைகளை பேணலும்
- பூ.ஆ.அ நிலையத்தின் மனிதவள தரவு தளங்களை (data base) முன்னேற்றலும் பராமரித்தலும்
- நடுகைப் பொருட்களின் உற்பத்தி தரவுகளைப் பேணலும் முன்னேற்றலும்
- வி.ஆ.கொ.ச (CARP) தகவல்கள் (Inform) தரவுகளை சேகரித்தலும் தொகுத்தலும்
- பூ.ஆ.அ நிலையத்தின் கீழ் அடங்கும் பண்ணைகளின் தரவுத் தளங்களை (data base) பேணலும் முன்னேற்றலும்

தொழில் நுட்பங்களின் பரிமாற்றம்

- மொத்தமாக பூ.ஆ.அ. நி. வருகை தந்தோர் 93,290 அதில் பாடசாலை மாணவர்கள் 36,439 விவசாயிகள் 7225, ஆசிரியர்கள் 75, அரச ஊழியர், 193 உயர் கல்வி கற்போர், 208 மிகுதி தனிநபர்கள். தொழில்நுட்ப விசார

ணைகட்கு எழுத்து மூலம் விடை அனுப்பியது 422 ஆகும்.

- பல விவசாயிகளை இணைத்து 03 பயிற்சிகள்.
- வெவ்வேறு நிலையங்களுக்கு பல நிகழ்ச்சிகளை ஒன்றாக இணைத்து நடாத்த ஒழுங்கு செய்தல் – 06
- வெளிநாட்டவர்கட்கு பூ.ஆ.அ நி முயற்சிகளை அறிய தரல் – 03
- புதிய தொழில் நுட்பங்களை 3982 துண்டு பிரகரங்கள் மூலம் பரவ செய்தல்
- தொலைபேசி மூலம் கேட்கப்பட்ட விசாரணைகளிற்கான தொழில் நுட்ப ஆலோசனைகள் – 828
- மரக்கறியில் ஒன்றிணைந்த பீடை முகாமைத்துவம் பற்றிய பயிற்சி வி.தி மகாவலி, தனியார் துறை –15
- விவசாயிகட்கு வெவ்வேறு இடங்களில் மரக்கறி ஒன்றிணைந்த பீடை முகாமைத்துவம் விவசாயியின் வயலில் செய்து காட்டல் (பூசணி குடும்ப பயிர்கள், வெண்டி, கத்தரி, தக்காளி, மிளகாய்) –254
- பூ.ஆ.அ நிலைய ஆராய்ச்சியில் மிக முக்கிய பகுதிகள் (High Light) தொகுத்தல்
- துண்டுப் பிரசுரம் செய்தித் தாள்களை வடிவமைத்தலும் தயாரித்தலும் –08
- சுவரொட்டிகள் வடிவமைத்தலும் தயாரித்தலும் (1m x 1m) –50
- வானொலி தொலைகாட்சியில் மரக்கறியில் IPM பற்றிய நிகழ்ச்சி –04

விவசாய அரும்பொருட் காட்சி நிலையம்

விவசாய அரும்பொருட் காட்சி நிலையம் கிழமை நாட்களில் 8.30 மு.ப – 4.15 பி.ப வரையும் சில வேளைகளில் அரசாங்க விடுமுறை நாட்களிலும் திறக்கப்படும். பராம்பரிய விவசாய உபகரணங்கள், பராம்பரிய சேமிப்பு களஞ்சியங்களின் அமைப்பை ஒத்த மாதிரிகள் என்பன காட்சி பொருள்களில் அடங்கும். நெற் பயிர் செய்கையில் (கமத்தபாசாவ) இலங்கையில் பாரம்பரியமாகப் பாவித்த சொற்களும், சிங்கள சொற்களும் துண்டுபிரசுரமாக 1300 அச்சிடப்பட்டு 2010ம் ஆண்டில் வழங்கப்பட்டது.

அரும் பொருட்காட்சி நிலையத்திற்கு வருகை தந்தோர் விபரங்கள் பின்வருமாறு;

பாடசாலை மாணவர்கள்	84,294
பாடசாலை ஆசிரியர்கள்	4,194
விவசாயிகள்	3,160
அரச அலுவலர்கள்	665
பல்கலைகழக மாணவர்கள்	1,280
வெளிநாட்டவர்கள்	124
ஏனையோர்	7,060

மத்திய நூல் நிலையம்

- 2010ம் ஆண்டில் 95 புதிய புத்தகங்களுடன் மொத்தமாக 10845 புத்தகங்கள் உள்ளன. 251 மேற்பட்ட வெளிநாட்டு சஞ்சிகைகள் ஆண்டு முழுவதும் இலவசமாகவும் மாற்றிடு முறையிலும் பெறப்பட்டன. வருடம் ஒன்றுக்கு 5000 ஸ்ரேலிங் பவுன் சந்தாவாக பொது நலவாய நாடுகளின் விவசாய சர்வதேச சபைக்கு வழங்குகிறது. (CABI)
- 985 விட அதிகமானோர் நூல் நிலையத்தை பயன்படுத்த வந்துள்ளனர். 515 புத்தகங்கள் அங்கத்தவர்களிடையே வாசிப்பதற்கு விநியோகிக்கப்பட்டது. ஒழுங்காக வாசிப்போருக்குரிய சேவைகள், வாசிப்பவர்க்கு வாசிகசாலை கட்கிடையே 26 புத்தகங்கள் இரவல் வாங்கி வழங்கப்பட்டது.
- ஆராய்ச்சி அலுவலர்களது வேண்டுகோளின் படி பழைய நினைவுகள் பற்றிய ஆவணங்கள் தேடிக் கொடுக்கப்பட்டன. அண்ணளவாக 25 தேடுதல்கள் (CARP) உதவியுடன் மேற்கொள்ளப்பட்டன. 300 அளவில் ஆராய்ச்சி அலுவலகர்களின் சர்வதேச இணைய வலை பாவித்து (இன்டர்நெட்) தகவல்கள் பெற்றுள்ளனர். ஆண்டு தோறும் இலங்கை விவசாய திணைக்களத்தால் வெளிவரும் விவசாய ஆராய்ச்சி கட்டுரைகள் (ASDA) அயன மண்டல விவசாயி (Tropical Agricultuist) ஆகிய விவசாய சஞ்சிகைகள், ஆராய்ச்சி கட்டுரைகள் ஆகியவற்றின் உதவியுடன் (AGRI CD - ROM தொகுதி, WEBAGRIS DATA BASE) முன்னேற்றப்பட்டுள்ளது. அத்துடன் விவசாய தரவுகள் விவசாய பிரசுரங்கள் பிரசுரிக்கும் விபர அட்டவணை 2010ல் கொடுக்கப்பட்டுள்ளது.
- (அக்ரிநெற்) (AGRINET) விவசாய இணைய வலைத்தளத்தில் "தகவல் கொண்ட பக்க சேவை" 148 பக்கங்களை விட அதிகரிக்கப்பட்டுத் தொடர்கிறது. அத்துடன் இது 75 உள்ளகப் பாவணையாளர்களிடம் பகிரப்பட்டுள்ளது.
- 2010 அயண மண்டல விவசாயி (TA) சஞ்சிகை உள்நாட்டு வெளிநாட்டு நிறவனங்கட்கு வழங்கப்பட்டுள்ளது. (VOI 150, 157,) 11000ஐ விட கூடுதலாக கட்டுரைகளும் 1100 புத்தகங்களும் PURNA தகவல் பேளையில் சேர்க்கப்பட்டுள்ளன.

அபிவிருத்தி, தொழில்நுட்ப பரிமாற்றங்களின் முயற்சிகள்

மரக்கறிகள்

- மாதிரி கிராமம் – மாதிரி கிராம நிகழ்ச்சி திட்டத்தில் மாறசென கம்பிலிவெவ ஆகிய இடங்களில் மாதிரி துண்டம், சிறந்த வர்க்க விதை விநியோகம், இனம் பொருந்தும் சோதனை, விவசாயிகட்கு பயிற்சி என்பன நடாத்தப்பட்டன.
- பயிற்சி – எட்டு அலுவலுகர்கட்கு மரக்கறி உற்பத்தி பற்றிய பயிற்சிநிகழ்ச்சிகள் பங்களிப்பு செய்யப்பட்டது. (தகுதி வாய்ந்தவர்களால்) (HNDE) 02 தே.டி.க மாணவர்கட்கு விவசாய ஆராய்ச்சியில் சேவை அமர்த்தலுக்கு பின்னான பயிற்சி, அத்துடன் உள்நாடு, வெளிநாட்டிலிருந்து வருகை தந்தோரக்கு நேரடி செயன்முறை விளக்கங்கள் வழங்கப்படல்.

தகவல் பரிமாற்றம் தொடர்பான முயற்சிகளாவன

- மாதிரி துண்டத்தில் செய்து காட்டல், விவசாயின் வயல்களில் பரிசோதனை செய்தலும் சிறந்த பயிர் செய்கை முறைகளை பற்றிய ஆலோசனை வழங்கலும் (நன்மை பெறுவோர் 150)
- விவசாயிகளின் விசாரணைக்கு கடித மூலம் அல்லது தொலைபேசி மூலம் பதில் கொடுத்தவை –200, தொலைக் காட்சி வானொலி நிகழ்ச்சி –02, பத்திரிக்கையில் கட்டுரை –02, துண்டு பிரசரங்கள் –01, விவசாய கண்காட்சியில் பங்கு பற்றுதல் – 02 புதிதாக விடுவிக்கப்பட்ட தக்காளி கறி மிளகாய் விதைகள்; விவசாயிகளிடையே பகிர்ந்தளிப்பு–100
- 14 நிரந்தர பயிர்ச்சிகிச்சை சபை நிகழ்ச்சி திட்டம் அம்பாந்தோட்டை கண்டி மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பழங்களும் இழைய வளர்ப்பும்

- தூரியன், ரம்புட்டான்,பலா, கொரக்கா, பாவனைக் குறைந்த பழப்பயிர்கள் ஆகியவற்றின் நடுகைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகட்கு வழங்கப்பட்டன.
- விவசாயிகட்கும் விரிவாக்க அலுவலர்கட்கும் பழச் செய்கை பற்றி கற்பித்து வயலில் அவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகட்கு அறிவுரையும் வழங்கப்பட்டது.
- பல்கலைக்கழக மாணவர்கட்கு பழப் பயிர் செய்கை முகாமைத்துவம் பற்றிய பயிற்சி வழங்கப்பட்டது. அத்துடன் பல்கலைக்கழக மாணவர்களின் திட்டங்கள் மேற் பார்வை செய்யப்பட்டது.
- 9000 றம்புட்டான் அரும்பொட்டு தாவரங்களும் 1300 பலா ஒட்டு தாவரங்களும் பசியாலை எரிமினிகொல்ல பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு பழக் கிராமங்களை ஸ்தாபிப்பதற்கு விநியோகிக்கப்பட்டன.
- 900 வைரசு அற்ற, கிளை ஒட்டு முறையில் பெறப்பட்ட சித்திரசு தாய்த் தாவரத்தை ஒத்த தாவரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கபட்டன.
- 3 மாதிரி கிராமங்கள் (டுனுகிவல, டியாகம, மீவிற்றிய) விருத்தி செய்யப்பட்டன.
- அதிகளவில் நடுகைப் பொருட்கள் இழைய வளர்ப்பு தொழில் நுட்ப உற்பத்தியில் செய்வதற்காக ஆய்வு கூட உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

வேர் கிழங்கு பயிர்கள், மலர் செய்கை

- பயிர் நடுவோம் நாட்டை முன்னேற்றுவோம் என்னும் நிகழ்ச்சி திட்டத்தினூடாக 45,000 ற்கும் அதிகமான வேர்கிழங்கு பயிர்களின் நடுகைத் துண்டங்கள் வழங்கப்பட்டன.
- 10க்கும் மேற்பட்ட மாதிரி கிராமங்கள் அமைக்கப்பட்டன. புதிய முன்னேற்றப்பட்ட வர்க்கங்களையும் புதிய உற்பத்தி முறைகளை கொண்ட பொதிகளையும் பற்றிய விவசாய அறிவு மேம்படுத்தப்பட்டது.

பூச்சியியல்

- பின்வரும் முயற்சிகள் இவ் வருடத்தில் நடாத்தப்பட்டன.

அட்டவணை 2.2.8 பூச்சியியல் பகுதியினால் நடாத்தப்பட்ட தொழில் நுட்ப பரிமாற்ற நடவடிக்கைகள்

முயற்சிகள்	மொத்தம்
ஆய்வு கூடத்தில் கண்டு பிடிக்கப்பட்டவை	65
புதிய பீடைகள் அடையாளம் காணப்பட்டவை	12
வயலில் பீடைகளை நிர்ணயம் செய்தது	06
விவசாயிகட்கு பயிற்சி	03
அலுவலர்கட்கு பயிற்சி	09
பயிர் சிகிச்சை நிகழ்ச்சியில் விசேட நிபுணத்துவராக பங்கேற்றமை	20
விலாசத்துடன் வந்த கேள்விகட்கு பதில் வழங்கல்	06
தொலைபேசி அழைப்புக்கள் பிரச்சினைக்குரிய பதில் வழங்கல்	54
IPM ஆராய்ச்சி மகாநாடு	28
தேனீ வளர்ப்பு	
கடிதமும் பதிலும்	37
தேனீ சமுகத்தை ஸ்தாபித்தல்	38
தொழிற் கூடங்கள் நடாத்தப்பட்டமை	01
விவசாயி புதிய தேனீ சமுகம் ஸ்தாபிக்க உதவி செய்தலின் எண்ணிக்கை	45
பத்திரிக்கையில் கட்டுரை, துண்டு பிரசுரங்கள் வெளியிடுதல்	02
பூச்சி சாலையை பார்ப்பதற்கு வருகை தந்தோர்	29,917

நோயியலும், களானும்

- 19 பயிர் சிகிச்சைகள் நடத்தப்பட்டன. (பயன் அடைந்தோர் – 1800) வி.சே.ப நிலையத்தில் பயிற்சி 20/950, வயல் விழா 25/ 2000, வயலுக்கு நோயை பரிசோதிக்க சென்றமை 43/730 மா. தொ. வே. தொ (P.T.W.G) கூட்டங்கள் 18
- வித்தி உற்பத்தி அலகு – பொல்ககாமுல சர் வோதய பொருளாதார ஸ்தாபன அபிவிருத்தி சேவைகள் லிமிட்ரேட் என்னும் இடத்தில் காளான் பகுதி பூ.ஆ.அ.நி உதவியுடன் ஸ்தாபிக்கப்பட்டது.
- பின்வரும் வித்தி உற்பத்தி அலகுகளை இலகு வாக தரம் உயர்த்துவதற்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன. அவையாவன சே.ப.நி பிந்துனுவெவ, மன்னப்பிட்டிய கம நல சேவை நிலையம் விவசாய பாடசாலை லபுதுவ வித்தி உற்பத்தி அலகு பொத்துஹற
- புதிய வித்தி உற்பத்தி ஆய்வு கூடம் ஒன்று மகா இலுப்பல்லம சே.ப.நிலையத்தில் அமைப்பத ற்கு அறிவுரை வழங்கப்பட்டது.
- ஐந்து வானொலி நிகழ்ச்சிகளும் 2 தொலை காட்சி நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன.

மண் வளத்தை முன்னேற்றும் நிகழ்ச்சி திட்டங்கள்

- மண் வளத்தினை முன்னேற்றுவதற்கும் அபிவிருத்திக்குமான பரிபாலன செயல் முறைகள் SRICANSOL II திட்டத்தின் கீழ் நெல், மரக்கறி வளரும் இடங்களான கொலபிச மாறசன விவசாயிகட்கு வழங்கப்பட்டன. சுமார் 60 விவசாயிகள் மண் வளத்தை முன்னேற்றும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் அவர்களுக்கு தேவையான கூட்டெருவை பண்ணைக் கழிவுகள் மூலம் உற்பத்தி செய்கின்றனர். எரு கிடைக்கும் அளவை அதிகரிப்பதற்காக விவசாயிகள் தமது கால் நடைகளை தாமே வளர்ப்பதற்கு குறைந்த விலையில் கால் நடைகளை கொள் வனவு செய்வதற்கு கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்திடம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஆய்வுக்கூடம் முன்னேற்றம்

- ஆய்வு கூடத்தில் தாவரத்தினதும் வளமாக்கி யினதும் மாதிரிகள் தயாரிப்பதற்கான பகுதி ஸ்தாபிக்கப்பட்டது. இது பகுப்பு ஆய்வின் தரத்தை முன்னேற்றும்

பகுப்பு ஆய்வு சேவை

2010ம் ஆண்டு சுமார் 689 மண் மாதிரி, 05 நீர் மாதிரி, 58 தாவர மாதிரி 125 கூட்டெரு மாதிரி ஆகியன ஆய்விற்குட்படுத்தி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதற்கான வருமானமாக 1,86,165 ரூபா இவ் வருடம் சேகரிக்கப்பட்டது.

மாணவர்களது திட்டம்

பட்டம் பெற இருக்கும் ஒரு மாணவன் தனது இறுதியாண்டு ஆராய்ச்சி திட்டத்தினை பூரணப்படுத்தியுள்ளார். அதன் தலைப்பு நீர் வளர்ப்பு ஊடகத்தில் வளரும் தக்காளியின் வளர்ச்சியிலும் விளைவிலும் வெவ்வேறு பச ளைக் கலவைகளின் தாக்கம்.

2011ம் ஆண்டிற்குரிய திட்டம்

மரக்கறிகள்

- தக்காளி கறிமிளகாய் வர்க்க அபிவிருத்தி கலப்பின வீரிய விருத்தி மூலம்
- தக்காளியில் வர்க்க அபிவிருத்தி விகார இனவிருத்தி மூலம்
- தக்காளியில் அறிமுகங்களை மதிப்பிடல்
- உற்பத்தியாளர் விதை உற்பத்தி தக்காளி, பயற்றை (பொலன்மீ, கவரி) பாகல் (மாத் தளை கிறின்) சிறகவரை (கிரிஸ்னா) SLS 44) இத்துடன் வெளியிடப்பட்ட இனங்களின் பெற்றோர் இனங்கள்
- வெளியிடப்பட்ட வர்க்கங்களை பிரபல்யப் படுத்தல்
- சிறப்பியல்பை காட்டும் (Nye meris) மிளகாய் மாதிரியின் இனத்தூய்மையாக்கலும் விதை உற்பத்தியும்
- பீர்க்கு, பயற்றை, கெக்கரி, பாகல் என்பவற் றில் F கலப்பின வர்க்கங்களின் அபிவிருத்தி பீர்க்கில் ஓரின விருத்தியின் மூலம் வர்க்க ங்களின் அபிவிருத்தியும்
- போஞ்சி பேதங்களின் அபிவிருத்தி; வழமையான முறை, உயிர்த் தொழில் நுட்பங்களின் பாவனை மூலம்
- நிரந்தர பயிர் சிகிச்சை குழுக்களை மாத்தறை திருகோணமலை பதுளை மாவட்டங்களில் வியாப்பிக்கச் செய்தல்
- பாகல் கத்தரி அந்நிய நாட்டு கலப்பின வர்க்கங்களை மதிப்பிடல்
- கெக்கரி காய்களின் தரத்திலும் விளைவிலும் அறுவடை செய்யும் காலத்தின் தாக்கம்
- அதிக விளைவு, பற்றிரியா வாடலுக்கு எதிர் ப்பு சீரான அமைப்புடைய காய்கள் என்னும் இயல்புடைய கத்தரி கலப்பின ஓரின வர்க்க ங்களின் அபிவிருத்தி
- விவசாயின் கத்தரி வர்க்கங்களை இனத் தூய்மையாக்கல்
- உற்பத்தியாளர் விதை உற்பத்தி வெளியி டப்பட்ட வர்க்கங்களின் பெற்றோர்
- அதிக விளைவு, அழுகல் நோய்க்கு எதிர் ப்பு, நுகர்வோர் விருப்பம் கொண்ட பயற்றை கலப்பின, வீரின வர்க்கங்களின் அபிவிருத்தி
- வெவ்வேறு இலை மரக்கறிகளின் சிறந்ததரம் கொண்ட விதைகள், நடுகைப் பொருட்களின் உற்பத்தி

பழங்கள், இழைய வளர்ப்பு

- இலங்கையில் உக்கிரச பற்றிய ஆராய்ச்சி பாதுகாப்பு, இனப்பெருக்கம் ஆகியன சம்பந்த மான படிப்பு
- தூரியன் கலப்பின பிறப்பிலிருந்து அதிக விளைவும் தரமும் கொண்ட இணைப்பை பெற்றோர் இனம் காணல்
- பலாவில் உயர் விளைவு தரம் என்பவற்றிற்கான பாதுகாப்பு, மதிப்பீடு
- அதிக விளைவு, தரம் பெறுவதற்கு என்பன் வாழையில் ஆராய்ச்சி, சேமிப்பு, மதிப்பீடு
- டரகன் பழத் தாவரத்தின் தெரிவும், இனம் கலப்பு மூலம் அதிக விளைவு தரம் கொண்ட வர்க்கங்களின் அபிவிருத்தி
- வினைத்திறனான அடிக்கட்டைகளில் இடையே யும், வேர் கட்டை வர்க்கத்தினையும் மாவின் உயரம் குறைப்பதற்கான மதிப்பிடல்
- பப்பாசி அதிக விளைவும் தரமான பழமும் கொண்ட கலப்பின வர்க்கங்களை கிடைக்க க்கூடிய உள்ளூர் இனங்கள் மூலம் அபிவிருத்தி செய்தலும் அவற்றை மதிப்பிடலும்
- மாதிரி கிராமங்கள் ஸ்தாபித்தல்
- ஆராய்ச்சி பண்ணைகள் 02 இனதும் நடுகைப் பொருட்களினதும் அபிவிருத்தி
- விகார இனப்பெருக்க மூலம் உயர் விளைவு, சிறந்த தரம், நோய்க்கு எதிர்ப்பு கொண்ட வாழை றம்புட்டான் வர்க்கங்களை அபிவிருத்தி செய்தல்
- அதிக விளைவும், தரமும், நோயை தாங்கக் கூடியதுமான, வாழைகளை மூலவுயிருருக் களிலிருந்து தெரிவு
- அதிக விளைவு, தரம் கொண்ட பப்பாசி கலப்பின வர்க்கங்களின் அபிவிருத்தி
- ரம்புட்டான் விளைவு, தரம் என்பவற்றை முன்னேற்றும் செயல்முறை பொதியை அபிவிருத்தி செய்தல்
- விதையின் பருமன், வேர் கட்டையின் வளர்ப்பு ஊடகம், பதியத் தாவரம் என்பவற் றின் விளைவை பாதர் லோங் என்னும் பலா இனத்தில் அறிதல்

- மாதிரி கிராமங்கள் 4 ஸ்தாபித்தல்
- ஆராய்ச்சி பண்ணை நான்கினதும் நடுகைப் பொருட்களினதும் அபிவிருத்தி

வேர், கிழங்கு பயிர்கள் மலர் செய்கைத் திட்டங்கள்

- மரவள்ளி வற்றாளையில் வர்க்க அபிவிருத்தி தொடரும்
- வற்றாளை ச.உ.நி (C.J.P) வர்க்கங்களின் அதிக உவர்த்தன்மையை தாங்குதல் அதிக உலர் பொருள் அதிக கரோட்டின் ஆகியவற்றை மதிப்பிடல்
- மரவள்ளி, வற்றாளை, சேம்பு இன்னல கொலகேசிய, டயஸ்கொரிய ஆகியவற்றின் சிபாரிசு செய்யப்பட்ட வர்க்கங்களின் அடிப்படை நடுகைப் பொருட்களை நாடு முழுவதும் உற்பத்தி செய்தலும், அவற்றை கேட்பவருக்கு வெவ்வேறு குறிக்கோளின் அடிப்படையில் பயன் அடைவோருக்கு விநியோகித்தல்
- வேர் கிழங்கு பயிர்களின் மூலவுயிருருவைப் பேணல்
- புதிய முன்னேற்றமான வர்க்கங்கள் வேர் கிழங்கு பயிர்களின் உற்பத்தி செய்முறைகளின் பொதிகள் ஆகியனவற்றை நடுகை துண்டங்கள் பெறும் அலகை ஸ்தாபித்தல் மூலமும், மாதிரி துண்டங்கள், மாதிரி கிராமங்கள், பயிற்சிகள் ஆகிய நிகழ்ச்சிகளின் மூலம் பரவச் செய்தலும்.

தாவர நோயியில் நுண் உயிரியில், காளான்

- கத்தரி தக்காளி கறிமிளகாய் ஆகியவற்றின் மூலவுயிருருக்களை வாடல் அடிஅழுகல் பற்றி அறிய சோதித்தல்
- பியுசாரியம் வாடலுக்கு கட்டுப்பாட்டு முறைகளை விருத்தி செய்தல்
- நோய்களை நிர்ணயம் செய்தலும் அறிவுறுத்தல் சேவைகளும்
- தக்காளி, கறிமிளகாயின் நோய் எதிர்க்கும் தன்மையில் கதிர் வீச்சுக்கு உட்படுத்தப்பட்ட கைற்றினின் விளைவு
- கதிர் வீச்சுக்கு உட்படுத்தப்பட்ட கைற்றோசனினால் றம்புட்டானில் தூள் பூஞ்சணம் பரிபாலித்தல்
- இஞ்சி வேர் தண்டு கிழங்குகளின் அழுகலை கட்டுப்படுத்தும் முறைகளை அபிவிருத்தி செய்தல்
- நாற்றுமேடையில் நோய்களின் உயிரியல் கட்டுபாடு
- பூசணி பயிர்களில் வைரசு காரணமாக ஏற்படும் இலைச்சுருள் பிரச்சினை பற்றிய கற்கை
- இறக்குமதி செய்யப்பட்ட விதை, நடுகைப் பொருட்கள் என்பவற்றின் நோய்களை நிர்ணயம் செய்வதற்காக சோதித்தல்
- சைரறேசன் சேர்வைகள் நோயாக்கி பங்கசுவின் வளர்ச்சியில் ஏற்படும் தாக்கத்தை சோதித்தல்
- திராட்சையில் நோய் கட்டுபாடு பற்றிய படிப்பு
- பூசணிப் பயிரில் நோய்களை அடையாளம் காணலும் அவற்றைக் கட்டுப்படுத்த IPM பொதியை விருத்தி செய்தலும்
- தோடை பழப் பயிர்களின் முக்கிய நோய்களுக்கான IPM பொதிகளை விருத்தி செய்தல்
- கொடித் தோடையில் தண்டு புடைப்படைதல் பற்றிய படிப்பு
- சுச்சினி மஞ்சள் மொசக் வைரசு நோய்க்காக கெக்கரி மூலவுயிருருக்களை சோதித்தல்
- டரகன் பழப் பயிர் செய்கையில் நோய்களை இனம் காணல்
- தக்காளியில் வெளிறல் நோய்க்கு எதிராக பங்கசு நாசினிகளின் சோதனை
- கறி மிளகாயில் அந்திரக்நோஸ் நோயக்கு எதிராக பங்கசு நாசினிகளின் சோதனை
- வாழையில் சிகாரோகா நோய்க்கு எதிராக பங்கசு நாசினி சோதனை
- பூசணிப் பயிர்களில் தூள் பூஞ்சணம், கீழ் பூஞ்சணம் ஆகியவற்றிக்கு எதிராக பங்கசு நாசினிகளின் சோதனை
- பால் காளான் பயிர் செய்கையில் இழைகளின் அபிவிருத்தி
- உண்ணக்கூடிய காளானின் இரு புதிய வர்க்கங்களில் பயிர் செய்கை முறை சோதனைகள்
- குறைந்த செலவில் வித்தி உற்பத்தி முறையை அபிவிருத்தி செய்தல்
- மரக்கறி பழப் பயிர்களில் மைக்கோரைசாவின் வேர்களை மதிப்பிடல்

மண் வள முகாமைத்துவம்

- சேதன மரக்கறி உற்பத்தியில் போசணை முகாமைத்துவம்
- மரக்கறி பயிர் செய்கையில் பகுதி எரிந்த உமியின் பாவணை

- சேதன மரக்கறிச் செய்கையில் பத்திரக் கலவையாக பாவிக்கும் பொருட்களின் தாக்கம்
- மண்புழு கூட்டெரு தயாரிப்பு முறையை பயன்படுத்துவதன் மூலம் ERP ன் கரையும் தன்மையை அதிகரித்தல்
- பண்ணைக் கழிவுகளை அடிப்படையாகக் கொண்ட கூட்டெரு மாதிரிகளின் போசணைக் கூறுகள்
- நீண்ட கால கூட்டெரு பாவணை, மரக்கறி விளைவிலும் மண்ணின் தரத்திலும் ஏற்படுத்தும் தாக்கம்
- மாறசென மரக்கறி பயிரிடும் மண்ணின் வளத்தை மதிப்பிடலும் முன்னேற்றலும் நிகழ்ச்சி திட்டம்
- பொலிரனல் பயிர்கட்கு தேவையான போசணைக் கலவை தயார் செய்தலும், மதிப்பிடலும்
- கலப்பின மரக்கறி வர்க்கங்களின் பசளை முகாமைத்துவ செயன் முறைகளை மதிப்பிடல்
- கூட்டெரு பாவனை மூலம் இரசாயன பசளையின் பாவணையைக் குறைத்தல்
- பசுந்தாட் பசளைகளின் துணை மூலகங்களின் நிலையினை ஆராய்தல்
- இலங்கையில் வெவ்வேறு பயிர் செய்யும் முறைகளின் கீழ் உள்ள மண்ணின் நுண் மூலகங்களின் நிலை பற்றிய ஆய்வு
- பொசுபேற்று பசளையில் பாரம் கூடிய உலோகங்களின் நிலை பற்றிய ஆய்வு
- வழமையான முறையிலும் சேதன முறை யிலும் பயிரிடும் இலை மரக்கறிகளின் நுண் மூலகங்களின் அளவுகளை ஆராய்தல்
- இழைய வளர்ப்பு தாவரத்திற்கான (NPK) பகுப்பு சோதனை

விரிவாக்கம், பொருளாதாரம், தரவு முகாமைத்துவம்

மல்ரி ரெம்போறல் றிமோட் சென்சிங் (MTRS) தரவுகள் மூலம் நிலங்களில் பயிரின் பரம்பலும் அவற்றின் நில அளவும், பயிர் செய்கை முறை கள் பற்றியும் மதிப்பிடல்

- தொழில்நுட்ப செய்தி தாள்கள் 200 ஐ முன்னேற்றலும் மீண்டும் அச்சு எடுத்தலும்
- புதிய செய்தி தாள்களை தயாரித்தலும் அச்சு எடுத்தலும்
- தெரிந்த தொழில் விடயங்களை பரப்புவதற் கான முயற்சிகளில் இணைப்பாளராக செயற் பட்டு நடாத்துதல்

உத்தியோகத்தர் பட்டியல்

பதவி நிலை	எண்ணிக்கை
பணிப்பாளர் ஆராய்ச்சி (பதில்)	01
மேலதிக பணிப்பாளர் (பதில்)	01
உதவி பணிப்பாளர் ஆராய்ச்சி	01
ஆராய்ச்சி அலுவலர்	25
நிர்வாக அலுவலகர்	02
சிரேஸ்ட நூலகப் பொறுப்பாளர்	01
விவசாய அலுவலர்	02
நிகழ்ச்சி திட்ட உதவியாளர் (ஆராய்ச்சி)	21
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	119
பண்ணை எழுது வினைஞர்	09
விவசாய போதனாசிரியர்	49
ஆராய்ச்சி உதவியாளர்	11
ஆராய்ச்சி துணை உதவியாளர்	13
K.K.S	02
சாரதி	09
உழவு இயந்திரம் இயக்குனர்	01
களஞ்சிய ஊழியர்கள்	03
இயந்திர தொழிலில் ஈடுபடுவோர்	02
இயந்திரம் இயக்குபவர்	01
தச்சன்	02
மேசன்	11
ஒட்டுபவர் (இரும்பு)	04
மின்சாரம் சம்பந்தமான தொழில் புரிபவர்	02
பூச்சு பூசுபவர்	01
அசையும் இயந்திரத்தினால் புல் வெட்டுபவர்	22
அசையும் இயந்திரம் இயக்குபவர் / புல் வெட்டுபவர்	01
நீர் இறைக்கும் இயந்திரம் இயக்குபவர்	01
தேனீ சம்பந்தமான நிகழ்ச்சிகளை செய்து காட்டுபவர்	01
ஒட்டுபவர் (தாவரம்)	07
சுற்றுலா விடுதி காப்பாளர்	01
நாற்றுமேடை பராமரிப்பவர்	01
சுத்திகரிப்பவர்	02
பயிற்றப்படாத தொழிலாளிகள்	135
காவலாளி	23
மொத்தம்	360

2.2.1 தாவர வைரசு கூட்டியிடல் நிலையம், (தா.வை.கூ.நி.) – ஹோமாகம

தாவர வைரசினை அடையாளம் காணும் ஹோமகமவின் தொழிற்பாடுகள் பூங்கனியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலைய நிருவாகத்தின் கீழ் இயங்குகிறது. இந்த நிலையத்தின் நோக்கம் தற்போதுள்ள உயர்த்தர தொழில்நுட்பங்களை பயன்படுத்தி வைரசு போன்ற அங்கிகளை ஆய்வுக்கூடத்திலும் வயலிலும் அடையாளம் காணல், தொற்று நோய்களை பரவாமல் தடுக்கும் நிலையத்தின் தேவைகட்கு உதவி செய்தல், திடீரென விரைவாக அதிகளவில் பல இடங்களில் ஒரே நேரத்தில் பரவும் நோய்களை பற்றிய ஆய்வு மதிப்பீடு, சாத்தியமான கட்டுபாட்டு முறைகள், வைரசு தொற்றல் அற்ற அடிப்படை அஸ்திவார இருப்புகளை அபிவிருத்தி செய்தல், வைரசு பூசப்பட்ட புரதங்கள், மருத்துவ ரீதியான எதிர் ப்புக்கள் பற்றிய ஆய்வு வேறு நோயாக்கிகளை (பங்கசு பற்றிரியா,விலாங்குப்புழுவை வைரொ யிட்ஸ், பைற்றோ பிளாஸ்மா) கண்டுப்பிடித்தல் ஆகியனவாகும்.

பாதீடு

அட்டவணை 2.2.1.1 ல் பெறப்பட்ட ஒதுக்கீட்டு தொகை பயன்படுத்தபட்ட செலவுகள் வெவ்வேறு தலைப்பு திட்டம் என்பவற்றின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன

அட்டவணை 2.2.1.1: வருடாந்த பாதீடு 2010 (ரூபா)

தலைப்பு	ஒதுக்கப்பட்ட தொகை	செலவு	செலவு%
மீண்டு வரும் செலவு	2,907,616	2,842,508	98
முலதனம்	1,151,518	823,842	72
அபி வவமு ரட்ட நகமு – பலா	225,000	80,797	36
தெ.ஆ.நி. – தென்னை ஓலை வாடல் திட்டம்	450,000	397,668	88
மொத்தம்	***4,734,134.00***	***4,144,815.00***	***88***

முன்னேற்றம்

பாரம்பரிய தாவர வைரசுவியல்

பின்வரும் கற்கைகள் இவ் வருடத்தில் நடாத்தப்பட்டுள்ளன.

அந்தூரியம் இலைவெளிறல் நோய்கா ரணி (சந்தோமோனஸ் அக்ஸ்ரோபோடிஸ்) பிவி டிவைன்பாகே (எக்ஸ்டேட்) பொலிகுளோனஸ் அன்ரிசிரம் உற்பத்தி செய்யப்பட்டது முயலின் நீர்பீடனத்தில் போதுமான அளவு பிறப்பொருளெதி ரிகள் விருத்தி செய்யப்படுகிறது.

ELISA புரோடோகோல் அபிவிருத்தி: உள்ளூர் அந்தூரியம் வெளிறல் சந்தோமொனஸ் அக்சோளோ போடிஸ் பிலி டிபென் பாகே (Xcd) வுக்கெதிராக அன்ரிசீரம் உற்பத்தி செய்யப்பட்டது. மாதிரிகள் நாற்றுமேடை பராமரிப்பவரிடமிருந்து பெறப்பட்டு அடையாளம் காணப்பட்டது. பரிசோ திக்கும் பொதி மிகவும் உபயோகமானது. அதாவது நோய்த் தாவரங்களை அடையாளம் காணலாம். அத்துடன் ஆரோக்கியமான தாவரங்களை பதிய முறையினூடு பெற்றுக் கொள்ளலாம். இந்த நிலையம் இதில் ஆர்வமுள்ளவர்களுக்கும் உதவி செய்ய முடியும். மாதிரி அடைளாயம் காணலுக்கு 300/= செலவாகும்.

வெலிகம தென்னை இலை வாடல் நோயை வெலிகமவில் ELISA புரோகோலினல் அடையாளம் காணப்பட்டது. நோயை அடையாளம் காண உள்ளூ ரில் உற்பத்தி செயட்யப்பட்ட பொலிகுளோனல் அன்லிசீரம் பாவிக்கப்பட்டது. இது நோயை அடையாளம் காண மட்டுமே பாவிக்கலாம்.

வெலிகம தென்னோலை வாடலுக்கான விருந்து வழங்கி அளவு மட்டத்தை ELISA மூலம் அடையாளம் காணல்.

கெலி கோனியா, அல்ஸ்ரோனியா சில பாம் இனங்கள், பாக்கு (கமுகு) தாவரங்கள் சாதகமான முடிவை தந்தன. இதன் அடிப்படையில் நோயுடைய தாவரங்களை நோய் காணப்பட்ட இடங்களிலிருந்து வேறு தென்னை வளரும் வேறு இடங்களுக்கு கொண்டு செல்லுதல் கட்டுப்படுத்தப்பட்டது. இது தொடரப்படும்

பூசணிப் பயிர்களில் பப்பாசி வளையப் புள்ளி வைரஸ் (PRSV) உள்ளூரில் உற்பத்தி செய்த (PRSV) அன்ரி சீரத்தினைப் பாவித்து அடையாளம் காணப்பட்டது. உள்ளூரில் உற்பத்தி செய்த (PRSV) அன்ரி சேரத்தைப் பாவித்ததால் பூசணிப் பயிர் வர்க்கங்களின் PRSV யினை அடையாளம் காண முடியும்.

பிரியிழை வளர்ப்பு முலம் கரும்பில் வைரசு இனை நீக்கிவிட முடியும்.

இவ்வாய்வு கரும்பு ஆராய்ச்சி நிலையம் உட வலவவுடன் இணைந்த நிகழ்ச்சி திட்டமாக தொடரப்படும்

தொடர்ச்சியான முறையில் அடையாளம் காணும் நிகழ்ச்சி திட்டம்; நிணநீரியல் முறையில் பரிசோதனை செய்யப்பட்ட மாதிரிகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.2.1.2 தொடர்ச்சியான முறையில் அடையாளம் காணும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் பரிசோதித்த மாதிரிகள்

பயிர்	நோய்	பரிசோதித்த மாதிரிகளின் எண்ணிக்கை
அந்தூரியம்	இலை வெளிநல்	140
வாழை	கோடு வைரசு	50
	குறுமன் நோய் (Bunchy top virus)	180
மிளகாய்	கெக்கரி சித்திர வைரசு	10
தென்னை	வெளிகம தென்னை இலை வாடல் பைற்றோ பிளாஸ்மா	360
களை	வெளிகம தென்னை இலை வாடல் பைற்றோ பிளாஸ்மா	190
தோடை	சித்திரஸ் கிறிளிஸ் பற்றிரியா	12
	இரஸ்ரிசா வைரஸ்	12
பூசணிபயிர்கள்	பப்பாசி வளைய புள்ளி ரைவசு	50
	கெக்கரி மொசாக் வைரசு	20
சேம்பு	டஸ்கீன் மொசாக் வைரஸ்	20
பப்பாசி	வளையப் புள்ளி வைரசு	260
அன்னாசி	வாடல் மொற்றில் வைரசு	135
கொடி தோடை	கொடி தோடை வைரசு	06
உருளைகிழங்கு	இலை சுருட்டும் வைரசு	108
	உருளைக் கிழங்கு வைரசு y	85
	உருளைக் கிழங்கு வைரசு x	248
கரும்பு	சித்திர வைரசு	31
	பொற்றி கோடு வைரசு	31

மூலக்கூற்று வைரசுவியல்

பின்வரும் ஆய்வுகள் இந்த வருடம் நடாத்தப்பட்டது.

உருளைக்கிழங்கு வைரசு Y (PVY) அடையாளம் காணல்; ரான்ஸ்கிரிபசன் பொலிம ரேக செயின் நியாக்ஸ்ஸன் தலைகீழ் முறையி னால் (RT-PCR) சோதித்த 30 மாதிரிகளில் 19 மாதிரிகளில் உருளைக்கிழங்கு வைரசு கண்டுப்பிடிக்கப்பட்டது.

உருளைக்கிழங்கு இலைச்சுருளல் (PLRV) வைரஸ் ரான்ஸ்கிரிபசன் பொலிமரேக செயின் நியாக்ஸ்ஸன் தலைகீழ் முறையினால் (RT-PCR) கண்டுப்பிடிக்கப்பட்டது.

அநேக மாதிரிகளின் இலைச் சுருளல் வைரஸ் கண்டு பிடிக்கப்பட்டது.

உருளைக்கிழங்கு வைரஸ் x (PVX) ரான் ஸ்கிரிபசன் பொலிமரேக செயின் நியாக்ஸ்ஸன் தலைகீழ் முறையினால் (RT-PCR) கண்டுப்பிடிக்கப்பட்டது.

(PVX) நோயினது அறிகுறிகளைக் கொண்ட மாதிரிகள் பதுளை, சீத்தாஎலிய, நுவரெ லியா, பண்டாரவளை, வெலிமட ஆகிய ஊவா மாகாணப் பகுதிகளில் இருந்து சேகரிக்கப்பட்டன. ஒரு மாதிரியிலும் PVX கண்டுபிடிக்கவில்லை. இதனை செயல்ப்படுத்தும் நிபந்தனைகள் மத்திமமானதும் இம்முறையில் அபிவிருத்தி தொடர்கிறது.

- பல்பகுதியச் சங்கிலித் தாக்க முறையை (PCR) அடிப்படையாகக் கொண்ட செயல்முறையில் தென்னவோலை வாடல் நோயின் (பைற் றோபிளாஸ்மா) விருந்து வழங்கி மட்டம் பற்றிய (Host range) கற்கை.
- தென்னோலை வாடல் நோயின் விருந்து வழங்கி மட்ட அளவை கண்டு பிடிக்க PCR முறையை வெற்றிகரமாக பாவிக்க முடியும். பைற்றோபிளாஸ்மா வெலிகம தென் னோலை வாடல் பற்றிய கற்கை குறிப்பிட்ட அடிப்படையில் தொடரப்படும். மேலும் உறுதிப்படுத்த பரம்பரை அலகு ஒழுங்கு பற்றிய பரிசோதனை நடாத்தப்படும்.
- DNA அடிப்படையாக கொண்ட தொழில்நுட்ப முறையினால் தொடர்ச்சியாக வைரசு அடையாளம் காணும் நிகழ்ச்சி திட்டம்
- தனியார் நிறுவனங்களிலும், தொற்று நோய் பரவாமல் தடுக்கும் நிலையத்தின் தேவைகட்கும் இத்தொழில்நுட்பம் வைரஸ் அற்ற நடுகைப் பொருட்களின் உற்பத்தியை முன்னேற்ற பாவிக்க முடியும்.

இழைய வளர்ப்பு பகுதி

- கப்பல் வாழை இனத்தின் நுண் இனப் பெருக்க முறைக்குப் பொருத்தமான புரோ டோகோலை அடையாளம் காணல்

  உறுதியான பெறுபேறு கிடைப்பதற்காக பரி சோதனை மறுமுறை செய்யப்படும்

- நுண்முனை அரும்பொட்டு மூலம் மண்டறின் வர்க்கமான "இந்து" வில் இனப்பெருக்கம்
- வேர் கட்டைகள், ஒட்டுக்களிலிருந்து உருவாகும் அரும்புகளை வேறுப்படுத்துவதில் கடினம் உருவானது. இவ்வாய்வு தொடகி ன்றது.
- நுண் இனப்பெருக்கத்தினூடாக அந்தூ ரியத்திற்கான புரோரோகோலின் அபிவி ருத்தி

எல்லா வளர்ப்புகளும் தொடர்ந்தும் ஆரம்ப ஊடகத்தில் கலஸ் உண்டாவதற்காக வைக்கப்பட்டுள்ளன.

மரியன் கோல்ட் 3 (MG3) அன்னாசியில் நுண் இனப் பெருக்கம்

MG3 வர்க்கத்தின் இலைப்பகுதிகளை பாவித்து பரிசோதனை கூடங்களில் வெற்றிகரமாக வளர்க்க முடியும். இருந்தபோதிலும் வயலில் இதன் வளர்ச்சி, விளைவு பற்றிய இயல்புகளை அறிய வேண்டும். இக்கற்கை தொடரப்படும்.

- நுண் இனப்பெருக்கத்தினூடாக பப்பாசிக்குப் பொருத்தமான புரோரோகோலின் அபிவிருத்தி

முதிர்ந்த பப்பாசி மரங்களில் இழைய வளர்ப்பு தொழில் நுட்பத்தினூடாக இனப்பெருக்கம் செய்வதற்கான சாத்திய கூறுகள் தெரிகின்றன. இப்படிப்பு தொடரப்படும்.

நுண் இனப்பெருக்கத்தின் மூலம் வாழை இனங்களின் உற்பத்தி

நியம இழைய வளர்ப்பு தொழில்நுட்பத்தை பாவித்து வாழை வர்க்கங்களின் உற் பத்தியும் பகிர் வும் கீழே தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.2.1.3 வாழை வர்க்கங்களின் உற்பத்தி (நுண் இனப் பெருக்கம்)

இனம்	உற்பத்தி செய்யப்பட்ட தாவரங்களின் எண்ணிக்கை	விவசாயிகளுக்கிடையே கொடுக்கப்பட்ட தாவரங்களின் எண்ணிக்கை
எம்பன்	1200	558
அங்கவி ஆறு	400	285
நேத்ராம் பழம்	380	160
புளிக்கதலி	78	58
மொத்தம்	***2058***	***1055***

சடுதியாகப் பரவும் வைரசு நோயியல்

அதிகளவில் பல இடங்களில் ஒரே நேரத்தில் பரவும் வைரசு நோயியல்

பப்பாசியில் வளையப் புள்ளி நோயை இஞ்சியுடன் கலப்புப் பயிர் செய்கை முலமும் வேப்ப எண்ணெய் விசிறல் முலமும் கட்டுப் படுத்தல்

வேப்பெண்ணெய் விசிறியதில் 02 தாவரங்களும் இஞ்சியுடன் கலப்பு பயிர் செய்ததில் 01 தாவரமும் கட்டுபாட்டு பரிகரணத்தில் 02 தாவரமும் PRSV சோதனைக்கு உடன்பாட்டை காட்டின. ELISA பெறுபேறு நேரடியான அவதானிப்பை உறுதிப்படுத்தியது. பப்பாசியில் வயலில் நடப்பட்டதிலிருந்து காய்தோன்றும் நிலை வரை PRSV தொற்றுவதற்கான சாத்தியத்தை வெளிப்படுத்தின. ELISA சோதனையும் நேரடி அவதானிப்பும் காய் உண்டாகும் நிலை வரை தொடர்கிறது.

பூசணியில் இரசாயனமற்ற முறையில் வைரசு நோய் கட்டுப்பாடு பி.வி.ஆ.நி மாகந்துறவுடன் இணைந்து நடைபெறுகின்றது. ஒரு மாத பூசணிக் கொடியில் இது வரை எது வித அறிகுறியும் எந்த பரிகரணத்திலும் தோன்றவில்லை அவதானிப்பு அடுத்த பருவக் காலத்துக்கும் தொடரும்.

வெப்பப் பரீகரண அன்னாசியில் வயல் மதிப்பீடு

எல்லா தாவரங்களும் வைரசு நோய் அற்றனவாக, நட்டு 10 மாதம் வரை இருந்தன.

- அன்னாசி MG3 வர்க்கத்தின் வளர்ச்சியையும் விளைவையும் அறிதலும், வைரசு அழிவை மதிப்பிட ஆவன செய்தலும்

MG3, கியு வர்க்கம் உள்ளூர் நிபந்தனைகளில் வளர்ச்சி, பழத்தின் தரத்திற்கும் பொருத்தமானது. இதனால் வர்த்தகப் பயிர்ச்செய்கையில் வெற்றிகரமாக இவற்றை பயன்படுத்த முடியும்.

வேறு பங்கசு நோயாக்கிகள்

- தம்பலவில் முலிகைப் பிரித்தெடுப்பு முலம் கீரையில் சேர்கஸ் போரா இலைப் புள்ளி நோயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

03 முலிகை பிரித்தெடுப்புகளை சோதித்த போது (மஞ்சள், பூடு, மிளகாய்) பூடு பரிசோதனை கூடத்தினுள் சிறந்த பெறுபேற்றைக் காட்டியது. தட்டுச் சோதனை மறுமொழியை உறுதிப்படுத்துவதற்காக மீண்டும் செய்ய வேண்டும். தொடர்ச்சியாக வயற்பரிசோதனையும் மேற்கொள்ள வேண்டும்.

- கறிமிளகாய் முலிகை பிரித்தெடுப்பை பாவிப்பதன் முலம் அந்திரக்னோஸ் (கொலிரொரிக்கம் இனம்) கட்டுப்படுத்தல்

நான்கு முலிகைப் பிரித்தெடுப்பில் (மஞ்சள், உள்ளி, வேப்பெண்ணெய் வேப்பங்கொட்டை பிரித்தெடுப்பு) மஞ்சள் பரிகரணம் ஆய்வு கூடத்தில் மிகவும் சிறப்பைக் காட்டியது. தட்டு (Plate) சோதனை, முடிவை உறுதிப்படுத்த மீண்டும் செய்யப்படல் வேண்டும்.

- வாழையில் பனாமா வாடலை (பியுசோரியம் ஒக்ஸிபோசம்) கட்டுப்படுத்த பொருத்தமான கட்டு பாட்டு நியமங்கள்.

றைகோடேமா மிக முக்கிய உயிரியல் காரணி என அறியப்பட்டுள்ளது. தட்டுச் சோதனை, முடிவை உறுதிப்படுத்த மீண்டும் செய்ய வேண்டும். வயல் சோதனைகள் சேதன அசேதன பொருட்களுடன் நடத்தப்பட வேண்டும்.

- விவசாயப் பயிர்களில் பூச்சி பீடையை கட்டுப்படுத்த மர உட்புகுத்திகளின் சோதனை

'எகில' மரத்தில் குளோரிபைரிபொஸ் உட்செலுத்திய போது தண்டு துளைப்பானை குறிப்பிடக்கூடியளவில் கட்டுப்படுத்தியது. கிளை போசெற் பொருத்தமற்ற கோரா, கொடஅம்ப கடுறு தாமரங்களை அகற்றுவதில் சிறந்த பேற்றைக் காட்டியது.

இவ்வாய்வு காழினூடாக அசையும் தொகுதி பங்கசு நாசிகளுடன் இணைத்து மீண்டும் செய்யப்படும்.

- தொடர்ச்சியாக நோய்களை அடையாளும் காணும் நிகழ்ச்சிதிட்டம்

168 ற்கும் மேற்பட்ட மாதிரிகள் அடையாளம் காணப்பட்டு விளைத்திறனான IPM அடிப்படையிலான தீர்வுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

தொழில்நுட்ப பரிமாற்றம்

பயிற்சி வகுப்புகள்

- விவசாயிகட்கான 10 பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டன.(பயன் அடைந்தோர் 143).

க.பொ.தஉயர் தர ஆசிரியர்களுக்கு விவசாயப் பாடத்தில் பயிற்சிகள் 36 (N.I.E)

- குருநாகல் மாவட்டத்தில் பலா அபிவிருத்தி நிகழ்ச்சி ' அபி வவமு ரட்டநகமு' என்னும் திட்டத்தின் கீழ் விசேட பயிற்சி நடாத்தப்பட்டது.
- 12 விழிப்பூட்டல் நிகழ்ச்சி திட்டம் 1100 அலுவலர்கட்காகவும், 09 பலா பதனிடல் பயிற்சியும் (அதில் 360 பேர் பங்கு பற்றினார்கள்) ஒட்டப்பட்ட பலா உற்பத்தி (70 பயனாளிகள்) ஒன்றும் நடாத்தப்பட்டது.
- விவசாய மாதிரி கிராமங்கள், பல மாதிரி துண்ட நிகழ்ச்சி திட்டங்கள் 150 நாட்களில் வெற்றிகரமாக முடிக்கப்பட்டது. சமூக அடிப்படையில் விதை நடுகைப் பொருட்கள் உற்பத்தி நிகழ்ச்சி திட்டம் நடைபெறுகிறது.
- தனியார் நிறுவனங்களின் வேண்டுகோளுக்கு இணங்க 6 மாதிரி வகுப்புக்கள் நகரங்களில் விவசாய முறைகளில் நடாத்தப்பட்டன.
- பாதுக்க, மலேப், தகத்துடுவ, கொஸ்கம, கபரகட ஆகிய கமலநல சேவை நிலையங்களில் 05 விவசாய குழுக்களுக்கு பயிர்ச்சிகிச்சை முகாம் நடாத்தப்பட்டன.
- பல்கலைக்கழக பட்டம் பெறும் மாணவர்களுக்கு தாவர வைரசுவியல் பற்றிய பயிற்சிகள் நடாத்தப்பட்டன மாணவர்கள் கெலனிய, வயம்ப, றுகுனு பல்கலைக்கழகத்தில் படிப்பவர்களாவர்.
- பத்திரிகையில் 6 கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன.

பயிற்சிகள்

- ஜப்பான் அரச உதவியுடன் 2008 இல், திருமதி ரூ.ரு அமரசிங்க நிகழ்ச்சி திட்ட உதவியார் நீர்பாசனம் சம்பந்தமான PhD படிப்புக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
- விவசாயத் திணைக்கள நிதியுதவியுடன் 2009 ல் திரு ணு.டீ.டூ ஆராய்ச்சிகே விவசாய போதனாசிரியர் சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு BSC படிக்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இணைந்த படிப்புக்கள்

லுனுவில தென்னை ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்து தென்னோலை வாடல் நோய்க்கான மாற்று விருந்து வழங்கியை இனம் காணலும், கரும்பு ஆராய்ச்சி நிலையம் உட வளவுடன் இணைந்து வாடல் நோயை இனம்காணலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பட்டம் பெறுவோருக்கான ஆராய்ச்சி திட்டம்

- பட்டம் பெறும் 04 மாணவர்களுக்குரிய ஆராய்ச்சி திட்டங்களை நிலையம் வழங்கியது வயம்ப, சிறிஜயவர்த்தனபுர, கெலனிய பல்கலைகழக மாணவர்கள் 03 ஆராய்ச்சி கற்கைத் திட்டங்களை பூர்த்தி செய்துள்ளனர்.

2011 ஆம் ஆண்டுக்கான திட்டம்

பழமையான தாவர வைரசுவியல்

- உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட வெலிகம தென்னோலை வாடல் அன்ரிசீரத்தைப் பயன்படுத்தி தென்னை தவிர்ந்த விவசாயப் பயிர்களில் பைற்றோ பிளாஸ்மா நோய்களை இனம் காணல்.
- கெக்கரியின் பசும் புள்ளி மொசேக் வைரசுக்கான பொலிகுளோனல் அன்ரிசிரம் உற்பத்தி.
- தென்னோலை வாடல் நோய்க்கான விருந்து வழங்கி மட்டம் பற்றிய ஆய்வு. நிணநீரியல் அளவியல் முறை மூலம் அறிதல்
- வெலிகம தென்னோலை வாடல் நோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடிப்பதற்கு தேவையான அன்ரிசீரம் மூலத்தினை தேவையான அளவில் வைத்திருத்தல்
- உள்ளூரில் உற்பத்தி செய்யும் அந்தூரியம் வாடல் அன்ரிசீரம் வினைத்திறனை விசாரித்து உறுதிப்படுத்தல்

- தொடர்ச்சியாக நிணநீரியல் முறை மூலம் வைரசுக்களை அடையாளம் காணல்

மூலக்கூறு வைரசுவியல்

- உருளைக்கிழங்கு வைரசு X (PVX) உருளைக்கிழங்கு வைரசு Y (PVY) உருளைக்கிழங்கு இலைச்சுருளல் ஆகியவற்றை RT- PCR உடன் குறிப்பிட்ட அடிப்படையில் கண்டுபிடித்தல்
- கண்டுபிடிக்கப்பட்ட வைரசினை உறுதிப்படுத்த பரம்பரை அலகு ஒழுங்கை சோதித்தல்
- PCR அடிப்படையாகக் கொண்ட முறைகள் மூலம் தென்னோலை வாடல் நோய்க்கான விருந்து வழங்கி மட்டம் அளவைப் பற்றிய கற்கை.
- பப்பாசியில் வைரசு, வைறோயிட் நோய்களை அடையாளம் காணுதலும் அதற்கு தேவையான தொழில் நுட்பங்களை அபிவிருத்தி செய்தலும்.
- தோடை வர்க்கங்களின் வைரசு வைரோயிட்ஸ் நோய்களை RT- PCR முறையினால் அடையாளம் காணல் அத்துடன் கூட்டு Y RT- PCR அபிவிருத்தி செய்தல்.
- PCR முறையினூடான தொடர்ச்சியான வைரஸ் இனங்காணல்.

இழைய வளர்ப்பு

- இழைய வளர்ப்பு முறையில் வாழை அன்னாசி உற்பத்தி செய்தல்
- இழைய வளர்ப்பு முறைகள் மூலம் பப்பாசி பெருக்கம்
- கோழிக்கூட்டு வாழை வர்க்கத்தின் இழைய வளர்ப்புக்கு உகந்த நிலைமைகளைக் கண்டறிதல்
- மன்டறினின் இனம் 'இந்து' வில் பகுதி நுண்ஒட்டு
- இழைய வளர்ப்பின் மூலம் பெற்பப்பட்ட அன்னாசி MG3 வர்க்கத்தின் வளர்ச்சி விளைச்சல் இயல்புகளை வயலில் பரிசோதித்தல்
- அந்தூரியத்தில் நுண் இனப்பெருக்கம்

சடுதியாக பரவும் வைரசு நோயியல்

- பப்பாசியில் வளையப்புள்ளி நோய் வைரசுக்களின் சாத்தியமான காவிகளை உறுதிப்படுத்தல்
- வெப்ப பரிகரணம் செய்த இழைய வளர்ப்பு அன்னாசியில் வயல் மதிப்பீடும் அன்னாசி வாடல்வைரசு நோயினை அறிவதற்கும் ஆவன செய்தல்
- சேம்பிலும் வேறு அரோயிட்சிலும் டஸ்கின் மொசேக் வைரசு ஒழிப்பதற்கு வெப்ப பரிகரண கற்கை தொடர்கிறது.
- பப்பாசி வளையப்புள்ளி வைரசு நோயின் பரிபாலனம் இஞ்சியுடன் கலப்பு பயிர் செய்கையும் மூலிகை விசிறல் பரிகரணமும்
- புதிதாக வெளியிடப்பட்ட பப்பாசி வர்க்கத்தில் வைரசு நோய்களுக்கான வயல் மதிப்பீடு.
- இரசாயனம் அற்ற முறைகளில் (பூசணிப் பயிர்களில்) வைரசு பரிபாலனம்.

வேறு நோயாக்கும் அங்கிகள்

- மூலிகைப் பிரித்தெடுப்பை பாவிப்பதன் மூலம் கறிமிளகாய் அந்திரகஸ்னோஸ் கீரையில் சேர்க்கஸ்பேரா நோய்களினது கட்டுபாடு.
- வாழையில் பனாமா வாடலை கட்டுப்படுத்துவதற்கு பொருத்தமான இரசாயனமற்ற முறைகளின் அபிவிருத்தி.
- மரத்தில் உட்புகுத்திகள் மூலம் நோய் பீடைகளை கட்டுப்படுத்தலுக்கான சோதனைகள்.
- விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட பயிர்களின் நோய் மாதிரிகளில் நோயாக்கிகளை அடையாளம் காணுதலும் அதற்கான கட்டுபாட்டு முறைகள் பற்றிய அறிவுறுத்தல்களை வழங்குதலும்.
- அந்தூரியத்திலுள்ள பக்டீரிய வாடல் நோயினை அடையாளம் காண்பதற்கு உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்ட ELISA பொதியைப் பரீட்சித்தல்
- தெரிவு செய்யப்பட்ட பங்கசு, பக்டீரிய நோய்களின் நோயாக்க அளவை சோதித்தலும் கொக் அடிக்கோள் முறை மூலம் உறுதிப்படுத்தலும்

தொழில்நுட்பப் பரிமாற்றம்

- விழிப்பூட்டல், பயிற்சியளித்தல் ஆகிய நிகழ்ச்சி திட்டங்கள் தொடர்ந்தும் நடத்தப்படும்

  அலுவலர்களுக்கான பயிற்சி – 12

  விவசாயி, விவசாய அமைப்புக்களுக்கான பயிற்சி – 06

  பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சி – 06

  வேறு பயிற்சி – 04

- வயலுக்கு செல்லுதல் (வயல்கள், வீட்டுத் தோட்டங்கள்) – 150
- விவசாயிகளின் பிரச்சினைகளை அலுவலகத்தில் கையாளுதல் – 300
- பத்திரிகையில் பிரகரம் செய்தல் – 12
- துண்டுப்பிரசுரங்கள் – 06
- நகர பகுதியில் விவசாய நிகழ்ச்சி திட்டம் – 01
- விசேட நிகழ்ச்சி திட்டங்கள் மாதிரி கிராமம், மாதிரி துண்ட சமூக அடிப்படை விதை நடுகைப் பொருட்கள் உற்பத்தி நிகழ்ச்சி திட்டம்

அலுவலர்களின் நிலை

பதவி நிலை	*எண்ணிக்கை*
ஆராய்ச்சி அலுவலர்கள்	03
நிகழ்ச்சி திட்ட உதவியாளர்	09
விவசாய கண்காணிப்பு அலுவலர்	05
விவசாய போதனாசியர்கள்	10
ஆராய்ச்சி உதவியாளர்கள்	03
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	03
சாரதிகள்	02
தொழிலாளர்கள்	04
ஒப்பந்த தொழிலாளர்	11
களஞ்சிய பொறுப்பாளர்	01
காவலாளி	02
மொத்தம்	*53*

2.2.2 பழப்பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் (ப.ப.ஆ.அ.நி.), ஹொரணை

பழப்பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் பள்ளநாட்டு ஈரவலயத்தில் அமைக்கப்பட்டு பொருத்தமான தொழில் நுட்பங்களை அபிவிருத்தி செய்து நாட்டின் பழ உற்பத்தியை உயர்த்தும் பணிகளை நிர்வகிக்கின்றது. பள்ளநாட்டு ஈர வலயத்தில் பயிரிடும் பழப் பயிர்களின் உயர் தரம், அதிக விளைவு ஆகியவற்றை உத்தேசித்து அதற்குப் பின்வருவனவற்றில் முக்கியத்துவம் கொடுத்து தற்போதைய நிகழ்ச்சித் திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக உயர்த விளைவும் தரமும் கொண்ட வர்க்கங்கள், முன்னேற்றமான பயிர் பரிபாலன முறைகள், பயிர் பாதுகாப்பு தாவரப் போசணை, சேதனப் பழச்செய்கை, நடுகைப் பொருட்கள் உற்பத்தி என்பன அடங்குகின்றன. இந்த நிலையமானது இப்பிரதேச விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பள்ளநாட்டு ஈர வலயத்துக்குப் பொருத்தமான மரக்கறிகளில் ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகளை நடாத்துகின்றது.

பாதீடு

வருடாந்த ஒதுக்கீடும் செலவும் வெவ்வேறு தலைப்புகளின் கீழ், அட்டவணை 2.2.2.1 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 2.2.2.1: வருடாந்த பாதீட்டு திட்டம் – 2010 (ரூபா)

தலைப்பு	ஒதுக்கப்பட்ட தொகை	செலவு	செலவு%
மூலதனம்	1,610,000	1,648,596	102
மீண்டுவரும் செலவீனம்	6,924,234	5,985,115	86
திட்டங்கள்			
SL - USDA நிகழ்ச்சித் திட்டம்	380,000	339,624	89
சேதனப் பசளை உற்பத்தியும் பாவனையும்	1,740,000	761,807	44
ஒரே பயிர் ஒரே கிராமம் வேலைத்திட்டம்	391,000	104,876	27
பழப்பயிர் தலைவர் நிகழ்ச்சித் திட்டம்			
மங்குஸ்தீன்	165,000	157,340	95
பப்பாசி	162,000	91,502	56
சித்திரசு	90,000	107,860	120
பலா	90,000	92,355	103
வாழை	15,000	10,000	67
மொத்தம்	***11,567,234***	***9,299,078***	***80***

முன்னேற்றம்

பயிர் அபிவிருத்தி

வாழை மூலவுயிருருக்களின் மதிப்பீடு

மூன்று அடையாளம் காணப்பட்ட சுவந்தல் வாழையின் இனவிருத்தி மூலங்கள் விவசாயிகளின் வயலில் பரிசோதிக்கப்பட்டன. இவற்றின் வளர்ச்சி, விளைவு, நுகர்வோரின் ஏற்கும் தன்மை ஆகிய இயல்புகளில் HOSU 3 ஆனது "மில்லாவ சுவந்தல்" என்னும் பெயரில் ப.நா.ஈர வலயத்திற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

கொடிதோடை வர்க்கங்களின் அபிவிருத்தி

9 குடித்தொகையில் 7 சிறப்பியல்புகளுடைய இனவிருத்தி மூலங்கள் தெரிவு செய்யப்பட்டன. புதிய இனத்தை உற்பத்தி செய்வதற்கான பரிசோதனைகள் தொடர்கின்றன.

பப்பாசியின் கலப்பின வர்க்கங்களின் அபிவிருத்தி ரத்னா உட்பட 2 உள்ளூர் இனங்களின் மூலம் 4 கலப்பினங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. நிலையான சூழலுக்கு பொருத்தக் கூடிய தகைமைகளுக்கான பரிசோதனைகள் தொடர்கின்றன.

மாவில் கலப்பின வர்க்கங்களின் அபிவிருத்தி

2009 ல் 7 கலப்பின வர்க்கங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இவற்றுள் இவர்களுடைய பெற்றோர் தாவரங்களும் தோட்டங்களில் மதிப்பீடு செய்வதற்காக நாட்டப்பட்டுள்ளன. கலப்பின பிறப்பாக்கல் நிகழ்ச்சித் திட்டம் புதிய இனங்களை அபிவிருத்தி செய்வதற்காக தொடரப்படுகின்றது.

ரம்புட்டான்

விவசாயிகளின் தோட்டங்களில் காணப்பட்ட நாற்றுக்களின் குடித்தொகையில் 09 இனவிருத்தி மூலங்கள் தெரிவு செய்யப்பட்டன. மேலும் வளர்ச்சி, பழங்களின் இயல்புகள் மதிப்பிடப்படுகின்றன. அதிகமானவை ஒரே வகையான இயல்புகளைக் காட்டிய போதும் இலைகளின் இயல்புகளில் வேறுபாடுகள் காணப்பட்டன. இவற்றில் 2, குறிப்பிடக் கூடிய வகையில் சிறந்த சுவையை கொண்டிருந்தன.

36 வகையான "மல்வான ஸ்பெசல்" தாவரங்கள் 3 தாவர அடர்த்தியிலும் 2 விதமான கிளைவிடும் உயரங்களிலும் நாட்டப்பட்டன. தாவர இயல்புகளிலும், விளைவுகளிலும் வேறுபாடுகள் குறிப்பிடக் கூடிய வகையில் அவதானிக்கப்படவில்லை. மதிப்பீடுகள் மேலும் தொடர்கின்றன.

மா வர்க்கங்களின் பாதுகாப்பும் முன்னேற்றமும்

அன்னிய நாடுகளின் 10 மா வர்க்கங்களும் (கரி ஏழிகோல்ட், ஐர்வின், ஜோவெல்ஸ், கென்ற், முல்கோ, நம்டொக்மை, பொப்சமர், சென்சோன், சில்) உள்நாட்டு இனங்களும் சீமெந்து சாடிகளில் 2004 புரட்டாதியில் பாதுகாப்புக்காக ஸ்தாபிக்கப்பட்டன.

திவுலப்பிற்றிய என்னும் இடத்திலிருந்து பெறப்பட்ட பெரிய சிறந்த தரமுடைய முதலாவது சந்ததி தாவரங்கள் "வயல் பரம்பரை அலகுகள் வங்கி" யில் சேகரிக்கப்பட்டன. சில வர்க்கங்கள் குறைவான விளைவைக் காட்டியமை சீமெந்துச் சாடிகளில் இட வசதி போதாமையினாலும் அதிக தாவர அடர்த்தியினாலும் ஆகும். இத்தாவரங்கள் பொருத்தமான வேறு இடத்தில் மாற்றி நடவேண்டியது முக்கியமானதாகும்.

சிறந்த இயல்புகளைக் காட்டும் தூரியன் வர்க்கங்களின் தெரிவு

தூரியன் இனவிருத்தி மூலங்கள் 48 இலங்கையின் வெவ்வேறு பகுதிகளில் சேகரிக்கப்பட்டன. இவற்றுடன் 2 தாய்லாந்து இனவிருத்தி மூலங்களும் மதிப்பிடப்படுகின்றன. இவற்றில் 4 சிறந்த இயல்பை கொண்ட இனவிருத்தி மூலகங்கள் அடையாளம் காணப்பட்டன.

தெரிவு செய்யப்பட்ட இனவிருத்தி மூலங்களை கலப்பினம் செய்ததன் மூலம் 800 F_1 கலப்பினங்கள் பெறப்பட்டன. இவற்றின் மதிப்பீடு வ.ப.ஆ.அ.நி. வயல்களில் நடாத்தப்படுகிறது.

சிட்ரஸ் இன வர்க்கங்களின் முன்னேற்றம்

தற்போது 27 மந்தாரின், 11 ஹீன் நாரன், 09 பமெலோ இனவிருத்தி மூலங்கள் மதிப்பிடப்படுகின்றன. மூன்று நம்பிக்கையூட்டும் மந்தாரின் இனவிருத்தி மூலங்களும் (Hocr 19, Hocr 25, Hore 23) 8 அந்நிய நாட்டின் சித்திரசு வர்க்கங்கள் (ஜப்பானிலிருந்து 2007 இல் பெறப்பட்டனவும்) எகிமி/ இலங்கை விவசாய கைமாற்றல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தாவரங்கள் நடப்பட்டு மதிப்பீடுகள் நடாத்தப்படுகின்றன. இவ் மதிப்பீடுகள் எட்டு இடங்களில் வெவ்வேறு விவசாய வலயங்களில் நடாத்தப்படுகின்றன. இது எகிம் ஆலோசனைக்கு அமைவானது.

இந்து வர்க்கத்தின் 350 ஒட்டுத் தாவரங்கள் விவசாயிகட்கு வழங்கப்பட்டன. 15 தாய்த்தாவரங்கள் நடுகைப்பொருள் உற்பத்திக்காக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

விகார முறை இனப்பெருக்க நிகழ்ச்சித் திட்டம் 2007 ல் சித்திரசு இனங்களில் ஆரம்பிக்கப்பட்டன. சூழலுக்கு மிகவும் பொருந்தும் தன்மை கொண்டனவாகவும் அதிக விளைவை தரக்கூடிய வர்க்கங்களைப் பெறுவதற்காக நஸ்நரன் HORDI 24 இன் சிறிய அளவில் விதைகள் கதிர் வீச்சு பரிகரணம் செய்யப்பட்டது. 600 அரும்புகளும் 300 விதைகளும் ஒவ்வொரு வர்க்கத்திலும் கதிர் வீச்சுக்குட்படுத்தப்பட்டு மதிப்பீடு செய்யப்படுகின்றன. சிறிய அளவில் விரும்பக் கூடிய விகாரிகள் மேலும் மதிப்பீடு செய்வதற்கு அடையாளம் காணப்பட்டுள்ளன. மண்டறின் F கலப்பினங்கள் வ.ப.ஆ.அ. நிலையத்தில் மதிப்பிடப்படுகின்றன.

பாவனைக் குறைவான பழப் பயிர்களின் மூலவுயிருருவினை சேகரித்தல், பாதுகாத்தல், மதிப்பிடுதல்

303 இனவிருத்தி மூலங்கள் 37.3 ஹெக்டயர் பரப்பளவில் உள்ள பரம்பரை அலகு வங்கியில் 2002 ஆம் ஆண்டிலிருந்து ஸ்தாபிக்கும் பணி நடைபெறுகிறது. இந்த பரம்பரை அலகு வங்கியில் இனவிருத்தி மூலங்களான பெலி 24, சித்திரசு 47, லாவுழு 05, லொவி 04, பலா 32, வெரளு 17, உக்கிரச 22, கொரக்கா 33, கடுகுடா 13, டூரியன் 35, சப்போட்டா 17, அன்னமுன்னா 14, வக்ஸ் அப்பிள் 26, ஸ்ரோபரி 07, காட்டுக்கொய்யா 07 சேர்க்கப்பட்டுள்ளன. இயல்புகளை வகைப்படுத்தல் மதிப்பீடு செய்தல், சிறந்த இனங்களை அடையாளம் கண்டு சிபாரிசு செய்வதற்காக தொடர்கின்றன.

சப்போடில்லா

17 இனவிருத்தி மூலங்களின் நடப்பட்டன. குறைந்த தாவர வளர்ச்சி காணப்பட்டது. இனவிருத்தி மூலங்கள் HOS 6, HOS 14, HOS 15, HOS 16, HOS 18, HOS 19 ஆகியன வீரியத்துடன் ஏனைய இனவிருத்தி மூலங்களைவிட வளர்ந்தன. HOS 2, HOS 12, HOS 13 மிகச்சிறந்த தரம், விளைவு, பருமன் வடிவங்களை கொண்டிருந்தன. தாய்த் தாவரங்களுக்கும் முதலாவது சந்ததிக்கும் இடையில் குறிப்பிடக் கூடியளவில் வேறுபாடுகள் காணப்பட்டன.

வெரளு

களுத்துறை, கம்பஹா, இரத்தினபுரி மாவட்டங்களில் இனவிருத்தி மூலங்கள் சேகரிக்கப்பட்டன. பரம்பரை அலகு வங்கியில் ஒவ்வொரு இனவிருத்தி மூலங்களின் 03 ஒட்டுத் தாவரங்கள் நடப்பட்டன. இவற்றின் மதிப்பீடுகள் தொடர்கின்றன. வர்க்கங்களான HOW 3, 5, 7, 8, 9, 11,13 ஆகியன சிறப்பியல்புகளைக் காட்டுகின்றன. இவ்வர்க்கங்கள் வெளியிட சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

பலா

இனப்பெருக்கம் செய்யப்பட்ட சிறப்பியல்புகளுடைய மூலவுயிருருக்கள் சேகரிக்கப்பட்டு ஒவ்வொன்றி லும் 08 தாவரங்கள் பரம்பரை அலகு வங்கியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. 31 இனவிருத்தி மூலங்களில் HOJ 2, HOJ 3, HOJ 20 அதிக பழங்களை உற்பத்தி செய்தன. பழங்களின் பருமன், நிறம் வடிவங்களில் குறிப்பிடக் கூடிய வேறுபாடுகள் காணப்பட்டன.

பயிர் பாதுகாப்பு

கொய்யாவில் வேர்முடிச்சு விலாங்குப்புழு பற்றிய ஆராய்வு

கொய்யாவில் அதிக சேதத்தினை ஏற்படுத்திய காரணியை வ.ப.ஆ.அ.நி. ஹொரனை அவதானித்தது. அதனை வேர் முடிச்சு விலாங்குப்புழு என அடையாளம் கண்டது. இவ் விலாங்குப்புழுவின் கணம் மெலோய்டோகயின் ஆகும். உலகில் இது அதிகளவில் பரவி பல பயிர்களில் முக்கிய பிரச்சினை தரும் தாவர ஒட்டுண்ணி என பதிவு செய்யப்பட்டது.

ரம்புட்டானில் தூள்பூஞ்சணம் கட்டுப்படுத்த உயிர் – பீடைநாசினியின் அறிமுகம்

பாவிஸ்ரின், புலற் ஆகியன கார்பென்டாசிம் என்னும் உயிர்ப்பொருளை கொண்டுள்ளது. மழை காலங்களில் இது தூள்பூஞ்சணத்தை கட்டுப்படுத்தும். உலர் காலங்களில் பொலிகர், இரேசர், பாவிசிற்றின், சம்பியன், புலற், மங்கோசெப், சல்பர், டக்கோனில் ஆகிய பங்கசு நாசினிகள் தூள்பூஞ்சணத்தை கட்டுப்படுத்தின. அத்துடன் ஆரோக்கியமான பழங்களின் எண்ணிக்கையும் அதிகரித்தன.

தாவரத்திலிருந்து பிரித்தெடுத்த பொருட்களும் தூள்பூஞ்சணத்தை அதிக மழைக்காலங்களில் தொடுகை பங்கசு நாசினிகள் (சல்பர், குளோரொதலோனில், செப்பு, மங்கோசெப்) போன்று வினைத்திறனாக கட்டுப்படுத்தவில்லை.இருந்த போதிலும் வேப்பெண்ணை, சித்திரனெல்லா எண்ணை ஓரளவு ஆரோக்கியமான பழங்களின் உற்பத்தியை அதிகரித்தது. உலர்காலங்களில் வேப்பெண்ணையும், சித்திரனெல்லா எண்ணையினதும் பிரயோகிப்பு அதிக விளைவையும் ஆரோக்கியமான ரம்புட்டான் பழங்களையும் சல்பர் பரிகரணத்தை விட தந்தன.

ட்ரகனில் புதிய நோய்கள் பதியப்பட்டன

புதிய இரண்டு பங்கசு நோய்களான அந்தி ரக்நோஸ், தூள்பூஞ்சணம் நோய்க்காரணி முறையே கொலற்றோறிக்கம் *கிளோஸ்போ றியோ டெஸ்ஒயிடியம்* இனம் ஆகியன ட்ரகனில் பதியப்பட்டுள்ளன. அந்திரக்னோஸ் அறிகுறி களாக சிவப்பு மண்ணிற அடையாளங்களும், வெளிறிய வட்டங்களும் தண்டிலும் பழத்திலும் காணப்பட்டன. தூள்பூஞ்சணம் வெள்ளைப் புள்ளிகளாக தண்டுப்பகுதிகளில் காணப்பட்டன. ஒரு பற்றிரியா நோய் (காரணி *சான்தோமோனஸ் கம்பேஸ்ரில்*) பதியப்பட்டது.

மண் போசணை பரிபாலனம்

சித்திரசுவில் உட்பகுதி கடினமாதல்

சித்திரசு உடற்பகுதி கடினமாதல் அத னால் சதைப் பகுதியில் தக்கை உருவாதலும் பழ ச்சாறு குறைவடைதலும் ஏற்பட்டது. இத்தகைய நிலை போரன் குறைபாட்டால் உருவாகி இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. பாதிக்கப்படக் கூடிய வர்க்கங்கள் மட்டும் அவதானிக்கப்பட்டது. சித்தி ரசு வன்மை அடைதலை குறைக்க 0.25% போரக்ஸ் கலவை பூக்க முன் ஒரு தடவையும் பூத்தபின் 2 தர மும் ஒரு மாத இடைவெளியில் விசிற முடியுமானால் சித்திரசில் வன்மை அடைதலை குறைக்கலாம்.

கொடிதோடையில் தண்டு புடைப்படைதல்

கொடிதோடையில் கொடிகள் அதாவது தண்டு வீங்குதலும் வெடித்தலும் ஏற்பட்டு இதனால் புடைத்த பகுதியின் மேல் உள்ள பகுதி நலிவு அடைந்து இறந்தன. ஊதா தண்டு வர்க்கங்கள் ஓரளவு எதிர்ப்புடையன. போரக்ஸ் கலவை விசிறி இப்பிரச்சினையை குறைக்கலாம். பாதிக்கப்பட்ட வயலில் கல்சியம் அளவு குறைவாக இருந்தது. இவ் ஆய்வு தொடர்கிறது.

2008 ஆம் ஆண்டு ரம்புட்டானின் 3000 அரும்பு ஒட்டுக் கன்றுகள், 5000 வேர்த்தண்டுக் கன்றுகள், 2500 தூரியன் அரும்பொட்டுக் கன்றுகள், 1000 மா தண்டு ஒட்டுக் கன்றுகள் என்பன வளர்க்கப்பட்டன. மா, ரம்புட்டான், தூரியன், கொய்யா ஆகியவற் றின் தாய்க் கன்றுகள் பராமரிக்கப்பட்டு 1500 அன்னாசி தாய்க் கன்றுகள் நாட்டப்பட்டன. புதிய நாற்றுமேடைப் பகுதி விருத்தி செய்யப்பட்டது.

பயிர் பரிபாலனம்

மங்குஸ்ரின் – இரட்டை வேர் அடிக்கட்டை ஒட்டில் விளைவு மாற்றத்தை மதிப்பிடல்

மங்குஸ்ரீனின் (கார்சீனியா மங்கோற்சன) குறைந்தளவு விஸ்தீரணத்திற்கான காரணம் ஆர ம்பத்தில் குறைந்த வளர்ச்சி வீதமாகும்.வழமையான பதிய முறை இனப்பெருக்கத்தின் அறிமுகம் அதாவது ஒரு வேர் அடிக்கட்டை பதியமுறை இனப்பெருக்கம் ஓரளவு வெற்றியைத் தரக்கூடும் என நிருபித்தது. இரண்டு வேர் அடிக்கட்டை கிளை ஒட்டு பதிய வளர்ச்சி வீதத்தை கூட்டி உற்பத்தியைக் கூட்டலாம், என்னும் நோக்கத்தில் பரிசோதிக்கப்பட்டது. இம்முறை வெற்றியைத் தந்தது. தாவரங்கள் நன்றாக வளர்ந்தன. 3 வது வருடத்தில் பழங்கள் உருவாகின. 96 பழங்கள் ஒரு கிளை ஒட்டில் 3 வது வருடத்தில் உற்பத்தி செய்யப்பட்டது.

கொய்யா வர்க்கங்களில் கத்தரிப்பு மூலம் உற்பத்தி திறனை முன்னேற்றல் (ஹொரன சிவப்பு, ஹொரன வெள்ளை, புபது)

அறுவடையைத் தொடர்ந்து தண்டு கத்தரி த்தல் விரைவில் பூ அரும்புகள் உருவாக்க அதிகரி ப்பையும் திருப்தியான பழம் உருவாகுவதற்கான சாத்தியத்தையும் காட்டின. எல்லா வர்க்கங்களிலும் கத்தரிப்பு செய்யப்பட்டதில் பழத்தின் நிறை கத்தரி க்கப்படாததை விட கூடியதாக இருந்தது. பாபுடு வர்க்கம் கூடுதலான தூண்டலைக் காட்டியது. இதில் கத்தரிப்பு பரிகரணம் 14 தொ/ஹெ 2 வது வருடத்திலும் 16 தொ/ஹெ 3 வது வருடத்திலும் கொடுத்தன. அதாவது கொய்யாவின் உற் பத்தித்திறனை அரும்பு கத்தரித்தல் 15–30 cm முனை அரும்பிலிருந்து அறுவடையைத் தொடர்ந்து செய்யும் போது கூட்ட முடியும்.

ஹொரனையில் ட்ரகன் பழத்தின் அடைவு

ட்ரகன் பழத்தின் 4 வது அறுவடை வைகாசி மாதத்திலிருந்து புரட்டாதி 2009 ல் பதியப்பட்டது. அதிகூடிய அறுவடை ஆடி மாதத்தில் பெறப்பட்டது. ஒரு தாவரத்தின் சராசரி விளைவு 12.07 கி.கி. தற்போதைய பருவகாலத்தில் பெறப்பட்டது. ஒரு மாதத்தில் தோன்றிய பழங்களின் எண்ணிக்கை 6–50 வரை வேறுபட்டன. பழத்தின் நிறை 110 கிராம் – 830 கிராம் வரையும்; விளைவு ஒரு கொடியில் 3 கிலோ – 20 கிலோ வரையும் வேறுபட்டது.

பழப்பயிர்ச் செய்கையின் அபிவிருத்தியும் தொழிற்பாடும்

நடுகைப் பொருட்களின் உற்பத்தி

இந்த நிலையமானது 14,139 அரும்பு ஒட்டு த்தாவரங்களையும், 1344 கிளை ஒட்டுத் தாவர ங்களையும் 589 நாற்றுக்களையும் (றம்புட்டான், மா, தூரியன், பலா, ஆனைக்கொய்யா, ஸ்ரான் பழம், சப்போடில்லா, கார்சீனியா, எலுமிச்சை, மங்குஸ் ரீன், ஜம்பு, லொவி, அன்னமுன்னா, கொய்யா, தோடை, பெலி, வெரளு, மண்டறின், கொடிதோடை, ஸ்ரோபரி, கொய்யா) விற்று 2,516,865 ரூபா மொத்த லாபத்தைப் பெற்றது.

இழைய வளர்ப்பு

இழைய வளர்ப்பு மூலம் நடுகைப்பொருட்களின் உற்பத்தி சீனிக் கதலி, நேத்திராம்பழம், அம்பன், கப்பல் வாழைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சீனிக் கதலியிலும் நேத்ராம் பழத்திலும் அதிகளவு பெருக்கமடையும் வீதம் காணப்படும். அதேவேளை கப்பல் வாழையில் குறைவாக உள்ளது. கார்த்திகை 2010 வரை 563 நடுகைத் துண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டு அவற்றுள் 300 நடக்கூடிய பருவத்திலும் உள்ளன.

நிர்மாணிக்கப்பட்ட வீட்டுத்தோட்டங்களின் ஸ்தாபித்தல், பரிபாலனமும் அபிவிருத்தியும்

ஸ்தாபிக்கப்பட்ட வீட்டுத்தோட்டத்திற்கு 4369 விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்கள் வருகைத் தந்துள்ளனர்.

பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

பின்வரும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டன.

- இந்த நிலையத்துக்கு 41 பாடசாலைகளிலிருந்து 3759 பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் வருகை தந்துள்ளனர்.
- 145 பல்கலைக்கழக மாணவர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும் பயிற்சிகள் நடாத்தப்பட்டன.
- 135 தரைப்படை வீரர்களுக்கும், கடற்படை வீரர்களுக்கும் 06 விசேட பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
- பழப் பயிர்ச்செய்கை வீட்டுத்தோட்டம் பற்றிய 10 நிகழ்ச்சிகள் 320 பயிலுநர்களுக்கு நடாத்தப்பட்டன.
- 05 பயிற்சி நிகழ்ச்சிகள் தரமான கூட்டெரு உற்பத்தி தொடர்பாக நடைபெற்றது. நுண் அங்கிகைகள் கொண்ட சிறந்த கூட்டெரு பொதிகள் மங்குஸ்தீன், வாழை செய்வோருக்கு கண்டுபெலபொல, கும்புக்கா, கல்பிற்றிய, கொடிகமுவ ஆகிய இடங்களில் மாதிரிக் கிராமம் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக (394 பேர் பயனாளிகள்) வழங்கப்பட்டது.
- பொலன்னறுவ, கழுத்துற 02 கண்காட்சிகளில் பங்குபற்றியமை.
- 3986 துண்டுப் பிரசுரங்கள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கல்

- விவசாயிடமிருந்து பெறப்பட்ட 75 நோய் மாதிரிகளை விரிவாக்க உத்தியோகத்தர்கள் பரிசிலித்தனர். அவற்றை ஆய்வுகூடத்தில் சோதனை செய்து நோயை (அடையாளம் கண்டு நோயைக் கட்டுப்படுத்த) அதற்கான சிபாரிசுகளும் வழங்கப்பட்டன.
- ட்ரகன், தூரியன், றம்புட்டான், அன்னாசி, மரக்கறிப்பயிர்ச் செய்கை ஆகியனவற்றில் ஏற்பட்ட பூச்சி நோய் பிரச்சினைகள் 93 விவசாயிகளால் இவ்வருடம் வழங்கப்பட்டது. அவற்றிற்கான கட்டுப்பாட்டு முறைகள் கொடுக்கப்பட்டன.

கூட்டு ஊடகம்

05 தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் (மங்குஸ் ரீன், கொய்யா, தூரியன், டண்டறின், கூட்டெரு உற்பத்தி) 05 வானொலி நிகழ்ச்சிகள் (பழச்செய்கையும் பூச்சி நோய் கட்டுப்பாடும்) 07 பத்திரிகை பிரசுரங்களும் அலுவலர்களால் நடாத்தப்பட்டனர்.

வேறு செயல்கள்

உள்ளூர், கடல்கடந்த பயிற்சிகள்

- எஸ்.எம். நாகவத்த எம்.எஸ்சி உயிர் தொழில்நுட்பம் 2008/2010 அழுகாபாட், விவசாய நிலையம், அலகபாட் U.P, இந்தியா
- C.K.D வெல்லாள – உணவு விவசாய முயற்சிகளின் திட்டமிடலும் முன்னேற்றலும் 2010/2011 நுண், சிறிய நடுத்தரமான முயற்சிகளின் தேசிய நிலையம், இந்தியா
- U.N.De சில்வா – இழைய வளர்ப்பில் பயிற்சி; விஞ்ஞான பட்டதாரிகளின் மேற்படிப்பு நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டது.

2011 ஆம் ஆண்டுக்கான திட்டம்

பயிர் முன்னேற்றம்

- மூலவுயிருருக்களின் சேமிப்பு, மதிப்பிடல், ஆகிய செயல்களிலூடாக வாழை, ஆனைக் கொய்யாவின் தரத்தையும் விளைவையும் உயர்த்தும் அபிவிருத்தி முறைகள்
- பள்ளநாட்டு ஈரவலையத்தில் மா செய்கை பண்ணை மாவின் மூலவுயிருருக்களை ஈர வலயம் இடை வலையத்தில் சேகரித்தலும், தரமான கிர அம்ப, பெற்றி அம்பவினை தெரி தலும்
- கலப்பு பிறபாக்கல் மூலம் மாவில் அதிக விளைவும் தரமும் கொண்ட பழங்களின் அபிவிருத்தி
- F கலப்பினங்களின் மதிப்பீடு.

- அதிக தரமும் விளைவும் உடைய கொடித் தோடை, தோடை, மண்டரின் ஆகியவற்றை தெரிவு, கலப்பின விருத்தி ஊடாக உற்பத்தி செய்தல்.
- வெரளு, கடுகுடா பலா, சப்போட்டா ஆகியவற் றின் மூலவுயிருருக்களின் சேகரிப்பும் இயல்புகளை படித்தலும் மதிப்பிடலும்
- வில்வம் சேகரித்தல் ஸ்தாபித்தல், ஆராய்ச்சி.
- இயல்புகளை வகைப்படுத்தல் மதிப்பிடல் தெரிவு செய்தல் (விலவம் மூலவுயிருரு ஊடாக).
- பிரசித்தமடையாத பழங்களை பிரபல்யம் அடையச் செய்தல்
- இலாவுளு, லொவியின் மூலவுயிருருக்களின் சேகரிப்பு, சேமிப்பு மதிப்பீடு
- வக்ஸ் அப்பிள் (ஜம்பு), ஸ்ரோபரி, கொய்யா, அன்னமுண்ணா, காட்டுக் கொய்யாவின் மூலவுயிருருக்களை சேகரிப்பு சேமிப்பு மதிப்பீடு
- கொரக்கா உக்கிரசவின் மூலவுயிருருக்களின் சேகரிப்பு சேமிப்பு, மதிப்பீடு
- விவசாயின் தோட்டத்தில் உள்ள றம்புட்டான் மர த்திலிருந்து றம்புட்டான் இனங்களின் தெரிவு
- வ.ப.ஆ.அ.நி காணப்படும் றம்புட்டான் தாவரங்களை வகைப்படுத்தல் மதிப்பிடல் கிளைவிடப்பண்ணல்
- சிறந்த தூரியன் இனங்களை தெரிவு செய்து வர்த்தக ரீதியில் பயிரிடல்
- அதிக விளைவு, தரம் கொண்ட டுரியன் F_1 கலப்பினங்களை அபிவிருத்தி செய்தல்
- ப.நா.ஈர வலயத்திற்கு உகந்ததும் விரும்பிய இயல்புகள் கொண்டதுமான வெண்டி கலப்பின ங்களை விருத்தி செய்தல்
- வெரணிய மிளகாய் இனங்களின் அபிவிருத்தி

பயிர் பரிபாலனம்

- சிபாரிசு செய்த வாழையின் நுன் இனப் பெருக்கம்
- கொடிப் பரிபாலனம் மூலம் கொடிதோடையில் தண்டு புடைப்படைதலை கட்டுப்படுத்தல்
- ஜப்பானிலிருந்து அறிமுகமான மன்டரின் இனங்களினதும் அந்நிய நாட்டு தோடை இன ங்களினதும் மதிப்பீடு.
- வைரசு அற்ற சித்திரசு(தோடை, மன்ட ரின், தாய்த் தாவரங்கள்) தாவரங்களுக்கான பொதியினை விருத்தி செய்தல்.
- சித்திரசில் வெவ்வேறு விதமான பயிர் ஸ்தாபிக்கும் முறைகளையும், மரங்களை பேணும் முறைகளையும் சோதித்தல்
- சித்திரசுக்கான தே.இ.வ.சோ. (NCVT)
- மேலதிக வேர் தொகுதி வழங்கல் மூலம் மங்குஸ்ரின் ஒட்டுக்கள், நாற்றுக்களின் வளர்ச்சியினை அதிகரித்தல்
- கொய்யாவில் விலாங்குப் புழுவின் தொற் றுக்காக வேர் அடிக்கட்டைகளை மதிப்பிடல்
- சவர் சொப் (சீத்தாப்பழம்) உற்பத்தித் திறனை முன்னேற்ற பொருத்தமான கத்தரிப்பு பயிற்சி முறையை விருத்தி செய்தல்
- லொவியின் வெவ்வேறு பதிய இனபெருக்க முறைகள் பற்றிய ஆய்வு.
- ட்றகன் பழத்தின் தரத்திலும் விளைவிலும், வெட்டு துண்டங்களின் எண்ணிக்கை, பரும னின் தாக்கம்
- ரம்புட்டானின் தரத்திலும் விளைவிலும் தாவர அடர்த்தியினதும் கத்தரிப்பு உயரத்தினதும் தாக்கம்.
- தூரியன் ஒட்டுத் தாவரங்களின் பயிர் செய்கை பரிபாலனப் பொதிகளின் அபிவிருத்தி
- எலபட்டுவின் பயிர் பரிபாலனம் பற்றிய கற்கை

தாவரப் போசணையும் சேதனப் பழ உற்பத்தியும்

- அன்னாசி, கொடித் தோடை, மங்குஸ் ரின் கொய்யா ஆகிய பயிர்கட்கு இரசாயன பசளையையும் கூட்டெருவையும் சேர்த்து போடும் போது அவற்றின் தரத்திலும் விளைவிலும் ஏற்படும் தாக்கம் பற்றிய கற்கை.
- கொடித் தோடையில் தண்டு புடைப்பிற்கு N,P,K தவிர்ந்த. போசணை பொருட்களின் பாவனை பற்றிய கற்கை.
- மங்குஸ்ரினில் பிசின் போன்ற ஈரத்தன்மை பிரச்சினைக்கு N,P,K தவிர்ந்த. போசணை பொருட்களின் தாக்கம் பற்றிய ஆய்வு.
- கொய்யா பழங்களின் ஏற்படும் மேடுபள்ள பிரச்சினை பற்றிய கற்கை.
- பழக்கழிவுக் கூட்டெருவை மரத்தூள், எப்பாவல பொசுபேற்று மூலம் முன்னேற்றல்
- மண்புழுக் கூட்டெருவின் கலப்பிலும் வளர்ப்பிலும் வெவ்வேறு சேதனப் பொருட்களின் விளைவை சோதித்தல்
- கொடி தோடை, டரகன் ஆகியனவற்றுக்கு சேதனப் பசளை பொதியின் அபிவிருத்தி

- கம்பஹா மாவட்டத்தில் ரம்புட்டான்/அன்னாசி பயிரிடப்படும் மண்ணின் பரிபாலனம் பற்றிய தகவல்களை தெரிவிக்கும் முறையின் அபிவிருத்தி

தாவர நோயியல்

- வாழையிலும் பப்பாசியிலும் அறுவடைக்குப் பின்னான பங்கசு நோய்களைக் கட்டுப்படுத்தல்
- கொடித் தோடையில் பியுசாரியம் வாடலை பங்கசு நாசினிகள் மூலமும் உயிர் காரணிகளாலும் கட்டுப்படுத்தல்
- சித்திரசு பின்னோக்கிப்படல் நோயை கட்டுப்படுத்துவதற்கான பரிபாலன பொதிகள்
- ஆனைக் கொய்யா பயிர்செய்கையில் நோய் பரிபாலனப் பொதி
- குறைவான பாவனையில் உள்ள பழப் பயிர்களின் நோய்க் காரணிகளை அடையாளங் காணுதல்
- ரம்புட்டான் நாற்றுமேடையில் ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்தும் பரிபாலன முறைகள்
- தூரியனின் ஏற்படும் வேர் அழுகல் நோயை கட்டுப்படுத்தும் ட்றிச்சோடேர்மா வளர்ப்பு முறையை விருத்தி செய்தல்.

பூச்சியியல்

- அன்னாசியில் உறிஞ்சும் பூச்சிகளுக்கெதிரான தாவரப் பிரித்தெடுப்புக்களை மதிப்பிடுதல்
- இலையரிப்பானுக்கெதிரான இரசாயனங்களின் சோதனை
- கொய்யாவில் ஒட்டுண்ணி விலாங்குப் புழுக்களின் மதிப்பீடு
- உக்கிரச, வெரளூ, கடுகுடா ஆகியவற்றில் பூச்சிகளை அடையாளம் காணலும் அவற்றின் தாக்கத்தினை மதிப்பிடலும்

இழைய வளர்ப்பு

- வாழையின் நுண் இனப்பெருக்கம்
- மாவில் காய்களை பாதுகாத்தல்

அறுவடைக்கு முன்னும் பின்னும்

- நான்கு கொய்யா வர்க்கங்களின் அறுவடைக்குப் முன்னரும் பின்னரும் கொடுக்கும் பரிகரணத்தினால் பழங்களின் வாழ்க்கை காலத்தில் ஏற்படும் தாக்கத்தினை மதிப்பிடுதல்

சமூகப் பொருளியல்

- வ.ப.ஆ.அ.நி. 2011ல் தெரிவிக்க வேண்டிய அறிக்கைகளின் தயாரிப்பு
- பழங்கள் பற்றிய சமுக பொருளாதார தகவல்களை அடங்கிய தகவற் பேழை அபிவிருத்தி

அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்கள்

- வீட்டுத்தோட்டங்கள் பராமரிப்பு, விவசாயிகளுக்கான பயிற்சி, வீட்டுத் தோட்டம் பற்றி பாடசாலை மாணவர்கட்கு பயிற்சி ஆகியவற்றின் அபிவிருத்தி

அலுவலர்களின் பட்டியல்

பதவி நிலை	எண்ணிக்கை
பணிப்பாளர் ஆராய்ச்சி (பதில்)	01
ஆராய்ச்சி அலுவலர்கள்	11
பொருளாதார உதவியாளர்	01
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்	06
அபிவிருத்தி உதவியாளர்	02
விவசாய ஆராய்ச்சியும் உற்பத்தி திறனும் அலுவலர்கர்	01
ஆராய்ச்சி உதவியாளர்கள்	08
விவசாய போதனாசிரியர்	15
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	07
உதவி சேவைகள்	
சாரதி	03
ஆய்வு கூட உப உதவியாளர்கள்	05
களஞ்சியப் பொறுப்பாளர்	01
உழவு இயந்திரம் கையாளுபவர்	01
காவலாளி	01
ஒட்டுபவர்	01
நிரந்தர தொழிலாளர்கள்	03
தொழிலாளிகள்	63
மொத்தம்	125

2.2.3 உணவு ஆராய்ச்சி பிரிவு கன்னொறுவை (FRU)

இந்த பிரிவுக்கு கொடுக்கப்பட்ட முக்கிய கடமைகளாவன; அறுவடைக்குப்பிந்திய தொழில்நுட்பம், உணவுப் பொருட்களை முன்னேற்றல், பயிர் முன்னேற்ற நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து பெறப்படும் மாதிரிகளின் தரத்தை மதிப்பிடுதல் போன்ற ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதுடன், தொழில்நுட்பங்களை பரவச் செய்யும் செயற்பாடுகளில் ஈடுபடுவதும் ஆகும். அத்துடன் DOA இன் ஏனைய ஆராய்ச்சி நிலையங்களுடனும், மாகாண சபையின் விவசாயப் பகுதியுடனும், ஏனைய அரச, அரச சார்பற்ற, தனியார் நிறுவனங்களுடனும் தொழில்நுட்ப அபிவிருத்தியிலும், அதைப் பரப்புவதிலும் கூட்டாகச் சேர்ந்து செயற்படுவதும் ஆகும். இதனை விட பட்டதாரி மாணவர்களுக்கும், பட்டப்பின்படிப்பு மாணவர்களுக்கும் அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம், பதனிடும் தொழில்நுட்பம் ஆகியவற்றின் பல்வேறு விடயங்களில் ஆராய்ச்சி செய்வதற்கு தேவையான வசதிகளையும், வழிக்காட்டலையும் வழங்குகின்றது.

பாதீடு

2010ம் ஆண்டில் வெவ்வேறு வருமானத் தலைப்புக்களிலும் வெவ்வேறு செயற்றிட்டங்களின் மூலமும் பெறப்பட்ட நிதி ஒதுக்கீடும், செலவுத் தொகையும் அட்டவணை 2.2.3.1 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.2.3.1 : வருடாந்த பாதீடு -2010 (ரூபா)

வருமான தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு%
மூலதனம்	218,250	180,954	50
மீண்டும்வரும் செலவு	1,585,364	1,268,307	80
செயற்திட்டங்கள்			
கிழங்கு வகைகளை பதனிடுதலும் பாதுகாத்தலும் (AWRN)	250,000	210,599	84
பயிர் தலைவர்- மா (AWRN)	501,000	228,391	46
பலாப் பழங்களை பதனிடுதல் (AWRN)	125,000	121,125	97
தக்காளியை பதனிடுதல் (AWRN)	44,000	40,879	93
விவசாயிகளின் வருமானத்தைக் கூட்ட பழங்களை பதனிடும் தொழிற்சாலையை நிறுவுதல்	3,600,000	255,664	7
ரம்புட்டானை போத்தலில் அடைத்தல்	45,000	44,486	99
மொத்தம்	***6,368,564***	***2,278,333***	***36***

முன்னேற்றம்
ஆராய்ச்சி

பப்பாசியில் அறுவடைக்குப் பிந்திய நோய்கள் ஒரு பெரிய பிரச்சினையாகும். எனவே அறுவடைக்குப் பின் இரசாயனங்கள் பாவிக்கப்படுவதனால் அதிகமான பங்கசுநாசினி மீதிகள் ஏற்படுகின்றன. தோட்டத்தை சுகாதாரமாக வைத்திருத்தலும், அறுவடைக்கு முன் மாதமொருமுறை பங்கசு நாசினிகளை விசிறுவது ரெட்லேடி பழங்களின் தோல் 25-30% மஞ்சள் நிறமாவிருக்கும் பொழுது அறுவடை செய்வது, தனித்தனியாக சுற்றப்பட்ட பழங்களை பிளாஸ்ரிக் பெட்டிகளில் கொண்டு செல்வது போன்ற செயற்பாடுகள் மூலம் பங்கசு அழுகல் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்தது. இந்ததொழில்நுட்பம் பப்பாசிச் செய்கையாளர்களுக்கு அளிக்கப்பட்டது.

- டொம் EJC (Tom EJC) மாம்பழங்கள் சிறந்த தரமான பைகளில் (தாய்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை) அடைக்கப்பட்டன. இவற்றில் அடைப்பதன் மூலம் பௌதிக இரசாயன குணாதிசயங்களின் அளவீடுகளில் மாற்றம் ஏற்படவில்லை.

- ஒரு ஆரோக்கியமான பழவகை உணவு; கித்துள் மாவையும், விளாம் பழத்தையும் பாவித்து தயாரிக்கப்பட்டது. குளிர்சாதனப் பெட்டியில் சேமிக்கும் பொழுது இந்த உணவுப் பொருளானது 14 நாட்களுக்கும் கூடிய வாழ்க்கை காலத்தைக் கொண்டிருந்தது.
- பாகலை மென்மையாக்குவதற்காக அவிக்கும் பொழுது எதிர் கிளைசீமிக் காரணியானது குறைவது கண்டுபிடிக்கப்பட்டது. எண்ணெயில் நன்றாகப் பொரிக்கும் பொழுது இது மேலும் குறைந்தது. எனவே அதிகூடுதலான எதிர் கிளை சீமிக் விளைவைப் பெறுவதற்கு பாகலை பச்சையாக உண்ண வேண்டும்.
- உற்பத்திப் பொருளின் கசப்புத் தன்மையைக் குறைப்பதற்காக 40% தக்காளிப் பசையை 60% பாகல் பசையுடன் கலந்த போது கசப்பு தன்மை குறைந்த பசையொன்று உருவாக்கப்பட்டது.
- பேக்கரியிலும்,இனிப்புப் பண்ட தொழிற் சாலையிலும் பாவிக்கக்கூடிய, பிரசாரணத்தினால் நீரகற்றப்பட்ட பூசணி சிறுதுண்டுகள் (சீவல்கள்) உற்பத்தி செய்யப்பட்டன.
- சேமித்து வைக்கப்படும் பலா மாவில் உருவாகும் கசப்புத்தன்மையை அகற்றும் தொழில் நுட்பமானது பூர்த்தி செய்யப்பட்டதுடன் 2010ம் ஆண்டில் தொழில்நுட்பத்தை வெளியிடும் செயற்குழு கூட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.
- மரவள்ளிக் கிழங்குகளை கொண்டு செல்லும் போதும், கையாளும் பொழுதும் ஏற்படும் பௌதிக பாதிப்புக்களை குறைப்பதற்கும், சேமிக்கும் காலத்தை அனுகூலமான அளவிற்கு கூட்டுவதற்கும் பிளாஸ்ரிக் கூடைகளின் பாவனை சிறந்ததாக அறியப்பட்டது.

அபிவிருத்தி நடவடிக்கைகள்

- கொரிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் பதனிடும் தொழிற்சாலையொன்றை நிறுவுவதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை முன்னேற்றும் செயற்றிட்டமொன்று கல்கிரியாகம விலுள்ள ரஜரட்ட விவசாயப்பண்ணையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஒரு சிறிய அளவிலான பதனிடும் தொழிற்சாலையொன்று பயிற்றுவிக்கும் நோக்கத்திற்காக குண்டசாலையில் நிறுவப்படவுள்ளது.
- பயிர் தலைவர் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 500 ஒட்டப்பட்ட கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டதுடன் 100 ஏக்கர் மாம்பழத் தோட்டம் புனருத்தாரணம் செய்யப்பட்டது.
- 'ரசபோஷ' என்னும் பெயரில், பாய்ச்சப்பட்ட (Extruded) பொருள் உற்பத்தி செய்யப்பட்டது. இந்த தொழில்நுட்பமானது இலங்கை பிஸ்கட் லிமிடட் ற்கு வழங்கப்படவுள்ளது.
- பாய்ச்சும் மெஷின் பாவித்து சூப் கலவை தயாரிக்கும் தொழில்நுட்பம் 'றுகுணு' உணவுப் பொருட்களுக்கு வழங்கப்படவுள்ளது.
- பேராதனை, சப்ரகமுவ, ஊவாவெலஸ்ஸ ஜயவர்த்தனபுர பல்கலைகழகங்களின் 11 பட்டதாரி மாணவர்கள் அவர்களுடைய 3-4 மாத ஆராய்ச்சி வேலையை முடிக்கும் விதத்தில் பயிற்றுவிக்கப்பட்டனர்.
- பட்டப்பின்படிப்பு கைத்தொழில் கல்வி நிறுவகத்தின் மூன்று மாணவர்கள் தமது ஆய்வுக் கட்டுரை சம்பந்தமான ஆராய்ச்சிகளை நிறைவு செய்தனர்.
- குண்டசாலை விவசாய கல்லூரியிலிருந்தும் அகுவைனாஸ் கல்லூரியிலிருந்தும் 5 டிப்ளோமா மாணவர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்

தொழில்நுட்ப பரிமாற்றம்

- தக்காளி, கிழங்கு வகைகள், பலா என்பவற்றிற்கான சிறியளவிலான பதனிடும் தொழில்நுட்பங்கள் பயிற்சி வகுப்புக்கள் மூலம் முறையே 124,518,414 பேர்களுக்கு வழங்கப்பட்டது.
- வத்தளையில் 'கின்துரி' உற்பத்தியில் மத்திய அளவிலான பதனிடும் கருவியை உபயோகித்து குறைந்த அளவில் மரக்கறி களைப் பதனிடும் செயன்முறையில் ஏறக்குறைய 50 பேர் பயிற்றுவிக்கப்பட்டனர்.
- மத்திய அளவில் உறையிட்டு கடலையைப் பதனிடும் கருவியைப் பாவித்து வெண்ணெய், வாசனைத் திரவியங்கள், சீனி என்பனவற்றைச் சேர்த்து சிற்றுண்டி தயாரிக்கும் தொழில்நுட்பம் தெஹிவளை, களுபோவிலவில் உள்ள 'Koke snacks' இற்கு அறிமுகம் செய்யப்பட்டது.
- FRU விலுள்ள வசதிகளைப் பாவித்து உருளைவடிவ பாத்திரத்தில் உலர்த்தப்பட்ட இலைக்கஞ்சி கலவையை தயாரிப்பதற்கு தனியார் துறையினருக்கு அனுமதி வழங்கப்பட்டது.
- 'மிஸ்ற்' பழப் பொருட்கள் நிறுவனத்திற்கு பழச்சாறு, பழப் பானம், உடனடிப் பானங்கள் தயாரிக்கும் தொழில்நுட்பம் வழங்கப்பட்டது.
- மாகோல, கிரிபத்கொடவிலுள்ள 'விஜயவர்த்தன பேக்கர்ஸ்' இற்கு அரிசி சார்ந்த உணவுப் பொருட்களை தயாரிக்கும் தொழில்நுட்பம் வழங்கப்பட்டது.

- தனியார் நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட உடனடிபானங்கள், சட்னி, பழப்பானம், ஜாம், உலர்த்தப்பட்ட மரக்கறிகள், பசைகள், பிரெஞ்சு பிரைஸ் (வறுவல்) என்பனவற்றின் மாதிரிகளை தர நிர்ணயத்திற்காகப் பகுப்பாய்வு செய்வதற்கு ஆய்வுகூட வசதிகள் வழங்கப்பட்டன.
- தக்காளி சோஸ் தயாரிப்பதற்காக பூசணி மாச்சத்தினை சேர்த்துக் கொள்ளல்
- வாட்டப்பட்ட பூசணி விதைகளை விருத்தி செய்வதற்காக வாடல் அளவீடுகள் பற்றி ஆராய்தல்
- முட்டை, பால் ஆகியவற்றைச் சேர்ப்பதன் மூலம் அரிசியை அடிப்படையாகக் கொண்ட பழ புடினுக்கு பெறுமதி சேர்த்தல்
- மரக்கறிப் பையுடன் கூடிய பெறுமதி சேர்க்கப்பட்ட உடனடி அரிசிப் பொதியினை விருத்தி செய்தல்.
- இனவிருத்தியாளர்களின் வேண்டுதலுக்கிணங்க வாடாத, புதிய உற்பத்திப் பொருட்கள் பற்றிய 35 சுற்றறிக்கைகள் விடப்பட்டன.
- பதனிடப்பட்ட பொருட்களுக்கான 55 அறிக்கைகள் வெளியிடப்பட்டன.
- தனியார் துறையினர் பங்கேற்ற மரக்கறி பழவகை பதனிடுதல், அரிசி சார்ந்த உற்பத்திப் பொருட்கள் என்பன பற்றிய இரண்டு பயிற்சி வகுப்புக்கள் 'விவசாய வர்த்தக அபிவிருத்தியும், தகவல் சேவையும்' (AGEDIS) நிறுவனத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டன.
- 32 தனியார் நிறுவனங்கள், ஆசிரியர்கள், விவசாய போதனாசிரியர்கள், டிப்ளோமா, பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோருக்கு மரக்கறி, பழவகைகளில் அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டன.
- உயர்ந்த தரமுள்ள சர்க்கரைப்பாகு தயாரிப்பது பற்றியும், பதனிடுதல் பற்றியும், பூசணியை நீரகற்றல் மூலம் பாதுகாத்தல் (பேணுதல்) பற்றியும் துண்டுப் பிரசுரங்கள் தயாரிக்கப்பட்டன.
- மரவள்ளிக்கு பெறுமதி சேர்த்தல் பற்றியும், பூசணி சார்ந்த உணவுப் பொருட்கள் பற்றியும், சேமிக்கப்படும் பலாக்காயில் உண்டாகும் கசப்புத்தன்மையை அகற்றும் தொழில்நுட்பம் பற்றியும், முளைக்க வைக்கப்பட்ட பயறு உணவுப் பொருட்கள் பற்றியும், போசணை அதிகரிக்கப்பட்ட பேக்கரி பொருட்கள் பற்றியும் 5 கட்டுரைகள் 'சௌபாக்யா' "விவசாயச் செய்திகள்" "கர்மாந்த" சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்டன.

2011 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள்

- பொட்டாசியம் அளவை முன்னேற்றுவதன் மூலம் மாவில் நோய்களை கட்டுப்படுத்தல்
- அறுவடைக்கு முந்திய பரிபாலன முறைகள் மூலம் பப்பாசியின் தரத்தை முன்னேற்றுதலும், அறுவடைக்குப் பிந்திய நோய்களைக் கட்டுப்படுத்தலும்.
- பலா, வெரளு என்பவற்றிலுள்ள எதிர் ஒக்சிடன்ற் செயற்பாடுகளை தீர்மானித்தல்
- மிளகாயில் (Jalapeno- ஜலபெனோ) உணவுப் பொருள் உற்பத்தி
- உடனடியாகப் பரிமாறக்கூடிய மங்குஸ்தீன் சாற்றை உற்பத்தி செய்யும் முறையை உருவாக்கல்
- அரிசிமா கலந்த கேக் கலவையை உருவாக்கல்
- கோதுமைமா , அரிசிமா இரண்டையும் கொண்டு கலவை மாவை உருவாக்கல்
- இஞ்சியை பதனிடும் முறைகள்
- சமப்படுத்தப்பட்ட NPK இடுவதன் மூலம் அன்னாசிப் பழத்தின் தரத்தை கூட்டுதலும் உள்ளக மண்ணிறமாவதை குறைத்தலும்
- அறுவடைக்கு பிந்திய தரத்தை இழைய வளர்ப்பு வாழையில் கூட்டுவதற்கான அறுவடைக்கு முந்திய பரிபாலன முறைகளை உருவாக்கல்

அலுவலர்களின் நிரல்

பதவி நிலை	*எண்ணிக்கை*
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	03
விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர்	03
நிகழ்ச்சி திட்ட உதவியாளர்	01
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	02
விவசாயப் போதனாசிரியர்	04
ஆராய்ச்சி உதவியாளர்	02
ஆராய்ச்சி உப உதவியாளர்	02
சாரதி	02
இயந்திரம் இயக்குநர்	01
மின்சார வேலைகளை செய்பவர்	01
சுகாதாரத் தொழிலாளி	01
பயிற்றுவிக்கப்படாத தொழிலாளி	04
தொழிலாளி (ஒப்பந்த)	06
காவலாளி	02
மொத்தம்	*28*

2.2.4 பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் – பண்டாரவளை

இந்நிலையமானது கடல் மட்டத்தில் இருந்து 1400m உயரத்தில் அமைந்துள்ளது. ஊவா மாகாணத்திற்கும் சப்பிரகமுவ மாகாணத்தின் பலாங்கொட பிரதேசத்திற்கும் பொருத்தமான விவசாய தொழில் நுட்பங்களை உருவாக்குவது இந்நிலையத்தின் முக்கிய பணியாகும். இந்நிலையத்தின் கீழ் இரு உப ஆராய்ச்சி நிலையங்களும் (ரகங்கல, மதுரகெட்டிய) இரு ஆராய்ச்சிப் பண்ணைகளும் உள்ளன. (பிபிலை, மதுரகெட்டிய) இவ்வாராய்ச்சி நிலையமானது IU_2 IM_2, IM_3, WM_3, IL_2, WM_3 ஆகிய விவசாய சூழல் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளதுடன் தமது ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக பல அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. பேரிக்காய், தோடை, இனப்பயிர், ஆனைக்கொய்யா, மா, உருளைக்கிழங்கு போன்ற பயிர்களின் தரம் வாய்ந்த நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்து, விநியோகிப்பது போன்ற அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

பாதீடு

வெவ்வேறு தலைப்புக்களின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகையும் செலவீனமும் கீழே தரப்பட்டள்ளது

அட்டவணை 2.2.4.1 வருடாந்தப் பாதீடு 2010

தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு%
மூலதனம்	7,229,561	1,287,812	18
நடைமுறை செலவுகள்	5,183,366	4,919,826	95
பயிர் தலைவர் போஞ்சி	500,000	428,616	86
உருளைக்கிழங்கு	240,000	200,854	83
தோடை	270,000	205,343	76
சேதனப் பசளை	2,680,000	2,159,159	82
ஒரு பயிர் ஒரு கிராமம்	590,000	479,912	81
கலப்புப் பிறப்பாக்க விதை உற்பத்தி	25,000	16,760	67
மொத்தம்	***16,657,972***	***9,697,680***	***58***

முன்னேற்றம்

எமது ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகள் மரக்கறிப் பயிர்கள் (போஞ்சி, கரட், கோவா, தக்காளி) உருளைக் கிழங்கு, பழப்பயிர்கள் (இனிப்புத் தோடை, நாரத்தங்காய், அப்பிள், பியர்ஸ், பீச், ஸ்ரோபெரி) பூப் பயிர்கள் (ரோஜா, ஜேர்பரா, கிறிசாந்தியமம், அந்தூரியம், அஸ்ர்,மடோனா,லில்லி,கானேஷன், சுப்பர் டெஸ்சி) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, 5 முக்கிய பிரிவுகளின் கீழ் பயிராக்கவியல்,பயிர் பாதுகாப்பு, பூங்கனியல் இழைய வளர்ப்பு ஆகிய பிரிவுகளின் கீழ் நடாத்தப்பட்டது.

பயிர் மேம்பாடு

- விதை உற்பத்தி செய்யக்கூடிய கரட் இனமான லங்கா கரட் உள்ளூர் பயிர்ச் செய்கைக்காக சிபாரிசு செய்யப்பட்டது.
- NCVT ஆராய்ச்சிகளுக்காக 3 கொடிப்போஞ்சி இனங்களும் 6 மரப்போஞ்சி இனங்களும் அடையாளம் காணப்பட்டன.
- கறிமிளகாய், கத்தரி, தக்காளி என்பவற்றிற்கான NCVT ஆராய்ச்சிகள் நடாத்தப்பட்டன.
- உள்ளூர் மற்றும் ஜப்பான் தோடை நாரத்காய் மண்ரின் இனங்கள் RARDC பண்டாரவளை, ARS மதுர கெட்டிய, ARS ரகங்கல ஆகிய நிலையங்களில் பரீட்சிக்கப்படுகின்றன.
- அப்பிள், பீச், பேரிக்காய், சீனக்கொய்யா, நெக்டரின், ஆனைக்கொய்யா, கரம்போலா ஆகிய பயிர்களின் தாய் மரங்கள் RARDC பண்டாரவளையில் பாதுகாக்கப்படுகின்றன.

பயிராக்கவியல்

- உருளைக் கிழங்குடன், சோளம் கலப்புப் பயிராகச் செய்யப்பட்ட போது அதிக விதை உருளைக் கிழங்கை பெறக் கூடியதாக இருந்தது. இப்பயிரச் செய்கைக்காக, சோளமானது, உருளைக் கிழங்குடன் அல்லது இரண்டு வாரம் முந்தி நடப்படலாம்.
- UCI Z ல் கறிமிளகாய் நடுவதற்கான பொருத்தமான இடைவெளி 10X30 செ.மீ ஆக இருத்தல் வேண்டும்.

பயிர் பாதுகாப்பு

- தக்காளி பயிரில் ஏற்படும் பின்வெளிறல் நோயைக் கட்டுப்படுத்துவதற்காக புளுசினாம் எனப்படும், மங்கோ செப்பை விடச் சிறந்த, பங்கசு நாசினி ஒன்று சிபாரிசு செய்யப்பட்டது.
- Uromyces appendiculatus இனைக் கட்டுப்படுத்துவதற்காக Azoxystrobin பரிசோதிக்கப்பட்ட போது சிபாரிசு செய்யப்பட்ட பூஞ்சண நாசினியான குளோரோதலனிலை ஒத்த கட்டுப் பாட்டைக் கொடுத்தது.
- Tebuconazole ன் இரு கலவைகள் (EC, EW) போஞ்சி துரு நோயை மிகச் சிறப்பாகக் கட்டுப்படுத்தியது.
- Imidechloprid (20%SL) , Abemechin (1.89 g/l EC) Fipronil (58% SL) ஆகிய பூச்சி நாசினிகள் 14 நாள் இடைவெளியில் விசிறப்பட்ட போது கறிமிளகாயில் பனிப் பூச்சிகளை சிறப்பாகக் கட்டுப்படுத்தியது. மேற்கூறிய பூச்சி நாசினிகள் எந்நாட்டு தயாரிப்பாக இருந்தாலும் பூச்சிக் கட்டுப்பாட்டில் வித்தியாசம் இருக்கவில்லை.
- Nimbecidine 1% EC இணை 20 ml / 10l நீரில் கலந்து தெளித்தபோது chlorfluazuron போன்று பூச்சிக் கட்டுப்பாட்டை கொடுத்ததுடன் வேப்பம் விதைச் சாற்றை விட அதிக கட்டுப்பாட்டையும் விளைச்சலையும் கொடுத்தது.
- Bistritluron 10% EC எனப்படும் பூச்சிக் கொல்லியானது கோவா இலையரி புழுக்களை சிறப்பாகக் கட்டுப்படுத்துவதாகக் கண்டறி யப்பட்டது.

பூங்கனியியல்

- $CaCl_2$ அமுக்க வடித்தெடுப்பு (250 mm Hg for 120 min) 4% 6% செறிவுகளில் ஆனைக் கொய்யாவில் பரிகரித்த போது பழுத்தல் பிந்தியது.

இழைய வளர்ப்பு

- ஸ்ரோபெரி இனமான சண்டலரின் இலைத் துண்டங்களில் தக்கைக் கலங்கள் உருவாக்குவதற் காக 0.5mg /l BAP ம் 0.75mg/ l NAA ம் சேர்க்கப்பட்ட MS வளர்ப்பூடகம் வெற்றி கரமாகப் பயன்படுத்தப்பட்டது. அத்துடன் அதிகளவு தண்டுகள் உருவாவது 0.1mg /l TDZ சேர்க்கப்பட்ட MS வளர்ப்பூடகத்திலாகும்.

விஷேட செயற்திட்டங்கள்

பயிர் தலைவர்

- அதிக தரம் வாய்ந்த விதை உருளைக் கிழங்குகள், இழைய வளர்ப்புத் தொழில்நுட்பத்தின் மூலமாக தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது.

ஒரு பயிர் ஒரு கிராமம்

- ஒட்டு முறை மூலம் பெறப்பட்ட பேரிக்காய் கன்றுகள் 400ம் தோடங்கன்றுகள் 500ம் பகிர்ந்தளிக்கப்பட்டன. RARDC, பண்டார வளையில் 600 பேரிக்காய் மரங்களைக் கொண்ட பழத் தோட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது

கூட்டெரு தயாரித்தலும், பாவனையும்

- சித்திரசு தக்காளி, போஞ்சி ஆகிய பயிர் களுக்கு IPNS பொதி உருவாக்கும முயற்சி எடுக்கப்பட்டது
- 1/2 ஏக்கர் நிலத்தில், IPNS செய்து காட்டல் மரக்கறி துண்டம் உருவாக்ககப்பட்டதுடன் 17.5 தொன் கூட்டெரு தயாரிக்கப்பட்டது.

சேவைகள்

உற்பத்தியாளர் விதை உற்பத்தி

உற்பத்தியாளர் விதைகள் பின்வரும் அளவுகளில் உற்பத்தி செய்யப்பட்டன.

கொடி போஞ்சி

கெப்பட்டிபொல நீலம்	17 Kg
லங்கா பட்டர்	190 Kg
KWG	65 Kg
மர போஞ்சி விதை	14.5 Kg

மண் பரிசோதனை செய்து உரம் சிபாரிசு செய்தல்

- 190 மண் மாதரிகள் பரிசோதிக்கப்பட்டு உர சிபாரிசு செய்யப்பட்டது.

தொழில்நுட்பப் பரிவர்த்தனை

RARDC, பண்டாரவளையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் ஊவா, சப்ரகமுவ மாகாணங்களில் 04 PTWG கூட்டங்களில் கலந்து கொண்டார்கள். அவர்களால் விரி வாக்க உத்தியோகத்தர்கட்கு சேவைக்கால பயிற்சி வழங்கப்பட்டது.

- பேரிக்காய், உருளைக் கிழங்கு, ஆனைக்கொய்யா பயிர்ச் செய்கையில் பயிற்சி வழங்கப்பட்டது. சில பயிற்சிகள் விவசாயிகளின் தோட்டங்களில் வழங்கப்பட்டது.
- மரக்கறி, பூ, பழம் உருளைக் கிழங்கு பயிர்ச் செய்கை பண்ணும் விவசாயிகளுக்கு, நோய் பீடைத் தாக்கங்களை முகாமைத்துவம் செய்வது பற்றிய அறிவுரை வழங்கப்பபட்டது.
- 958 பாடசாலை மாணவர்களுக்கும் 117 விவசாயிகளுக்கும் பயிற்சிகள் வழங்க ப்பட்டது.

- ஒரு இளம்கலைமானி பட்டதாரி தனது இறுதியாண்டு செயற்றிட்டத்தையும் டிப்ளோமா மாணவர் ஒருவர் செய்முறைப் பயிற்சியையும் நிறைவு செய்தனர்
- விவசாய மேம்பாட்டு, வீட்டுத் தோட்ட செயல் திட்டத்தின் கீழ் 500க்கும் மேலான வீட்டுத் தோட்டங்களுக்கு நேரடியாகச் சென்று விவசாயிகளுக்கும், மாணவர்களுக்கும் வீட்டுத் தோட்டம் பற்றிய விழிர்ப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.
- இந்நிலையத்தின் உத்தியோகத்தர்கள், தமது கண்டுபிடிப்புகள் பற்றிய 5 கருத்தரங்குகளை நடாத்தினர்.

2011 ஆம் ஆண்டுக்கான திட்டம்

மரக்கறிப் பயிர்களின் ஆராய்ச்சி (NCVT)

- கொடி போஞ்சி 03 இனங்கள்

மர போஞ்சி 11 இனங்கள் மற்றும்

தக்காளி, கறிமிளகாய், கத்தரி

- பொலித்தீன் வீடுகளில், குடை மிளகாயை சேதன முறையில் பயிர்ச் செய்கைபண்ணுவதற்கான வளர்ப்பூடகத்தைக் கண்டு பிடித்தல்
- சேதன பயிர்ச் செய்கையில் கோவாச் செய்கைக்காக பயன்படுத்தக்கூடிய திரவ உரங்களைக் கண்டறிதல்
- லங்கா கரட் செய்கைக்கான சரியான பயிர் அடர்த்தியை கண்டறிதல்

உற்பத்தியாளர் விதை உற்பத்தி

பின்வரும் பயிர்களில் உற்பத்தி செய்யப்பட்டது.

கொடி போஞ்சி – கெப்பற்றிபொல நீலம்

பலாங்கொட நீலம்

லங்கா பட்டா

வேட்

கரட் – லங்கா கரட்

உருளைக்கிழங்கு

- வேர் உருவாக்கப்பட்ட வெட்டுத்துண்டங்கள் மூலம் தரமான விதை உற்பத்தி
- NCVT, VAT ஆராய்ச்சிகளை ARS சீத்தா எலியவுடன் இணைத்து முன்னெடுத்தல்
- திரவ ஊடக வளர்ப்பிற்கான தொழில்நுட்ப அபிவிருத்தியும் நிர்மாணமும்

பூங்கனியியல்

- உள்ளூர், ஜப்பான் தோடை, நாரத்தங்காய் இனங்களை ARS மொனராகலை, ரகங்கலை RARDC, பண்டாரவளையில் மதிப்பிடப்பட்டது.
- குளிர் பிரதேச பழப் பயிர்களின் தாய்மரங்களை பராமரித்தல், (அப்பிள்,பீச்,பேரிக்காய்,சீனக் கொய்யா, நெக்டரின், ஆனைக்கொய்யா, கரம்போலா)

பயிர் பாதுகாப்பு

- மரக்கறிகள், பழப்பயிர்கள் உருளைக் கிழங்கு பூப்பயிர்களைத் தாக்கும் நோய் பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்காக பீடை நாசினிகளைப் பரிசோதித்தல்
- சாம்பல் பூஞ்சண நோய்க்குத் தாக்குப் பிடிக்கக் கூடிய ரோஜா இனங்களை கண்டுப் பிடித்தல்
- மெண் அழுகல் நோய்க்குத் தாக்குப் பிடிக்கக்கூடிய கோவா இனங்கள் பற்றிய ஆராய்ச்சி
- சித்திரசு பயிர்களைத் தாக்கும் துரு, பூஞ்சணம், சிற்றுண்ணி, செதில் பூச்சிகள் என்பனவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான இரசாயனங்களைக் கண்டுபிடித்தல்
- தக்காளி காய் துளைப்பானை Bistrifluron எனும் பீடைக் கொல்லியினால் கட்டுப்படுத்தக்கூடிய தன்மை பற்றிய ஆய்வு
- சேதன கறிமிளகாய் செய்கையில் குத்தியுறிஞ்சும் பூச்சிகளின் முகாமைத்துவம்
- புதிய முறையிலான கோவா ஊடு பயிர்ச் செய்கையால் பூச்சிகளின் தாக்கம் பற்றிய ஆய்வு
- கோவா இலையரிப்புழுக்களை கட்டுப்படுத்துவதற்காக Bristritluron 10% EC இணை பரந்தளவில் உபயோகிக்கக்கூடிய தன்மை பற்றிய ஆய்வு

பூப் பயிர்ச் செய்கை

- ஜேர்பராவினை வளர்ப்பதற்காக மண் சேர்ந்த வளர்பூடகம் பற்றிய ஆய்வு
- சுப்பர் டெய்சியின் பயிர் அடர்த்தி, விளைச்சல் பூவின் தோற்றம் பற்றிய ஆய்வு
- ஜேர்பரா பூக்களின் அறுவடைக்குப் பின்னரான தரத்தைப் பேணுதல் பற்றிய ஆய்வு
- தரமான விளைச்சலைப் பெறுவதற்காக ரோஜாப் பயிர்களின் அடர்த்தி பற்றிய ஆய்வு
- 20 கிறிசாந்தியம் வர்க்கங்களின் உருவத் தோற்றம் பற்றிய ஆய்வு

இழைய வளர்ப்பு

- இலை, மற்றும் ஓடிகளில் இருந்து பெறப்பட்ட ஸ்ரோபெரி கன்றுகளைப் பெருக்குதல், சூழலிணக்கம் செய்தல், விளைச்சல் பற்றிய ஆய்வு

- விதை உருளைக் கிழங்கின் உறங்கு நிலையைக் கலைத்தல் பற்றிய ஆய்வு
- உருளைக் கிழங்கு, அந்தூரியம், மடோனலில்லி, ஜேர்பரா ஆகியவற்றின் நடுகைப் பொருள் உற்பத்தி

மண் விஞ்ஞானம்

- விதை உருளைக் கிழங்கு உற்பத்திக்கு தேவையான நைதரசன் பசளை சம்பந்தமான ஆய்வு
- குறைந்த வயதுடைய பூக்கோவா இனங்களுக்குத் தேவையான அசேதனப் பசளை சம்பந்தமான ஆய்வு
- சித்திரசு பயிர்களின் ஏற்படும் போசணைக் குறைபாடுகளைக் கட்டப்படுத்துதல் பற்றிய ஆய்வு
- போஞ்சி, தக்காளி, சித்திரசு பயிர்களுக்கான IPNS பற்றிய ஆய்வுகள்
- பொலித்தீன் வீடுகளில் ஏற்படும் மண் சம்பந்தமான நோய்களைக் கட்டுப்படுத்தற்கான திருப்தி கரமான முறைகளைக் கண்டுபிடித்தல்
- மடோனாலில்லி பயிருக்கு தேவையான அசேதன உரக் கலவையைச் சிபாரிசு செய்தல்

உத்தியோகத்தர் பட்டியல்

பதவி நிலை	*எண்ணிக்கை*
உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி)	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	10
கண்காணிப்பு உத்தியோகத்தர்	01
திட்டமிடல் உதவியாளர்	07
ஆராய்ச்சி உதவியாளர்	03
விவசாயப் போதனாசிரியர்	13
ஆய்வு கூட உதவியாளர்	02
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	10
காரியாலய உதவியாளர்	03
சாரதிகள்	06
உழவு இயந்திர ஓட்டுனர்	02
வர்ணம் தீட்டுவோர்	01
அரும்பு ஒட்டுனர்	02
கொத்தனார்	01
தச்சன்	01
காவலாளி	15
சுற்றுலா விடுதிக் காப்பாளர்	01
நிரந்தர தொழிலாளர்	104
ஒப்பந்த தொழிலாளர்	81
மொத்தம்	***263***

2.2.5 பிராந்திய விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் (பி.வி.ஆ.அ.நி) மாகந்துர

பிரதேச விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் மாகந்துறவானது பூங்கனியியல் பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் (HORDI) நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்றது. இதன் எழு உப நிலையங்களும் வெவ்வேறு விவசாய காலநிலை வலயங்களில் அமைந்துள்ளது. கல்பிட்டியிலும், வனாத்தவில்லிலும் அமைந்துள்ள விவசாய ஆராய்ச்சி நிலையங்களையும், தப்போவவிலும், இங்கினி மிற்றியவிலும், வாரியபொலவிலும், வல்பிற்றவிலும் உள்ள இசைவாக்க ஆராய்ச்சி அலகுகளையும், வல்பிற்றவிலுமுள்ள பூங்கனியியல் பண்ணையையும் இந்த நிலையம் நிர்வகிக்கின்றது. இந்த நிலையத்தின் முக்கிய பணிகளாவன

- தகவல்களை உருவாக்கி, சேகரித்து பரவச் செய்தல்
- ஒருங்கிணைந்த விவசாய ஆராயச்சிகளை நடத்துதல்
- ஆராய்ச்சி முடிவுகளின் துரிதமான பாவனையை ஒழுங்கு செய்தல்
- விவசாயத்தில் உயர்மட்ட விஞ்ஞான அறிவு கொண்ட ஆளணியை உருவாக்க பயிற்றுவித்தல்

பாதீடு

பெறப்பட்ட நிதி ஒதுக்கீடும், செலவுத் தொகையும் அட்டவணை 2.2.5.1 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.2.5.1: வருடாந்த பாதீடு 2010 (ரூபா)

தலைப்பு	*ஒதுக்கீடு*	*செலவு*	*செலவு%*
மூலதனம்	1,387,738	780,782	56
மீண்டுவரும் செலவு	3,156,606	3,128,397	99
செயற்திட்டங்கள் கூட்டெரு	17,600,000	11,516,887	65
ஒரு கிராமத்துக்கு ஒரு பயிர்			
அன்னாசி	160,000	132,371	83
காளான்	125,000	122,000	98
நாம் பயிரிடுவோம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்			
மாதுளை	440,000	436,300	99
அன்னாசி	289,563	289,563	100
கிழங்கு வகை	100,000	93,845	94
மொத்தம்	*23,258,907*	*16,500,145*	*71*

முன்னேற்றம்

பழங்கள்

- அன்னாசி செய்கையில் களைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நுவார்ம் டயூரோன் 500sc (Nufarm Diuron 500sc) வினைத் திறனாக செயல்படுகின்றது.
- கல்பிட்டியில் அமைந்துள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் மாதுளை கலப்புப் பிறப்பாக்க நிகழ்ச்சித் திட்டத்தில் நான்கு பெற்றோர்கள் தெரிவு செய்யப்பட்டு F_1 விதைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இவை தொடர்ந்தும் பாவிக்கப்பட்டு ஆராய்ச்சிகள் மேற் கொள்ளப்படும்.
- வாழையில் முப்பத்தைந்து (35) பிறப்புரிமையமைப்புக்கள் சேகரிக்கப்பட்டு ஆராய்ச்சி தோட்டத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மண் பரிபாலனம்

- 388 மண் மாதிரிகள் சோதிக்கப்பட்டு பசளைகள் சிபாரிசு செய்யப்பட்டன.
- 182 கூட்டெரு மாதிரிகளின் தரம் சோதிக்கப்பட்டன.

மரக்கறிகள்

- உள்ளூர் பூசணி வர்க்கம் தெரிவு செய்யப்பட்டு 200g தரமான விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன.
- பாகல் வர்க்கம் (தின்னவேலி) உற்பத்தியாளர் விதை 900g உற்பத்தி செய்யப்பட்டது.
- வெள்ளை புடோல் வர்க்கத்தின் உற்பத்தியாளர் விதை 160g உற்பத்தி செய்யப்பட்டது.
- 13 பச்சை மிளகாய் வழித்தோன்றல்கள் (lines) நம்பிக்கையானவையாக தேர்ந்தெடுக்கப்பட்டன.
- 150g தூய பற்றலு மிளகாய் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன.

- கெக்கரி NCVT செய்யப்பட்டது. அந்நிய நாட்டு வர்க்கம் 'மாஸ்டர்' இடை வலயத்தில் நல்ல விளைச்சலைக் காட்டியது.

பூப்பயிரியல்

- வெட்டு அந்தூரியம்

  மலிவான முன்னேற்றப்பட்ட உயரமான மேடைகள் அல்லது பெரிய சாடிகள் (விட்டம் 35 ச.மீ உம் உயரம் 28 ச.மீ) அந்தூரியம் அன்டிறியனம் இன் செறிவான செய்கைக்கு சாதகமான உள்ளன.

- கோழிகளின் கனகூழம் அல்லது சீமைக் கிளுவை பசுந்தாட் பசளை சந்தைப்படுத்தக்கூடிய அந்தூரியப் பூக்களின் விளைவைக் கூட்டின.

கிழங்கு வகைகள்

மரவள்ளிச் செய்கையில் ஓமோனைப் பரிகரிக்கும் பொழுது 17% கூடுதலான சிறிய கிழங்குகள் (சந்தைப் பெறுமானம் மிக்க) பெறப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

காளானும் நோயியலும்

மரத்தூள் ஊடகத்தில் வித்திகளை உருவாக்குதல் தற்பொழுது பாவிக்கப்படும் பழைய முறையை (நெல் உமியை) விடக் கூடிய விளைச்சலும், கூடுதலான வரவு செலவு விகிதத்தையும் பெறக்கூடியதாக உள்ளது.

- உலகப் புகழ் பெற்ற, மருந்தாகப் பாவிக்கப்படும் ரிஷி காளான் (Ganoderma lucidam)உள்நாட்டு நிலைமைகளின் கீழ் வெற்றி கரமாக வளர்க்கப்பட்டது. விவசாயிகளுக்காக பயிர்ச்செய்கைப் பொதி ஒன்று உருவாக்கப்படும்.

2011 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள்

பழவகை

- அன்னாசியில் பின்முகக்கலப்பு இனவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்
- அன்னாசியில் பழ விளைச்சலில் ஈரலிப்பை பரிபாலனம் செய்வதன் மூலம் ஏற்படும் விளைவுகள்
- புதிய களை நாசினிகளை அன்னாசிச் செய்கையில் சோதனை செய்தல்
- அன்னாசியில் கலப்புபிறப்பாக்கிகளை அவற்றின் பெற்றோருடன் மதிப்பிடுதல்
- மாதுளையில் கலப்புபிறப்பாக்கம் செய்தலும் அவற்றை மதிப்பிடுதலும்
- வாழையில் சேகரிக்கப்பட்ட மூலவுயிருருக்களை (Germplasm) பராமரித்தல்
- ட்ரகன் பழச் செய்கையில் பசளையிடும் முறைகளையும், பத்திரக்கலவையிடுதலையும் மதிப்பிடுதல்
- ட்ரகன் பழச் செய்கையில் பயிர் அடர்த்தியின் விளைவை பரிசோதித்தல்
- சீனி வாழையின் வர்க்கங்களை மதிப்படுதல்
- வாழைச் செய்கையில் இரசாயனப் பசளைகளையும் கூட்டெருவையும் ஒன்றாகச் சேர்த்து இடுவதன் விளைவை அறிதல்
- அனோடாவில் விகாரமாக்கல் நிகழ்ச்சித் திட்டம்

மண் பரிபாலனம்

- சேதனப் பயிர் செய்கை முறையில் ட்ரகன் பழங்களில் கூட்டெருவை வெவ்வேறு அளவில் இடும் பொழுது ஏற்படும் விளைவை அறிதல்
- வெவ்வேறு விதமான சேதனப் பசளைகளை தனியாகவும், கூட்டாக இரசாயனப் பசளைகளோடு சேர்த்தும் இடும் பொழுது ட்ரகன் பழச் செய்கையில் ஏற்படும் விளைவை அறிதல்
- ஒருங்கிணைந்த தாவரப் போசணைப் பரிபாலன முறையின் விளைவை மரக்கறிகளிலும், கிழங்கு வகைகளிலும் அறிதல்
- ஒருங்கிணைந்த தாவர போசணைப் பரிபாலன முறையின் விளைவை மரவள்ளியிலும், அன்னாசியிலும் மதிப்பிடுதல்

மரக்கறிகள்

- உள்ளூர் பூசணி வர்க்கங்களை அபிவிருத்தி செய்தல்
- பச்சை மிளகாய் வர்க்கங்களை அபிவிருத்தி செய்தல்
- பாகல், புடோல் என்பவற்றில் உற்பத்தியாளர் விதைகளை உற்பத்தி செய்தல்
- உள்ளூர் பயற்றை வர்க்கங்களை மதிப்பிடுதல்
- 'பட்டலு மிரிஸ்', மாகந்துற தெரிவு ஆகியவற்றை தூய்மையாக்கல்
- பூசணியில் மஞ்சள் சித்திர வடிவு வைரசை கட்டுப்படுத்துவதற்கு வெவ்வேறு முறைகளை மதிப்பிடுதல்
- கெக்கரி, கத்தரி, முளைக்கீரை என்பவற்றில் NCVT

பூப்பயிரியல்

- அந்தூரியத்தில் ஒருங்கிணைந்த தாவர போசணை பரிபாலன முறையை மதிப்பிடுதல்
- அந்தூரியத்தில் மூலவுருருக்களை பராமரித்தலும், இனவிருத்தி செய்தலும்

- அந்தூரியத்தின் குறைந்த செலவிலான நிழல் வீட்டை முன்னேற்றுதல்
- 'இத்த' - (நித்தியகல்யாணி) பூவின் மூலவுருருக்களை பராமரித்தலும், இனவிருத்தி செய்தலும்

கிழங்கு வகைகள்

- பயிர்ப் பரிபாலனப் பொதியொன்றை மரவள்ளிச் செய்கைக்கென உருவாக்கல்
- வற்றாளைச் செய்கைப் பிரதேசத்திற்கென புதிய பசளையிடும் முறையை உருவாக்கல்
- மரவள்ளிச் செய்கையில் ஓமோன் பிரயோகிக்கும் நுட்பத்தினை உருவாக்கல்
- கிழங்கு வகைகளின் சிபாரிசு செய்யப்பட்ட வர்க்கங்களை பாதுகாத்தலும் நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்தலும்
- மரவள்ளியில் மூலவுருருக்களை பாதுகாத்தல் (90 வர்க்கங்கள்)

நோயியலும், காளானும்

- ரிஷி காளானுக்கு (Ganoderma lucidam) பயிர்ச் செய்கை முறைப் பொதியொன்றை உருவாக்கல்
- சிப்பிக் காளானை வைக்கோலைப் பாவித்து வளர்க்கும் புதிய செய்கை முறையை மதிப்படுதல்
- மொட்டுக் காளான் செய்கைக்கென பயிர்ச் செய்கை முறை சிபாரிசு பொதியொன்றை உருவாக்கல் (HORDI உடன் இணைந்து செய்யப்படும் பரிசோதனை)

ஏனையவை

- தொழில்நுட்பங்களை வெளியிடும் செயற் குழுவுக்கு பின்வரும் தொழில் நுட்பங்கள் சிபாரிசுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- இடைவலயத்தில் *Anthurium andrianum* செய்கைக்குப் பொருத்தமான நிழல் உருவாக்கம்
- *Anthurium andrianum* குறைந்த செலவிலான வடிகாலமைப்பு முன்னேற்றப்பட்ட பாத்திக் கட்டமைப்பு
- மொறிசீசியஸ் அன்னாசியின் வளர்ச்சி, விளைச்சல், மண் ஈரம் என்பவற்றில் பத்திரக் கலவையிடுதலின் விளைவை அறிதல்
- வைக்கோல் காளானுக்கு புதிய செய்கை முறைத் தொழில் நுட்பம்
- சிப்பிக் காளானுக்கான குறைந்த செலவில் வித்திகளை உருவாக்கும் முறை

அலுவலர்களின் பட்டியல்

பிரதி பணிப்பாளர் (ஆராய்ச்சி)	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	02
விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர்	03
நிகழ்ச்சி திட்ட உதவியாளர்	04
விவசாய உற்பத்தி அலுவலர்	01
பொருளாதார உதவியாளர்	02
ஆராய்ச்சி உதவியாளர்	07
விவசாயப் போதனாசிரியர்	20
ஆராய்ச்சி உப உதவியாளர்	01
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை விசேட தரம்	01
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	08
பண்ணை எழுதுவினைஞர்	02
சாரதி	03
KKS	01
பயிற்றுவிக்கப்பட்ட தொழிலாளி	05
பயிற்றுவிக்கப்படாத தொழிலாளி	29
மொத்தம்	**90**

2.2.6 விவசாய ஆராய்ச்சி நிலையம் (வி.ஆ.நி.) சீத்தாஎலிய

இந்நிலையத்தின் ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகள்; உருளைக்கிழங்கு, மேல் நாட்டு மரக்கறிகள், சில பழப் பயிர்கள் போன்றவற்றின் உற்பத்தி மேன்பாட்டை நோக்கமாகக் கொண்டு ள்ளது. அத்துடன் பாதுகாக்கப்பட்ட விவசாயத்தின் தேவைக்கேற்ப ஆராய்ச்சி நடவடிக்கைகளிலும் ஈடுப்பட்டுள்ளது. உருளைக்கிழங்கு, ஸ்டோபரி, ஜெபெரா போன்ற பயிர்களின் அடிப்படை நடு கைப் பொருள் உற்பத்தியின் பொறுப்பையும் தன்னகத்தே கொண்டுள்ளது. மேலும் அரச, தனியார் பண்ணைகள், விவசாயிகள், விரிவாக்க உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக, தொழில்நுட்ப கல்லூரி, பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான பயிற்சிகளையும் தொழில் நுட்ப அறிவையும் வழங்குகின்றது.

பாதீடு

வெவ்வேறு தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகையும் செலவினமும் அட்டவணை 2.2.6.1 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.2.6.1 : வருடாந்த பாதீடு 2010 (ரூபா)

தலைப்பு	*ஒதுக்கீடு*	*செலவு*	*செலவு%*
மூலதனம்	1,380,978.00	1,051,250.00	80
நடைமுறைச் செலவு	2,785,643.00	2,776,655.00	100
பயிர் தலைவர்	3,000,000.00	2,769,916.00	92
சேதனப் பசளை உற்பத்தி	1,570,000.00	866,516.00	55
ஒரு பயிர் ஒரு கிராமம்			
பெயார்ஸ் உம் ஸ்ரோபரி உம்	80,000.00	32,357.00	40
காளாண்	100,000.00	35,000.00	35
மொத்தம்	***8,856,621.00***	***7,523,702.00***	***85***

முன்னேற்றம்

ஆராய்ச்சி

பயிராக்கவியல்

- வெளிநாடுகளிலிருந்து 2009ல் இறக்குமதி செய்யப்பட்ட 10 உருளைக்கிழங்கு இனங்க ளில் ருடொல்ப், சப்பிரா, கல்பைற், அம்பிசன் ஆகிய இனங்கள் உள்நாட்டில் பயிர் செய்வத ற்காக சிபாரிசு செய்யப்பட்டன.
- திரவ ஊடக விதை உற்பத்திற்காக பரிசோதிக்கப்பட்ட நான்கு உருளைக்கிழங்கு இனங்களில் கிரலோனா மிக உகந்த இன மாகவும் இனங்காணப்பட்டது.
- 99 – 06, 99 – 02 ஆகிய இனங்கள் இம்முறை யின் கீழ் விதை உருவாவதற்கு மிக நீண்ட காலம் எடுத்ததுடன் பொருளாதார ரீதியில் வெற்றி யளிக்கவில்லை.
- உருளைக் கிழங்கு களஞ்சியப்படுத்தலின் போது வெப்பநிலையினதும், சாரீரப்பதனி னதும் தாக்கம் பரிசோதிக்கப்பட்ட போது அறை வெப்ப நிலையினதும் (14–26° C) சாரீ ரப்பதனிலும் (80%) களஞ்சியப்படுத்தப்பட்ட போது அதிக நிறை இழப்பு ஏற்பட்டது.
- 5°C, 90–95% சாரீரப்பதனிலும் களஞ்சியப் படுத்தப்பட்ட போது சிறிய கிழங்குகளும் (2–4g) பெரிய (30–35g) கிழங்குகளும் மிகக் குறைந்த நிறைக்குறைவை காட்டின.

- 20–30g கிழங்குகள் 5°c, 85–90% சாரீரப்பதனிலும் களஞ்சியப்படுத்தப்பட்ட போது மிகக் குறைந்த நிறைக்குறைவை கொடுத்தன.
- குளிர் களஞ்சியப்படுத்தலின் போது களஞ்சிய அறைகள் படிப்படியாக குளிரூட்டப்படல் வேண்டும்.

பயிர் இனவிருத்தி

உள்நாட்டில் இனவிருத்தி செய்யப்பட்ட அதிக விளைச்சலைத் தரக்கூடிய, பின் வெளிறல் நோய்க்குத் தாக்குப் பிடிக்கக் கூடிய 'கோல்டன் ஸ்டார்' எனப்படும் புதிய உருளைக் கிழங்கு இனம் பயிர்ச் செய்கைக்காக சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

- உள்நாட்டிலேயே இனவிருத்தி செய்யப்பட்ட புதிய 10 உருளைக் கிழங்கு இனங்கள் NCVT பரிசோதனைக்காக பரிந்துரைக்கப்பட்டன.
- F1 பரம்பரையைச் சேர்ந்த 2200 தாவரங்கள் உயர் விளைச்சல், பின் வெளிறல் நோய்க்குத் தாக்குப் பிடிக்கும் தன்மை போன்ற இயல்புகளுக்காக பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன.
- CIPல் இருந்து பெறப்பட்ட 15 புதிய உருளைக் கிழங்கு இனங்களின் விதை உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது.

இழைய வளர்ப்பு

லில்லி *(Lilium longiforum)* பயிரின் தக்கைக் கலங்களை கதிர் வீச்சுக்குட்படுத்துவதற்காக UV கதிர் வீச்சு 30 நிமிடங்களுக்கும் காமா கதிர் வீச்சு 5–10 Gyம் பயன்படுத்தப்படலாம். புதிய தண்டு வளர்ச்சிக்காக 0.5 mg / L NAA, 0.6mg/l BAP ம் சேர்க்கப்பட்ட MS வளர்ப்பூடகம் பயன்படுத்தபட முடியும் என கண்டறியப்பட்டது.

3mg / L IBA, சேர்க்கப்பட்ட MS வளர்ப்பூடகத்தில் 6 வார காலத்திற்கு வளர்க்கப்பட்ட *Babys breath (Gypsophilla baniaulata)* பயிர்கள் வெற்றிகரமாக சூழலுக்கு பழக்கப்படுத்தப்படலாம். இழைய வளர்ப்புப் பாத்திரங்களுக்கு வளியூட்டலினூடாக உள்ளக வேருட்டலில் எந்தவித முன்னேற்றமும் காணப்படவில்லை.

இப்பயிரை பராம்பரிய முறையில் வெட்டுத் துண்டங்கள் மூலம் கீழ் மண்; உக்கிய சாணம்; கூட்டெரு 1:1:1 விதத்தில் கலந்து வளர்ப்பூடகத்தில் வேருன்ற வைக்கலாம்.

சாண்ட்லர் இன ஸ்ரோபரி இழைய வளர்ப்பு கன்றுகளினதும், அவற்றில் இருந்து பெறப்பட்ட கன்றுகளினதும் விளைச்சல், ஓடி உற்பத்தித் திறன் என்பன பரீட்சிக்கப்பட்டன. இலை அனைத்தும் குறைந்த விளைச்சலையும், கூடிய ஓடிகளையும் உருவாக்கின. எனவே இழைய வளர்ப்பில் பெறப்பட்ட கன்றுகள் பழ உற்பத்திக்குப் பொருத்த மற்றவையாகும்.

வெவ்வேறு வளர்ப்பூடகங்களில் வெவ்வேறு வயதுடைய இழைய வளர்ப்பு உருளைக் கிழங்கு பயிர்கள் எவ்வாறு வெட்டுத் துண்டுகளை உற்பத்தி செய்கின்றன, என இரு பருவ காலங்களில் பரீட்சிக்கப்பட்டது. அதிக வெட்டுத் துண்டுகளை பெறுவதற்காக கருக்கப்பட்ட உமி; தேயிலை கழிவு 1:1 கலவை அல்லது கருக்கப்பட்ட உமி; தென்னந் தும்பு; மணல் 1:1:1 ஆகிய வளர்ப்பூடகங்கள் உகந்தவை எனக் கண்டறியப்பட்டது. 5–6 வாரங்கள் இழைய வளர்ப்பிற்குட்பட்ட பயிர்கள் அதிக வெட்டுத் துண்டங்களைக் கொடுத்தன.

பூச்சியியல்

- போஞ்சியில் காய் துளைப்பானை *(Maruce vitrata)* கட்டுப்படுத்துவதற்காக *Flubendiamide* 480sc ஒரு ஹெக். 36g வீதம் விசிறுவதற்காக சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

  மேற்குறிப்பிட்ட பூச்சி நாசினியை அல்லது அதன் 24WG சேர்வை உருளைக் கிழங்கில் வெட்டுப் புழுக்களை கட்டுப்படுத்துவதற்காக சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

- உச்ச வெப்பநிலை 17–30°c ஆகவும் குறைந்த வெப்பநிலை 11–16°c ஆகவும் இருக்கும் போது *Cheilomenes sexmaculata* வின் வாழ்க்கை வட்டம் 26–36 நாட்களை எடுத்தது.
- கோவா இலையரி புளு (DBM) இணைக் கட்டுப்படுத்துவதற்காக Bristifluron 10% EC 1.5 ml / l என்ற வீதத்தில் விசிறுமாறு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

நோயியல்

- பின் வெளிறல் நோயைக் கட்டுப்படுத்துவதற்காக Fluzinam (Tizca) எனப்படும் பூஞ்சண நாசினி 0.5ml / L என்ற விகிதத்தில் விசிறுமாறு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.
- கல்வைற், அலடின், அம்பிசன் ஆகிய உருளைக்கிழங்கு இனங்கள் பின்வெளிறல் நோய்க்கு குறைந்தளவில் தாக்குப் பிடிக்கும் தன்மை உடையனவாகவும், சவ்பிரியா, மெர்சி ஆகிய இனங்கள் அதிக விளைச்சலைத் தருபவையாகவும் காணப்பட்டன.
- M–22, 01–09–05, 01–01–09, 01–09–06 ஆகிய புதிய உருளைக்கிழங்கு வர்க்கங்கள் பின் வெளிறல் நோய்க்குத் தாக்குப் பிடிக்கக்கூடியவையாகக் கண்டறியப்பட்டது.

- கோவாவில் கிறீன் கோர்னற் K-3-122 ஆகியவை கோவா குண்டாந் தடியுரு நோய்க்கு தாக்குப் பிடிக்காத இனங்களாகவும் KA cross, Avirang Worls, Ever green என்பவை இந்நோய்க்குத் தாக்குப் பிடிக்கும் இன ங்களாகவும் இனங் காணப்பட்டன.

மண் விஞ்ஞானம்

- திரவ ஊடக வளர்ப்பிற்கான பயிர்த் தேவைக் கேற்ப தயாரிக்கப்பட்ட புதிய திரவ பசளைக் கலவைகள் பரீட்சிக்கப்பட்ட போது அக்கலவையில் உள்ள NPK போதியளவாகக் காணப்படவில்லை

மரக்கறிப் பயிர்கள்

- TS x 0578, Sammurai, Ninja, Sunny, Green Globe ஆகிய கோவா இனங்கள் பயிர்ச் செய்கைக்காகச் சிபாரிசு செய்யப்பட்டன.

- சிறந்த அடைவுகளைத் தந்ததால் புதிய கலப்பின கரட் இனமான Natindo பயிர்ச் செய்கைக்காகச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.(UCWZ)

- HT 1500, HT 1505 ஆகிய பீற்ருட் இனங்கள், அதிக விளைச்சலுடன், குறைந்த காலத்தில் முதிர்ச்சியடைவதாகவும், நோய், பீடைத் தாக்கங்களுக்கு தாக்குப் பிடிப்பவையாகவும் காணப்பட்டதால் பயிர்ச் செய்கைக்காகச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

அபிவிருத்தி நடவடிக்கைகள்

பயிராக்கவியல்

- உருளைக்கிழங்கு நடுகைப் பொருள் உற்பத்தி அடிப்படை முன் விதை (G_0) கிழங்குகள்

  - திரவ ஊடக வளர்ப்பு - 19,897
  - மண்ணற்ற ஊடக வளர்ப்பு - 226,508
  - வாயு ஊடக வளர்ப்பு - 100,000

- 308,045 G_0 விதை கிழங்குகள் விதை உற்பத்திக்காக விவசாயிகளுக்கு வழங்கப் பட்டது

- ஊவா மாகாணத்திலுள்ள 11 விவசாயிகளுக்கு திரவ ஊடக வளர்ப்பு மூலம் விதை உருளை க்கிழங்கு உற்பத்தி செய்வதற்கான தொழில் நுட்ப ஆலோசனையும் பயிற்சியும் வழங்கப்பட்டது.

- ஊவா மாகாண, உதவி விவசாய பணிப்பாளர் காரியாலயத்தில் வாயு ஊடகம் மூலம் விதை உருளைக்கிழங்கு உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்ப ஆலோசனையும் பயிற்சியும் வழங்கப்பட்டது.

- 20 விரிவாக்க உத்தியோகத்தர்களுக்கும் 60 விவசாயிகளுக்கும் திரவ ஊடக வளர்ப்பின் மூலமும் மேலும் 05 உத்தியோகத்தர்களுக்கும் 12 விவசாயிகளுக்கும் வாயு ஊடக வளர்ப்பின் மூலமும் சிறு விதை உருளைக்கிழங்கு உற்பத்திக்கான பயிற்சி வழங்கப்பட்டது.

- 3 பல்கலைகழக இறுதியாண்டு மாணவர்கள் தங்களது ஆராய்ச்சிகளை பின்வரும் தலைப்பு களில் மேற்கொண்டார்கள்

  - திரவ ஊடக வளர்ப்பின் மூலம் நான்கு உருளைக்கிழங்கு இனங்களில் சிறு விதை கிழங்கு உற்பத்தி
  - குளிர் களஞ்சிய சாலைகளில், விதை உருளைக்கிழங்கின் மீதான சாரீரப்பதனினதும் வெப்பநிலையினதும் தாக்கம்
  - ஆராய்ச்சி நிலைமைகளிலும், தோட்ட நிலைமைகளினதும் விதை உருளைக் கிழங்கு உற்பத்தி ஒரு ஒப்பீடு

இழைய வளர்ப்பு

- உள்ளக நிலையில் நோய் தொற்றற்ற உருளைக் கிழங்கு

உள்ளக நிலைமையில் தொற்றற்ற 5869 கிரனோலா வர்க்க உருளைக் கிழங்கு தாவரங்கள் முறைசார் விதை உருளைக் கிழங்கு உற்பத்திக்காக வழங்கப்பட்டது. மேலும் 1663 கிரனேலா டிசாரி மற்றும் ஹில்ஸ்டார் தாவரங்கள் முறை சாராத விதை உற்பத்திக்காக வழங்கப்பட்டது. 708 தாவர ங்கள் ஆராய்ச்சி நோக்கத்திக்கும் 137 தாவரங்கள் பெருக்கம் செய்வதற்காகவும் தனியாருக்கும் பண்டாரவளை RARDC க்கும் வழங்கப்பட்டன.

- உருளைக் கிழங்கு தாவர மூலவுயிருருக்களை பாதுகாத்தல்

  உருளைக் கிழங்கு பேதங்களான (கிர னோலா, டிசாரி, ராஜா, ஹில்ஸ்டார், கொண்டோர், லைரா, கப்ரிகிரிராஜ் ஆகிய வற்றை மூலவியிருருக்கள் பாதுகா க்கப்பட்டன.

  மேலும் 2 (Promising line) கள், (FLS-7, LBR-15) 3 Breeding line இணையும் 15 CIP line களையும் ஆய்வுக் கூட தேவைகளுக்காக பாதுகாக்கப்பட்டன.

ஸ்ரோபரி

ஒரு பயிர் ஒரு கிராம வேலைத் திட்டத்தின் கீழ் இழைய வளர்ப்பின் மூலம் பெறப்பட்ட 5885 சன்ட்லர் இனக் கன்றுகள் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

மேலும் 677 ஆய்வு கூடக் கன்றுகளும், 2189 F_1 பரம்பரைக் கன்றகளும் நடுகைப் பொருள் உற்பத்திக்காகப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

600 கன்றுகள் ஆராய்ச்சி நோக்கங்களுக்காகவும் 1625 கன்றுகள் ஒடி உற்பத்திக்காகவும், பழ உற்பத்திக்காகவும் நாட்டப்பட்டுள்ளன.

- பேரிக்காய் **(pears)**

  "ரஹங்கல தெரிவு" இனத்தைச் சேர்ந்த 80 கன்றுகள் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப் பட்டன.

- பூப் பயிர்கள்

  1357 பேபிஸ் ப்ரெத் கன்றுகளும், 42 லில்லி கன்றுகளும், 20 ஜேர்பெரா கன்றுகளும் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

  3 இளங்கலைமானி பட்டதாரி மாணவர்கள் தமது இறுதியாண்டு ஆராய்ச்சியை பின்வரும் தலைப்புகளில் நடாத்தினர் பேபிஸ்ப்ரெத்தின் ஆய்வு கூட, ஆய்வு கூடத்திற்கு வெளியேயான வேருட்டலும் சூழலிணக்கச் செயற்பாடுகளும்.

- ஊக்கப்படுத்தல் மூலம் திரிபுபடுத்தப்பட்ட லில்லித் தக்கைக் கலன்களில் இருந்து பயிர் உருவாவதற்கு உகந்த வளர்ப்பூடகத்தைக் கண்டு பிடித்தல்

- பேபிஸ் ப்ரெத் பயிரின் உள்ளக வேரூட்டலும், சூழல் இணக்கமும் பற்றிய ஆய்வு

நோயியல்

- 1760 மண் மாதிரிகள் பக்டீரியா வாடல் நோய்க்காக பரிசோதிக்கப்பட்டன.

- விவசாயிகளின் நோய் சம்பந்தமான பிரச்சினைகள் இனங்காணப்பட்டன.

உருளைக்கிழங்கு	– 13
மரக்கறிகள்	– 23
பூப்பயிர்களும், பழப் பயிர்களும்	– 06
காளான்	– 04

பூச்சியியல்

- 1760 மண் மாதிரிகள் நெமற்றோட்டுப் புழுக்களுக்காக பரிசோதிக்கப்பட்டன.

மண் விஞ்ஞானம்

- மண் ஆய்வின் அடிப்படையில், உரப் பாவனை சிபாரிசு, ஆய்வுக்குட்பட்ட மண் மாதிரிகள்

PH-	286
P -	234
K -	234

- 60 தொன் கூட்டெரு தயாரிக்கப்பட்டது.

கருத்தரங்குகளும் விளக்க உரைகளும்

- "மேல் நாட்டு நிலங்களில் ஏற்படும் பாதிப்பும், அதனைத் தடுப்பதற்கான வேலைத் திட்டங்களும்" சூழல் அமைச்சினால் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் முன்வைக்கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரை

- "பிராந்நிய ஆராய்ச்சிகளினூடாக மரக்கறிப் பயிர்களின் ஆராய்ச்சி நடவடிக்கைகளை முன்னெடுத்தல்" டாக்கா, பங்களாதேசில் நடந்த கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை

  கிழக்கு மாகாணத்தில் FAO அமைப்பினால் அம்மாகாண விவசாயத் திணைக்களத்தினூடாக நாடாத்தப்பட்ட ஆராய்ச்சி, விரிவாக்க, விவசாய கலந்துரையாடல்களில் விசேட நிபுணராக எமது உத்தியோகத்தர் ஒருவர் கலந்து கொண்டார்.

பயிற்சிகள்

- நெதர்லாந்து வாகனிஞ்சன் யு.ஆர் நிலையத்தினால் நடாத்தப்படும் விதை உருளைக்கிழங்கு, தொழில்நுட்பம், அத்தாட்சிப்படுத்தல் விநியோக முறைகள் பயிற்சியில் ஒரு உத்தியோகத்தர் கலந்து கொண்டார்.

- சிறந்த விவசாய நடவடிக்கைகளும், GLOBAL-GAP எனப்படும் விவசாய உத்தியோகத்தர் களுக்கான சந்தைப்படுத்தல் வசதிகள் பற்றிய e- படிப்பு முறையிலான பயிற்சியில் ஒரு உத்தியோகத்தர் கலந்து கொண்டனர்.

தொழில்நுட்ப பரிவர்த்தனை

- தொழில் பயிற்சி பாடசாலையின் 4 மாணவர்கள் படிப்பின் பின்னரான 6 மாதப் பயிற்சியைப் பெற்றார்கள்
- திறந்த பல்கலைகழக மாணவர்கள் 4 பேர் தமது பயிற்சியை பெற்றார்கள்
- 150 பாடசாலை மாணவர்களுக்கு 3 பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டன.
- பயிர் மருத்துவ ஆலோசனை கருத்தரங்குகளில் எமது உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டார்கள்
- நான்கு பயிற்சி வகுப்புகளில் 20 விரிவாக்க உத்தியோகத்தர்களும், 60 விவசாயிகளும் விதை உருளைக் கிழங்கு உற்பத்தி சம்பந்தமான பயிற்சியைப் பெற்றார்கள்.
- ஹற்றன் நஷனல் வங்கியின் மூலம் நடாத்தப்பட்ட விவசாயிகளுக்கான பயிற்சிப் பட்டறையில் எமது உத்தியோகத்தர்கள் வளவாளராகக் கலந்து கொண்டனர்
- கண்ணொறுவையில் உள்ள சேவைக்கால பயிற்சி நிலையத்தில் விவசாயத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட நோய், பூச்சியியல் சம்பந்தமான பயிற்சியை எமது உத்தியோகத்தர் நடாத்தினர்.
- இழைய வளர்ப்பு, மண் ஆய்வு சம்பந்தமான பயிற்சி 28 ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது.
- இந்நிலையத்திற்கு வருகை தந்த 60 பல்கலைகழக மாணவர்கள், 310 பாடசாலை மாணவர்கள், 38 தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள், 60 ஆசிரிய மாணவர்களுக்கு பல்வேறு துறைகளில் பயிற்சி வழங்கப்பட்டது.
- ஏழு இளங்கலைமானி இறுதியாண்டு மாணவர்கள் தமது ஆராய்ச்சிகளை இந்நிலையத்தில் மேற் கொண்டார்கள்
- மத்திய மாகாண விவசாயத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட 04 பயிர் நோய் கண்டு பிடிக்கும் நிகழ்வுகளில் எமது உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.
- 50 விவசாயிகள் கூட்டெரு தயாரிப்பிலும், உரப் பாவனையிலும் பயிற்றுவிக்கப்பட்டனர்
- 28 விவசாயிகள் காளான் வளர்ப்பில் பயிற்றுவிக்கப்பட்டனர்.

2011 ஆம் ஆண்டுக்கான திட்ட வரைபு

ஆராய்ச்சி

பயிராக்கவியல்

- 2010, 2011ம் வருடங்களில் இறக்குமதி செய்யப்பட்ட 20 உருளைக் கிழங்கு இனங்கள் பற்றிய ஆய்வு.
- வாயு ஊடக வளர்ப்பிற்கான புதிய உரக் கலவையைத் தயாரித்தல்
- வேறுபட்ட உருளைக்கிழங்கு இனங்களின் திரவ ஊடக வளர்ப்பிற்கும், மண்ணற்ற ஊடக வளர்ப்பிற்கும் உகந்த உரக் கலவையைத் தயாரித்தல்

இனவிருத்தி

- நுவரெலிய, பதுளை மாவட்டங்களில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட 10 உருளைக்கிழங்கு இனங்கள் பற்றிய ஆய்வு (NCVT)
- CIPல் இருந்து பெறப்பட்ட புதிய முலவுயிருக்கள் பற்றிய ஆய்வு
- உள்நாட்டில் உருவாக்கப்பட்ட புதிய உருளைக் கிழங்கு இனம் பற்றிய ஆய்வு
- உஷ்ண நிலைமைகளுக்குத் தாக்குப்பிடிக்கக் கூடிய உருளைக்கிழங்கு இனங்கள் பற்றிய ஆய்வு

இழைய வளர்ப்பு

- கதிர் வீச்சின் மூலம் பக்டீரியா வாடல் நோய்க்குத் தாக்குப் பிடிக்கக் கூடிய உருளைக் கிழங்கு இனங்களை உருவாக்கல்
- மகரந்த வளர்ப்பிற்கு உகந்த ஊடகத்தையும் ஏனைய காரணிகளையும் கண்டறிதல்
- கதிர் வீச்சின் மூலம் புதிய லில்லியம் இனங்களை உருவாக்குதலும் அவை பற்றிய ஆய்வும்

பூச்சியியலும் நெமட்டோட்டியலும்

- கறுப்பு வெட்டுப் புழுக்களை செயற்கையாக வளர்க்கும் முறைகள்
- இலகுவான முறையில் இலைச் சுரங்க மறுக்கும் புழுவின் பல்வேறு படிகளைக் கண்ட றிதல்
- ஸ்பினோ சாட் பூச்சி நாசினி மூலம் இலைச் சுரங்க மறுபானைக் கட்டுப்படுத்தல்
- டயபென்தியுரோன் பூச்சி நாசினியைப் பாவித்து உருளைக்கிழங்கு பயிரில் உறிஞ்சியுண்ணும் பூச்சித் தொகுதியைக் கட்டுப்படுத்தல்

நோயியல்

- அரச விதை பண்ணைகளில் பக்டீரிய வாடல் நோய் சம்பந்தமான ஆய்வு
- கரட் கிழங்குகள் பிளவுபடுவதற்கான காரணிகள் பற்றிய ஆய்வு
- கதிர் வீச்சினால் பெறப்பட்ட உருளைக்கிழங்கு இனங்களை பக்டீரியா வாடல் நோய்க்கு எதிராக பரீட்சித்தல்
- பின்கூற்று வெளிறல் நோயைக் கட்டுப்படுத் துவதற்காக புதிய பூஞ்சண நாசினிகளைக் கண்டறிதல்

மண் ஆய்வு

- கூட்டெரு பாவனை மூலம் கரட், உருளைக் கிழங்கு பயிர்களுக்கான இரசாயன உரப் பாவனையைக் குறைத்தல்
- விதை உருளைக்கிழங்கு உற்பத்தியில் நைதரசன் பசளையின் தாக்கம்

மரக்கறிப் பயிர்கள்

- சரியான பயிராக்கவியல் முறைகளின் மூலம் கரட் பயிரின் விளைச்சலின் தரத்தை உயர் த்துதல்
- கரட், பீட்ருட் போன்ற பயிர்களில் விதை உற்பத்தி முறைகளை உருவாக்குதல்
- புதிய குளிர் பிரதேச மரக்கறி இனங்கள், பற்றிய ஆய்வு

பழப்பயிர்கள்

- ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சித்திரசு இனப் பயிர்கள் பற்றிய ஆய்வு
- பேரிக்காய் இனங்கள் பற்றிய ஆய்வு

அபிவிருத்தி நடவடிக்கைகள்

பயிராக்கவியல்

- 5 மில்லியன் G_0 சிறு விதை உற்பத்தியும், விவசாயிகளிடையே பகிர்ந்தளிப்பும்,
- புதிய விதை உற்பத்திப் பிரிவை ஸ்தாபித்தல்
- புதிய திரவ ஊடக வளர்ப்புத் தொகுதி ஒன்றை 8m x 50m பொலித்தீன் வீட்டில் நிர்மானம் செய்தல்

இளைய வளர்ப்பு

- நோயற்ற உருளைக்கிழங்கு பயிர்களை *invito* மூலம் வளர்த்தல்
- உருளைக்கிழங்கு மூலவுயிர்ருருப் பாதுகாப்பு
- ஸ்ரோபெரி, சன்டலர் இனத்தின் ஆய்வு கூட வளர்ப்பும் வயல் வளர்ப்பும்
- பேபிஸ் ப்ரெத், லில்லியம், ஜேர்பரா என்பன வற்றின் ஆய்வு கூட வளர்ப்பு
- பேரிக்காய் இனம் 'ரகங்கல தெரிவு' நடுகைப் பொருள் உற்பத்தி

மண் விஞ்ஞானம்

- 60 தொன் கூட்டெரு தயாரித்தல்
- கூட்டெரு தயாரிப்பு முறைகளை கிராமங்க ளுக்கு அறிமுகப்படுத்துதல்

உத்தியோகத்தர் பட்டியல்

பதவி	*எண்ணிக்கை*
ஆராய்ச்சிப் பொறுப்பாளர்	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	04
திட்டமிடல் உதவியாளர்	03
விவசாய போதனாசிரியர்	08
ஆராய்ச்சி உதவியாளர்	04
ஆராய்ச்சி உப உதவியாளர்	02
பொது முகாமைத்துவ உதவியாளர்	03
சாரதி	02
நிரந்தர தொழிலாளர்	21
ஒப்பந்த தொழிலாளர்	37
மொத்தம்	***85***

2.2.7 விவசாய ஆராய்ச்சி நிலையம் (வி.ஆ.நி.) தெலிஜ்ஜவில

தென் மாகாணத்தில் குறிப்பாக காலி, மாத்தறை மாவட்டங்களிலுள்ள விவசாய பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையிலான விவசாய ஆராய்ச்சி நடவடிக்கைகளை அமுல்படுத்துவதே தெலிஜ்ஜவில விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் முக்கிய பொறுப்பாகும். இந்த ஆராய்ச்சியின் முக்கிய பகுதி பழங்கள்,மரக்கறி,கிழங்கு வகைகள் போன்ற பயிர்களின் பயிராக்கவியல், பயிர் பாதுகாப்பு என்பன பற்றியதாகும். அத்தோடு 'நாம் பயிரிடுவோம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்', "ஒரு கிராமத்திற்கு ஒரு பயிர்" போன்ற அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்கள், சேதனப் பசளையின் உற்பத்தியும், பிரபல்யப்படுத்தலும், மாதிரி பண்ணைகளை நிறுவுதல், விவசாயியைச் சார்ந்த விதைஉற்பத்தி (பிரஜா மூலிக பீஜ நிஷ்பாதனய), ஊவா மாகாணத்திலுள்ள செவனகல பிரதேசத்தில் வாழைச் செய்கையை விரிவாக்கல் போன்ற விசேட செயற் திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டன. நடுகைப் பொருட்களை உற்பத்தியாக்கல், மாதிரிச் செய்து காட்டல்கள், தொடர்ந்து நிலைக்கக்கூடிய தொழில்நுட்பங்களை உருவாக்குதல், விசேடமாக தென் மாகாணத்திலுள்ள விரிவாக்க அதிகாரிகளுக்கும், விவசாய சமூகத்தினருக்கும் தகவல்களை பரப்புதல் போன்ற செயற் திட்டங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

பாதீடு

2010 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடும் செலவழிக்கப்பட்ட தொகையும் அட்டவணை 2.2.7.1 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.2.7.1 : வருடாந்த பாதீடு 2010 (ரூபா)

தலைப்பு	*ஒதுக்கீடு*	*செலவு*	*செலவு%*
மூலதனம்	726,125.00	548,786.00	76
மீண்டுவரும் செலவு	3,118,011.00	1,772,952.05	25
செயற்திட்டங்கள்			
சேதனப் பசளையின் உற்பத்தியும் பாவனையும்	665,000.00	549,756.00	83
நாம் பயிரிடுவோம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்			
– வாழைப் பயிரின் உற்பத்தியை அதிகரித்தல் (பயிர் தலைவர்)	1,000,000.00	871,274.00	87
– வாழையின் உற்பத்தியை அதிகரித்தல் (நடுகைப்பொருட்கள்)	1,000,000.00	666,677.00	67
– பழப் பயிர்கள் (அன்னாசி)	48,000.00	43,039.00	90
– உள்ளூர் உணவு உற்பத்தி செயல்முறை (இலை மரக்கறிகள்) "ஒரே பயிர் ஒரே கிராமம்"	100,000.00	87,732.00	88
– அன்னாசி	500,000.00	49,145.00	98
– மா	55,000.00	48,835.00	89
– காளான்	125,500.00	118,561.00	96
(தயட்ட கிருல) தேசத்திற்கு மகுடம்	2,085,000.00	2,084,229.00	150
மொத்தம்	***8,972,135.00***	***5,847,027.00***	***65***

முன்னேற்றம்

விஷேட செயற்திட்டங்கள்

நாம் பயிரிடுவோம், நாட்டைக் கட்டியெழுப்புவோம்

வாழைப் பயிரின் உற்பத்தியை அதிகரித்தல்

- பதினெட்டு இடங்களில் (18) ஐந்து (5) ஹெக்டயர் நிலப்பரப்பில் நவீன தொழில் நுட்பங்களை எடுத்துக் காட்டும் மாதிரித் துண்டங்களை நிறுவுதல் பூர்த்தியாக்கப்பட்டது.
- வடமேற்கு, மத்திய, ஊவா, தென், வட மத்திய மாகாணங்களில் சிபாரிசு செய்யப்பட்ட வர்க்கங்களில் தாய்த் தாவரங்களின் பயிர்ச்செய்கைகள் ஆறு நிறுவப்பட்டன. நடுகைப் பொருட்கள் ஆண்டின் இறுதியில் விவசாயிகளுக்கு வழங்கப்படக் கூடியதாக விருக்கும்.
- மரபு ரீதியான நடுகைப் பொருட்கள் உற்பத்தியாக்கல் முறையின் மூலம் 50,000 வாழைக் கன்றுகள் (உற்பத்தி இலக்கு 30,000 கன்றுகள்) உற்பத்தியாக்கப்பட்டன. இவற்றில் 25,000 கன்றுகள் கிழக்கு மாகாணத்திற்கு வழங்கப்பட்டன.

அன்னாசியின் உற்பத்தியை அதிகரித்தல்

- உற்பத்தி இலக்கான 8000 உறிஞ்சிகள் உற்பத்தி செய்யப்பட்டன.
- 2500 உறிஞ்சிகள் அம்பேபுச பண்ணைக்கு வழங்கப்பட்டன.

ஒரு கிராமத்துக்கு ஒரு பயிர்

இலை மரக்கறி

- உற்பத்தி இலக்கை தாண்டும் வகையில் 100 கி.கி அடிப்படை நடுகைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

காளான்

- இரண்டு (2) மாதிரிக் கிராமங்கள் நிறுவப்பட்டன.

அன்னாசி

- 1200 கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன.

சேதனப் பசளை உற்பத்தி

- 15 பயிற்சி வகுப்புக்கள் நடத்தாப் பட்டன.
- 58 தொன் கூட்டெரு உற்பத்தி செய்யப்பட்டது.
- அன்னாசி, வாழை, கொய்யா என்பவற்றிற்கான ஒன்றிணைந்த தாவரப் போசணை முறை நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

மொனராகலை மாவட்டத்திலுள்ள செவனகல பிரதேசத்தில் வாழைப் பயிர்ச் செய்கையில் விஸ்தரிப்பு

- 262 ஏக்கரில் வாழை நடப்பட்டது.
- வாழைப் பயிர் செய்கையில் உமிக் கரி இடுவதை ஊக்குவிப்பதற்காக உமியைக் கரியாக்கும் 16 இயந்திரங்கள் (Kunthanies) கொடுக்கப்பட்டன.

ஆராய்ச்சி

அன்னாசிச் செய்கையில் களைகளை கட்டுப்படுத்துவதற்காக பொருத்தமான மூடு பயிர்களை இனங்காணல்

தென் பகுதியில் அன்னாசிச் செய்கையை விஸ்தரிப்பதற்கு முக்கிய தடையாக விருப்பது களைகளை கட்டுப்படுத்துவதில் உள்ள சிரமமேயாகும். இந்தப் பிரச்சினையை எதிர்கொள்வதற்கு இலை மரக்கறிகளை மூடுபயிர்களாக வளர்ப்பது வினைத்திறனான சூழலுக்கு பாதிப்பற்ற களைகளை கட்டுப்படுத்தும் ஒரு நுட்பமாக இனங்காணப்பட்டது. விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த மாநாட்டு மலரில் பிரசுரித்த பின்னர் இந்த நுட்பம் விவசாயிகளின் தோட்டங்களிலும் பாவிக்கப்படும்

இலைகளுக்காக மேற்கொள்ளப்படும் வாழைச் செய்கையில் வாழைக்குலையின் தரத்தை அதிகரிப்பதற்கான நுட்பத்தை விருத்தி செய்தல்

இலைகளுக்காக மேற்கொள்ளப்படும் வாழைச் செய்கையில் இலைகளே ஆரம்பக்கட்ட அறுவடையின் குறியாகவிருக்கும் பொழுது தாவரங்கள் அதிலும் முக்கியமாக பாதகமான வளரும் சூழ்நிலைகளில் தரம் குறைந்த குலைகளை உற்பத்தி செய்யும். எனவே வாழைக் குலையின் தரத்தை முன்னேற்றுவதற்கு பொருத்தமான நுட்பமொன்றை விருத்தி செய்வது முக்கியமான விடயமாக இனங்காணப்பட்டது.

வாழைக் குலையின் சீப்புக்கள் வெளி வருவது நிறைவேறும் முன்னரே 4 சீப்புக்களை மட்டும் விட்டு குலையானது வெட்டப்படுகின் றது. (Debelling). இந்த செயன்முறையானது வாழைக் குலையின் நிறையை 19% ஆலும் மொத்த விளைச்சலை 18% ஆலும் குறைத்தது. ஆனாலும் சீப்பின் சராசரி நிறையானது 55% ஆலும் அதிகரி க்கப்பட்டது. பழங்களின் வெளித்தோற்றமும் சிறந்து காணப்பட்டது. எனவே இலைக்காக மேற் கொள்ளப்படும் வாழைச் செய்கையில் 'சீப்புக்களை குறைக்கும்' (debelling technique) நுட்பமானது வாழைக் குலையின் தரத்தை முன்னேற்றும் ஒரு நல்ல செயன்முறையாக இனங் காணப்பட்டது.

இந்த ஆராய்ச்சி முடிவானது விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த மாநாட்டில் சமர் ப்பிக்கப்பட்டது. விவசாயிகளின் தோட்டங்களில் மாதிரிச் செயன்முறைகளோடு விவசாயிகளை அறிவுறுத்தும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

தரமான பழங்களை பெறுவதற்கு மாமர ங்களில் பொருத்தமான மரத்தை பரிபாலிக்கும் பயிற்சி முறைகளை அபிவிருத்தி செய்தல்

குட்டையான மரங்களில் நல்ல தரமான பழங்களை பெறுவதற்கு மரத்தை பரிபாலிக்கும் பயி ற்சி முறைகள் சோதனையிடப்பட்டன. தோட்ட த்திலே ஒட்டப்பட்ட (Insitu grafted) அடர் த்தியாக நடப்பட்ட (10மீ × 5மீ) Y வடிவத்தில் பயிற்றுவிக்கப்பட்ட இரண்டு கிளைகள் விடப்பட்ட மரங்களின் ஒட்டுக்கிளைகள் 100% தப்பிப் பிழைத்ததுடன் நல்ல வளர்ச்சியையும் காண்பித்தன. தென் பிரதேசத்தின் 6 இடங்களில் இந்த சோதனைகள் தொடர்ந்தும் மதிப்பிடுவதற்காக செய்யப்படுகின்றன. இந்த தொழில்நுட்பமானது தொழில்நுட்பத்தை வெளியிடும் செயற்குழுவுக்கு 2011ம் ஆண்டு சமர் ப்பிக்கப்படும்

சிப்பிக் காளான் *(Oyster mush roon)* செய்கைக்கு பாவிக்கப்பட்ட ஊடகத்தை (SMS), மேலும் வளப்படுத்துவதற்கு பாவிக்கக்கூடிய சாத்தியப்பாட்டை அறிதல்

காளான் செய்கையில் ஏற்கெனவே பாவிக்கப்பட்ட வளர்ப்பு ஊடகமானது (SMS) விவசாயத் திணைக்களத்தினால் சிபாரிசு செய்யப்பட்ட வளர்ப்பு ஊடகத்துடன் வெவ்வேறு வீதத்தில் கலந்து ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது. காளான் வளர்ப்பு ஊடகத்தை மீண்டும் பாவிக்கக்கூடிய சாத்தியமிருப்பதை முடிவுகள் தெரியப்படுத்தின. இந்த முடிவுகளை உறுதிப்படுத்த தொடர்ந்தும் ஆராய்ச்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன.

கனோடேர்மா செய்கையில் எடுக்கப்பட்ட ஆரம்ப அவதானிப்புகள்

இலங்கைக் காடுகளில் சேகரிக்கப்பட்ட மூன்று வெவ்வேறு இன வகை கனோடேர்மா காளான்கள் (ஊதா, மண்ணிறம், செம்மஞ்சள்) இந்த ஆய்வுக்கு பயன்படுத்தப்பட்டன. உருளைக்கிழங்கு டெக்ஸ்ரோஸ் ஏகாரிலும் மோல்ற் பிரித்தெடுப்பு ஏகாரிலும் பூஞ்சணவிழையங்கள் இழைய வளர்ப்பு செய்யப்பட்டன. மாமரத்தூள், அரிசிதவிடு, ஜிப்சம், சீனி என்பன சேர்த்துச் செய்யப்பட்ட கலவையில் கனோடோமா காளான் இனங்கள் தயாரிக்கப்பட்டன. ஊதா வகையில் மாத்திரம் பூஞ்சண விழையங்கள் வளர்ந்து காணப்பட்டது அவதானிக்கப்பட்டது. இதற்கு ஏறக்குறைய 22 நாட்கள் எடுத்தன. காட்டு காளானுக்கு ஒரு செயற்கை முறையிலான செய்கை நுட்பம் வெற்றிகரமாக பூரணப்படுத்தப்பட்டது.

காளானின் பிரத்தெடுப்பிற்கு உயிரியல் இரசாயன பகுப்பாய்வை தொடர்வதற்கு வசதிகள் குறைந்து காணப்பட்டதனால் இந்த ஆய்வை தொடர்ந்து மேற்கொள்ள முடியவில்லை.

ஊடகத்தை தாமதமாக போசணைகளை விடுவிக்கும் ஊடகத்தினால் பிரதியீடு செய்யும் பொழுது ***P. ostreatus*** காளானின் வளர்ச்சி, கனியமாதல் விதங்கள்

விவசாயத் திணைக்கள சூத்திரமான து மாவிற்கு பதிலாக நசுக்கப்பட்ட பாசிப்பய ற்றை பாவித்து செய்யப்பட்ட பரிகரணத்துடன் ஒப்பிடப்பட்டது. இந்த பரிகரணத்தினால் சிப்பிக் காளானின் வளர் ச்சியிலும் விளைச்சலிலும் குறி ப்பிட்டதக்க தாக்கம் இல்லையென விளைவுகள் காட்டின.

அமராந்தஸ் (முளைக் கீரை) NCVT

சிவப்பு அமராந்தஸ் (சிவப்பு முளைக்கீரை) தியபலாகொடை, தூய பச்சை, DOA பச்சை ஆகிய வர்க்கங்கள்; விளைச்சல், பூச்சித் தாக்கங்கள் என்பவற்றிற்கு ஒப்பிடப்பட்டன. தியபலாகொடை பூஞ்சண தாக்கம், வண்டுகளின் பாதிப்பு என்பவ ற்றிற்கு கூடுதலாக எதிர்ப்புத் தன்மையையும் சிவப்பு முளைக்கீரை குறைந்த எதிர்புத் தன்மையையும் காட்டின. தியபலாகொடை கூடுதலான விளைச்சலையும், கூடுதலான (பழுதாகமல் இருக்கும்) வாழ்க்கைக் காலத்தையும் கொண்டிருந்தன.

ஏனைய சேவைகள்

- விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், NGOs தனியார் கம்பனிகளின் பிரதிநிதிகள் என ஏறக்குறைய 1200 பேர் ஆராய்ச்சி நிலையத்திற்கு வந்து தொழில்நுட்ப உதவிகளையும் நடுகைப் பொருட்களையும் பெற்றுச் சென்றனர்.
- 17 செய்முறை வகுப்புகளும், அறிவூட்டும் நிகழ்ச்சிகளும் ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், பண்ணைப் பெண்கள் முதலீடு செய்வோர், சமூர்த்தி உதவிகளை பெறுவோருக்கு நடத்தப்பட்டன.
- ஏழு (07) வானொலி நிகழ்ச்சிகளும் 02 தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. பொறுப்பாகவுள்ள 16 பயிர்களிலும் புதினப் பத்திரிகைகளில் கட்டுரைகள் வெளியாகின.

2011 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள்

- வாழை, அன்னாசி, மா, கிரிஅல, சித்திரசு, கொய்யா, குறைவானப் பாவனை கொண்ட பழப்பயிர்கள், காளான், இலைமரக்கறிகள் என்பவற்றில் ஏற்கனவே செய்யப்படும் ஆராய்ச்சிகள் தொடரப்படும்.
- ஒரு ஹெக்டர் நிலப்பரப்பில் பழப்பயிர்களை செய்தல்
- வெலிகம வாடலினால் பாதிக்கப்பட்ட தென்னை நிலங்களினை பன்முகப்படுத்தும் முகமாக 100,000 அன்னாசிகள், 5000 வாழைக் குட்டிகளை உற்பத்தி செய்தல்
- 5 மாதிரிக் கிராமங்களை நிறுவுதல்
- கழிவறைத் தொகுதிகளையும், வாகன தரிப்பிடங்களையும் கட்டும் வேலையை நிறைவு செய்தல்.

உத்தியோகத்தர் பட்டியல்

பதவி நிலை	*எண்ணிக்கை*
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	02
நிகழ்ச்சி திட்ட உதவியாளர்	03
விவசாயப் போதனாசிரியர்	06
ஆராய்ச்சி உதவியாளர்	04
ஆராய்ச்சி உப உதவியாளர்	01
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	03
சாரதி	02
காவலாளி	04
சுகாதாரத் தொழிலாளி	01
தொழிலாளி	04
ஒப்பந்த தொழிலாளி	33
மொத்தம்	***63***

2.2.8 விவசாய ஆராய்ச்சி நிலையம் (வி.ஆ.நி.) கிராந்துருக்கோட்டை

கண்ணொறுவையில் உள்ள பூங்கனியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் கிராந்துருக்கோட்டை விவசாய ஆராய்ச்சி நிலையமானது மகாவலி வலயத்திலுள்ள விவசாய நிலங்களில் பயிர்ச் செய்கைகளிலுள்ள பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் வகையிலான ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதையே பொறுப்பாகக் கொண்டுள்ளது. மரக்கறிகள், பழங்கள், கிழங்குவகைகளின் உற்பத்தியை முன்னேற்றும் நோக்கத்துடன் ஆராய்ச்சி, அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டது. நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களிலுள்ள முக்கிய காரியங்களை அமுல்படுத்தும் பொறுப்பு இதற்கு அண்மையில் வழங்கப்பட்டது. அதன் பின் 5 ஹெக்டயரில் கலப்பின விதை நெல் உற்பத்தி செய்யும் விதத்தில் இது விஸ்தரிக்கப்பட்டது.

ஆராய்ச்சி உற்பத்தி நடவடிக்கைகளுடன் வி.ஆ.நி.ஆனது உத்தியோகத்தர்கள், விவசாயிகள், பள்ளிக்கூட மாணவர்கள், வேறு நிறுவனங்களின் அதிகாரிகள் போன்றோருக்கு ஒழுங்கான பயிற்சி வகுப்புக்களை நடத்துவதன் மூலம் மகாவலி சீ வலயத்திலுள்ள விவசாய சமூகத்தினருக்கு சேவை செய்கின்றது.

பாதீடு

2009 ஆம் ஆண்டில் வெவ்வேறு வாக்குகள் கருத்திட்டங்களின் கீழ் பெறப்பட்ட ஒதுக்கீடு, ஏற்பட்ட செலவு என்பன அட்டவணை 2.2.8.1 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.2.8.1 : வருடாந்த பாதீட்டு திட்டம் 2010 (ரூபா)

தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு %
மூலதனம்	742,300	619,985	84
மீண்டு வரும் செலவு	2,388,787	1,587,302	66
செயற்திட்டங்கள்			
• கலப்பின சோளச் செயற்றிட்டம்	375,000	320,821	86
• சேதனப் பசளை உற்பத்தியும் அதனை ஊக்குவிக்கும் செயற்றிட்டமும்	951,800	572,559	60
• NCVT – மரக்கறி	40,000	39,811	100
• ஒரு கிராமத்திற்கு ஒரு பயிர்	175,000	105,360	60
• விதை நெல் உற்பத்தி BG 250	700,000	606,050	87
• வாழையில் உற்பத்தித் திறனை அதிகரித்தல்	200,000	157,619	76
• பப்பாசி விதை உற்பத்தி (ரத்னா)	150,000	136,280	91
மொத்தம்	**5,722,887**	**4,140,057**	**72**

முன்னேற்றம்

விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

கலப்பின சோள விதை உற்பத்தி

2010 ஆம் ஆண்டு பெரும்போகத்திலும் சிறு போகத்திலும் ஒரு ஹெக்டயர் (01 ha) இல் "சம்பத்" வர்க்கம் பயிரிடப்பட்டு 249 கி.கி. F_1 விதைகள் பெறப்பட்டன.

விதை நெல் உற்பத்தி

2010 ஆம் ஆண்டில் 07 தொன் Bg 300 வர்க்கமும் 16.3 தொன் Bg 250 வர்க்கமும் உற்பத்தி செய்யப்பட்டு விதை, நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு கையளிக்கப்பட்டன.

நடுகைப் பொருட்கள் உற்பத்தி

2010 ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட நடுகைப் பொருட்கள் அட்டவணை 2.2.8.2 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

- நடுகைப் பொருட்கள் உற்பத்திக்காக கப்பல், கதலி, சாம்பல் வாழை, சீனி வாழை என்பனவற்றின் தாய் தாவரங்கள் 0.5 ஹெக்டரில் நடப்பட்டன.
- 5000 உறிஞ்சிகளை நடுகைப் பொருட்களாக உற்பத்தி செய்வதற்காக 0.5 ஹெக்டயரில் வாழை நாற்றுமேடை நிறுவப்பட்டது.

ஆராய்ச்சி

பழங்கள்

- உள்நாட்டு வெளிநாட்டு சிற்றசு வர்க்கங்களை மதிப்பிடுதல் தொடர்ந்து செய்யப்பட்டது.
  - உள்நாட்டு வர்க்கங்கள் –07 (ஆரோக்யா, பிபிலை இனிப்பு, MKD, ரஹங்கல தெரிவு, HOCR 23, HOCR 25, HOCR 29)
  - வெளிநாட்டு வர்க்கங்கள் – ஜப்பானி லிருந்து பெறப்பட்ட 08 வர்க்கங்கள் (NCN, MYG, OTA, NAN, OUT, YSD, SRD, KYM)
- பப்பாசி, அன்னாசி ஆகியவற்றின் வளர்ச்சியில் வெவ்வேறு விதமான சேதன, அசேதன இரசாயனப் பசளைகளின் சேர்க்கைகளின் தாக்கத்தை அறிதல்.

நெல் (NCRVT)

3 மாத, 3 1/2 மாத, 4 1/2 மாத நெல் வர்க்கங்கள் 2010ம் ஆண்டில் சோதனையிடப் பட்டன.

மரக்கறி

தேசிய ஒருங்கிணைந்த வர்க்கங்களின் பரிசோதனை NCVT பின்வரும் மரக்கறிகளுக்கு நடாத்தப்பட்டன.

வெண்டி	– 09 வர்க்கங்கள்
மரக்கறி கௌபீ	– 04 வர்க்கங்கள்
கத்தரி	– 05 வர்க்கங்கள்
கெக்கரி	– 08 வர்க்கங்கள்
கௌபீ	– 04 வர்க்கங்கள்

அட்டவணை 2.3.8.2: 2010 ஆம் ஆண்டில் உற்பத்தியாக்கப்பட்ட நடுகைப் பொருட்கள்

பயிர்	வர்க்கங்கள்	2010ம் ஆண்டு உற்பத்தி
வாழை	சீனி கதலி, புளிகதலி, கப்பல், சாம்பல், கன்டுல, ஏனைய வர்க்கங்கள்	4682 உறிஞ்சிகள்
பப்பாசி	ரத்னா	1515 பைகளில் வைக்கப்பட்ட கன்றுகள்
அன்னாசி	மொறீஸியஸ்	9806 பைகளில் வைக்கப்பட்ட கன்றுகள்
சேம்பு (கிரி அல)	இசுறு	4700 கன்றுகள்
மரவள்ளி	கிரிகாவடி,யாழ்ப்பாணத் தெரிவு	8700 மீட்டர் தண்டுகள்
வற்றாளை	கண்ணொறுவ வெள்ளை, ரணபிம அமா, தவல	216 கி.கி. தண்டுத் துண்டங்கள்
மா	கறுத்த கொழும்பான், விலாட்	149 பைகளில் இடப்பட்ட கன்றுகள்
ட்ரகன் பழம்		74 பைகளில் வைக்கப்பட்ட கன்றுகள்

சேதனப் பசளை உற்பத்தியும் அதனை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டம்

47 தொன் கூட்டெரு உற்பத்தி செய்யப்பட்டதுடன் 760 கி.கி. உட் செலுத்தியாகப் பாவிக்கப்படுவதற்கு விநியோகிக்கப்பட்டது. (2 கி.கி. பக்கற்றுகள் – 380).

தொழில்நுட்பத்தைப் பரவச் செய்தல்

இந்த ஆண்டில் பின்வரும் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டன.

- கூட்டெரு உற்பத்தி (03 நிகழ்ச்சித் திட்டங்களில் 598 பேர் பங்குபற்றினர்.)
- மாதிரிக் கிராம நிகழ்ச்சித் திட்டம் (01 நிகழ்ச்சித் திட்டத்தில் 10 பேர் பங்கு பற்றினர்

பயிற்சி

- பலவிதமான பங்களிப்புக்களுடன் பன்முகப்படுத்தப்பட்ட பண்ணை செய்கை முறைகளின் மூலம் உணவைப் பாதுகாத்தலும், பத்திரப்படுத்தலும் என்ற தலைப்பில் சர்வதேச கூட்டுறவு முகவர் அமைப்பின் மூலம் தாய்லாந்தில் (3 ம் திகதி வைகாசி மாதத்திலிருந்து 24ந் திகதி வைகாசி மாதம் வரை – 2010) திரு. ஏ.டப்ளியு.ஏ.சமரசிங்க, விவசாயப் போதனா சிரியர் பயிற்சி பெற்றுக் கொண்டார்.

2011 ஆம் ஆண்டுக்கான திட்டம்

- "சம்பத்" வர்க்கத்தின் கலப்பின சோள விதை உற்பத்தி
- தேர்ந்தெடுக்கப்பட்ட மரக்கறிகளின் தேசிய ஒருங்கிணைந்த வர்க்கங்களின் பரிசோதனை.
- நெல்லின் தேசிய ஒருங்கிணைந்த வர்க்கப் பரிசோதனை
- சேதனப் பசளை உற்பத்தியும் அதனை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டமும்.
- ரத்னா பப்பாசியின் அடிப்படை மற்றும் நியம விதை உற்பத்தி
- BG 250 வர்க்கத்தின் விதை நெல் உற்பத்தி
- IPNS நிகழ்ச்சித் திட்டம் (ஒன்றிணைந்த தாவரப் போசணை நிகழ்ச்சித் திட்டம்).
- மரக்கறி, பழவகைகள், கிழங்கு வகைகளின் விதை மற்றும் நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்தல்.
- விவசாயிகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு விரிவாக்க பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.

அலுவலர்களின் நிரல்

பதவி நிலை	எண்ணிக்கை
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	02
விவசாயப் போதனாசிரியர்	06
ஆராய்ச்சி உதவியாளர்	02
ஆராய்ச்சி உப உதவியாளர்	02
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	01
உழவு இயந்திர இயக்குநர்	01
களஞ்சிய உழியர்	01
தச்சன்	01
காவலாளி	01
தொழிலாளி (தேர்ச்சி பெறாத) (வகுப்பு 111)	28
தொழிலாளி (ஒப்பந்த)	26
மொத்தம்	73

2.3 நெல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவகம், (நெ.ஆ.அ.நி.) பத்தலகொட

அதிக விளைவு தரும் பிரதேசங்களில் விளைச்சல் இடைவெளி அதிகமாகக் (2-3 தொன்/ஹெக்டயர்) காணப்படும், அதேவேளை சாதகமான சாதகமற்ற சூழல் நிலைமைகளில் கீழ் அது இன்னும் அதிகமாகும். மானிய அடிப்படையில் பசளை வழங்கும் போதும் பண்ணையாளர் மட்டத்தில் இருக்கக் கூடிய தொழில் நுட்ப அறிவும் இந்நிலைமையை மாற்றமடையச் செய்கிறது.களை முகாமைத்துவம், சூழல் தொகுதிக்கு ஏற்ற பயிராக்கவியல் முகாமைத்துவ நடவடிக்கைகள், நோய், பீடை முகாமைத்துவம், தரமான விதை நெல் பாவனை போன்றன இன்னும் உரிய மட்டத்தை அடையவில்லை. சூழல் தொகுதிகளுக்கு சாதகமான, சிபாரிசு செய்யப்பட்ட, பாரம்பரிய மற்ற தொழில்நுட்பங்கள் விவசாயிகளின் சமூக பொருளாதார தடை நிலைமைகளை விளக்கு கின்றது. சாதகமான சூழல் தொகுதிகளுக்கு சிபாரிசு செய்யப்பட்ட பழைமையல்லாத தொழில்நுட்பங்கள் பண்ணையாளர் மட்ட சமூக பொருளாதார தடைகளை ஓரளவு விளக்கு கின்றது. எனினும் சாதகமற்ற சூழல் தொகுதிகளில் பொருத்தமான வர்க்கங்களும், அதனோடு இணைந்ததொழில்நுட்பங்களும் விளைச்சல் இடைவெளியை மேலும் அதிகரிக்கின்றது.

தொடர் கவனிப்புடன் கூடிய சாதகமான நெற் சூழல் தொகுதியில் மேலதிக விளைச்சல் அதிகரிப்புடன் மழைவீழ்ச்சியை அடிப்படையாகக் கொண்ட சூழல் தொகுதியில் உற்பத்தியை அதிகரிக்க ஓர் புதிய கவனம் எடுக்கப்பட்டது. IRRI பிலிப்பைன்ஸிலிருந்து கரு மூலவள வலைத் தொடர்பின் ஊடான உதவி மூலம், வெள்ளம் தேங்கும் பிரதேசங்களிலும் நீர்குறைவான இடங்களிலும் பயிரிடக்கூடிய நெல்லினங்களை அடையாளம் காண்பதற்குரிய வேலைகளை RRDI தொடர்கிறது.

நெல்லானது உயிர்ப்புள்ள (நோய், பீடைத் தாக்கத்திற்கான மாற்றம்) உயிர்ப்பற்ற (நீர், வெப்பநிலைக்கான தகைப்பு) நிலைமைகளை சந்தித்து வளர்வதால், நெற் செய்கையில் காலநிலை மாற்றம் ஏற்படுத்தும் மாற்றங்களை நிவர்த்தி செய்வதற்கான நீண்ட காலத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுதல் வேண்டும். நிகழ் காலத்திலும் எதிர் காலத்திலும் காணப்படுகின்ற, காணப்படும் பிரச்சினைகளான மண், சுற்றாடல் பாதிப்பு, பாரிய அளவிலான களை நாசினிகளில் தங்கியிருத்தல், பசளைப் பிரயோக வினைத்திறன் ஆகியவற்றை எதிர்நோக்கி வெற்றி பெறும் வகையில் தற்போதைய தாவர வகைகள் விஞ்ஞான ஆய்வுக்கு உட்ப்படுத்தப்பட்டு தீர்வுகள் காணப்பட வேண்டும்.

பாதீடு

விசேட நிகழ்ச்சி திட்டங்கள், வெளிநாட்டு நிதி உதவி நிகழச்சி திட்டங்கள் ஆகியவற்றுக்கான நிதியுதவி பெறப்பட்ட விபரம் வருடாந்தப் பாதீடாக அட்டவணை 2.3.1 ல் தரப்பட்டுள்ளது

அட்டவணை 2.3.1 வருடாந்த பாதீடு 2010 (ரூபா)

செலவு விடயம்	ஒதுக்கீடு	செலவு	செலவு%
முதலீட்டுச் செலவு	2,319,000	2,292,640	99
நடைமுறை செலவு	24,598,431	23,234,426	94
வெளிநாட்டு நிதி உதவி திட்டங்கள்			
SLUSA (4)	500,000	356,870	71
Green Super Rice	1,600,000	880,366	55
திட்டங்கள் (உள்ளூர்)			
சேதன வளமாக்கி	11,100,000	6,243,968	56
நாம் பயிரிடுவோம் நாட்டை கட்டியெழுப்புவோம்	1,133,400	743,315	66
உள்கட்டுமான அபிவிருத்தி	110,000,000	69,220,455	63
கலப்பின நெல் உற்பத்தி	4,000,000	1,830,403	46
மொத்தம்	***115,250,831***	***104,802,443***	***68***

முன்னேற்றம்

இலங்கையில் பயிரிடப்படும் நெல் வர்க்கங்களின் பரம்பல்

இலங்கையில் பயிரிடப்படும் நெல் வர்க்கங்களின் பட்டியலில் Bg352 ஆட்சியான தாகவுள்ளது. இதனைத் தொடர்ந்து Bg300 ,Bg358 ஆகியனவுள்ளன. (அட்டவணை 2.3.2)

அட்டவணை 2.3.2: பயிர் செய்கை விஸ்திரணம், இலங்கையில் 2010 சிறுபோகத்திலும், 2009/2010 பெரும் போகத்திலும் செய்கை பண்ணப்பட்ட நெல் வரக்கங்களும் அவற்றின் தானியவகையும், மொத்த நிலப்பரப்பின் நூற்று வீதமும்

நெல் வகை	தானிய வகை	பெரும் போகம் 2009/10		சிறுபோகம் 2010		வருடம் 2010	
		பரப்பளவு		பரப்பளவு		பரப்பளவு	
		ஹெ	%	ஹெ	%	ஹெ	%
	2 1/2 மாதங்கள்						
Bg 250	வெள்ளை நாடு	1,635	0.25	1,449	0.35	3,084	0.29
உப மொத்தம்		1,635	0.25	1,449	0.35	3,084	0.29
	3 மாதங்கள்						
Bg 300	வெள்ளை நாடு	109,475	16.9	58,320	13.9	167,795	15.8
At 307	வெள்ளை நாடு	7,467	1.2	7,146	1.7	14,614	1.4
Bg 305	வெள்ளை நாடு	7,736	1.2	5,932	1.4	13,669	1.3
At 303	சிவப்பு நாடு	4,025	0.6	2,395	0.6	6,420	0.6
Bw 272-6/B	சிவப்பு நாடு	3,034	0.5	2,084	0.5	5,118	0.5
Bg 304	வெள்ளை நாடு	1,237	0.2	1,200	0.3	2,438	0.2
At 308	வெள்ளை நாடு	985	0.6	1,252	0.3	2,237	0.2
Bg 34-8	வெள்ளை நாடு	598	0.09	597	0.1	1,195	0.1
Bg 301	சிவப்பு நாடு	382	0.06	528	0.1	910	0.09
At 307	பாஸ்மதிவகை	389	0.06	171	0.04	560	0.05
உப மொத்தம்		*135,328*	*21*	*79,625*	*19*	*214,956*	*20*
	3 1/2 மாதங்கள்						
Bg 352	வெள்ளை நாடு	118,154	18.3	78,053	18.6	196,207	18.4
Bg 358	வெள்ளை சம்பா	98,068	15.2	49,476	11.8	147,544	13.9
Bg 94-1	வெள்ளை நாடு	64,084	9.9	42,643	10.2	106,727	10
At 362	சிவப்பு நாடு	36,841	5.7	32,316	7.7	69,158	6.5
Bg 359	வெள்ளை நாடு	31,087	4.8	24,516	5.9	55,603	5.2
Bg 357	வெள்ளை நாடு	18,747	2.9	22,612	5.4	41,359	3.9
At 353	சிவப்பு நாடு	23,240	3.6	14,682	3.5	37,921	3.6

நெல் வர்க்கம்	தானிய வகை	பெரும் போகம் 2009/10		சிறுபோகம் 2010		வருடம் 2010	
		பரப்பளவு		பரப்பளவு		பரப்பளவு	
		ஹெ	%	ஹெ	%	ஹெ	%
		3 1/2 மாதங்கள்					
Bg 360	வெள்ளை சம்பா	15,446	2.4	9,951	2.4	25,397	2.4
Ld 356	சிவப்பு சம்பா	12,840	2.0	9,817	2.3	22,667	2.1
Bg 350	சிவப்பு நாடு	8,826	1.4	5,199	1.2	14,025	1.3
At 354	வெள்ளை நாடு	2,882	0.5	5,125	1.2	8,006	0.8
Bw 361	சிவப்பு நாடு	4,567	0.7	2,516	0.6	7,082	0.7
Bw 351	சிவப்பு நாடு	4,060	0.6	2,007	0.5	6,067	0.6
Bw 363	வெள்ளை நாடு	1,838	0.3	3,315	0.8	5,153	0.5
Ld 355	வெள்ளை சம்பா	2,165	0.3	1,546	0.4	3,712	0.4
Bw 364	சிவப்பு நாடு	1,561	0.2	1,284	0.3	2,844	0.3
Bw267-3	வெள்ளை நாடு	911	0.1	1,030	0.3	1,941	0.2
Ld 365	சிவப்பு சம்பா	177	0.03	141	0.03	317	0.03
Bg 94-2	வெள்ளை நாடு	133	0.02	128	0.03	261	0.06
உப மொத்தம்		*445,627*	*69*	*306,367*	*73*	*751,991*	*71*
		4- 4 1/2 மாதங்கள்					
Bg 379-2	வெள்ளை நாடு	14,394	2.23	9,526	2.27	23,920	2.25
Pokurusamba*	வெள்ளை சம்பா	13,317	2.06	7,645	1.82	20,962	1.97
Bg 403	வெள்ளை நாடு	9,569	1.48	3,891	0.93	13,461	1.26
Bg 450	வெள்ளை சம்பா	4,321	0.67	1,262	0.30	5,584	0.52
At 402	சிவப்பு நாடு	3,195	0.49	232	0.06	3,426	0.32
Bg 454	வெள்ளை நாடு	2,803	0.43	333	0.08	3,136	0.17
Bg 400-1	வெள்ளை நாடு	1,388	0.21	379	0.09	1,767	3.9
H-4	சிவப்பு நாடு	1,541	0.24	188	0.04	1,729	0.16
Bg 406	சிவப்பு நாடு	1,487	0.23	173	0.04	1,660	0.16
At 401	சிவப்பு நாடு	311	0.05	6	0.001	317	0.3
Bg 380	வெள்ளை நாடு	34	0.01	24	0.01	58	0.01
Bg 407 H	வெள்ளை நாடு	32	0.001	0	0.001	32	0.001
Bw 400	சிவப்பு நாடு	20	0.001	0	0.001	20	0.001
உப மொத்தம்		*52,412*	*8*	*23,659*	*6*	*76,072*	*7*

நெல் வர்க்கம்	தானிய வகை	பெரும் போகம் 2009/10 பரப்பளவு		சிறுபோகம் 2010 பரப்பளவு		வருடம் 2010 பரப்பளவு	
		ஹெ	%	ஹெ	%	ஹெ	%
		5-6 மாதங்கள்					
Bg 38	வெள்ளை சம்பா	304	0.05	41	0.01	344	0.03
Bg 745	வெள்ளை சம்பா	142	0.02	19	0.001	161	0.02
Bg 3-5	வெள்ளை நாடு	53	0.01	14	0.001	68	0.01
Bg 407	வெள்ளை நாடு	35	0.01	12	0.001	47	0.001
உப மொத்தம்		534	0.08	86	0.02	620	0.06
ஏனையவை (NIV)		7,232	0.12	7,171	0.03	14,403	0.08
நெல் வர்க்கம்		937	0.15	699	0.17	1,637	0.15
முழு மொத்தம்		***646,037***	***100.0***	***419,244***	***100.0***	***1,065,281***	***100.0***

*விவசாயத் திணைக்களத்தால் பயிர் செய்கைக்கு சிபாரிசு செய்யப்படவில்லை.

NIV- புதிய தரமுயர்த்தப்பட்ட வர்க்கம்

Bg352 ஆனது 3 1/2 மாத வர்க்கமாக வகைப் படுத்தப்பட்டாலும் அது 100 நாட்களில் முதிர்ச்சி அடைகிறது. உலர்வலயத்தில் Bg300, Bg358 ஆகியன 96,102 நாட்களில் முதிர்ச்சியடைகின்றன. விவசாயிகள் கிட்டதட்ட 100 நாட்களில் முதிர் ச்சியடையும் நெல் வர்க்கங்களை அதிகளவில் விரும்புவதை இலங்கையின் பெரும்பாலான நெல் சூழல் தொகுதிகள் சுட்டிக் காட்டுகின்றன.

வர்க்க விருத்தி

RRDI உம் அதனோடு இணைந்த நிலையங்களும் நெல் வர்க்க விருத்திச் செய ற்பாடுகளை பாரம்பரிய கலப்பின இனவிருத்தி செய்முறையினூடாக தொடர்கின்றது. நெல் வர்க்க விருத்தி மூலம் போதுமான பெறுதிகள் கிடைத்ததுடன் பல உயிரியல் காரணிகளுக்கு எதிர் ப்புடைய பாரிய பிறப்புரிமையை அடிப்படையாகக் கொண்ட புதிய சிறப்பான வழித்தோன்றல்களும் பெறப்பட்டன. மேலதிக பரிசோதனைக்குரிய வெள்ளம் உவர் தன்மைக்கு எதிர்ப்புடைய நெல் வழித்தோன்றல்கள் அடையாளங் காணப்பட்டன.

புதிதாக சிபாரிசு செய்யப்பட்ட நெல் வர்க்ககங்கள்

RRDI பத்தலகொடவில் இனவிருத்தி செய்யப்பட்ட வெண்ணிற, நடுத்தர பருமனுடைய உலர், இடைவலயத்தில் 100 நாட்களில் முதிர்ச்சி அடைகின்ற Bg366 நெல் வர்க்கமானது இலங்கை முழுவதும் நெற் செய்கைக்காக விவசாயத் திணைக்களத்தால் விடுவிக்கப்பட்டுள்ளது. இது குறிப்பிட தக்க விளைச்சலைத் தருவதுடன் (9t/ha) கொப்புள ஈ, கபிலநிற தாவரத்தத்தி,எரிபந்தம், பக்டீரியல் இலைவெளிறல் ஆகியவற்றுக்கு எதிர்ப் புடையதாவும் காணப்படுகின்றது.

RRS லபுதுவ வில் இன விருத்தி செய்யப்பட்ட சிவப்பு நிற, நடுத்தர பருமனுடைய, உலர் இடை வலயங்களில் 110 நாட்களில் முதிர்ச்சி அடைகின்ற Ld 408 நெல் வர்க்கமானது இலங்கை முழுவதும் செய்கை பண்ணலுக்காக விடுவிக்கப்பட்டுள்ளது. இந்தப் புது வர்க்கமானது ஓரளவான விளைச்சலைத் (7t/ha) தருவதுடன் கொப்புளஈ கபில நிறத்தத்தி, எரிபந்தம் போன்றவற்றிற்கு எதிர்ப்புடையதாகவும் உள்ளது.

பாரம்பரிய நெல் இனவிருத்தித் திட்டங்கள் (4 – 4 1/2 மாத வயது வகுப்பு)

பல்வேறு சூழல் தொகுதிகளுக்கு ஏற்றதும் நோய், பீடைகளுக்கு எதிர்ப்புத் தன்மையைக் காட்டக்கூடியதும், சிறந்த நுகர்ச்சி, சமையல் தரங்களைக் கொண்டதும் உயர் உற்பத்தியைத் தரக்கூடியதுமான 4- 4 1/2 மாத நெல்லினங்களின் இனவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

வேறுப்பட்ட சேர்க்கைகளை கொண்ட 58 கலப்புக்கள் தெரிவு செய்யப்பட்டு வயல் மதிப்பீட்டுக்காக 49F_1 குடித்தொகைகள் 2010ல் நிர்வகிக்கப்பட்டன. இவ்வருடத்தில் 26F_2, 13F_3, 10F_4 குடித்தொகைகளும் தெரிவுக்காக வயல்களில் நிருவகிக்கப்பட்டன. இரண்டு பருவங்களிலும் மேலதிக தெரிவுக்காகவும், மதிப்பீட்டுக்காகவும் 30 உயர் தர குடித்தொகையில் இருந்து 1035 தோன்றல்கள் F_5 சந்ததி தொடக்கம் நிருவகிக்கப்பட்டது.

அதிக தானிய விளைச்சல், தரமான தானியம் ஆகிய இயல்புகளுக்காக Bg 379-2 ஐ நியமமாகக் கொண்டு ஆரம்ப விளைச்சல் பரிசோதனையிலும் (PYT) முக்கிய விளைச்சல் பரிசோதனையிலும் (MYT) 18, சிறந்த வழித்தோன்றல்கள் மதிப்பிடப்பட்டன. அடுத்த பருவத்தில் மேலதிக மதிப்பீட்டுக்காக பின்வரும் முக்கிய வழித்தோன்றல்கள் அடையாளங் காணப்பட்டன.

அட்டவணை 2.3.3 மதீப்பீட்டுக்காக அடையாளம் காணப்பட்டுள்ள சிறந்த வழித்தோன்றல்கள்

வழித்தோன்றல் இல	முதாதை
07-1597	Bg 2949-1/06-1214
08-1909	IR 74052-72-1-3/ Bg 380
08-301	IR 74052-72-1-3/ Bg 380
09-2641	LD 99-12-38/Bg 1816

Bg 403, Bg379-2, Bg 450, Bg454, Bg456 ஆகிய பிறப்புரிமை ரீதியாக தூய்மையாக்கப்பட்ட உற்பத்தியாளர் விதைகளின் தேவைப்பட்ட தொகை விவசாயத் திணைக்களத்தின் விதை அத்தாட்சிப்படுத்தும் சேவையின் நியமத்திற்கு NCRVT, VAT, LSVAT ஆகத் தரம் உயர்த்தப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டது.

பாரம்பரிய இனவிருத்தி திட்டம் - 3 1/2 மாத வயது வகுப்பு

BPH, RGM, BLB, BL ஆகியவற்றிற்கு எதிர்ப்புடையனவும் கூடிய விளைச்சல், சிறந்த தரமுடையதுமான நெல்லின வழித்தோன்றல்களை மேற்படி வயது வகுப்பில் இருந்து அடையாளம் காணப்பதற்கு RRDI இன் இனவிருத்தி திட்டம் கூடிய கவனம் செலுத்தியது.

2010ம் ஆண்டு 36 இனக்கலப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் 21 F_1 சந்ததிகள் வயலில் நிருவகிக்கப்பட்டது. ஆரம்பத் தனிப்படுத்துகைக் குடித்தொகையில் இருந்து $8F_2$, $3F_3$, $12F_4$ ஆகியன அடையாளங் காணப்பட்டன. பாரம்பரிய முன்னேற்றத்திற்காக 10 கலப்புகளில் இருந்து திருத்தியமைக்கப்பட்ட செறிவான முறையைப் பயன்படுத்தி 74 எச்சங்கள் (தோன்றல்கள்) தெரிவு செய்யப்பட்டன.

Bg 357, Bg 388 ஆகியவற்றை நியமமாகக் கொண்டு PYT யிலும் MYT யிலும் தானிய விளைச்சல், தரமான தானிய உற்பத்தி ஆகிய இயல்புகளுக்காக 8 சிறப்பான வழித்தோன்றல்கள் மதீப்பிடப்பட்டன.

Bg 64-1, Bg 352 , Bg 357, Bg 358, Bg 359, Bg360, Bg366 ஆகிய பிறப்புரிமை, பௌதிக ரீதியாகத் தூய்மையாக்கப்பட்ட உற்பத்தியாளர் விதைகளில் தேவைப்பட்ட தொகை விவசாயத் திணைக்களத்தின் விதை அத்தாட்சிப்படுத்தும் சேவையின் நியமத்திற்காக உற்பத்தி செய்யப்பட்டது.

பாரம்பரிய இனவிருத்தி திட்டம் - 3 மாத வயது வகுப்பு

வளர்ச்சிக் காலம் 10-15 நாட்கள் குறைவாக இருந்தும் மேற்படி வயது வகுப்பு நெல்லினங்கள் 3 1/2 மாத நெல்லினங்களோடு ஒப்பிடக் கூடிய விளைச்சலைப் பதிவு செய்தன. ஆகையால் RRDI இன் இரண்டாவது முக்கியத்துவம், இந்த வயது வகுப்பில் இருந்து உயர் விளைச்சல், நல்ல தரமான அரிசியைப் பெறுவதுடன் BPH, RGM, BLB, BL ஆகியவற்றுக்கு எதிர்ப்புடைய வழித்தோன்றல்களைப் பெறுவதாகவும் அமைந்திருந்தது.

இனவிருத்தி குடித்தொகையின் முன்னேற்றம்

உயர் விளைச்சல், நோய் (எரிபந்தம் BLB) பீடைகளுக்கான (BPH, GM) எதிர்ப்பு தன்மை, தரமான தானிய உற்பத்தி, பல்வேறுப்பட்ட சூழல் நிலைமைகளை தாங்கும் தன்மை ஆகிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 56 கலப்புகள் மேற்கொள்ளப்படடன. மேற்கொள்ளப்பட்ட 56 கலப்புகளில் இருந்து $54F_1$ குடித்தொகைகள் வயலில் நிர்வகிக்கப்பட்டதுடன் பாரம்பரிய முன்னேற்றத்திற்காக 22 குடித்தொகைகள் தெரிவு செய்யப்பட்டன.

ஒன்பது சிறப்பு வழித்தோன்றல்கள் PYT, MYT முறையில் நியம வர்க்கத்துடன் பரிசோதிக்கப்பட்டன. உயர் விளைச்சலுக்காகவும் தானியத்தின் தரத்திற்காகவும் Bg300 பாவிக்கப்பட்டது. மிகச் சிறந்த வழித்தோன்றல்களாக Bg07-2787, Bg 09-1871, Bg 07-1412, Bg 09-1888, Bg 07-2947, Bg 09-1851, Bg 09- 1873 ஆகியன அடையாளங் காணப்பட்டன. CRVT திட்டத்திற்கு Bg 06-985, Bg 02-465 ஆகியன தெரிவு செய்யப்பட்டன. விவசாயத் திணைக்களத்தில் விதை அத்தாட்சிப்படுத்தும் சேவை நியமத்திற்கு ஏற்ப Bg-300 இல் இருந்து தேவையான அளவு பாரம்பரிய ரீதியாக தூய்மையாக்கப்பட்ட உற்பத்தியாளர் விதை உற்பத்தி செய்யப்பட்டது.

பாரம்பரிய இனவிருத்தி திட்டம் – 2 1/2 மாத வயது வகுப்பு

உயர் உற்பத்திக்குரியதும் BPH, GM, BLB, எரிபந்நதம், பனிப்பூச்சி போன்வற்றிற்கு எதிர்ப்புத் தன்மையுடையதுமான மிகக் குறுகிய வயதுடைய வர்க்கங்களை விருத்தி செய்யும் திட்டங்களை RRDI தொடர்ந்திருந்தது. பரம்பரை அலகுகளின் சேர்க்கையை விஷ்த்தரிக்கும் நோக்குடன் RRDIல் இருந்து அறிமுகப்படுத்தப்பட்ட 20 நெல் துணைத் தோன்றல்கள் மதீப்பீடு செய்யப்பட்டன. அவற்றில் இருந்த 4 துணைத் தோன்றல்கள் (Accessions) பெற் றோர் தொகுதிகளாகத் தெரிவு செய்யபபட்டன. மேலும் 10 செறிவான குடித்தொகைகளும், 233 எச்சங்களும் முன்னேற்றப்பட்டன.

Bg 250, At 308 ஆகியவற்றை நியமங்களாகப் பயன்படுத்தி சிறிய உருளைவடிவ தானியங்களை உடைய 04 வழித்தோன்றல்கள் (02 வெள்ளை, 02 சிவப்பு) ஆரம்ப விளைச்சல் பரிசோதனை க்கு உட்படுத்தப்பட்டது. 2 1/2 மாத இன விருத்தி திட்டத்திற்காக IRRI இலிருந்து அறி முகப்படுத்தப்பட்ட 04 துணைத் தோன்றல்களும், சிறந்த பசுமை நெல் நிகழ்ச்சி திட்டத்திலிருந்து 03 துணை வழித்தோன்றல்களும், பாரம்பரிய பேதங்களில் இருந்து 03 உம் (சுதுறு சம்பா, ஹெத்தாபஸ்டா வீ, ஹரடா வீ) பெற்றோர்களாப் பயன்படுத்தப்பட்டன.

SCS நியமங்களுக்கு அமைய Bg 250 விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன.

பாரம்பரிய வர்க்கங்களில் விகாரத்தின் ஊடான முன்னேற்றம்

விகாரப்படுத்தல் நுட்பத்தையும், தெரிவையும் பயன்படுத்தி சுறுறு சம்பா (SSR), சுவண்ட சம்பா (SW) போன்ற பாரம்பரிய பேதங்களிலிருந்து சரியும் தன்மைக்கு எதிர்ப்புடையதும், சிறந்த நுகர்ச்சித் தரத்தையுடையதுமான வர்க்கங்களை விருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டதாக இந்த நிகழ்ச்சித் திட்டம் காணப்படுகின்றது. SW25, SSR 08, SSR 26 ஆகிய வழித்தோன்ற ல்கள் தூய்மையாக்கப்பட்டதுடன் மேலதிக CRVT பரிசோதனைக்காக அதிகரிப்பு செய்யப்பட்டன.

காட்டு நெல்லை **(O. Nivara) O. Sativa** வுடனான பாரிய கலப்பின விருத்தி கற்கைகள்

BPH ற்கு சகிப்புத் தன்மை குறைந்த Bg380 வர் க்கத்துடன் காட்டு நெல்லான O.nivara விலிருந்து (WRAC 04) பெறப்பட்ட BPH எதிர்ப்புடைய பர ம்பரை அலகை சேர்க்கும் திட்டம் தொடரப்பட்டது. O. nivaraவின் பின்புலத் தன்மை கொண்ட BPH எதிர்ப்புடைய உயர்த் தர வழித்தோன்றல்கள் 06 தெரிவு செய்யப்பட்டு ஆரம்ப விளைச்சல் பரி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மூலவுயிருரு பெருக்கம், இயல்பாக்கம், பாதுகாத்தல், தொடருதல்

RRDI இன் குறுகிய கால பாதுகாத்தல் பிரிவில் பாரம்பரிய பேதங்கள் அறிமுக, தர முயர்த்தப்பட்ட வழித்தோன்றல்கள் அடங்கலாக 1500 துணைத் தோன் றல் கள் பாதுகாத்து சேமிக்கப்பட்டன.

2010 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் 1140 துணைத் தோன்றல்கள் எண்ணிக்கையில் அதிகரி க்கப்பட்டன. தேவை ஏற்படும் போது சில விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், NGO க்கள் ஆர்வமுள்ள குழுக்கள் போன்றவற்றிற்கு விதை மாதிரிகள் வழங்கப்பட்டன.

உற்பத்தியாளர் விதை உற்பத்தி "மாவீ"

மாகாண விதை நெல் திட்டத்திற்கு வழங்குவ தற்காக அதிக வயதுடைய Bg 38, Bg 745, Bg 407 ஆகிய உற்பத்தியாளர் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன.

கலப்பின நெல்

முன்றரை மாத காலத்தில் விரைவாக முதிர்ச்சியடையக் கூடியதும் பெரும்பாலான நெற் செய்கை சூழல் தொகுதியுடன் பொருந்தக் கூடியதுமான வழித்தோன்றலான Bg HR-8 விருத்தி செய்யப்பட்டது. இது உயர் விளைச்சலைத் தருகின்றதும் (10t/ha), அதிக சிறந்த இயல்புகளைக் கொண்டதுமான வழித்தோன்றல் ஆகும். விதை உற்பத்தி திட்டம் முன்னேற்றப் பாதையில் நடைபெறுகின்றது.

விரைவான முதிர்ச்சியுடன் கூடிய 10 புதிய கலப்பினச் சேர்க்கைகள் விருத்தி செய்யப்பட்டு ள்ளதுடன் உயர் விளைச்சலுடன் கூடிய 04 சேர்க்கைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன ஏனைய சாதகமான இயல்புகளுக்காக மேலதிக பரிசோதனை தொடர்கின்றது.

மூன்று புதிய மீள் நிரப்பு வழித்தோன்றல்களும் (6R, 7R,8R) 45 % வெளியகக் கலப்புடைய, CMS 5A எனும் புதியதொரு CMS வழித்தோன்றலும் விருத்தி செய்யப்பட்டது. இந்த பெற்றோர் வழித்தோன்றல்கள் உயர் கலப்பின வீரியத்துடன் கூடிய புதிய கலப்பினச் சேர்க்கையை உருவாக்கப் பயன்பட்டது.

சிறந்த விளைச்சல் அடைவுக்கும், சிறந்த இசைவாக்கத்திற்குமாக 8 இந்தியன் கலப்பினச் சேர் க்கைகள், உள்ளூர் கலப் பினங்களுடன் சேர்த்து

மதீப்பீடு செய்யப்பட்டது. உள்ளூரில் கிடைக்க கூடிய கலப்பினத்துடன் CRH 501 எனும் வர்க்கம் சம அடைவுகளைக் காட்டியது.

இசைவாக்கத் தன்மையை அடையாளம் காண்பதற்காக, உயர் பசுமை நெல் திட்டத்தின் மூலம் பெறப்பட்ட 35 கலப்பினச் சேர்க்கைகள் மதிப்பீடு செய்யப்பட்டன. 100–105 நாட்கள் முதிர்ச்சி காலத்தைக் கொண்ட GSRHO 156, GSRHO 161, GSRHO 113 ஆகிய வழித்தோன்றல்கள் விவசாயிகளின் வயல்களில் மேலதிக பரிசோதனைக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

விவசாயிகளிடையே கலப்பின நெல்லை பிரபல்யப்படுத்துவதற்காக விரிவாக்கல், பயிற்சி நிலையத்துடன் சேர்த்து "கலப்பின நெல் சறுக்கெத யாய திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளிடையே BG 407H ன் 200Kg F_1 விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டன. குழியவுரு ஆண் மலட்டுத் தன்மையுடைய Bg 407 H எனும் CMS வழித்தோன்றலில் இருந்து பெறப்பட்ட Bg CMS 14 எனும் வழித்தோன்றலில் 365 Kg விதை உற்பத்தி செய்யப்பட்டது. மேலும் Bg HR 8 எனும் CMS வழித்தோன்றலில் இருந்து பெறப்பட்ட Bg CMS 1A யில் இருந்து 25 Kg விதை உற்பத்தி செய்யப்பட்டது.

மாக்கந்துற RARDC யிலும் RRDI யிலும் F1 இனதும் CMS இனதும் விதை விளைச்சலை அதிகரிக்கச் செய்வதற்கான கற்கைகள் நடைபெற்றன. இதில் 75g/ha வீதத்தில் GA3 ன் பிரயோகம் F1 விளைச்சல் அதிகரிப்பிலும், Bg 407 H ன் CMS விதை உருவாக்கத்திலும் குறிப்பிடத்தக்க நேர்த்தாக்கத்தைக் காட்டியது.

மாக்கந்துற RARDC, RRDI ஆகியவற்றில் 2010 சிறுபோகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு பரிசோதனையில் GA3 பிரயோகத்தைத் தொடர்ந்து மேற்க்கொள்ளப்பட்ட இலைகளின் இணைப்பானது (Leaf Clihping) Bg 407 H ன் F_1 சந்ததியில் விதையுற்பத்தி அதிகரிப்புடன் குறிப்பிடத்தக்க நேர் தொடர்பைக் காட்டியது. தனித்து இலைகளின் இணைப்பும் F_1 விதை உற்பத்தியில் நேர்த் தொடர்பைக் காட்டியது. பூத்தலின் ஆரம்பத்தில் GA_3 பிரயோகத்தை விட 5–10% பூத்தல் நிலையில் சிறந்த பெறுபேற்றைக் காட்டியது.

நோய் முகாமைத்துவம்

தானிய நிறமாற்றத்திற்கான எதிர்ப்பு வர்க்கம்

நெல்லின் தானிய நிற மாற்றமானது ஒரு தொகுதிப் பங்கசு இனங்களால் ஏற்படுகின்றது. (Bipoloaris oryzae, Curvularia sp., Magnaporthe grisea., Sarocladium oryzae, Phoma sp, Alternaria sp, Microdochium sp, Nigrospora sp, and Fusarium sp.) இலங்கையில் இது அதிகரித்து வருகின்ற ஒரு வயல் பிரச்சினை ஆகும். நெல் மணியில் நிறமாற்றமானது அதன் தரம், நிறை, முளைதிறன் வீதம் ஆகியவற்றைக் குறைக்கின்றது. தானிய நிற மாற்றத்திற்கான மிகப் பொதுவான நோயாக்கிகளையும் நடுகைச் செய்யப்படுகின்ற 19 நெல் வர்க்கங்கள் தானிய நிறமாறலுக்கு காட்டுகின்ற துலங்கல் பற்றியும் கற்கை மேற்கொள்ளப்பட்டது. நிறமாற்றத்திற்குள்ளான தெரிவு செய்யப்பட்ட வர்க்கங்களில் இருந்த PDA ல் ஒற்றியெடுக்கும் முறை மூலம் பங்கசுக்கள் வேறாக்கப்பட்டன. At307, Bw361, Bw267-3, Bg 357,At353 ஆகியவை குறைந்தளவான தானிய வெளிறலைக் கொண்டிருந்தன. Curvularia sp, Fusarium sp, Saracladium oryzae, Alternaria sp, Bipolaris oryzae ஆகிய பங்கசுக்கள் தானிய வெளிறலுக்கக் காரணமாக அமைந்திருந்தன. எனினும் இவற்றுள் Curvilaria sp, Fusarium sp, Saroculadium oryzae ஆகியன தானிய நிற வெளிறலுக்கு மிகப் பொதுவானதாக மேற்படி வர்க்கங்களில் காணப்பட்டன.

நெல் எரிபந்த நோய் எதிர்ப்புக்கான தெரிவு

எரிபந்தமானது Magnarporlte grisea எனும் பங்கசினால் ஏற்படுகின்ற ஒரு பாரிய பங்கசு நோயாகும். இது தாவரத்தின் ஒவ்வொரு அங்குரப் பகுதியையும் பயிரின் எல்லா பருவத்திலும் தாக்கி குறிப்பிடத்தக்க உற்பத்தி இழப்பை ஏற்படுத்துகின்றது. சிறுபோகம் 2010ல் 1697 பதிவுகள் தெரியப்பட்டன. 1414 பதிவுகள் உயர் தர தோன்றல்களாக காணப்பட்டன. இவை எரிபந்த நோய்க்கு எதிரான CRVT, VAT விளைச்சல் பரிசோதனைப் பதிவுகளாகும். மேற்படி தெரிவு செய்யப்பட்ட வழித்தோன்றல்களில் 2009/2010 பெரும் போகத்தின் 1015 பதிவுகளும் 2010 சிறுபோகத்தின் 1094 பதிவுகளும் இலை எரிபந்த நோய்க்கு முழுதாகவோ அல்லது பகுதியாகவோ எதிர்ப்புத் தன்மையைக் காட்டின.

பக்ரீரிய வெளிறல் நோய்க்கான எதிர்ப்பு தன்மை

பக்ரீரிய இலை வெளிறல் ஆனது (BLB) xanthomonas campestries pv oryzae இனால் ஏற்படுகின்றது. இலங்கையில் நெற்செய்கையில் பொருளாதார ரீதியாக அதிக பாதிப்பை ஏற்படுத்தும் ஒரே ஒரு நோயாகும். இப்போதும் இரசாயனக் கட்டுப்பாடு சாத்தியமற்றதாகவுள்ளது. BLB எதிர்ப்பு வர்க்கத்தை உருவாக்குவதே சிறந்ததும் சூழலுக்கு நன்மை தருவதும், பொருளாதார ரீதியாக முக்கியத்துவமான முறையாகும். 2009/2010 பெரும் போகத்தில் 106, 2010 சிறுபோகத்தில் 90 வழித்தோன்றல்களும் BLB நோய்க்கு எதிராக

CRVTயிலும், விளைச்சல் பரிசோதனையிலும் தெரிவு செய்யப்பட்டன. இவற்றுள் 2009/2010 பெரும்போகத்தில் 16உம் 2010 சிறுபோகத்தில் 15 வழிதோன்றல்களும் முழுதாக அல்லது சராசரியாக BLB நோய்க்கு எதிர்ப்புத் தன்மையைக் காட்டின.

நெல் மடல் வெளிறல் நோய்க்கு பங்கசு நாசினிக் கட்டுப்பாடு

இலங்கை முழுவதும் காணப்படுவதும் நெல்லில் தொடர்ச்சியாக ஏற்படுவதுமான மடல் வெளிறல் நோயானது Rhizoctonia solani எனும் பங்கசால் ஏற்படுகின்றது. இந்நோய்க்கு எதிராக பிறப்புரிமை ரீதியிலான எதிர்ப்புத் தன்மை காணப்படவில்லை. சிறந்த பயிராக்கவியல் நடவடிக்கையுடன் ஒருங்கிணைந்த பங்கசு நாசினிப் பாவனையே சிறந்த கட்டுபாட்டு முறை ஆகும். சிறந்த ஒருங்கிணைந்த நோய்க் கட்டுபாட்டுக்கு பங்கசு நாசினியின் பாதுகாப்பான அளவுப்பாவனை விரும்பதக்கது. இந்நோய்க்கு எதிரான ஹெக்ஸா கோண சோல் (Hexaconasole) Ec பாவனையின் அளவு ஏற்கனவே சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. எனினும் கரையக் கூடிய செறிவின் அளவு (Sc), Ec யிலும் பாதுகாப்பானது. 2010 சிறுபோகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி (Hexaconasole) 5% Ec (Eraser 20 ml / 10L) ற்குப் பதிலாக (Hexaconasole) 5% Sc (Eraser 20 ml / 10L) ஐ பயன்படுத்துவது சிறந்தது என அறியப்பட்டுள்ளது.

நெல் எரிபந்தநோய்க்கு எதிராக **Oligochitosan** இன் தாக்கம் தொடர்பான ஆய்வு

ஒலிக்கோ சிற்றோசன் நுண்ணுயிர்களுக்கு எதிரான செயற்பாட்டையும் வளர்ச்சி விருத்தி செயற்பாட்டையும் நீர் உருஞ்சும் தன்மையையும் கொண்டுள்ளது. ஆய்வின் மூலம் இதன் பிரயோகமானது எரிபந்த நோயினை திருப்திகரமாகக் கட்டுபடுத்துவதாக அமையவில்லை.

பீடை முகாமைத்துவம்

பிரதான பீடைகளுக்கு எதிர்ப்பினங்களைத் தெரிதல்

நோய்த் தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கு எதிர்ப்பினங்களை பயிரிடுவதே சூழலுக்கு நன்மை தருவதும்,இலாபகரமானதுமான முறை ஆகும். கபில நிறத் தத்தி (BPH), கொப்புளாஈ ஆகியன இலங்கையில் நெற்செய்கையில் பாரிய தாக்கத்தை உண்டு பண்ணும் பீடைகள் ஆகும்.

இலங்கையில் விடுவிக்கப்படுகின்ற எந்த நெல்லினமும் BPH, கொப்புளாஈ தாக்கத்தை எதிர்த்து வளர்வனவாகக் காணப்படல் வேண்டும்.

BPH ற்கான எதிர்ப்பினங்கள்

விளைச்சல் பரிசோதனைகள் INGER, CRVT, VAT ,ஆகியன மூலம் BPHற்கு எதிரான 1453 பதிவுகள் 2009/2010 பெரும் போகத்திலும் 1824 பதிவுகள் 2010 சிறுபோகத்திலும் உயர்தர தோன்றல்களில் இருந்து அடையாளம் காணப்பட்டன. இவற்றுள் 2009/2010 பெரும்போகத்தில் 922 பதிவுகளும், 2010 சிறுபோகத்தில் 889 பதிவுகளும் BPH ற்கு எதிர்ப்பு தன்மையை அல்லது சராசரி எதிர்ப்பு தன்மையைக் காட்டின.

கொப்புளா ஈ (GM) எதிர்ப்பு தன்மை

விளைச்சல் பரிசோதனைகள் CRVT, VAT, ஆகியன மூலம் GM ற்கு எதிரான 1453 பதிவுகள் 2009/2010 பெரும் போகத்திலும் 1824 பதிவுகள் 2010 சிறுபோகத்திலும் உயர் தர தோன்றல்களில் இருந்து அடையாளம் கண்டு தெரிவு செய்யப்பட்டன.

இவற்றுள் 2009/2010 பெரும்போகத்தில் 210 பதிவுகளும் 2010 சிறுபோகத்தில் 235 பதிவுகளும் GM ற்கு எதிர்ப்பை அல்லது சராசரி எதிர்ப்பைக் காட்டின.

இலைச் சுருட்டிக்கு புதிய பூச்சி நாசினி

நெல் இலை சுருட்டி/ மடிச்சிக் கட்டி (Cropholacrosis medinalis) ஒரு அபாயகரமான நெல் பீடை ஆகும். இது பதிய வளர்ச்சி, இனவிருத்தி பருவங்களில் சேதத்தை உண்டு பண்ணி 20% தானிய விளைச்சலை குறைக்கின்றது. இப்பீடைக்கு எதிராக இது வரை எதிர்பு வர்க்கங்களோ, வழித்தோன்றல்களோ அடையாளம் காணப்படவில்லை. எனவே இந்நோயானது பாரம்பரிய பயிராக்கவியல், இரசாயன முறைகளின் மூலமே கட்டுப்படுத்த முடியும். ஆகவே சூழலுக்கும் இயற்கை எதிரிகளுக்கும் மிகக் குறைவான சேதத்தை உண்டுபண்ணுவதும், குறைந்த செறிவில் தொழிற்படுவதுமான பூச்சிநாசினி ஒன்றை இனங் காண்பது அவசியமாகும். ஏசெப்ரேற் 97DF (Alleptate) 460g / ha சிறப்பாக இப்பீடையைக் கட்டுப்படுத்துகின்றது. ஆனாலும் இயற்கை எதிரிகளுக்கு இவ்விரசாயனம் பாரிய பாதிப்பை ஏற்படுத்துவதனால் சிபாரிசு செய்யப்படவில்லை.

நெல் பீடைக்கு எதிரான உயிரியல் உற்பத்திகளை தெரிதல்

நெற் செய்கையில் BPH உம் பனிப்பூச்சியும் தீவிரமான பீடைகள் ஆகும். இவற்றைக் கட்டுபடுத்த இரசாயன பீடை நாசினிகள் இருந்த போதும் சூழலுக்கு நட்புறவுடைய உயிரியல் உற்பத்திகளை அடையாளம் காண்பது முக்கியமானதாகும் இதற்காக உயிரியல் உறுத்துணர்ச்சியுடைய ஒலிக்கோ சிற்றோகான் (oligocitosan) போன்றவை சிறந்தடில ஆகும். இங்கு 50ppm செறிவில் பரிகரிக்கப்பட்ட

நெற்பயிர்கள் BPH, பனிப்பூச்சிகளை கட்டுப்படுத்துவதில் சிறந்த பெறுப்பேற்றைத் தந்தன.

களை முகாமைத்துவம்

ஈர நெல் விதைக்கான தேசிய ரீதியில் ஒருங்கிணைக்கப்பட்ட களை நாசினித் தெரிவு

உலர், இடை, ஈர வலயங்களின் ஐந்து இடங்களில் களை நாசினிகளின் களைக் கட்டு பாட்டு வினைத்திறனை அறிவதற்காக சிபாரிசு செய்யப்பட்ட 2 களைநாசினிகளுடன் புதிய 6 களை நாசினிகளைக் கொண்டு தேசிய ரீதியில் ஒருங்கிணைக்கப்பட்ட பரிசோதனை ஒன்று மேற் கொள்ளப்பட்டது.

இவற்றில் இருந்து புற்களை அழிக்கக்கூடிய Fenoxaprop-p- எதைல் 69/1 Ec யும் மெற்றாமி பொப் 10% Ec தெரியப்பட்டது. மேலும் புற்கள், அகன்ற இலைக்களைகள் நீர்களைகள் ஆகியவ ற்றை அழிக்கக்கூடிய பிஸ்பைறிபக் சோடியம் 20% Wp, ஒக்சாடியசோன் Ec , பென்ராசோன் 48% SL ஆகியனவும் தெரிவுச் செய்யப்பட்டன. அத்துடன் இக்களைநாசினிகள் மேலதிக பரிசோதனை நிகழச்சித் திட்டமும் மேற்கொள்ளப்படவுள்ளன.

நெல் விளைச்சலிலும், களைக் கட்டுப் பாட்டிலும் பூச்சியப் பண்படுத்தலின் நீண்டகால விளைவு

பேண்தகு விவசாயத் தொகுதியில் பயிர்ச் செய்கை செலவைக் குறைக்கும் நோக்குடன் பண்படுத்தல் செறிவை குறைக்கும் நடைமுறை யுள்ளது. களைக்கட்டுபாடு, சிறந்த வேர்சூழலை ஏற்படுத்தல், நீரின் பக்க வடிதல் நீரிழப்பைத் தடுத்தல் போன்றவற்றிற்கு நெற்செய்கையில் நிலப்பண்படுத்தல் அவசியமானதாகும். களை நிலமைகளில் கீழ் நிலப்பண்படுத்தலானது மூன்று பருவங்கள் வரையும் நெல் வளர்ச்சியிலும், விளைச்சலிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை உண்டு பண்ணவில்லை என்று முன்பு குறிப்பிடப்பட்டது. ஆனால் 4வது, 5வது பருவங்களில் முறையே 10%, 18% தானிய விளைச்சலை ஏற்படுத்துவதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆறாவது வருடத்தில் களைத் தொகுதியில் பருவத்தின் தாக்கம் காணப்படுகின் றது. பல்லாண்டுக்குரிய களை விதைகளின் அளவு குறைவடைந்தது. ஆனால் குறிப்பாக அகன்ற இலைகளை, நீர் களைகளின் விதை அளவு பூச்சியப் பண்படுத்தலுடனும் கூடிய களைநாசினிப் பிரயோகத்துடனும் அதிகரித்தது.

நடுகைச் செய்யப்பட்ட நெல்லின் களை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் தன்மை

பேண் தகு விவசாயத்தில் நெல் வர்க்கங்களின் களை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் தன்மை கவனத்தில் கொள்ளப்படுகின்றது. இதற்காக At 362, Ld 356, At353 ஆகியன பரிசோதிக்கப்பட்டதுடன் இவற்றின் வயற் துண்டங்களில் குறைவான களை வளர்ச்சியும் காணப்பட்டது. அத்துடன் மேற்படி 3 வர்க்கங்களும் Bg352, Bg 357, Bg 358 Bg 359 ஆகிய வர்க்கங்களிலும் பார்க்க (0.5t / ha) அதிக விளைச்சலையும் (2t/ha) தந்தன.

குருநாகல் மாவட்டத்தின் மனாபஹ யாயாவில் களை நெல்

பத்து தனித்துவமான களை நெல் வகைகளில் தானிய இயல்புகளை அடிப்படையாகக் கொண்ட பாரிய உருவியல் வேறுபாடுகள் வயல் அவதானி ப்புக்கள் மூலம் அறியப்பட்டன. மிகவும் பொதுவான களை நெல்லின் இயல்புகளாக இடைத்தர பருமனுடைய தானியம், வெளிறிய வெள்ளை நிற முடைய வித்தக விளையம், வைக்கோல் நிறமுறை அகவுறை, மேற்கூர் இல்லாத தன்மை ஆகியன அறியபட்டன. மேலும் களை நெல்லின் காரணமாக விளைச்சலும் குறைவடைகிறது.

இலங்கையில் களை நெல்லின் உருபவியல் பல்வகைமை

வேறுபட்ட நெல் சூழல் தொகுதிகளில் இருந்து 2004–2009 காலப் பகுதியில் உருபவியல்பல்வகைமை கொண்ட 2500 களை நெற்கள் சேகரிக்கப்பட்டன. கதிர், தானியம் ஆகியவற்றின் இயல்புகளை அடிப்படையாகக் கொண்டு அவை 112 கூட்டங்கள் ஆக பாகுப்படுத்தப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட களை நெல் மாதிரிகள் 3 தடவை மீண்டும் திகழ்கின்ற விகையில் (Replicates), 10 நாற்று க்கள் என்ற வீதத்தில் சாடிகளில் நடப்பட்டன. உருபவியலில் வேறுப்பட்ட 1300 களை நெற்கள் அடையாளங் காணப்பட்டன. அவற்றுள் 90% ஆனவை 90–165cm நீளமாகவும், ஒன்றில் 6–21 கதிர்களைக் கொண்டும் காணப்பட்டதுடன், அவற்றின் இலைகளின் நீளம் 24–68cm ஆகவும், நிமிர்ந்த, தொங்குகின்ற இலைகளையுடையதாகவும் காணப்பட்டன.

களை நெல்லின் கட்டுபாடு

விரிவாக்கல் உத்தியோகத்தர்களின தும் விவசாயிகளினதும் பங்களிப்புடன் களை நெற்களை கட்டுப்டுத்தவதற்கான வினைத் திறனான செய்துகாட்டல் நுட்பங்கள் RRDI ஆல் விருத்தி செய்யப்பட்டு நடைமுறை ப்படுத்தப்பட்டன.

மண் விஞ்ஞானம்

உப்புப் பாதிப்புத் தன்மைக்கான இசை வாக்கத்தை அறிவதற்கு புத்தளம், பொலன்நறுவை மாவட்டங்களில் உப்புக்கு கசிப்புத் தன்மையுடைய 2 புதிய நெல் வர்க்கங்கள் பரிசோதிக்கபட்டன. ஆனால் பூக்கும் பருவம் வரையும் 2cm உயரம் வரை நீர்மட்டம் பராமரிக்கப்பட்டதுடன், சேதன பசளை பிரயோகம், வடிகால்கள் சுத்தப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளும் திருத்தியமைக்கபட்டன. முன்னேற்றப்பட்ட மண் நிலங்களின்கீழ் உப்புத் தன்மைக்கு உறுத்துணர்ச்சியுடைய வர்க்கமாகிய Bg352 4t /ha விளைச்சலை தந்ததுடன் உப்புத் தன்மைக்கு கசிப்புத் தன்மையுடைய வழித்தோன்றல் களாகிய Bg11-139, Bg5-110 ஆகியன 7t/ ha விளைச்சலை தந்தன.

கடந்த 30 வருடங்களாக பசளைப் பிர யோகமோ, வைக்கோல் பரிகரிப்போ செய்யப்படாத ஆனால் நீர்பாசனம் செய்யப்பட்ட வயல்களில் இருந்து வேறுப்பட்ட வயது கூட்டங்களையுடைய 20 சிபாரிசு செய்யப்பட்ட நெல் வர்க்கங்கள் தெரிவு செய்யப்பட்டன. இவ்வயல்களில் மண் P, K, Zn சேதனப் பசளைகளின் அளவுகள் முறையே 2.5mg / Kg, 25mg / Kg, 0.3mg / Kg, 1% ஆகக் காணப்பட்டது. மேற்படி நிலமைகளின் கீழ் Bg352, Bg358, Bg305, At353, At354, At462, முருங்கைக் காயன், சுதுகீனற்றி ஆகிய வர்க்கங்கள் 2.5–3 t/ha விளைச்சலை தந்தன.

தொடர்ச்சியாக 4 பருவங்களுக்கு P பிர யோகிக்கப்படாத நிலமையுடனும், ஒவ்வொரு பருவமும் P பிரயோகிக்கப்பட்ட நிலமையுடனும் ஒன்றுவிட்ட பருவத்திற்கொரு தடவை P பிர யோகிக்கப்பட்ட நிலமை ஒப்பிடப்பட்டது. எவ்வித P பசளை பிரயோகமும் இல்லாத நிலையில் 4 பருவங்களின் பின்பு மண்ணின் P அளவானது 10mg/ Kg இலிருந்து 3.5mg/Kg ஆகக் குறைவடைந்த அதேவேளை ஒவ்வொரு பருவமும் P பசளை பரீகரணம் செய்யப்பட்ட துண்டத்தின் 7mg/Kg ஆகவும் ஒன்றுவிட்ட பருவத்திற் ஒரு தடவை P பசளை பரீகரணம் செய்யப்பட்ட வயற் துண்டத்தின் P மட்டம் 8mg/Kg ஆகவும் காணப்பட்டது. மேற்படி நான்கு பருவங்களிலும் மண்ணின் P மட்டத்தில் வேறுபாடு காணப்பட்ட போதும் நெல் விளைச்சலில் குறிப்பிடத்தக்க வேறுபாடு ஏற்பட வில்லை. இதிலிருந்து நெல்லிற்கான Olsen's P மட்டம் 10mg/Kg லும் சற்றுக் குறைவாகக் காணப்பட வேண்டும் என்பது புலனாகிறது.

மண்ணில் K இழப்பின்றி, நெல்லின் உச்ச விளைவை பெறுவதற்குரிய மிகப் பொருத்தமான K பிரயோக அளவு அறியப்பட்டது. இங்கு பசளை, வைக்கோல் பிரயோகமோ அற்ற நிலையில் முதலாவது உழுதலின் பின்பு 4 வாரங்களுக்கு மண் K மட்டம் அதிகரித்ததுடன், பின்பு குறைவடைந்து சென்றது அறியப்பட்டது. மேற்படி பரிசோதனையின் முதலாவது பருவத்தில் நெல்லானது K பிரயோகத்தி ற்கு எதுவித துலங்கலையும் காண்பிக்கவில்லை ஆனாலும் விளைச்சல் 5 t/ha ஆகக் காணப்பட்டது.

Bg 379-2 உடன் சிறந்த இனவிருத்தித் தோன்றல்களான Bg14-360, Bg997, Bg1350 ஆகியனவும் N பசளைக்கான உறுத்துலங்கல் பரி சோதிக்கப்பட்டது. குறைவான N_2 நிலமைகளில் Bg997 சிறந்தபெறுபேற்றை காட்டியதுடன் Bg 14-360 உம் Bg1350 உம் ஒரே பெறுபேற்றையும் காட்டின.

விளைச்சலைப் பாதிக்காத வகையில் N பசளையின் அளவைச் சேமிக்கும் நோக்குடன் சேதனப் பசளையுடன் சேர்த்துப் பாவிக்கப்பட வேண்டிய N பசளையின் அளவு அறியப்பட்டது. இங்கு சேதனப் பசளையின் பிரயோகமானது மண் வளத்தன்மை, இரசாயனப் பசளையின் வினைத் திறன், தானிய விளைச்சல் ஆகியவற்றை அதிகரி த்தது. போதுமான அளவிலான சேதனப் பசளைப் பிரயோகமானது விளைச்சலைப் பாதிக்காது N பசளையின் தேவை 25% ஆல் குறைந்தது.

பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள அம்பன்கங்க, காலிங்கஎல ஆகிய நெற் செய்கை பிரதேசங்களில் பண்ணையாளர்களின் பங்களிப்புட னான ஒரு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இதன் போது செறிவான நெற்செய்கை பிர தேசங்களில் மண்ணின் வளத்தன்மைக்கு ஏற் படுகின்ற தடைகளைக் கட்டுப்படுத்தக் கூடிய முகாமைத்துவ நடவடிக்கைகள் அறியப்பட்டன. பொலன்நறுவை மாவட்டத்தில் நெல் – நெற் செய்கை தொகுதிகளில் முக்கிய மண் வளக் குறை பாடுகளாக மண்ணின் K, P, Zn சேதனத் தன்மை ஆகியவற்றில் குறைவு காணப்பட்டன.

சேதனப் பசளை, இரசாயனப் பசளை, Zn ஆகியவற்றில் பிரயோகமானது 4 தொடர்ச்சியான பருவங்களுக்கு நெல்லின் விளைச்சலை 4t/ha ஆக அதிகரித்தது. மண் கற்றினாவின் தாழ்வான (Catena) பகுதியில் உயர் அளவிலான Ec, P^H,Ca,Mg,Na ஆகியவற்றின் உயர் அளவுகள் முக்கிய தடைகள் ஆகும். வடிகால் கான்களை சுத்தப்படுத்துவத னால் Ec,P^H,Mg,Na ஆகியவற்றின் செறிவுகள் குறைந்ததோடு, அவ் வயல்களில் உற்பத்தியும் அதிகரி த்தது. உவர்த் தன்மையால் பாதிக்கப்பட்ட வயல்களில் உவர்த் தன்மையை சகித்து வளரும் வர்க்கங்களின் அறிமுகம் விளைச்சலை 4t/ha லிருந்து 7t /ha ஆக உயர்ந்தது.

GIS, நீர் முகாமைத்துவம் நீர்பாசன நெல் வயல்களில் நீர்ச் சமனிலை

அம்பன்கங்க, பொலன்நறுவையில் உள்ள நீர்பாசன நெல் வயல்களில் ஆவி ஆவியுயிர்ப்பு (ET) பக்கவடிதல்(S), ஆழஊடுவடிதல் (P), மேற்பரப்பு ஓட்டம் (Ro), மழை வீழ்ச்சி (RF), ஊடுவடிதல் (I) ஆகியவற்றைக் கண்காணிப்பதன் மூலம் நீர்ச் சமனிலை அறியப்பட்டது. நிலப் பண்படுத்தலின் போது 50% நீர் மேற்பரப்பு ஓட்டம் மூலம் வீணாக்கப்படுவதாக தயாரிக்கப்பட்ட வரைப்படத்திலிருந்து அறிய முடிந்தது. நெற் பயிரின் நீர்த் தேவையை, குறிப்பாக இனவிருத்திப் பருவத்தில் நீர்த் தேவையானது அட்டவணைப் படுத்தபட்ட நீர்பாசன இடைவெளியாகிய 10 நாட்களுடன் பொருந்திக் காணப்படவில்லை. பக்கவடிதல், ஆழஊடுவடிதல் போன்றவற்றால் நீர் வீணாதல் அதிக மணற் தன்மையினால் (75%மணல்) அதிகமாகக் காணப்பட்டது. தாழ்நிலங்களில் அமைந்த வயல்களில் ஒரு சுழற்சி நீர்பாசன த்தின் போது பகிர்ந்தளிக்கப்பட நீரின் அளவு போதுமானதாக அமையவில்லை.

மூன்று ஈரத்தகைப்பு நிலைகளில் வேறுப்பட்ட பசளைப் பிரயோகத்தில் (NPK,NPK+straw, NP+straw, NP only) Bg 359 வர்க்க விளைச்சலில் நீர் தகைப்பின் தாக்கம் அறியப்பட்டது. முதலாவது, இரண்டாவது பருவங்களில் நீர் தகைப்பு இல்லாத நிலமைகளில் தானிய விளைச்சலில் குறிப்பிடத் தக்க வேறுபாடு காணப்படவில்லை. தகைப்பு நிலைமைகளில் கீழ் வைக்கோல் பரிகரிக்கப்பட்ட வயல் துண்டம் NPK, NP தனியாக பரிகரிக்கப்பட்ட வயல்களிலும் பார்க்க குறிப்பிடத்தக்களவு அதிக விளைச்சலைத் தந்தது.

பயிராக்கவியல்

ஈரலிப்பு மட்டுப்படுத்தப்பட்ட சூழல் நிலமைகளுக்கான வர்க்கத் தெரிவு

நீர்பாசன, மழையை நம்பிய நெற் செய்கை சூழல் தொகுதிகளில் நீரானது ஓர் அரிய வளமாக மாறி வருகின்றது. பெரும்போகம் சிறுபோகங்களில் அறுவடை செய்யப்படும் நிலப்பரப்பளவுக்கும் பயிரிடப்பட்ட நிலப் பரப்பளவுக்கும் இடையே வேறுபாடு காணப்படுவதற்கு குறைந்ததவீதத்தில் நீர் கிடைப்பதே காரணமாகும். இதனால் நீர்ப் பற்றாக் குறையான சூழல் தொகுதிகளுக்குப் பொருத்தமான நெல் தோன்றல்களைத் தெரிவு செய்யும் திட்டங்கள் தொடரப்பட்டன. IRRI, INGER,GSR, உள்ளூர் மூலவுயிருரு ஆகியவற்றில் இருந்து பெறப்பட்ட நெல் வழித்தோன்றல்கள் வரட்சி, அரை வளியூட்டல் நிலமைகளின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டன. INGER வழியூட்டல் நாற்றுமேடைகளில் இருந்து 2010ல் பெறப்பட்ட 38, 2009ல் பெறப்பட்ட 31 வழித்தோன்றகளில் இருந்து முறையே 12, 15 வழித்தோன்றல்கள் மேலதிக சோதனைக்காக தெரிவு செய்யப்பட்டன. GSR திட்டத்தின் ஊடாக வரட்சிச் சகிப்புத் தன்மைக்காக பெறப்பட்ட 95 வழித்தோன்றல்களில் 17 அடுத்த பருவத்திற்காக முன்னேற்றப்பட்டன. வளியூட்டம், வரட்சி சூழல் நிலமைகளில் கீழ் 1009/10 பெரும் போகம், 2010 சிறுபோகம், 2010/2011 பெரும்போகம் ஆகிய பருவங்களில் விளைச்சல் மதிப்பீட்டுக்காக மேற்படி வழித்தோன்றல்களில் அடைவுகளை அடிப்படையாகக் கொண்டு அவை தெரிவு செய்யப்பட்டன.

இடை வலயத்தில் விவசாயிகளின் ஏற்றுக் கொள்ளும் தன்மை, சூழலுக்கான இசைவாக்கம் ஆகியவற்றை அறிவதற்காக ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட CNI 9024, CNI 9028 ஆகிய இரு வரட்சியைத் தாங்கும் வழித்தோன்றல்கள் பண்ணை யாளர்களின் வயல்களில் பரிசோதிக்கப்பட்டன.

கதிர்ப்புக்கு உட்படுத்தப்பட்ட Oligo Chitosan ன் பயன்பாடு

இலங்கை அணுசக்தி அதிகாரச் சபையினால் அறிமுகச் செய்யப்பட்ட ஒலிகோ சிற்றோசான் வளர்ச்சித் தூண்டியாக RRDI வயற் பரிசோதனை மூலம் அடையாளம் காணப்பட்டது. Chitosan 1 300 ppm, chitosan 3 50ppm ஆகிய தயாரிப்புகள் மட்டம் வெடித்தல், குஞ்சம் தோன்றல் ஆகிய நிலைகளிலும் பிந்திய பூத்தல் நிலமையிலும் பரிகரிக்கப்பட்டபோது நெல்லின் இலைகளில் N அளவையும் தானிய விளைச்சலையும் அதிகரித்தது. பரிகரிக்கப்படாதத்தில் மாற்றம் எதுவும் இல்லை.

பூத்தலின் போது நெற் பயிரின் விதானப் படை வெப்பநிலை

மலரும் பருவத்தின் போதுள்ள சராசரி அளவிலும் கூடிய அல்லது குறைந்த; வளி, வெப்பநிலையின் அதிகரிப்பு அல்லது குறைவானது தானி யங்களின் மலட்டுத் தன்மையை அதிகரி த்தது. பிந்திய பூத்தலில் இருந்து பௌதீக முதிர் ச்சி வரையுமுள்ள விதானப் படை வெப்பநிலையும் சாரீரப்பதனும் ''Mincer'' எனும் கருவி மூலம் அறி யப்பட்டது. வெளிச் சூழல் வெப்ப நிலையிலும் பார்க்க 1-20c குறைவாக விதானப் படை வெப்பநிலை குறைவாகக் காணப்பட்டது. விதானப்படையின் கீழ்ப் பகுதியில் குஞ்சம் (Panicle) காணப்படும் போது கொடி இலைகள் குஞ்சத்தை மறைத்து (நிழலூட்டிக்) காணப்படுகின்றது. இதனால் சூரிய ஒளியின் குஞ்சத்தின் மீதான தாக்கம் குறை வடைகின்றது. இதனால் பூந்துணர் வெப்பமடைவது தடுக்கப்படும். எனவே வளிமண்டல உயர் வெப்ப நிலையின் எதிர்மறையான தாக்கம் பூத்தலில் போது குறைக்கப்பகின்றது.

குஞ்சம் கீழாகக் காணப்படும் போது தாவரம் சாய்வதற்கான வாய்ப்பும் குறைவடைகின்றது. எனவே இந்த விதானப் படைக் கட்டமைப்பானது காலநிலை மாற்றத்தை சந்திக்கக் கூடியதும் சாய்வு குறைவாகவுள்ளதும் இயந்திர அறுவடைக்கு ஏற்ற துமான எதிர்கால நெல் வர்க்கங்களை அடையாளம் காண்பதற்கு பயன்படுத்தக் கூடியதாக அமையும்.

பயிர் வளர்ச்சி மாதிரியை மதிப்பிடுதல்

உடற்றொழிலியல், ஒலியியல் தரவுகள் மூலம் வர்க்கக் குணகங்களின் பயிர் மாதிரிகளின் மதிப்பிடலை விருத்தி செய்தல் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு ORYZA 2000, DSAT 45 ஆகியன பாவிக்கப்பட்டன. மாதிரி எதிர்வுகளுடன் ஒலியியல் ஆரம்ப அவதானிப்புகள் கூடிய திருத்தத்தை தந்தன. மேலதிக ஆய்வு தொடர்கிறது.

தேசிய ரீதியில் ஒருங்கிணைக்கப்பட்ட நெல்வர்க்க பரிசோதனைத் திட்டம் (NCRVT)

NCVRT திட்டமானது 2010 ஆண்டுப் பகுதியில் 3, 3 1/2, 4 மாத வயது வர்க்கங்களுடன் பரிசோதிக்கப்பட்டது. நியமச் சோதனை வர்க்க ங்களுடன், 3 மாத 3 புதிய வழித்தோன்றல்கள், 3 1/2 மாத 6 வழித்தோன்றல்கள், 4 மாத 4 புதிய வழித்தோன்றல்கள் பரிசோதிக்கப்பட்டன. இது 8 இடங்களில் ஆராய்ச்சியாளர் முகாமைத்துவ நிலமைகளின் கீழ் 2009 சிறுபோகம், 2009/2010 பெரும்போகம் ஆகிய பருவங்களில் மேற் கொள்ளப்பட்டது.

பின்வரும் வழித்தோன்றல்கள் விவசாயிகளின் வயல்களில் VAT திட்டத்தின் கீழ் மேலதிக சோதனைக்காக தெரிவு செய்யப்பட்டன.

At 07-800 – 3மாத வழித்தோன்றல்கள் இடைத்தர, உருளை, தானியம்

At 06-631 – 3 1/2 மாத வழித்தோன்றல்கள் மிகச் சிறிய தானியத்தையுடைய சுதுறு சம்பா

BW 05-1621 – 3 1/2 மாத வழித்தோன்றல்கள் இரும்பு நஞ்சாதலுக்கு சகிப்புத் தன்மையுடையது.

வர்க்க இசைவாக்கத் திட்டம் VAT

உலர், இடை, ஈர வலயங்களில் 75 இடங்களில் 3, 3 1/2 மாத வயது வகுப்புகளுக்கான வர்க்க இசைவாக்கத் திட்டம் மேற் கொள்ளப்பட்டது. இதில் வேறுபட்ட வயதுடைய சம்பா, சம்பா அல்லாத 5 புதிய சிறந்த வழித்தோன்றல்கள் அவற்றின் இசைவாக்கத் தன்மையை அறிய பரிசோதிக்கப்பட்டன. மேலும் 2009/2012 பெரும் போகம், 2010 சிறுபோகம் ஆகிய பருவங்களில் 3 மாத வழித்தோன்றல்களும், 3 1/2 மாத 3 வழித்தோன்றல்களும் நியம சோதனை வர்க்கங்களுடன் சோதிக்கப்பட்டன. இவற்றுள் At 6-486 (3 மாத வெள்ளைச் சம்பா) Ld 3-6-12 (3 1/2 மாத சிவப்பு சம்பா) இரண்டும் சோதனை வர்க்கங்களிலும் பார்க்க சிறந்த மேலான இயல்புகளைக் கொண்டிருந்ததனால் இவை LSVAT திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டன.

பெரிய அளவிலான VAT திட்டம் (LSVAT)

பண்ணையாளர்களின் ஏற்றுக் கொள்ளும் தன்மையை அறிவதற்காக பண்ணையார்களின் வயல்களில் பின்வரும் 6 புதிய சிறந்த வழித்தோன்ற ல்கள் 2010ல் பரிசோதிக்கப்பட்டன.

At 632 (3 1/2 மாத சிவப்பு சம்பா)

Bg 3 171 (3 1/2 மாத வெள்ளை, சம்பா அல்லாதது இடைத்தர உருளை)

Bg 4-492 (3 1/2 மாத வெள்ளை சம்பா)

Ld 3-12-50 (3 1/2 மாத சிவப்பு சம்பா)

Bg 2-465 (3மாத வெள்ளை, சம்பா அல்லாதது இடைத்தர உருளை)

At-6-676 (3மாத வெள்ளை, சம்பா அல்லாதது இடைத்தர உருளை)

இவற்றுள் At632, Bg 3171, Bw 4-992 நல்ல பேறுபேற்றைக் காட்டின. எனினும் அண்மையில் விடுவிக்கப்பட்ட வர்க்கங்கள் விவசாயிகளிடையே மிகவும் பிரபல்யமாகக் காணப்படுவதால் மேற்படி வழித்தோன்றல்களை தேசிய ரீதியில் விடுவிப்பத ற்கு முன்பாக விவசாயிகளுக்கு சிறிய விதைப் பொதிகளாக வழங்கப்பட்டு அவர்களின் சாதகத் தன்மையை பெறத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விதை உற்பத்தி

சிபாரிசு செய்யப்பட்ட எல்லா வயது வகுப்பு வர்க்கங்களுக்குரிய (2 1/2, 3, 3 1/2, 4, 4 1/2 மாத) உற்பத்தியாளர் விதைஉற்பத்தி திட்டம் தொடரப்பட்டதுடன் நீண்ட வயது ''மாவீ'' திட்டத்திற்குரிய 5-6 மாத வயதுடைய ஒளிக்கால உறுத்துணர்ச்சி யுடைய அடிப்படை விதை உற் பத்தியும் திட்டமிடப்பட்டது.

அட்டவணை 2.3.4.: உற்பத்தியாளர் விதை உற்பத்தி (கி.கி) 2009/2010 பெரும்போகம், 2010 சிறுபோகம்

வர்க்க/முதிர்ச்சி நாட்களில்		*உற்பத்தியாளர் விதை (கி.கி.)*
நாட்கள்	*பெரும்போகம் 2009/10*	*சிறுபோகம் 2010*
150–180 நாட்கள் (ஒளிகாலத்திற்கு உறுத்துணர்ச்சியுடையவை)		
Bg 3–5	20 (அடிப்படை)	நடுகைச் செய்யப்படவில்லை (ஒ.உ)
Bg 745	20	,,
Bg 38	20	,,
4 மாதங்கள்		
Bg 379–2	20	100
Bg 450	20	50
Bg 403	20	20
Bg 454	20	20
Bg 406	01	40
3 1/2 மாதங்கள்		
Bg 94–1	100	80
Bg 352	180	180
Bg 357	20	20
Bg 358	200	220 (அடிப்படை)
Bg 359	120	160
Bg 360	20	40
Bg 366	–	20
3 மாதங்கள்		
Bg 300	160	240
Bg 304	20	120
Bg 305	20(அடிப்படை)	–
80 நாட்கள்		
Bg 250	40	40

ஒ.உ; ஒளிக்கு உறுத்துணர்ச்சியுடையவை

தேசிய நெல் ஒன்றுகூடல் 2010

பத்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெறுகின்ற தேசிய நெல் ஒன்று கூடல் நிகழ்வில் போது RRDI ஆனது அதன் இலட்சிய நோக்கை மாற்றி அமைத்ததது. இது 2010 டிசம்பர் மாதம் 2ஆம், 3ஆம் திகதிகளில் இரண்டு நாள் நிகழ்வாக இடம் பெற்றது. இதில் விவசாய அமைச்சும், அமைச்சின் செயலாளர், உதவிப் பணிப்பாளர் நாயகம், IRRI, சீனக் குடியரசின் விஞ்ஞானிகள், இந்திய விஞ்ஞானிகள், பிலிப்பைன்ஸ் விஞ்ஞானிகள், இலங்கையிலுள்ள 300 கொள்கை வகுப்பாளர்களும் விஞ்ஞானிகளும் அரச, அரச சார் பற்ற அலுவலர்களும் பங்கு பற்றினர். மேற்படி ஒன்று கூடலின் போது 2006ல் எடுக்கப்பட்ட''கன்னொருவ வெளிக்கொணர்வு'' முற்று முழுதாக நிறைவேற்றப்பட்டது.மேற்படி 2010 தேசிய நெல் ஒன்று கூடலின் போது 39 மீளாய்வுத் தாள்களும், 38 சுவரெராட்டிகளும் வெளியிடப்பட்டன. இவற்றில் மூலம் முன்னேற்றக் கொள்கை, ஆராய்ச்சி, அபிவிருத்தி நடவடிக்கை மாற்றி அமைக்கப்பட்டதுடன் நெற் செய்கையின் எதிர்கால தந்திரோபாயங்களும் உருவாக்கப்பட்டன.

தொழில்நுட்ப விரிவாக்கம்

பயிற்சி நிலையத்தின் முறைசார் நடவடிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கும் நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்பட்டன. இதற்காக 2010இல் 4898 ற்கும் மேற்ப்பட்ட களவிரிவாக்க உத்தியோகத்தர்கள், விவசாயிகள், விவசாயப் பாட ஆசிரியர்கள், பல்கலைகழக மாணவர்கள் போன்றோர்க்கு 141 முழுநாள் பயிற்சி நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதற்கும் மேலதிகமாக 346 அலுவலர்களுடனான 12 ஆராய்ச்சி/விரிவாக்கல் நிகழ்ச்சிகள் 19 விவசாயிகள் பிரதிநிதித்துவ நிகழ்ச்சிகள்; அமைச்சர்கள், DOA, ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோரின் பங்குபற்றலுடன் கூடிய பல பருவகால கூட்டங்கள் போன்றனவும் நடாத்தப்பட்டன. இருபதுக்கும் மேற்பட்ட பல்கலைகழக, தொழில்நுட்ப மாணவர்களின் பட்டம், டிப்ளோமா ஆகியவற்றின் நிறைவுடன் தொடர்புடைய 3–6 மாத நீண்ட கால பயிற்சி நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன. விவசாய அமைச்சர் ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகள், விவசாயிகள் போன்றோரின் பங்குபற்றலுடன் கூடிய செய்து காட்டல் வயல் விழா நிகழ்வு 2010 சிறுபோகத்தில் RRDI ஆல் ஊற்பாடு செய்யப்பட்டு நடந்தேறியது.

அம்பலாந்தோட்ட நெல் ஆராயச்சி நிலையம்

மேற்படி நிலையத்தின் குறிக்கோளாக புதிய சிவப்பு நெல் வர்க்கங்களின் விருத்தி, உவர்த் தன்மைக்கு சகிப்புத் தன்மையைக் காட்டும் வர்க்கங்களின் விருத்தி, ஏற்றுக் கொள்ளக்கூடிய தானிய தரமுடைய நோய் பீடைகளுக்கு எதிர்ப்புடைய குறுகிய கால உயர் விளைவைத் தரும் வர்க்கங்களின் விருத்தி, பிரதேச வயல் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய தொழில் நுட்பங்களின் உருவாக்கம் என்பன காணபடுகின்றன.

வர்க்க விருத்தி

மேற்படி நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் 80 கலப்புக்கள் 2010 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. 116 செறி குடித்தொகைகள் மதீப்பீடு செய்யப்பட்டு, மேலதிக சோதனைக்காக 97 தெரிவு செய்யப்பட்டன. F_s சந்ததியில் தொடங்கி 1564 உயர்தர எச்சங்கள் நிர்மானிக்கப்பட்டதுடன், விளைச்சல் சோதனையில் மேலதிக மதிப்பீட்டுக்காக 238 எச்சங்கள் தெரிவு செய்யப்பட்டன. PYT ல் 47 வழித்தோன்றல்கள் பரிசோதிக்கபட்டு 23 வழித்தோன்றல்கள் MYT சோதனைக்காக தெரிவு செய்யப்பட்டன. பெரிய அளவிலான வர்க்க இசைவாக்கத் திட்டத்திற்கான மேலதிக மதிப்பீட்டுக்காக VAT இலிருந்து At 06-650 எனும் புதியதொரு வழித்தோன்றல் தெரிவு செய்யப்பட்டது. At 07-800, At 09-631 எனும் புதிதாக விருத்தி செய்யப்பட்ட இரு வழித்தோன்றல்கள் NCRVT யிலிருந்து VAT இன் மேலதிக மதீப்பீட்டுக்காக தெரிவு செய்யப்பட்டது.

2010ன் CRVT திட்டத்திற்காக At 08-413, At -8- 593, At-08- 617, At 09-854, At 09-561, At 09-1078 ஆகிய 3- 3 1/2 மாத வயதுடைய புதிய சிறந்தவழித்தோன்றல்கள் பிரேரிக்கப்பட்டன. மாத்தறை, அம்பாந்தோட்டை, ஆகிய மாவட்டங்களில் 11 இடங்களில் VAT நிகழ்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

அறிமுகப்படுத்தப்பட்ட மூலவுயிருருவின் மதிப்பீடு

பிலிப்பைன்ஸ் IRRI இலிருந்து பெறப்பட்ட 02 INGER (IIRON, IRSSTN) நாற்று மேடைகள் மதீப்பீடப்பட்டு 06 சிறந்த வழித்தோன்றல்கள் மேலதிக மதீப்பீட்டுக்கும் இனவிருத்தி திட்டத்தமிற்குமாகத் தெரிவு செய்யப்பட்டன.

உற்பத்தியாளர் விதை உற்பத்தி

தேசிய விதை நெல் விநியோகத் திட்டத்திற்காக At 303, At 306, At 307, At 308, At 353, At 362, At 402 ஆகியவற்றிலிருந்து உற்பத்தியாளர் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு அரச விதைப் பண்ணைகளுக்கு வழங்கப்பட்டன.

நெல்லின் முன் ஊறவிடலின் மூலம் மின்சாரத் தேவையையும், சமைக்கும் நேரத்தையும் குறைத்தல்

நெல்லின் முன் ஊறவிடல் நேரத்தை ஆய்வு செய்து நேரத்தையும், மின்சாரத்தையும் சேமிக்கும் நோக்குடன் 04 பிரபல்யமான (Bg 300, Bg 352, Bg 358, At 306) நெல் வர்க்கங்கள் பரிசோதிக்கப்பட்டன. நெல்லை 8 மணித்தியாலங்கள் ஊற விடுவதன் மூலம் 17.4% சமைக்கும் நேரம் குறைவடைந்தது முன் ஊற விடல் செய்யப்படாத அரிசி சமைப்பதற்கு 17.5 நிமிடமும், ஊறவிடப்பட்ட அரிசி 14.5 நிமிடமும், சிறிய சோறு சமைக்கும் கருவிக்கு தேவைப்பட்டது. (mini Rice cooker) எட்டு மணித்தியாலங்கள் ஊறவிடப்பட்ட நெல் வர்க்கங்களுக்கான சராசரி சமைக்கும் நேரம் வருமாறு Bg 300-15 02 நிமி, Bg 352-16;32 நிமி, Bg 358-15;4 நிமி, At 306-14;47 நிமி, நாட்டின் பொருளாதாரத்திற்கும் உதவும் வகையில் நெல்லை 8 மணித்தியாலயங்கள் ஊற விடுதல் மின்சாரத்தை 17.4% குறைக்கின்றது.

வளி இறுக்கமான பைகளில் நெல் சேமிப்பு

ஆறு சிறந்த வர்க்கங்களைப் பாவித்து Bg352, Bg 300, Bg 358, Bg 360, At 405, At 306) வளி இறுக்கமான பைகளிலும், பொலித்தீன் சாக்ககளிலும் சேமிக்கும் போது தானியங்களின் தரம் எவ்வாறுள்ளது என மதீப்பீட்டு செய்யப்பட்டது. வளி இறுக்கமான பைகளில் சேமிக்கப்பட்ட நெல்லின் தரங்கள் போதுமான அளவு நிலைத்திருந்தது. எவ்வாறாயினும் வளி இறுக்கமான பைகளில் நடுகை நோக்கத்துடன் விதைகள் சேமிப்பதற்கு ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அத்துடன் இம் முறைச் சேமிப்பின் போது தானியத்தின் வெள்ளைத் தன்மையை பேணுவது கடினம் இப்பைகளில் 9 மாதங்களுக்கு சேமிக்கப்பட்டதானிய வெள்ளை நிறம் பொலீத்தின் சாக்குகளின் சேமிக்கப்பட்டதிலும் பார்க்க குறைவாகக் காணப்பட்டது.

தொழில்நுட்பப் பரம்பல்

கள வரிவாக்க உத்தியோகத்தர்கள், விவசாயிகள், விவசாய ஆசிரியர்கள், பல்கலைகழக, தொழில்நுட்ப கல்லூரி, பாடசாலை மாணவர்கள் ஆகியோருக்கு பல்வேறு பண்ணைப் பயிற்சி வகுப்புகள் 2010ல் நடாத்தப்பட்டன.

நெல் ஆராய்ச்சி நிலையம், சம்மாந்துறை

கிழக்கு பிரதேச நெற் செய்கையாளர்களின் தேவையை நிறைவு செய்வதற்காக மேற்படி நிலையம் நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தின் நோக்கம், கிழக்கு மாகாண நெற் செய்கையில் (குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில்) காணப்படுகின்ற அறிவுசார் இடைவெளியை அடையாளம் கண்டு அவற்றை சரியான முறையில் நிவர்த்தி செய்தல் ஆகும்.

இப்பிரதேசத்தில் நெல் விளைச்சலை அதிகரிக்கும் நோக்குடன் காணப்படுகின்ற வளங்களைப் பாவித்து சிறந்தநெல் வர்க்கத்தைத் தெரிவு செய்வதும் இதன் பொறுப்பாகும். மேற்படி நிலையத்திலும், விவசாயிகளின் வயல்களிலும் எல்லா வயது வகுப்பு வர்க்கங்களுக்குமான NCRVT, VAT, LSVAT ஆகியன நடைமுறைப்படுத்தப்பட்டன.

இந்த பிரதேசத்தில் நெற்செய்கையில் ஈடுபடும் சகலருக்குமான தொழில்நுட்ப பரம்பல் இந்நிலையத்தில் முக்கிய செயற்பாடு ஆகும். தொழில்நுட்ப கல்லூரி மாணவர்களுக்கும், இறுதி வருட ஆய்வு திட்டத்தை நிறைவு செய்யும் 2 வயம்ப பல்கலைகாக மாணவர்களுக்கும், தனியார் நிறுவன அலுவலர்களுக்கும், விவசாயிகளுக்குமான 3 விழிப்புணர்வு பயிற்சி திட்டங்கள் 2010ல் நடைமுறைப்படுத்தப்பட்டன.

அதிக அளவிலான கூட்டெரு வளர்ப்பூடகம் சேதன கூட்டெரு உற்பத்தித் திட்டத்தில் கீழ் விவசாயிகளின் பங்களிப்புடன் உற்பத்தி செய்யப்பட்டு அவர்களுக்கு பகிர்ந்தரளிக்கப்பட்டது. 820 விவசாயிகளின் பங்களிப்புடன் சேதன கூட்டெரு உற்பத்தியும் பயன்பாடும் எனும் பயிற்சி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இப்பிரதேச விவசாயிகளுக்காக களை நெல் பிரச்சினை தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்றும் நடந்தேறியது.

2011ற்கான திட்டம்

நெல்லிற்கான கேள்வி அதிகரிப்பை சந்திக்கக் கூடிய வகையில் RRDI, அதனுடன் இணைந்த நிலையங்களுடன் சேர்ந்து உற்பத்தி அதிகரிப்பு, தொழில்நுட்பப் பாதுகாப்புத் திட்டங்களை தொடர்கின்றது. நெல்லின் கேள்வி அதிகரிப்பு காரணங்களாக நுகர்வோரின் பழக்க மாற்றம், அல்ககோல் பானங்கள் உட்பட அரிசியை அடிப்படை யாகக் கொண்ட உற்பத்திகளின் பாவனை, சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு ஏனைய பொருட்களுடன் இணைந்த நெல்லுக்கான உலக சந்தையின் தளம்பல் நிலை ஆகியனவாகும். எவ்வாறெனினும் மேற்படி இலக்குகளை அடைவது பல்வகைமையுடையதுடன், நேரத்துடன் மாறுப்படுவதும் ஆகும். நமது தீவின் நெற் செய்கையானது நீர்தட்டுபாடு, மேலதிக நீரினால் ஏற்படும் பாதிப்பு, புதிய நோய் பீடைத் தாக்கங்கள், கூடிய, குறைந்த வெப்பநிலைத் தாக்கம், மண் போசணைகளின் குறைவு களைகளினதும் களை நெல்லினதும் தாக்கம் போன்ற பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்கின்றது.

எனவே உயிர்ப்புள்ள உயிர்பற்ற நிலமைகளின் கீழ் சிறந்த வளப் பயன்பாட்டுடன் உயர் விளைவைத் தரக் கூடிய புதிய வர்க்கங்களை அடையாளங் காண்பது அவசர தேவை ஆகும். சூழலியல் மாற்றங்களால் இலகுவில் பாதிப்படையக் கூடியதாக தற்போதைய விதை நெல் உற்பத்தி திட்டம் மாறி வருகின்றது. எனவே விவசாயிகளின் தொடர்ச்சியான விதை நெல் தேவைக்கு சிறந்த விதைகளை வழங்குவதும், மேற்படி பிரச்சினைகளை முறியடிப்பதும் முக்கியமானவை ஆகும். வதிவிடப் பயிற்சிகளின் மூலம் RRDI, ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து உருவாகிய தொழில்நுட்பங்களை பயிற்சியாளர்களுக்கு வழங்கவுள்ளது. நிகழ்கால தேவைகளுக்கு ஏற்ற வகையில் குறுகிய, நீண்ட கால நெற்செய்கைப் பயிற்சிகளை மேலும் தரமுயர்த்தவுள்ளதுடன் உறுதியாக வழங்கவுள்ளது.

அலுவலர்களின் பட்டியல்

பதவி நிலை	எண்ணிக்கை
பணிப்பாளர்	01
பிரதிப் பணப்பாளர் (ஆராய்ச்சி)	01
உதவி பணிப்பாளர்	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	13
விவசாய உத்தியோகத்தர்	02
விவசாய பொருளியலாளர்	01
பொருளியல் உதவியாளர்	01
விவசாய கண்காணிப்பு அலுவலர்	06
நிகழ்ச்சி திட்ட உதவியாளர்	09
விவசாய போதனாசியர்கள்	31
ஆராய்ச்சி உதவியாளர்கள்	17
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	13
சாரதிகள்	09
தச்சர்	01
மேசன்	01
சுற்றுலா விடுதிக் காவலாளி	01
சுத்திகிரிக்கும் தொழிலாளி	02
தொழிலாளி	225

2.3.1 பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் போம்புவளை

பிராந்திய நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையமானது தாழ்நில ஈர வலயத்தில் அமைந்துள்ளதுடன் இரு துணையான விவசாய ஆராய்ச்சி நிலையங்களை (ARS) பெந்தோட்டையிலும், லபுதுவவிலும் கொண்டுள்ளது. தாழ்நில ஈர வலயத்தின் (LCWZ) இரத்தினபுரி, காலியின் ஒரு பகுதி, கம்பஹா, கொழும்பு, களுத்துறை ஆகிய நிருவாக மாவட்டங்களில் நெல் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் ஆராய்ச்சி அபிவிருத்தி வேலைகளை இந்நிலையம் மேற்கொள்கிறது. போம்புவெல பி.நெ.ஆ.அ.நி. ஆனது அதிக விளைச்சல் தருகின்ற சிவப்பு, வெள்ளை அரிசி பேதங்களின் விருத்தியை ஊக்குவிப்புச் செய்கிறது. குறிப்பாக இரும்பு நஞ்சாதல் நிலமையைத் தாங்கி வளருகின்ற பேதங்களின் உருவாக்கத்தில் பங்களிப்பு செய்யும் அதேவேளை லபுதுவ வி.ஆ.நி. ஆனது தா.நி.ஈ.வ. இன் தென் பிரதேசங்களில் மிகவும் பிரபல்யமான சிவப்பு சம்பா அரிசியின் விருத்தியில் கூடிய பங்களிப்பு செய்கிறது. பெந்தோட்டை வி.ஆ.நி. ஆனது சவர் நிலையங்களிலும் வெள்ளம் உருவாகின்ற பிரதேசங்களிலும் நெல்லின் விருத்தியிலும் அதனுடன் தொடர்புடைய தொழில்நுட்பங்களிலும் விவசாயிகளின் பங்களிப்புடன் கூடிய நிகழ்ச்சிகளை நடாத்தி வருகின்றது.

பாதீடு

முதலீடு, நடைமுறை நிகழ்ச்சி திட்ட செலவு விடயங்களில் கீழான 2010ஆம் ஆண்டுக் காலப் பகுதிக்கான வருடாந்த வரவு செலவு திட்டம் கீழே தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.3.1.1: வருடாந்த பாதீடு- 2010 (ரூபா)

தலைப்பு	*ஒதுக்கீடு*	*செலவு*	*செலவு%*
மூலதனம்	3,821,434	3,821,434	100
மீண்டுவரும் செலவு	9,563,500	8,930,570	93
திட்டங்கள்			
சேதன வளமாக்கி பிரயோகமும் உற்பத்தி உயர்வும்	1,855,000	1,721,437	93
மொத்தம்	***15,239,934***	***14,473,441***	***95***

முன்னேற்றம்

நெல் பிறப்பாக்கம்

பேதவிருத்தி

N CRVT,VATT,LSVAT நிகழ்ச்சிகள் தொடரப்பட்டு மொத்தமாக 26 தெரிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டன. சிவப்பு, நடுத்தர, 3 1/2 மாத Bw05-1621 VAT ற்காக தெரிவு செய்யப்பட்டதுடன் வெள்ளை நிற, 31/2 மாத Bw04-992 LSVAT ற்காக தெரிவு செய்ப்பட்டது. கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் ஐந்து சிறந்த வழித்தோன்றல்கள் பரிசோதிக்கப்பட்டன.

உற்பத்தியாளர் விதை உற்பத்தி

Bw363, Bw 364 ஆகிய உற்பத்தியாளர் விதைகள் பின்வரும் அளவுகளில் உற்பத்தி செய்யப்பட்டது. அத்துடன் Bw361, Bw272-66, ஆகியன பிராந்திய தேவைகளுக்கு விதை வழங்குவதற்காக அதிகரிக்கப்பட்டன.

அட்டவணை 2.3.1.2: 2010இல் உற்பத்தி செய்யப்பட்ட விதை (கி.கி)

வர்க்கம்	*உற்பத்தியாளர் விதை*	*வர்த்தக விதை*
Bw 272-6b	82.5	59.5
Bw 351	41.0	98.0
Bw 361	61.5	447.0
Bw 363	41.0	213.0
Bw 364	41.0	47.0

சேதனப் பண்ணைக்கான நெல் இனங்கள்

பாரம்பரிய இனங்களில் இருந்து கிட்டதட்ட 100 கி கி விதை சேதனப் பண்ணைக்காக உற்பத்தி செய்யப்பட்டது. சேதன முறை செய்கையின் போது Bw359 Bw272-66 Bw363 Bw361 Bw364 ஆகிய திருத்திய நெல்லினங்கள் அதிக விளைச்சலைக் காட்டின(3-3.3t /ha).

பயிராக்கவியல்

கலப்பின நெல்லை நேரடியாக விதைத்தல்

புதிய தொழில்நுட்பத்தை வெளியிட முன்பதாக கலப்பின விதைகள் LCWZ நிலைமைகளில் கீழ் விவசாயிகளின் வயல்களில் 30Kg / ha என்ற அளவில் நேரடி விதைப்பின் கீழ் பரிசோதிக்கப்பட்டது.

களை விஞ்ஞானம்

இரசாயன களை முகாமைத்துவம்

ஈரவிதைப்பு நெல்லுக்கு பல்வேறு புதிய களை நாசினிகள் பரிசோதித்துப் பார்க்கப்பட்டன. இவற்றுள் பிஸ்பிறிபக் சோடியம் 20% wp யும் ஒக்சடியாசோன் 25% Ec யும் எல்லா வித களைகளையும் சிறப்பாகக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருந்தன. மற்றனிபொப் 10% Ec (Mataunifop), பெனாக்ஸா பரப்- எதைல் (Fenoxa prop-p- ethyl) 69 gr / ha ஆகியன புல்லினக் களைகளை சிறப்பாக கட்டுப்டுத்தின. அதேவேளை பேன்ராசோன் 48% SL (Bentaxone 25% SL) அகன்ற இலைக் களைகளை வினைத் திறனுடன் அழித்தது.

பூச்சியியல்

பூச்சி எதிர்ப்பினங்களின் தெரிவு

கொப்புளாற்கான 15 எதிர்ப்பின வழித் தோன்றகளும், கபில நிற தத்திக்கான 17 எதிர் ப்பின வழித்தோன்றல்களும் பனிப்பூச்சிக்கான 12 எதிர்ப்பின பேதங்களும் தெரிவின் மூலம் அடையாளம் காணப்பட்டன. Sacciolepis interupla, Echinocloa cars-gali, Leptochloa Chinensis ஆகிய 3 இனங்கள் நெல் மடல் சிற்றுண்ணிக்கான மாற்று விருந்து வழங்கிக்கான பிரதியீடுகளாகக் காணப்பட்டன. நெல் சேமிப்புப் பீடையினங்களுக்கு எதிரான தாவரங்களை அடையாளங் காணலில், பப்பாசி இலைகளின் பாவனைனானது (தொடர்ந்து தேசி, நிக்கா (Niks) இலைகளின் பாவனையுடன்) Sitotroga Cerealla வைக் கட்டுப்படுத்துவதில் வினைத் திறனாகக் காணப்பட்டது. அத்துடன் Sytophillno oryzae வை கட்டுப்படுத்துவதிலும் வினைத் திறன் உடையவனாகக் காணப்பட்டன.

நோயியல்

எரிபந்தத்திற்கு எதிர்ப்பான பேதங்கள் தெரிதல்

அம்பலாந்தோட்ட,போம்புவெல, லபுதுவ ஆகிய இடங்களில் இருந்து பெறப்பட்ட 230 நெல்லின வழித்தோன்றல்கள் தெரிவுகுட்டுத்தப்பட்ட போது அவற்றில் இருந்து எரிபந்தநோய்க்கு எதிர்ப்புடைய 40 வழித்தோன்றல்கள் தெரிவு செய்யப்பட்டன.

எரிபந்த நோய்க்கும் (Pyriculria grisea) மடல் வெளிறல் நோய்க்கும் (Rhyzoctoria solant) சிறந்த இரசாயனமாக சிற்றோகான் 40 mg / lit எனும் செறிவில் பாவிக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்டது.

உற்பத்தி அதிகரிப்பும் சேதனப் பசளைப் பாவனையும்

முப்பத்தைந்து தொன்னுக்கும் (35 tonnes) அதிகளவில் கூட்டெரு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 15 பயிற்சி வகுப்புகளில் 500 பேர் பங்கு பற்றினர்.

மாதிரி கிராம நிகழ்ச்சியும் சமூக அடிப்படையிலான விதை உற்பத்தியும்

களுத்துறை மாவட்டத்தில் உள்ள இரு கிராமங்களில் மேற்படி திட்டத்திற்கான வயல் நடவடிக்கைகள் ஆண்டின் இறுதிக் காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது.

தொழில்நுட்ப பரிமாற்றம்

களுத்துறை மாவட்டத்தில் 235 விவசாயத் தினைக்கள அலுவலர்களுக்கு பருவத்திற்கு முன்னான பயிற்சி வகுப்புக்களும், பயிர் சிகிச்சை முகாம்களும் நடத்தப்பட்டது. அதேவேளை 70 ற்கும் அதிகமான விவசாயிகளுக்கும், உத்தியோகத்தர்களுக்கும் கேகாலையிலேயே பயிற்சி வழங்கப்பட்டது. இதற்கும் மேலதிகமாக ஆராய்சி உத்தியோத்தர்களால் 07 கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

நெல் ஆராய்ச்சி நிலையம்- லபுதுவ

LCWZ ன் தெற்குப் பிரதேசங்களில் அதியுயர் நெல் உற்பத்தி நிலையங்களுக்கான தொழில் நுட்பங்களையும் சிறந்த வர்க்கங்களையும் விருத்தி செய்வதற்கான பொறுப்பை லபுதுவ நெல் ஆராய்ச்சி நிலையம் கொண்டுள்ளது.

நெல் இனவிருத்தி

சிவப்பு அரிசி வர்க்கமான Ld 408 (110 நாள்) சிபாரிசு செய்யப்பட்டுள்ளதுடன் நாடளாவிய ரீதியிலான நெற் செய்கைக்கும் இது விடுவிக்கப்பட்டுள்து.

NCRVT, VAT ,LS VAT நிகழ்ச்சிகள்

LS VAT ன் கீழ் Ld 3-6-12, Ld 1-5-15 (3 1/2 மாத) வெள்ளை சம்பா வர்க்கங்களும் Ld 3-12-50 (3 1/2 மாத) சிவப்பு சம்பா வர்க்கங்களும் பரிசோதிக்கப்பட்டன.

உற்பத்தியாளர் விதை உற்பத்தி

பின்வரும் அளவுகளில் உற்பத்தியாளர் விதை உற்பத்தி செய்யப்பட்டது.

அட்டவணை 2.3.1.3: 2010 ல் உற்பத்தியாளர் விதை உற்பத்தி (கி.கி.)

வர்க்கம்	அளவு (கி.கி.)
Ld 365	100
Ld 356	40
Ld 408	20
மொத்தம்	160

ஏனைய நிகழ்ச்சி திட்டங்கள்

முதலாவது பருவத்திற்கான சேதன வளமாக்கி உற்பத்தி பயன்பாடு ஊக்குவிப்பு ஆரம்பிக்கப்பட்டதுடன் 10 தொன் கூட்டெரு உற்பத்தி செய்யப்பட்டது.

விவசாய ஆராய்ச்சி நிலையம், பெந்தோட்டை

நான்கு IRRI ன் தெரிவு வழித்தோன்றல்களும், (IR 119, சம்பா மசுரி, உப IR 64, சுவர்ணா உப –1) உள்ளூர் வழித்தோன்றல்களும் (Bg 96-741, Bg 5 R) குறிப்பிட்ட வயல் நிலைமைகளின் கீழ் 07 மாவட்டங்களில் வெள்ள எதிர்ப்பு வர்க்கங்களை அறிவதற்காக பரிசோதிக்கப்பட்டன.

விவசாயிகளின் வயல்களில் உரிய வயல் நிலமைகளில் கீழ் NCRVT, VAT நிகழ்ச்சிகள் தொடரப்பட்டன.

சேதனப் பளை உற்பத்தி ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள்

5000 கி.கி கூட்டெரு உற்பத்தி செய்யப்பட்டது. 389 ஆரம்பக் கூட்டெரு பொதிகள் பண்ணையாளர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன. உயர் நிலங்களில் பசுந்தாள் பசளை உற்பத்திக்காக 1600 தடிகள் (சீமைக் கிளுவை, அகத்தி) நடுகை செய்யப்பட்டன. ஆசிரியர்கள், மாணவர்கள், விவசாயத் திணைக்கள (DOA) அலுவலர்கள் அடங்கலாக 389 பயிற்சியாளர்களுக்கு கூட்டெரு உற்பத்தியும் பயன்பாடும் தொடர்பாக ARS- பென் தொட்டயில் பயிற்சி வழங்கப்பட்டது.

பயிற்சிகள், ஒன்றுகூடங்கள், பயிற்சி பட்டறைகள்

- ஏ.பீ.பெந்தோட்ட, ஆ.அ. 3 வது சர்வதேச நெல் ஆராய்ச்சி ஒன்றுகூடல், கானோய், வியட்னாம் (08–12 வது நொவம்பர் 2010
- ஏ.பீ.பெந்தோட்ட, ஆ.அ.சர்வதேச ஒன்றுகூடல் 2012, விவசாய பீடம், றுகுணுப் பல்கலைக்கழகம், 16 வது நொவம்பர் 2010
- ஏ.பீ.பெந்தோட்ட, ஆ.அ.5 வது ஆசிய உயிர் தொழில்நுட்பவியல் ஒன்று கூடல் 2010 அமாய ஹில், கண்டி, 15–17 வது டிசம்பர் 2010
- ஜே.டி.கே.எம்.ஜயவர்தன, ஆ.அ.3வது சர்வதேச நெல் ஆராய்ச்சி ஒன்று கூடல் கானோய் வியட்நாம் 8–12 நொவம்பர் 2010
- வை.ஜே.பி.கே.மிதரசேன, ஆ.அ. 3வது சர்வதேச நெல் ஆராய்ச்சி ஒன்று கூடல் கானோய் வியட்நாம் 8–12 நொவம்பர் 2010
- வை.ஜே.பி.கே.மிதரசேன, ஆ.அ. 5 வது ஆசிய உயிர் தொழில்நுட்பவியல் ஒன்று கூடல் 2010 அமாய ஹில் கண்டி 15–17 டிசம்பர் 2010
- ஏ.எஸ் புஸ்பகுமாரி ஆ.அ விவசாய பிரயோகத்தில் கதிர்வீச்சு மாற்ற பல் பகுதிய உரையாடல் தொடர்பான பயிற்சி வகுப்பும் செய்து காட்டலும் ஹோடவி மிங் சிற்றி வியட்நாம் 12–17 ஜூலை 2010
- ஏ.எஸ் புஸ்பகுமாரி ஆ.அ சர்வதேச நெல் ஆராய்ச்சி ஒன்று கூடல் கானோய் வியட்நாம் 8–12 நொவம்பர் 2010
- ஜே.பி.டி.எஸ் கக்வெல ஆ.அ சர்வதேச ஒன்று கூடல் ' இலங்கையில் சேதன விவசாயத்தின் மலர்ச்சி' சர்வதேச தொடர்புகள், தந்திரோபாயக் கற்கைகளுக்கான, லக்சுமன் கதிர்காமர் கற்கை நிலையம் கொழும்பு 7–8 ஜனவரி 2010

உத்தியோகத்தர் பட்டியல்

பதவி நிலை	எண்ணிக்கை
பிரதிப் பணிப்பாளர்	01
ஆராய்ச்சி அலுவலர்கள்	13
விவசாய உத்தியோகத்தர்	01
விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர்	04
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள்	09
விவசாய போதனாசிரியர்கள்	15
ஆராய்ச்சி உதவியாளர்	12
முகாமைத்துவ உதவியாளர் சேவை	07
சுற்றுலா விடுதி காப்பாளர்	01
சாரதி	01
சுத்திகரிப்பாளர்	01
காவலாளிகள்	02
வேலையாள்	17
மொத்தம்	84

2.4 பண்ணை இயந்திரமயமாக்கல் ஆராய்ச்சி நிலையம் (ப.இ.ஆ.நி.) மஹாஇலுப்பள்ளமை

பண்ணை இயந்திரமயமாக்கல் ஆராய்ச்சி நிலையம், அனுராதபுரத்திலிருந்து சுமார் 35 கி.மீ.தொலைவில் மஹாஇலுப்பள்ளம விவசாய கட்டடத் தொகுதிக்குள் அமைந்துள்ளது. இலங்கையில் பொருத்தமானதொரு பண்ணை இயந்திரமயமாக்கலை ஊக்குவிப்பதற்காக FRMC பண்ணை இயந்திர தொழிநுட்பத்தினை அறிமுகம் செய்கின்றது.

வினைத்திறன் மிக்க விவசாய பொறிமுறைத் தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துவதோடு இலங்கையின் பல்வேறு பகுதிகளில் நிலவும் சமூக, பொருளாதார கள நிலவரங்களோடு இணக்கத்தினைக் கொண்டதாக அமைத்துக் கொள்வதே FRMC யின் பிரதான நோக்கமாகும்.

FRMC யின் முக்கிய நடவடிக்கைகள் பின் வருமாறு

1. பல்வேறுபட்ட பண்ணை முறைமைகளில் காணப்படும் தடைகள் மற்றும் முன்னுரிமைப்படுத்தல் என்பனவற்றிற்கு ஏற்ப இயந்திர மயமாக்கல் தேவைகளை இணங்காணுதல்.
2. பயன்படுத்தக் கூடிய இயந்திரங்களையும், கருவிகளையும் தெரிவு செய்து அவற்றை பரிசோதனைக்கு உற்படுத்தலும் அவற்றின் நிர்மாணம், இயங்குதிறன், பாதுகாப்பு, சிக்கனத் தன்மை, சமூகவியல் காரணிகள் என்பவற்றினைக் கருத்திற் கொண்டு இவற்றை நடைமுறைப்படுத்தல்.
3. இயந்திரங்களை நடைமுறைப்படுத்தலும் அதன் வளர்ச்சி மாற்றம், பொருத்ததன்மை போன்றவற்றை உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ளல்.
4. தொழில்நுட்ப வரைபடங்கள், சோதனை அறிக்கைகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட கருவிகளுக்கான வழிமுறை கையேடு ஆகியவற்றை தயாரித்தலும்.
5. பொருத்தமான விவசாய இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் உற்பத்தியில் உள்நாட்டு உற்பத்திகளுக்கு தொழில்நுட்பத்தினை வழங்குதலும் அவற்றினுடைய திறனை மேம்படுத்தலும்.
6. விவசாயிகள் மற்றும் ஏனையோருக்கு மத்தியில் விவசாய பொறிமுறை தொழில்நுட்பங்களை பிரபல்யப்படுத்துவதற்காக விவசாய விரிவாக்கத்திற்கும் ஏனைய முகவர்களுக்கும் உதவி நல்குதல்.

இந்த மையம் நான்கு பிரிவுகளைக் கொண்டதாகும்.

1. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு
2. சோதனை மற்றும் மதிப்பீட்டுப் பிரிவு
3. விவசாய மற்றும் கைத்தொழில் விரிவாக்கல் பிரிவு
4. வாகன பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பிரிவு

பாதீடு

வேறுப்பட்ட தலைப்புகளில் ஒதுக்கீடுகளும் செலவுகளும் அட்டவணை 2.4.1 ல் தரப் பட்டுள்ளது

அட்டவணை 2.4.1 வருடாந்தப் பாதீடு (ரூபா) 2010

தலைப்பு	*ஒதுக்கீடு*	*செலவு*
மூலதன செலவு	6,999,125	6,447,942
நடைமுறைச் செலவு	4,090,000	3,459,531
மொத்தம்	11,089,125	9,907,473

முன்னேற்றம்

ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்

சோளக் கதிரடிப்பான்

01% ஐ விடக் குறைவான விதைச் சேதத்தினைக் கொண்டதும், ஏக்கருக்கு 2000 கி.கி. ஐ விட அதிகமான கொள்ளளவை உடையதுமானசோள விதை வேறாக்கல் இயந்திரம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

இயந்திரமயப்படுத்தப்பட்ட உருளை வடிவ விதையிடும் இயந்திரம்

மனித வலு கொண்ட உருளை வடிவ விதைகருவியின் இயந்திரமயப்படுத்தலானது விதை நெல் அளவைக் குறைப்பதற்கும் மனித வலு தேவைகளை மீதப்படுத்துவதற்கும் வழிவகுக் கிறது. அத்தோடு களைகட்டும் கருவி கொண்டு களைகளை கட்டுப்படுத்தும் பொறியின் உருவாக்கம் மேற்கொள்ளப்படுகிறது.

விதைநெல் தூப்பரவு செய்யும் இயந்திரம்

ஏற்கனவே உள்ள நெல் தூய்மைப்படுத்தல் இயந்திரம் புதிய ஊசலாட்டமுறையை அறிமுக ப்படுத்துவதன் மூலம் மேம்படுத்தப்பட்டுள்ளது. குறைந்த செலவில் உயர்தரமான விதை நெல் உற்பத்தியை மேற்கொள்ள புதிய சிராய்வு அமைப்பு முறை இயந்திரத்திற்கு இணைக்கப்பட்டுள்ளது.

மேட்டு நில விதை கருவியின் மேம்பாடு

உழவு இயந்திரத் தொகுதியின் கிளச்சினை மேம்படுத்தி விதைப்பான் பெட்டியோடு இணைந்துள்ளது. இதன் மூலம் விதைப்பின் போது விதை சிதைவுகளை குறைக்கலாம். சரியான துளை இடைவெளிகளைப் பேணி மண்ணினால் மூடக்கூடியதாகவுள்ளது.

தாழ் நிலவலுகளை பிடுங்கியின் மேம்பாடு

ஒரு புதிய சக்தி இயக்கம் கொண்ட களைபிடுங்கியின் அறிமுகம் களைகட்டுதல் திறனை அதிகரித்ததோடு மனித வலு மூலம் ஏற் படும் பிரச்சினைகளையும் குறைத்துள்ளது. மேட்டு நிலங்களை பிடுங்கி சோளம் மற்றும் பல பருப்புப் பயிர்களில் வளரும் களைகளைக் கட்டுப்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேட்டு நிலவலுகளை பிடுங்கி

ஏற்கனவே இருக்கும் இயந்திரங்களுக்கு சக்தி பரிமாற்ற முறையினை முறைப்படுத்துவது பின் சில்லின் வினைத்திறனை அதிகரிக்கும்.

சோதனை மற்றும் மதிப்பீடு

உற்பத்தியாளர்களின் குறிப்புக்களையும் அவற்றின் பொருத்தப்பாட்டினையும் சரிபார்ப்பதற் காக பின்வரும் இயந்திரங்கள் சோதனைக்கு உற் படுத்தப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டது.

அட்டவணை 2.4.2

இயந்திரங்களின் சோதனை

இயந்திரத்தின் வகை	உற்பத்தி நாடு	சோதிக்கப் பட்ட இயந் திரங்களின் எண்ணிக்கை
4 சக்கர உழவு இயந்திரம்	இந்தியா	04
2 சக்கர உழவு இயந்திரம்	சீனா	08
மண்வெட்டி	இலங்கை	09
	இந்தியா	
	சீனா	
பற்றைவெட்டி	இத்தாலி	01
தூர்வையாக்கி	இந்தியா	01
தெளிக்கருவி	மலேசியா இந்தியா தாய்வான்	05
நீர் இறைக்கும் இயந்திரம்	இலங்கை	08

விவசாயம் மற்றும் தொழில்துறை விரிவாக்கம்

பல்கலைக்கழக மாணவர்கள், விவசாயிகள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், மற்றும் ஊழியர்கள் இந்நிறுவனத்திற்கு சமுகம் தந்தனர். களப்பரிசோதனைகள், விவசாயிகள் மற்றும் ஏனையோருக்கான பயிற்சிகள் படாஅத்த (விவசாய வாரம்), திருகோணமலை (திருமலை தனது கதவுகளை திறக்கின்றது.) குண்டசாலை (தேசத் திற்கு மகுடம் 2010) மற்றும் கஹடகஸ்துகிளிய போன்ற இடங்களில் இடம்பெற்றன.

அனைத்து விரிவாக்க காரியாலயங்களுக்கும் நெல், சோளம் ஆகியவற்றுக்காக இயந்திர செயல் திட்டங்களை வழங்குவதற்கு ஒரு செயற்திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வாகன பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல்

FRMC யின் வாகன பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பிரிவு, வாகன பழுதுபார் த்தல் வாகன பராமரிப்பு மற்றும் வாகன உதிரி ப்பாகங்களை கொள்வனவு செய்தல் தொட ர்பான பரிந்துரைகளையும், மதிப்பீடுகளையும் FRMC க்கும் விவசாய திணைக்களத்தின் ஏனைய நிறுவனங்களுக்கும் வழங்குகி ன்றது.

அட்டவணை 2.4.4: வாகனம் பழுது பார்த்தல்

	உந்துருளி	இலகு வாகனங்கள்	கடின வாகனங்கள்	மொத்தம்
சிபாரிசு	0	96	23	129
திருத்தம்	4	26	18	59

ஏனைய செயற்பாடுகள்

- தொழில்நுட்பக் குழுவின் அனுமதியுடன் அரச தினைக்களங்களும் உபகரணங்களையும் வாங்குவதற்குரிய தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்பட்டது.
- FMRC க்குரிய அலுவலகக் கட்டிடங்களையும், விடுதிகளையும் திருத்துதல்.

2011 ற்கான திட்டம்

- விவசாயச் செய்கைக்குரிய நிலத்தின் அளவை அதிகரிக்கும் நோக்குடன் சேறான, சேதனத் தன்மை கூடிய நிலங்களில் பாவிக்கக் கூடிய நீரியல் கலப்பையில் மாற்றத்தை மேற்கொள்ளுதல்.
- அச்சுச் சுழற்சிக்குரிய நீர் இறைக்கும் இயந்திரத்தின் நம்பகத் தன்மையை முன்னேற்றுதல் (வெளியேற்றும் திறனை அதிகரித்தல்).
- நீர்ப்பாசனத்தின் போது ஏற்படும் சேதங்களைக் குறைக்கும் முகமாக உயர் கொள்ளளவு, நம்பகத் தன்மையுடைய நீர் இறைக்கும் இயந்திரத்தின் மேம்படுத்துகை.
- தாழ்நில வலு களைபிடுங்கியின் உருவாக்க வேலைகளை நிறைவு செய்தல், உருவாக்க வேலைகளை நிறைவு செய்தல்.
- விதை பெட்டி, வித்துக்களை மண்ணால் மூடும் தட்டுக்குரிய இளம் தொகுதி ஆகியவற்றை விருத்தி செய்வதன் மூலம் உயர்நில விதையிடும் கருவியின் மேலதிக மேம்படுத்துகை.
- தற்போதுள்ள உருளை விதை கருவியின் இயந்திர மயமாக்கல் செயற்பாட்டை நிறைவு செய்தல்.
- கொள்ளளவை அதிகரிக்கும் முகமாக சோளவிதை வேறாக்கியின் மேம்பாடு.
- சோளச் செய்கையில் நான்கு சக்கர உழவு இயந்திரத்துடன் இணைத்து இயக்கப் படுகின்ற துளை நடுகருவியின் உருவாக்கம்.
- தற்போதுள்ள நெல் தூய்மையாக்கியின் திருத்த வேலைகளை நிறைவு செய்தல்.
- சோளச் செய்கையில் நான்கு சக்கர உழவு இயந்திரத்துடன் இணைத்து தொழிற் படுகின்ற துனை கருவியின் உருவாக்கம்.
- வெவ்வேறு நடுகை முறைகளில் விளைச்சல்களை ஒப்பிட்டு விரிவாக்க உத்தியோகத்தர்களுக்கு உதவக் கூடிய வழிகாட்டி நூல் ஒன்றை தயாரித்தல்.

உத்தியோகத்தர் பட்டியல்

	பதவி நிலை	எண்ணிக்கை
1.	பொறியியலாளர் (இயந்திரம்)	04
2.	விவசாய போதனாசிரியர்	02
3.	பண்ணை இயந்திர போதனாசிரியர்	02
4.	மேற்பார்வையாளர்	01
5.	படம் வரைஞர்	01
6.	பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	02
7.	சாரதி	02
8.	இயந்திர வல்லுனர்	03
9.	களஞ்சியப் பொறுப்பாளர்	01
10.	பொருத்துனர்	01
11.	உலோக இணைப்பாளர்	02
12.	கொல்லர்	01
13.	இயந்திர வீட்டுப் பொறுப்பாளர்	02
14.	காவலாளி	01
15.	இயந்திர இயக்குனர்	01
16.	சுத்தப்படுத்தும் ஊழியர்	01
17.	தேர்ச்சியற்ற ஊழியர்	06
18	ஊழியர் (அமைய)	11
மொத்தம்		47

3.1 விதை அத்தாட்சிப்படுத்தல், தாவரப் பாதுகாப்புச் சேவை – கன்னொறுவை

இலங்கையில் தேசிய தாவரப் பாதுகாப்பு, விதைத் தரம், தாவரக் கரு மூலவளங்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றை உறுதி செய்யும் பணிகள் விதை அத்தாட்சிப்படுத்தல், தாவரப் பாதுகாப்பு நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. விதை அத்தாட்சிப்படுத்தும் சேவை, தாவரப் பாதுகாப்புச் சேவை, தேசிய தாவரத் தடுப்புக் காப்பு என்பனவற்றிற்கான மைய முகாமைத்துவ நிறுவனமே விதை அத்தாட்சிப்படுத்தல், தாவரப் பாதுகாப்பு நிலையம் ஆகும். உயர் தரமான விதைகளையும், நடுகைப் பொருட்களையும் உற் பத்தி செய்தல், தாவரப் பாதுகாப்பு, பீடை நாசினி களைப் பயன்படுத்துவதிற் கட்டுப்பாடுகள், தாவரத் தடுப்புக்காப்புப் பணிகள் போன்ற விவசாயிகளிற்கு மிக அத்தியாவசியமான சேவைகளை வழங்குவத ற்கு இந்நிலையம் பொறுப்பாக விளங்குகின்றது.

மேலும் இது உணவுப் பயிர்களின் தாவரக் கரு மூலவளங்களைப் பாதுகாப்பதற்கும் பொறுப்பாக விளங்குகின்றது. விதை அத்தாட்சிப்படுத்தல், தாவரப் பாதுகாப்புச் சேவை பின்வரும் சட்டங்கள் தொடர்பிலான ஒழுங்கு விதிகளை அமுல் செய்வதற் கான பொறுப்பையும் கொண்டுள்ளது.

- 1999 இன் 35ஆம் இலக்க தாவரப் பாதுகாப்புச் சட்டம்
- 1980 இன் 33ஆம் இலக்க பீடைநாசினிகள் கட்டுப்பாட்டுச் சட்டம்
- 2003 இன் 22ஆம் இலக்க விதைச் சட்டம்

தேசிய தாவரப் பாதுகாப்பு நிலையமாக விதை அத்தாட்சிப்படுத்தல், தாவரப் பாதுகாப்பு நிலையம் செயற்படுவதோடு, இலங்கையில் தாவரச் சுகாதாரத்துடன் தொடர்புடைய பணிகளிற்காக நுழைவிடங்களையும் கட்டுப்படுத்துகின்றது.

பாதீடு

பல்வேறு தலைப்புக்களின் கீழ் 2010 இல் பெற்றுக் கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகள், ஏற்பட்ட செலவுகள் என்பன கீழே அட்டவணை 3.1.1 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 3.1.1:வருடாந்த பாதீடு 2010 (ரூபா)

தலைப்பு	*ஒதுக்கீடு*	*செலவு*	*செலவு%*
மூலதனம்	1,729,000	844,365	49
மீண்டு வரும் செலவீனம்	3,202,480	2,620,583	82
மொத்தம்	***4,931,480***	***3,464,948***	***70***

முன்னேற்றம்

கீழே தரப்பட்டவாறு 2010 இன் போது 2548 இறக்குமதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

அட்டவணை 3.1.2: 2010 இல் வழங்கப்பட்ட இறக்குமதி அனுமதிகள்

அனுமதிப்பத்திர வகை	எண்ணிக்கை
மரக்கறி விதைகள்	907
புதிய பழங்கள்	566
தாவர, நடுகைப் பொருட்கள்	725
தாவர உற்பத்திகள்	260
விதை உருளைக்கிழங்கு	30
கால்நடைத் தீவனம்	09
சமய நோக்கங்களிற்கான வெட்டுப் பூக்கள்	11
மனிதப் பாவனைக்கான பொருட்கள்	40
உயிரியற் காரணிகள்	0
மொத்தம்	***2,548***

விதை உருளைக்கிழங்கு இறக்குமதி

2010 இல் இறக்குமதி செய்யப்பட்டு, பரி சோதிக்கப்பட்ட விதை உருளைக் கிழங்குகளின் விபரங்கள் அட்டவணை 3.1.3 இல் தப்பட்டுள்ளன.

இறக்குமதி செய்யப்பட்ட 14 விதை உருளைக் கிழங்கு தொகுதிகளில் நுழைவுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, எந்தவொரு தொகுதியும் நிராகரிக்கப்படவில்லை.

நுழைவுக்குப் பின்னரான தடுப்புக்காப்புச் சோதனைகள்

விலங்குத் தீவனங்கள் தொடர்பில் முழுக் கோதுமையைப் பதனிடுவதில் காணப்பட வேண்டிய நிலைமைகள் உட்பட இறக்குமதி நிபந்தனைகளைப் பூர்த்தி செய்துள்ளனவா என்பதை அறிவதற்காக பதினைந்து நுழைவுக்குப் பின்னரான தடுப்புக் காப்புப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அட்டவணை 3.1.3: 2010 இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக் கிழங்குகள்

இறக்குமதி செய்யப்பட்ட நாடு	இறக்குமதி செய்யப்பட்ட அளவு	விடுவிக்கப்பட்ட அளவு (தொன்) (தொன்)	ஆய்வுகூடப் பரிசோதனை/ தொகுதி
நெதர்லாந்து	676	676	43
ஐக்கிய அமெரிக்கா	122	122	3
பிரான்சு	37	37	9
ஜெர்மனி	75	75	2
மொத்தம்	***911***	***911***	***57***

நுழைவு நிபந்தனைகளை திருத்தம் செய்தல்

ஐக்கிய அமெரிக்காவிலிருந்து விதை உருளைக் கிழங்கு (வகுப்பு G_3) இறக்குமதி செய்வதை இலகுவாக்க விதை உருளைக் கிழங்குகளிலுள்ள அனுமதிக்கப்பட்ட வைரசு மட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டன.

அனுமதிப் பத்திர நிபந்தனைகளைத் திருத்தம் செய்தல்

மார்ச் 2010 முதல் மீதைல் புரோமைட் பாவனையை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஒழித்துள்ளன. இதற்கமைய தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வசதியாக அனுமதி நிபந்தனைகளுடன் தொடர்புடைய தாவரச் சுகாதார நடவடிக்கைகள் திருத்தம் செய்யப்பட்டன.

ஏற்றுமதி அத்தாட்சிப்படுத்தல்

ஏற்றுமதிக்கான பொருட்தொகுதிகளை அத்தாட்சிப்படுத்துவதற்காக ஏற்றுமதி செய்யும் கம்பனிகளின் தொழிற்சாலைகளிலுள்ள வசதிகள், தாவரங்களைப் பதனிடல், தாவர உற்பத்திகள் என்பன பரிசோதனை செய்யப்பட்டன.

வெளிக்களப் பரிசோதனைகள்

நுவரெலியாப் பிரதேசங்களிலுள்ள உருளைக் கிழங்குத் தோட்டங்களில் தடுப்புக் காப்புப் பீடைகள் காணப்படுகின்றனவா என்பதைக் கண்டு பிடிக்க வெளிக்கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு எதிர் காலத்தில் பீடைக் கண்காணிப்புத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட உள்ளது.

உள்நாட்டுத் தானிய உற்பத்தியை ஊக்குவித்தல்

சோளம், இறுங்கு ஆகிய பயிர்களின் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக இறக்குமதி செய்யப்படும் சோளம், இறுங்கு விதைகளின் அளவுகள் மட்டுப்படுத்தப்பட்டன.

ஏற்றுமதி இடைமறிப்புகள்

சட்ட ரீதியாகப் பின்பற்ற வேண்டிய தாவரச் சுகாதார நடைமுறைகளைப் பூர்த்தி செய்யாதபடியால் பதின்மூன்று இடைமறிப்புகள் மேற்கொள்ளப்பட்டதாக 2010 இல் இறக்குமதி செய்யப்படும் நாடுகளினால் அறிவிக்கப்பட்டது. 2009 உடன் ஒப்பிடும் போது இது ஏற்றுமதி இடைமறிப்பில் ஏற்பட்ட 44% வீழ்ச்சியாகும். எதிர்காலத்தில் பொருட்தொகுதிகளை ஏற்றுமதி செய்யும் போது தடுப்புக்காப்பு நிபந்தனைகளிற்கு அமைய செயற்படுமாறு ஏற்றுமதியாளர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

இரண்டு பொருட்தொகுதிகளில் உயிருள்ள பூச்சிகள் கண்டுபிடிப்பு

விவசாய அமைச்சிற்கு அவுஸ்திரேலிய தடுப்புக்காப்புப் பரிசோதனை சேவை விடுத்த வேண்டுகோளுக்கிணங்க எதிர்காலத்தில் இவ்வாறான நிகழ்வுகள் இடம் பெறாதிருக்க தொழில்நுட்ப சிபாரிசுகளையும், ஏனைய நடவடிக்கைகளையும் வழங்குவதற்காக முழுமையானதொரு ஆய்வு மேற் கொள்ளப்பட்டது.

அவுஸ்திரேலிய தூபமாக்கல் அத்தாட்சிப்படுத்தற் திட்டம்

அவுஸ்திரேலிய தடுப்புக்காப்புப் பரிசோதனை சேவையினருடன் இணைந்து கூட்டு உயிரியற் பாதுகாப்பு ஊக்குவிப்புகளை அமுல் செய்வதை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.

இலங்கைப் பழங்களிற்கான தாவரத் தடுப்புக்காப்பு அனுமதிகள்

இந்திய விவசாய அதிகாரிகளின் வேண்டு கோளுக்கிணங்க மா, ரம்புட்டான் ஆகிய பழங்களில் இலங்கையிற் காணப்படும் பீடைகள், அவற்றைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்படும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் வழங்கப்பட்டன.

தாவரத் தடுப்புக்காப்பு தொடர்பான கருத்தரங்குகள்/ விழிப்புணர்வூட்டும் நிகழ்வுகள்/பயிற்சிகள்

குண்டசாலை விவசாயக் கல்லூரி மாணவர்கள் 180 பேருக்கு தாவரத் தடுப்புக் காப்பில் அறிவூட்டும் நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

தடுப்புக்காப்புடன் தொடர்புடைய பணிகளை மேற்கொள்ளும் போது தடுப்புக்காப்பு அலுவலர்களிற்கும், சுங்க அலுவலரிற்கும் இடையிலான புரிந்துணர்வை ஊக்குவிப்பதற்காக சுங்க அலுவலர்களிற்கு தடுப்புக்காப்பு தொடர்பிலான பயிற்சி வகுப்பொன்று நடாத்தப்பட்டது.

விதை அத்தாட்சிப்படுத்தல், தாவரப் பாதுகாப்பு நிலையம், தேசிய தாவரத் தடுப்புக்காப்பு சேவை, துறைமுகம், விமான நிலையம் ஆகிய இரு நுழைவிடங்களில் பணியாற்றும் தடுப்புக்காப்பு அலுவலர்களிற்கு இறக்குமதி செய்யப்படும் விதை உருளைக் கிழங்குகளில் ஏற்படக் கூடிய சாத்தியமுள்ள நோய்களை இனங் காண்பதற்காக ஆய்வு விஜயமொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. இக்குழு அம்பேவலையிலுள்ள பல விவசாயிகளின் தோட்டங்களிற்கும், ஒரு சில ஒப்பந்த விதை உற்பத்தியாளர்களின் தோட்டங்களிற்கும் விஜயம் செய்தது. இவ்விஜயத்தின் நோக்கம் விதை உருளைக் கிழங்கை விடுவிக்க முன்னர் கட்புலப் பரிசோதனையில் ஈடுபடும் அலுவலர்கள் விடுவிக்கப்படும் விதை உருளைக்கிழங்குகள் நடுவது முதல் அறுவடை செய்வது வரையான உற்பத்தித் செயற்பாடுகளில் எவ்வாறாக பயன் படுத்தப்படுகின்றன என்பதை ஆராய்வதாகும். இப்பிராந்தியத்திற்கான உருளைக்கிழங்கைத் தெரிவு செய்யும் போது எவ்வாறான விடயங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும் என்பது பற்றிய அனுபவத்தையும் இது வழங்கும்.

2011 ஆம் ஆண்டுக்கான திட்டம்

- தாவரங்கள், தாவர உற்பத்திப் பொருட்களை பாதுகாப்பாக இறக்குமதி செய்வதற்கும், ஏற்றுமதி செய்வதற்கும் வசதியாக சம்பந்தப்பட்ட ஒழுங்கு விதிகளை அமுல் செய்தல்.
- உயர்தரமான விதைகளையும், நடுகைப் பொருட்களையும் உற்பத்தி செய்வதுடன் தொடர்புடைய பொருத்தமான திட்டங்களையும், கொள்கைத் தீர்மானங்களையும் வகுத்தல்.
  - * நாட்டில் விதைத் தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்தல்
  - * தேசிய மட்டத்தில் தாவரச் சுகாதார வல்லமைகளிற்கு வலுவூட்டல்
  - * தொழில்நுட்ப வல்லமையை மேம்படுத்தல்
  - * ஒழுங்காக்கல் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்
  - * மிகவும் செயலுருவான, பாதுகாப்பான பீடை கட்டுப்பாட்டுத் தந்திரோபாயங்களை ஊக்குவித்தல்.
- இலங்கையில் அவுஸ்திரேலிய அத்தாட்சிப்படுத்தற் திட்டத்தினை அமுல் செய்தல், அமுலாக்கல் திட்டங்கள் வருமாறு;

ஜனவரி 2011 – அவுஸ்திரேலிய தடுப்புக்காப்புப் பரிசோதனை சேவையினரின் ஆரம்ப விஜயம்

பெப்ரவரி 2011 – இலங்கை தூபமாக்கற் துறையில் இதனை அமுல் செய்வது தொடர்பாக விழிப்புணர்வூட்டல்

மார்ச் 2011 – அவுஸ்திரேலிய தடுப்புக்காப்புப் பரிசோதனை சேவையினர் தூபமாக்கல் பயிற்சியை நடாத்தல்.

ஏப்ரல் 2011 – அவுஸ்திரேலிய தடுப்புக்காப்புப் பரிசோதனை சேவையினர் கணக்காய்வு பயிற்சியையும், பயிற்றுனர்களிற்கான பயிற்சியையும் நடாத்தல்

அலுவலர்களின் பட்டியல்

பதவி நிலை	*எண்ணிக்கை*
பணிப்பாளர்	01
ஆராய்ச்சி அலுவலர்	01
விவசாய அலுவலர்	0
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள்	03
விவசாயப் போதனாசிரியர்	01
நிர்வாக அலுவலர்	01
அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை	12
களஞ்சியப் பொறுப்பாளர்	01
அலுவலகத் தொழிலாளி	02
சாரதிகள்	03
தொழிலாளர்கள் (அமைய)	02
தொழிலாளர்கள் (ஒப்பந்தம்)	02
மொத்தம்	***30***

3.1.1 விதை அத்தாட்சிப்படுத்தற் சேவை கன்னொறுவை

விவசாயிகளுக்கு கிடைக்கும் விதைகள், நடுகைப் பொருட்களின் தரத்தை உறுதி செய்யும் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பணிகளில் விதை அத்தாட்சிப்படுத்தும் சேவை ஈடுப்பட்டுள்ளது. இந்நிலையத்தின் ஏனைய நடவடிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.

- விதைச் சட்டத்திலுள்ள அம்சங்களை அமுல் செய்தல், விதை உற்பத்தியாளர்கள், நாற்று மேடையாளர்கள், விதைகளை பரிசோதிப்போர், அலுவலகர்கள் ஆகியோருக்கு தரமான விதை, நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்வது தொடர்பான பயிற்சிகளை வழங்குதலும், விழிப்புணர்வை ஏற்பாடுத்தலும்
- நெல், மரக்கறிகள், ஏனைய வயற் பயிர்கள் உருளைக்கிழங்கு ஆகியவற்றின் அடிப்படை, வர்த்தக விதைகளையும், நடுகைப் பொருட்களையும் அத்தாட்சிப்படுத்தல்.
- பழமரக் கன்றுகளை அத்தாட்சிப்படுத்துதலும், பழ நாற்று மேடைகளைப் பதிவு செய்தலும்
- அரச, தனியார் நாற்று மேடைகளின் தாய்த் தாவரங்களை தெரிவு செய்தல்
- இறக்குமதி செய்யப்பட்ட விதைகளிற்கும், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட விதைகளிற்கும் பிற்கட்டுப்பாட்டு பரிசோதனைகள்
- புதிய பயிர் வர்க்கங்களை வெளியிட முன்னர் தெளிவான வேறுபாடுகள் சீரான தன்மை, நிலைபேறான தன்மை என்பன தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்ளல்.
- விதைச் சுகாதார பரிசோதனைகளையும், பிரயோக விதை ஆராய்ச்சி நிகழ்ச்சிகளையும் மேற்கொள்ளல்
- இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறி விதைகளின் தரத்தை உறுதிசெய்தல்
- விதை அபிவிருத்தியும்,தரத்தினை உயர்த்தும் நடவடிக்கைகளும்
- தரவுத்தள முகாமைத்துவமும் கண்காணிப்பும்
- நாற்று மேடையாளர்களினதும், விதை உற்பத்தியார்களினதும் விபரக் கொத்தினை வெளியிடல்

பாதீடு

பல்வேறு தலைப்புகளின் கீழ் 2010இல் பெற்றுக் கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகள், ஏற்பட்ட செலவுகள் தொடர்பான விடயங்கள் அட்டவணை 3.1.1.1 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 3.1.1.1 :வருடாந்த பாதீடு 2010 (ரூபா)

தலைப்பு	*ஒதுக்கீடு*	*செலவு*	*செலவு%*
மீண்டுவரும் செலவு	14,010,000	14,010,000	100
மூலதனம்	8,980,000	6,800,000	76
செயற்திட்டங்கள்			
நாம் பயிரிடுவோம் தேசத்தை உருவாக்குவோம்	3,500,000	3,400,000	97
விதைசட்டம்	15,000,000	11,590,000	77
மொத்தம்	*41,490,000*	*35,800,000*	*86*

முன்னேற்றம்

- விதை நெல் உற்பத்திக்கான 5,204 ஹெக்டயர் , 521 ஹெக்டயர் மறு வயற் பயிர்கள், 197 ஹெ. மரக்கறிகள், 52 ஹெ. உருளைக் கிழங்குப் பயிர் செய்கை நிலங்கள் என்பன பரிசோதிக்கப்பட்டன.
- 11,121 மெ.தொ விதை நெல், 267 மெ.தொ. மறு வயற் பயிர்களின் விதைகள், 70 மெ.தொ. மரக்கறி விதைகள், 709 மெ.தொ. விதை உருளைக்கிழங்கு என்பவற்றை பிரதிநிதித்துவம் செய்யும் 8,950 விதை மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டன.
- 2009 தரவுகளுடன் ஒப்பிடும் போது 2010 இல் நெல், மறுவயற் பயிர்கள், மரக்கறிகள் என்பவற்றின் பதிவு செய்யப்பட்ட விஸ்தீரணங்கள் முறையே 27%, 51%, 45%, அதிகரித்தன.
- அத்தாட்சிப்படுத்திய நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்யும் 222 பூங்கணியியல் நாற்று மேடைகள் பதிவு செய்யப்பட்டு பரிசோதிக்கப்பட்டதுடன் சுட்டி இடுவதன் மூலம் 202,276 ஒட்டுக் கன்றுகளின் தரமும் அத்தாட்சிப்படுத்தப்பட்டது.
- தெளிவான வேறுபாடுகள், சீரான தன்மை, நிலைபேறான தன்மை என்பனதொட ர்பான பரிசோதனைகளின் கீழ் 9 நெல், 7 மறு வயற் பயிர்கள், 15 மரக்கறிகள், ஒரு வேர்கிழங்கு பயிரின் வர்க்கங்கள் மதிப்பிடப்பட்டன.

- நெல், மறுவயற்பயிர்கள், மரக்கறிகள், உருளைக்கிழங்கு என்பவற்றில் 445 பிற் கட்டுபாட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.
- விதைச்சட்டத்தின் கீழ் விதைகளைக் கையாள்வோர் 777 பேர் பதிவு செய்யப்பட்டனர்.
- 2284 அரசாங்க அலுவலர்களும்,விதைகளை கையாள்வோரும் பயிற்றுவிக்கப்பட்டனர்.
- நெல், மறு வயற் பயிர்கள், மரக்கறிகள் என்பவற்றிற்கு புதியதொரு சுட்டித் தொகுதி அறிமுகப்படுத்தப்பட்டது.

விதைநெல்லை அத்தாட்சிப்படுத்தல்

தனிப்பட்ட விவசாயிகள், பல அரசாங்க பண்ணைகள் (விவசாய திணைக்களப் பண்ணைகள் போன்றன), கூட்டுறவுச் சங்கங்கள், மாகாண சபைகள், கமநல கேந்திர நிலையங்கள், நீர்ப்பாசனத் திணைக்களம், மகாவலி அதிகார சபை, விவசாய அமைப்புக்கள், தனியார் துறை கம்பனிகள், அரச சார் பற்ற நிறுவனங்கள் என்பன அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல் உற்பத்தி வேலைத் திட்டத்திற்காகப் பதிவு செய்யப்பட்டன.

விதை நெல் உற்பத்திகாகப் பதிவு செய்யப்பட்ட மொத்த விஸ்தீரணம் 5,204 ஹெ. ஆகும். இதில் தனியார் துறையினரின் பங்களிப்பு 74% ஆகும். பல்வேறு மூலாதாரங்களின் கீழும் வித்தியாசமான விதை வகுப்புக்களின் கீழும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல் உற்பத்திக்குப் பதிவு செய்யப்பட்ட விஸ்தீரணங்களின் விபரங்கள் அட்டவணை 3.1.1.2 இல் தரப்பட்டுள்ளன. விதை உற்பத்தியில் அனைத்துத் தரப்பினரும் பங்குபற்றியமையினால் 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2010இல் பதிவு செய்யப்பட்ட விஸ்தீரணத்தில் 27% அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது

2010இல் 11,121 தொன். விதைநெல் உற் பத்தி செய்யப்பட்டதோடு, அதில் 8,789 தொன். விதை நெல்லின் தர நியமங்கள் ஆய்வுகூடப் பரி சோதனைகளின் ஊடாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. (அட்டவணை 3.1.1.3) ஒப்பந்த விதை உற்பத்தியாளர் திட்டத்தின் கீழ் விவசாய திணைக்களத்தின் பண்ணைகள் 3,845 மெ. தொ. (44%) ஐயும் தனியார் விவசாயிகள் 3,845 மெ.தொன்னையும் (56%) உற்பத்தி செய்தனர்.

அட்டவணை 3.1.1.2: 2010 இல் விதைநெல் உற்பத்தி செய்யப்பட்ட விஸ்தீரணம்

மூலாதாரம்	*விதைவகுப்பு*	*பதிவுசெய்கப்பட்ட விஸ்தீரணம் (ஹெ)*	*பரிசோதிக்கப்பட்ட விஸ்தீரணம் (ஹெ)*	*ஏற்றுக்கொள்ளப்பட்ட%*
ஆராய்ச்சி நிலையங்கள்	உற்பத்தியாளர்	5.2	5.2	100
அரச பண்ணைகள்	அத்திவார விதை	53	42	100
	பதிவு செய்யப்பட்டது	459	431	100
	அத்தாட்சிப்படுத்தியது 1	132	106	98
	அத்தாட்சிப்படுத்தியது 11	3.5	3.5	100
ஒப்பந்த செய்கையாளர்கள்	பதிவு செய்யப்பட்டது	12	12	100
	அத்தாட்சிப்படுத்தியது 1	598	551	95
	அத்தாட்சிப்படுத்தியது 11	74	67	92
தனியார் விவசாயிகள்	பதிவு செய்யப்பட்டது	29	27	92
	அத்தாட்சிப்படுத்தியது 1	3,416	2,974	90
	அத்தாட்சிப்படுத்தியது11	422	371	90
மொத்தம்		***5,204***	***4,590***	***88***

அட்டவணை 3.1.1.3: 2010 இல் பரீசோதிக்கப்பட்ட விதை நெல்லின் அளவுகளும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வீதமும்

மூலாதாரம்	பரீட்சிக்கப்பட்ட அளவு (தொன்)	ஏற்றுக்கொள்ளப்பட்ட %
ஆராய்ச்சி நிலையங்களின்		
உற்பத்தியாளர் விதை	3.7	79
அரச பண்ணைகள்	2,672	92
ஒப்பந்த விவசாயிகள்	1,476	95
தனியார் செய்கையாளர்கள்	6,969	71
மொத்தம்	*11,122*	

மறுவயற் பயிர்களின் விதைகளை அத்தாட்சிப்படுத்தல்

மறு வயற் பயிர்களின் விதை உற்பத்திக்காக பதிவுசெய்யப்பட்ட மொத்த விஸ்தீரணம் 521 ஹெ. ஆகும்; இதில்ஒப்பந்த விவசாயிகளின் பங்களிப்பு 84% ஆகும். சோளம், பாசிப்பயறு, நிலக்கடலை, எள்ளு, கௌபீ, தினை,உழுந்து, சோயாவரை, துவரம் பருப்பு, என்பன மறு வயற் பயிர்களின் விதை உற்பத்தியில் உள்ளடக்கப்பட்டன. பல்வேறு மூலாதாரங்களின் கீழ் விதை உற்பத்திக்குப் பதிவு செய்யப்பட்ட விஸ்தீரங்களின் விபரங்கள் அட்டவணை 3.1.1.4 இல் தரப்பட்டுள்ளன. 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மறு வயற் பயிர்களின் விதை உற்பத்திக்குப் பதிவு செய்யப்பட்ட விஸ்தீரணம் 50% ஆக அதிகரித்து காணப்பட்டது

அட்டவணை 3.1.1.4: 2009, 2010 இல் மறு வயற் பயிர்களின் விதைகள் உற்பத்தி செய்யப்பட்ட விஸ்தீரணம்

மூலம்	விதை வகுப்பு	2009		2010		
		பதிவு செய்யப் பட்ட விஸ்தீரணம் (ஹெ)	பரிசோதிக் க்கப்பட்ட விஸ்தீரணம் (ஹெ)	பதிவு செய்யப் பட்ட விஸ்தீர ணம் (ஹெ)	பரிசோதி க்கப்பட்ட விஸ்தீரணம் (ஹெ)	ஏற்றுக் கொள்ளப் பட்ட %
ஆராய்ச்சி நிலையங்கள்	உற்பத்தியாளர்	2.7	2.5	2.8	2.7	100
அரசபண்ணைகள்	அடிப்படை விதை	24.0	23.0	33.2	30.0	100
	பதிவு செய்யப்பட்டது	18.0	16.0	17.0	14.6	97
	அத்தாட்சிப்படுத்தியது 1	18.0	13.0	7.9	7.9	100
ஒப்பந்த விவசாயிகள்	அடிப்படை விதை	0.9	0.9	0.9	0.9	55
	பதிவு செய்யப்பட்டது	41.0	37.0	58.0	53.8	98
	அத்தாட்சிப்படுத்தியது1	205.0	177.0	328.0	306.0	97
	அத்தாட்சிப்படுத்தியது11	32.0	30.0	49.8	46.0	98
தனியார் செய்கை யாளர்கள்	அடிப்படை விதை	0.4	0.4	2.0	2.0	80
	அத்தாட்சிப்படுத்தியது1	2.4	2.4	21.0	20.4	80
	அத்தாட்சிப்படுத்தியது11			0.8	0.8	100
மொத்தம்		344.4	302.2	521.4	485.1	

மொத்தமாக உற்பத்தி செய்யப்பட்ட 267 தொன் மறு வயற்பயிர் விதைகளில் 94% அத்தாட்சிப்படுத்தப்பட்டன. பல்வேறு மூலாதாரங்களின் கீழ் பரிசோதிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட வீதங்கள் அட்டவணை 3.1.1.5 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 3.1.1.5 2009, 2010 இல் பரீசோதிக்கப்பட்ட மறு வயற் பயிர்களின் அளவுகள்

முலாதாரம்	2009		2010	
	பரீட்சிக்கப்பட்ட அளவு (மெ.தொ)	ஏற்றுக்கொள் ளப்பட்ட (%)	பரீட்சிக்கப்பட்ட அளவு (மெ.தொ)	ஏற்றுக்கொள் ளப்பட்ட (%)
ஆராய்ச்சி நிலையங்கள்	1.4	95	1.9	98
அரச பண்ணைகள்	28.0	93	22.1	78
ஒப்பந்த விவசாயிகள்	104.0	95	236.9	96
தனியார் செய்கையாளர்கள்	2.0	75	6.6	85
மொத்தம்	135.4		267.5	

மரக்கறி விதைகளை அத்தாட்சிப்படுத்தல்

மரக்கறி விதை உற்பத்திக்காக பதிவு செய்யப்பட்டிருந்த விஸ்தீரணம் 197 ஹெ. ஆகும்; இதில் ஒப்பந்த விவசாயிகளின் பங்களிப்பு 45% ஆகும். பல்வேறு மூலாதாரங்களின் கீழ் மரக்கறி விதை உற்பத்திக்குப் பதிவு செய்யப்பட்ட விஸ்தீரணங்களின் விபரங்கள் அட்டவணை 3.1.1.6 இல் தரப்பட்டுள்ளன. தக்காளி, வெண்டி, மிளகாய், பாகல், போஞ்சி, கத்திரி, முள்ளங்கி, பீர்க்கு, கறிமிளகாய், பயற்றை, கெக்கரி, பூசணி, கீரை, மரக்கறிக் கௌபீ, சிறகவரை, வத்தகை என்பன இவ்விதை உற்பத்தி திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன. 2009 உடன் ஒப்பிடும் போது 2010 இல் மரக்கறி விதை உற்பத்திக்குப் பதிவு செய்யப்பட்ட விஸ்தீரணம் 45 வீதத்தாலும், உற்பத்தி செய்யப்பட்ட விதைகளின் அளவு இரட்டிப்பாகவும் அதிகரித்திருந்தது

அட்டவணை 3.1.1.6 ; 2009, 2010 இல் மரக்கறி விதை உற்பத்தி செய்யப்பட்ட விஸ்தீரணம்.

முலாதாரம்	விதைவகுப்பு	2009		2010		
		பதிவுசெய் யப்பட்ட விஸ்தீரணம் (ஹெ)	பரிசோதிக் கப்பட்ட விஸ்தீரணம் (ஹெ)	பதிவுசெய் யப்பட்ட விஸ்தீரணம் (ஹெ)	பரிசோதி க்கப்பட்ட விஸ்தீரணம் (ஹெ)	ஏற்றுக்கொ ள்ளப்பட்ட %
ஆராய்ச்சி நிலையங்கள்	உற்பத்தியாளர் விதை	1.5	1.3	1.4	1.3	100
அரச பண்ணைகள்	அடிப்படை	10.7	10.7	23.5	21.3	100
	நியமம்	29.0	29.0	27.1	22.3	100
ஒப்பந்த விவசாயிகள்	அடிப்படை	0.3	0.3	2.8	1.7	95
	நியமம்	35.7	33.0	59.9	49.4	96
தனியார் செய்கையாளர்கள்	நியமம்	58.7	49.0	88.5	74.2	99
மொத்தம்		135.9	123.3	197.2		

இவ்வருடத்தில் மொத்தமாக உற்பத்தி செய்யப்பட்ட 70 தொன் மரக்கறி, பழங்களின் விதைகளில் 54 தொன்கள் அத்தாட்சிப்படுத்தப்பட்டன. பல்வேறு மூலாதாரங்களின் கீழ் பரிசோதிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட வீதங்கள் அட்டவணை 3.1.1.7 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 3.1.1.7: 2009, 2010 இல் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறி விதைகளின் அளவுகள்

மூலம்	2009		2010	
	பரீசோதிக்கப்பட்ட அளவு (மெ.தொ)	ஏற்றுக்கொள்ளப்பட்ட %	பரீசோதிக்கப்பட்ட அளவு (மெ.தொ)	ஏற்றுக்கொள்ளப்பட்ட %
ஆராய்ச்சி நிலையங்கள்	0.6	100	0.4	82
அரச பண்ணைகள்	6.0	95	9.4	99
ஒப்பந்த விவசாயிகள்	12.8	94	24.2	84
தனியார் செய்கையாளர்கள்	13.7	85	36.2	68
மொத்தம்	33.1		70.2	

விதை உருளைக் கிழங்குகளை அத்தாட்சிப்படுத்தல்

பயிரிடப்பட்ட பல்வேறு விதை உருளைக் கிழங்கு வகுப்புகளின் விஸ்தீரணம் அட்டவணை 3.1.1.8 இல் தரப்பட்டுள்ளன. விதை உருளைக்கிழங்கின் கீழ் மொத்தமாக 52 ஹெக்டயர்கள் அத்தாட்சிப்படுத்தப்பட்டன. இரண்டு பிரபல்யமான உருளைக்கிழங்கு வர்க்கங்களின் (டிசாறி, கிரனோலா) 709 தொன் விதைக் கிழங்குகள் அத்தாட்சிப்படுத்தப்பட்டன. இத்துடன் பொலித்தீன் கூடாரங்களில் விசேட விதை உருளைக்கிழங்கு உற்பத்தித் திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட 445,609 சிறிய கிழங்குகளும் அத்தாட்சிப்படுத்தப்பட்டன.

அட்டவணை 3.1.1.8: 2009, 2010 இல் விதை உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்பட்ட விஸ்தீரணம்

மூலாதாரம்	வகுப்பு	2009		2010	
		பதிவு செய்யப்பட்ட பரப்பு (ஹெ)	ஏற்றுக்கொள்ளப்பட்ட பரப்பு (ஹெ)	பதிவு செய்யப்பட்ட பரப்பு (ஹெ)	ஏற்றுக்கொள்ளப்பட்ட பரப்பு (ஹெ)
அரசபண்ணைகள்	முன் அடிப்படை	0.38	0.38	0.10	0.10
	அடிப்படை	48.93	38.13	13.28	12.28
	அத்தாட்சிப் படுத்தியது	0.92	0	25.87	24.01
தனியார் செய்கையாளர்கள்	அத்தாட்சிப் படுத்தியது	64.00	54.00	13.00	12.90
மொத்தம்		114.23	92.51	52.25	49.29

விதைப் பரிசோதனை

பேராதனை, மஹா இலுப்பள்ளமை, அளுத்தரம, பட்டாஅத்த ஆகிய இடங்களிலுள்ள விவசாயத் திணைக்களத்தின் விதைப் பரிசோதனை ஆய்வு கூடங்களில் மொத்தமாக 8,950 விதை மாதிரிகள் அவற்றின் தரத்திற்காகப் பரீசோதிக்கப்பட்டன.

நடுகைப் பொருட்களை அத்தாட்சிப்படுத்தல்

அரச பண்ணைகளிலும், தனியார் பண்ணைகளிலும் உற்பத்தி செய்யப்பட்ட 202,276 பழக்கன்றுகள் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அவற்றிற்கு சுட்டிகள் இடப்பட்டன (அட்டவணை 3.1.1.9).

அட்டவணை 3.1.1.9; 2009, 2010 இல் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒட்டு பழக் கன்றுகளின் எண்ணிக்கை

	அத்தாட்சிப்படுத்தப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கை	
இனங்கள்	2009	2010
ஒட்டு மாங்கன்றுகள்	124,884	99,565
ஒட்டு ரம்புட்டான்	92,683	63,960
ஒட்டுத் தோடை	60,753	30,572
நாரத்தை	3,072	6,854
ஆனைக்கொய்யா	907	580
தூரியன்	370	304
பலா	80	441
மொத்தம்	282,749	202,076

நாற்றுமேடைகளைப் பதிவு செய்தல்

2010 இல் 222 நாற்றுமேடைகள் பதிவு செய்யப்பட்டன.

தாய் தாவரத்தைஅத்தாட்சிப்படுத்தல்

மா, ரம்புட்டான், தோடை, நாரத்தை, பெயார் ஸ், தூரியன், பலா என்பவற்றில் மொத்தமாக 697 தாய்த் தாவரங்கள் தெரிவு செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டன.

அட்டவணை 3.1.1.10 2010 இல் பதிவு செய்யப்பட்ட தாய்த் தாவரங்களின் எண்ணிக்கை

இனம்	பதிவு செய்யப்பட்டத் தாவரங்களின் எண்ணிக்கை
ஒட்டு மாங்கன்றுகள்	42
ஒட்டு ரம்புட்டான்	346
ஒட்டுத் தோடை	163
நாரத்தை	61
ஆனைக்கொய்யா	77
தூரியன்	1
பலா	7
மொத்தம்	697

பிற்கட்டுப்பாட்டுச் சோதனைகள்

445 பயிர் விதை மாதிரிகளை மதிப்பீடு செய்வதற்காக பிற்கட்டுப்பாட்டுச் சோதனைகள் நடாத்தப்பட்டன. இவை விவசாயத் திணைக்களத்தி னால் அத்தாட்சிப்படுத்திய இறக்குமதி செய்யப்பட்ட பல்வேறு பயிர் வர்க்கங்களின் விதைகளைக் கொண்டிருந்தன பல்வேறு பயிர் வகைகளில் மேற்க்கொள்ளப்பட்ட பிற் கட்டுப்பாட்டுச் சோதனைகளின் எண்ணிக்கை அட்டவணை 3.1.1.11 இல் தரப்பட்டுள்ளன.

அட்டணை 3.1.1.11 பரீசோதிக்கப்பட்ட பிற் கட்டுபாட்டு மாதிரிகளின் எண்ணிக்கை

பயிர் தொகுதி	பரீட்சிக்கப்பட்ட தொகுதி களின் எண்ணிக்கை
நெல்	152
மறு வயற் பயிர்கள்	178
மரக்கறிகள்	108
பழங்கள்	7
மொத்தம்	445

தெளிவான வேறுபாடுகள், சீரான தன்மை, நிலையான தன்மை என்பவற்றிற்கான பரிசோதனை

கன்னொறுவையிலுள்ள பிற்கட்டுப்பாட்டுச் சோதனை வயல்களில் 9 நெல் வர்க்கங்கள் மேற்குறிப்பிட்ட அம்சங்களுக்காக (DUS) பரிசோதிக்கப்பட்டன. இவற்றோடு 15 மரக்கறி வர் க்கங்கள், 07 மறு வயற் பயிர் வர்க்கங்கள், 01 வேர், கிழங்குப் பயிர் என்பனவும் சோதிக்கப்பட்டன. 2010 இன் போது 2 நெல் வர்க்கங்கள்,5 மரக்கறிகள் 1 வேர் கிழங்குகள் ஒரு மறு வயற் பயிர் என்பவற்றிற் கான தெளிவான வேறுபாடுகள், சீரான தன்மை, நிலையான தன்மை பற்றிய பரிசோதனை பூர்த்தி செய்யப்பட்டது.

அட்டவணை 3.1.1.12 தெளிவான வேறுபாடுகள் ,சீரான தன்மை, நிலையான தன்மை என்பவற்றி க்கு மேற்கொள்ளப்பட்டப் பரிசோதனைகளின் எண்ணிக்கை

பயிர் வகை	மேற்கொள்ளப் பட்ட பரிசோதனை களின் எண்.	பூர்த்தி செய்யப்பட்ட பரிசோதனை களின் எண்.
நெல்	9	2
மறு வயற்பயிர்	7	1
மரக்கறிகள்	15	5
வேர், கிழ. பயிர்	1	1
மொத்தம்	32	9

விதைச் சட்டத்தை அமுல்படுத்துதல்

இந்நாட்டின் விவசாயத் துறையில் மிகவும் அத் தியாவசியமானதொன் றாக விளங் கும் விதைக் கைத்தொழிலைப் பாதிக்கும் துஷ்பிர யோகங்களிலிருந்து விவசாயிகளையும் விதைகளை க்கையாள்வோரையும் பாதுகாக்கும் நோக்குடன் 2008 இலிருந்து 2003 இன் 22 ஆம் இலக்க விதைச்சட்டம் அமுல் செய்யப்பட்டு வருகின்றது. தற்போதுள்ள சட்ட ஏற்பாடுகளை வலுவூட்டுவதற் காகவும், இச்சட்டத்திற்கு முன்மொழியப்பட்டுள்ள

திருத்தங்களை இறுதியாக பூர்த்தி செய்யவும் மூன்று நாள் பட்டறையொன்று சட்ட ஆலோசகரின் பங்குபற்றலுடன் இடம் பெற்றது. இறுதியாகத் தற்போதுள்ள சட்டத்திதை திருத்தம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட வரை பொன்று ஆயத்தம் செய்யப்பட்டு வெளிநிறுவனங்களின் இத்துறையோடு சம்பந்தப்பட்ட அலுவலர்களிற்கு அவர்களது கருத்துக்களைப் பெறுவதற்காக அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

இவ்வருடத்தின் போது 777 விதைகளைக் கையாள்வோர் விதைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டனர். 5 முறைபாடுகள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதோடு துஷ்பிரயோகம் செய்தோருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. விதைச் சட்டங்களிலுள்ள ஏற்பாடுகளை நாடெங்கிலுமுள்ள விதைகளைகளைக் கையாள்வோரிற்கு அறிவூட்டுவதற்காகவும் சான்றிதழ்களை விநியோகிப்பதற்காகவும் 3 பத்திரிகை கட்டுரைகள் (லங்காதீப–2 ஸ்ரீ கத்த– 1) வெளியிடப்பட்டன. 8 வானொலி நிகழ்ச்சிகள் (ரஜரட்ட–2 கந்துரட்ட –2 ரன்கிரி தம்புள்ள– 4) ஒலிபரப்பப்பட்டதோடு 25 விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. தீவெங்கிலும் விதைச் சட்டத்தினை அமுல் செய்வதற்காக பதினான்கு ஆசனங்களைக் கொண்ட ஒரு வான், எட்டு மோட்டார் சைக்கிள்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்

பின்வரும் ஆய்வுகளை ஆரம்பிப்பதற்கான ஆரம்பப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

1. பொதி செய்யப்பட்ட மரக்கறி விதைகளின் காலாவதியாகும் திகதி
2. பழத் தாவரங்களை அத்தாட்சிப்படுத்தும் போது ஏற்படும் நாளாந்த பிரச்சினைகளுக்கு விஞ்ஞான ரீதியான தீர்வுகள்
3. இறக்குமதி செய்யப்படும் விதைத் தொகுதிகளுடன் இணைந்துள்ள ஆபத்துக்கள்
4. வித்தியாசமான பொதி செய்யும் பொருட்களின் ஊடாக நீராவி ஊடு கடத்தப்படல்

பயிற்சி நிகழ்வுகள்

தரமான விதைகளையும், நடுகைப் பொருட்களையும் உற்பத்தி செய்வது தொடர்பாக அலுவலர்களினதும், விதைகளைக் கையாள்வோரினதும் அறிவை மேம்படுத்துவதற்காக விதை அத்தாட்சிப்படுத்தும் சேவையினர் தொடர்ந்தும் பயிற்சிகளை வழங்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அட்டவணை 3.1.1.13 பயிற்றுவிக்கப்பட்ட பயிலுனர்களின் எண்ணிக்கை

பயிற்சி	*பயிலுனர்களின் எண்ணிக்கை*
விதை உற்பத்தி விவசாயிகள்/ நாற்று மேடையாளர்கள்	1,098
தனியார் துறை	40
அரச அலுவலர்கள்	554
விற்பனையாளர்கள்	588
மொத்தம்	*2,280*

விதை அத்தாட்சிப்படுத்தற் தகவற் தொகுதி

தரவுகளை இலகுவாக பெற்றுக் கொள்வதற்கும், தகவல் முகாமைத்துவத்தை பகுப்பாய்வு செய்யவும் நாடெங்கிலுமுள்ள விதை அத்தாட்சிப்படுத்தும் 22 பிராந்திய நிலையங்கள். 04 விதை பரிசோதனை ஆய்வு கூடங்கள், 04 பிற்கட்டுப்பாட்டுக்கு சோதனை நிலையங்கள் என்பனவற்றை ஒன்றிணைப்பதன் மூலம் விதை அத்தாட்சிப்படுத்தல் தொடர்பான தரவுத்தளத்தினை விருத்தி செய்வது தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. மேலும் தலைமைப் பீடம், பிராந்தியப் அலகுகள், ஆய்வு கூடங்கள், பிற் கட்டுப்பாட்டுக்கு சோதனை நிலையங்கள் என்பவற்றில் கடமையாற்றும் அனைத்து பிரிவையும் சேர்ந்த அலுவலர்களின் தனிப்பட்ட தரவுகளைக் கொண்ட புதியதொரு தரவுத் தளத்தை வடிவமைக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

- தரமான விதை நடுகைப் பொருட்கள் உற்பத்தி தொடர்பானதொரு வழிகாட்டியைத் தயாரித்து விதைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள விதைகளைக் கையாளும் அனைத்துத் தரப்பினரிற்கும் வழங்கல்
- ஒவ்வொரு பயிர்ச் செய்கைப் பருவத்தின் போதும் விதை உற்பத்தியாளர்களின் விபரக்கொத்து நடுகைப் பொருள் உற்பத்தியாளரர்களின் விபரக் கொத்து ஆகியவற்றை தயாரித்து விநியோகித்தல்
- பழக்கன்றுகளிற்கான புதிய சுட்டியை அறிமுகப்படுத்தல்
- 'நாம் பயிரிடுவோம் தேசத்தைக் கட்டியெழுப்புவோம்' திட்டத்தின் கீழ் ஒவ்வொரு 20 பிராந்திய அலகுகளிலும் 20 விதை உற்பத்தியாளர் கிராமங்களை ஸ்தாபித்தல்
- தலைமைப் பீடத்திலும், பிராந்திய அலகுகளிலும் உற்பத்தித்திறன் மேம்பாடும் அலுவலக முகாமைத்துவ மேம்பாடும்

- விதை அத்தாட்சிப்படுத்தும் சேவையின் 2011 இற்கான தொனிப் பொருள் 'உற்பத்தி திறனை அதிகரித்தலும், நாட்டிலுள்ள விவசாய சமூகத்திற்கு சிறந்த சேவைகளை வழங்குதலும்' ஆகும். இதன் கீழ் தலைமைப் பீடத்திற்கான பராமரிப்புப் பணிகளை இனங் காணல்
- விதைகளைக் கையாள்வோருற்கான பயிர் வழிகாட்டிகளை வெளியிடல்
- புதிதாகத் திருத்தம் செய்யப்பட்ட விதைச் சட்டத்தைப் பூர்த்தியாக்கல்.

2011 ஆம் ஆண்டுக்கான திட்டம்

- நாட்டின் விதை நெல் தேவையில் 31% அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைகள் மூலம் பூர்த்தி செய்யப்படுவதற்கு விதை அத்தாட்சிப்படுத்தும் சேவையை வலுப்படுத்தல்
- விதை மூலம் பரவும் நோயாக்கிகளை இனங் காண்பதன் மூலம் விதைச் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான விதைச் சுகாதார பரிசோதனை அலகுகளை மேம்படுத்தல்
- விசேடமாக விதைகளை பொதி செய்தல், காலலாவதியாகும் தினம் என்பவற்றில் விதைகளைக் கையாள்வோர் எதிர்நோக்கும் அறுவடைக்குப் பிந்திய பிரச்சினைகளுடன் தொடர்புடைய விதை ஆராய்ச்சிகளை மேற் கொள்வதற்காக விதை ஆராய்ச்சி அலகினை நிறுவுதல்
- புதிய தாவரங்களின் ஆக்கிரமிப்பு ஆபத்துக்களை பகுப்பாய்வு செய்யவும் நச்சுக் களைகளை ஆராயவும் விசேடமாக இறக்குமதி செய்யப்படும் விதைகளின் ஊடாக ஆக்கிரமிப்புக் களைகள் நாட்டிற்குள் நுழைவதைத் தடுக்கவும் களை விதைத் தொற்றுகளை இனங் காணவும் களை விஞ்ஞான அலகினை ஸ்தாபித்தல்
- கணினி வலையமைப்பு தொகுதியை மேம்படுத்தல்; விதை அத்தாட்சிப்படுத்தும் சேவையின் வினைத்திறனை உச்ச அளவிற்கு அதிகரிக்க, விதை அத்தாட்சிப்படுத்தற் தலைமைப் பீடத்தை பிராந்திய அலகுகள், விதை ஆய்வு கூட்டங்கள்,பிற்கட்டுபாட்டு சோதனை அலகுகள் என்பவற்றோடு வலையமைப்பிற்காக ஒன்றிணைத்தல்
- வலையமைப்பு முறையுடன் விதை ஆய்வு கூடங்களின் அறிக்கைகளை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு மென் பொருளை அறிமுகப்படுத்தல்
- காபன் கடதாசி தாள்களை பயன்படுத்தி கணினிகள் மூலம் விதை ஆய்வு அறிக்கைகளைப் பெறுவதை அறிமுகப்படுத்தல்
- விதை அத்தாட்சிப்படுத்தற் திட்டங்கள் தொடர்பான தகவல்களை இலகுவாகப் பரப்பவும் எமது சேவைகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ளவும் பொது மக்களிற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதை அத்தாட்சிப்படுத்தல் இணையத் தளமொன்றை வடிவமைத்தல்
- விதை அத்தாட்சிப்படுத்தற் சேவையின் தரவுத் தள முகாமைத்துவத்தை மேம்படுத்த மென்பொருளொன்றை அபிவிருத்தி செய்தல்
- நாட்டில் தரமான விதைகளும் நடுகைப் பொருட்களும் கிடைப்பதற்கும் விதை கைத் தொழிலில் காணப்படும் துஷ்பிரயோகங்களைத் தவிர்க்கவும் அரச தனியார் துறை விதைகளைக் கையாள்வோரிடையே விதை உற்பத்திச் செயன் முறையை ஒழுங்காக்க விதைச் சட்டத்தினை அமுல் செய்தல்

அலுவலர்களின் பட்டியல்

பதவி நிலை	எண்ணிக்கை
பிரதிப் பணிப்பாளர்	01
ஆராய்ச்சி அலுவலர்கள்	02
விவசாய அலுவலர்கள்	05
விவசாயக் கண்காணிப்பு அலுவலர்	06
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள்	04
விவசாயப் போதனாசியர்கள்	106
ஆராய்ச்சி உதவியாளர்கள்	02
ஆராய்ச்சி உப உதவியாளர்	05
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	11
சாரதிகள்	15
காவலாளிகள்	15
மின்னியலாளர்	01
தொழிலாளர்கள்	50
விதைத் தொழில் நுட்பவியாளர்கள்	13
விதைத் தொழிலாளாகள்	01
காரியாலய தொழிலாளர்கள்	01
மொத்தம்	238

3.1.2 தாவரப் பாதுகாப்புச் சேவை கன்னொறுவை

சுற்றாடல் நேயமுள்ள இலாபகரமான, விவசாயிகளின் நிலைமையின் கீழ் நடைமுறைப்படுத்தக் கூடிய பீடைக் கட்டுப்பாட்டு முறைகளை ஊக்குவிக்கும் பொறுப்பு தாவரப் பாதுகாப்புச் சேவைக்கு வழங்கப்பட்டுள்ளது. வெளிக்கள மட்டத்திலான ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ முறைகளை அமுல்செய்து, கண்காணித்து, மதிப்பீடு செய்யும் அதேவேளை தற்போதுள்ள பீடை முகாமைத்துவ தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதன் ஊடாக பரந்த நோக்கத்தினை அடைய எதிர்பார்க்கப்படுகின்றது.

நோய் பீடைகளின் தொற்றல், விதைகளையும் மண்ணையும் தூமமாக்கல், விவசாய நிலங்களிலும் நீர் நிலைகளிலும் காணப்படும் வெளிநாட்டு ஆக்கிரமிப்பு இனங்கள் உட்பட நச்சுத்தன்மை கொண்ட சில ஆக்கிரமிப்புக் களைகளை முகாமைத்துவம் செய்தல் என்பன தாவரப் பாதுகாப்புச் சேவைக்கு சட்ட ரீதியாக வழங்கப்பட்டுள்ள பணிகளாகும்.

குறிப்பிட்டச் சில பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்கான பீடைக் கட்டுப்பாட்டு ஆலோசனைகளையும் தாவரப் பாதுகாப்புச் சேவையினையும் வழங்குகின்றது. இப்பணிகள் 1999 இன் 35 ஆம் இலக்க தாவரப் பாதுகாப்புச் சட்டத்தில் பெரும்பாலான சட்ட ரீதியான நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளன.

புதிய களை நாசினிகளை மதிப்பீடு செய்வதன் மூலம் 1981 இன் பீடைநாசினிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தை அமுல் செய்யும் மேலதிகப் பங்கினையும் தாவரப் பாதுகாப்புச் சேவை வழங்குகின்றது.

பாதீடு

கீழேயுள்ள அட்டவணையில் 2010 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீடு தரப்பட்டுள்ளது.

அட்டவணை 3.1.2.1: 2010 (ரூபா)

தலைப்பு	*ஒதுக்கீடு*	*செலவு*	*செலவு %*
மீண்டுவரும் செலவீனம்	1,888,500	1,637,088	87
மூலதனச் செலவீனம்	3,205,000	2,564,604	80
திட்டங்கள்			
FAO/IPVM	160,000	92,985	58
மொத்தம்	***5,253,500***	***4,294,677***	***82***

முன்னேற்றம்

ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவத்தின் மேம்பாடு

- நெல்லில் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம்

இத்திட்டத்தின் நோக்கம் பிரதானமாக நெல் செய்கைப்பண்ணப்படும் பிரதேசங்களில் செலவு குறைந்த, சுற்றாடல் நேயமுள்ள, பீடை முகாமைத்துவ தந்திரோபாயங்களைப் பின் பற்றும் அதேவேளை செயற்கைப் பீடைநாசினிகளின் பாவனையைக் குறைத்து நெல்லை நிலை பேறாக உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவதாகும்.

2010 ஆம் ஆண்டில் பின்வரும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன.

- நெற் செய்கையில் பயன்படுத்தப்படும் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவங்கள் தொடர்பாக விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த 27 பண்ணை முகாமையாளர்களுக்கு பயிற்சி வகுப்பொன்று அங்குணகொலபெலஸ்ஸ சேவைக்காலப் பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்டது.
- அம்பாறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 18 விரிவாக்க அலுவலர்களிற்கு பயிற்றுனர்களிற்கான பயிற்சி வழங்கப்பட்டது.
- மஹாவலி அதிகாரசபையின் 'சீ' வலயத்தைச் சேர்ந்த 56 விரிவாக்க அலுவலர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.
- தனியார் துறையான "அக்ஸ்டார்" நிறுவனத்திலிருந்து 60 விரிவாக்க அலுவலர்கள் நெல், மரக்கறி ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாடு தொடர்பாகப் பயிற்றுவிக்கப்பட்டனர்.

மரக்கறிப் பயிர்களின் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம்

றிகில்லகஸ்கட பிரதேசத்தில் போஞ்சி செய்கையாளர்களிற்காக இப்பிரதேசத்தின் விரிவாக்க அலுவலர்களுடன் இணைந்து விவசாயிகள் வயற் பாடசாலைத் திட்டமொன்று மேற் கொள்ளப்பட்டது.

போஞ்சியில் மஞ்சளாகும் பிரச்சினையைக் கட்டுப்படுத்த இப்பருவத்தின் போது "விவசாயிகள் வயற் பாடசாலை" அணுகுமுறையின் ஊடாக 20 விவசாயிகளைப் பயிற்றுவிக்க 10 பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டன. இதனைத் தவிர மிளகாயில் ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாடு தொடர்பாக மஹாவலி அதிகாரசபையின் எச் வலயத்தைச் சேர்ந்த 22 அலுவலர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

இலை மரக்கறிகளில் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம்

இங்கு ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம் தொடர்பான வாய்ப்புகள் கண்டறியப்பட்டதோடு, கொழும்பு மாவட்டத்திலுள்ள கீரைப் பயிர்ச்செய்கையாளர்களிற்கு தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இலை மரக்கறிகளில் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம் தொடர்பாக மேல் மாகாணத்தில் புதிதாக நியமனம் பெற்ற 17 விவசாயப் போதனாசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

முன்னோடி மட்டத்தில் பீடை நாசினிகளைப் பரிசோதித்தல்

பின்வரும் களை நாசினிகள் அவற்றின் உயிரியல் செயற்றிறனை மதிப்பீடு செய்வதற்காக விவசாயிகளின் தோட்டங்களில் மதிப்பீடு செய்யப்பட்டன. இக்களை நாசினிகள் தற்போது சிபாரிசு செய்யப்பட்டவற்றை விடக் குறிப்பான இலக்கைத் தாக்கும் வல்லமையையும், குறைந்த அளவில் அவற்றை விசிறினால் போதுமாயிருப்பதும் ஒரு மேலதிக நன்மையாகக் கருதப்படுகின்றது.

நெல்லில் களைகளைக் கட்டுப்படுத்துவதற்கான களை நாசினிகள்

- நெற் செய்கையில் புற்கள், கோரைகள், அகன்ற இலைக் களைகள் என்பனவற்றைக் கட்டுப்படுத்த ஏற்கனவே சிபாரிசு செய்யப்பட்டுள்ள பைறிபெனொக்சிம் 5% (பைனாகுளோர்) கலவைக்கு மாற்றாக பைறிபெனொக்சிம் 5% EC சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.
- நெற் செய்கையில் புற்கள், கோரைகள், அகன்ற இலைக் களைகள் என்பனவற்றைக் கட்டுப்படுத்த ஏற்கனவே சிபாரிசு செய்யப்பட்டுள்ள பிஸ்பைறிபக் சோடியம் (நொமினி) இற்கு மாற்றாக பிஸ்பைறிபக் சோடியம் 20% WP சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

சோளத்தில் களைகளைக் கட்டுப்படுத்துவதற்கான களைநாசினிகள்

சோளச் செய்கையில் ஆண்டுக் களைகளைக் கட்டுப்படுத்த முளைத்தலிற்குப் பிந்திய களைநாசினியாக ரொப்பரமசோன் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இதனை வினைத்திறனாக விசிறுவதற்கான உற்பத்தியின் கலவை அளவு ஒரு ஹெக்டயரிற்கு 100 மில்லி லீற்றர் ஆகும். பயிரை நட்டு 15 நாட்களின் பின்னர் இதனை விசிற வேண்டும்.

ஆக்கிரமிப்பு இனங்களைக் கட்டுப்படுத்துதல்

சல்வீனியாவின் உயிரியற் கட்டுப்பாடு

உயிரியற் கட்டுப்பாட்டுக் காரணியான கிறிட்டோபோஜஸ் சல்வீனியே இற்கான வளர்ப்பூடகம் பராமரிக்கப்பட்டதோடு, தீவில் சல்வீனியாவின் தொற்றல் ஏற்பட்ட நீர் நிலைகளில் இப்பூச்சிகள் வெற்றிகரமாக அறிமுகப்படுத்தப்பட்டன.

விவசாயச் சங்கங்களைச் சேர்ந்த விவசாயிகளிற்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதோடு மொனராகலை, கண்டி, மாத்தளை, அநுராதபுரம், கம்பஹா மாவட்டங்களில் உள்ள 14 குளங்களில் உயிரியற் கட்டுப்பாட்டுக் காரணியான கிறிட்டோபோஜஸ் சல்வீனியே அறிமுகப்படுத்தப்பட்டது. ஒரு சில மாதங்களிற்குள் இப்பூச்சிகள் சல்வீனியாவை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தியதாக சில விவசாயிகளின் சங்கங்கள் அறிவித்துள்ளன.

குளவாழையின் உயிரியல் கட்டுப்பாடு

கண்டி, அம்பாந்தொட்ட, மொனறாகல, அனுராதபுரம், மாத்தளை ஆகிய மாவட்டங்களில் உள்ள 12 குளங்களில் குளவாழையைக் கட்டுப்படுத்துவதற்காக (Neocheritina bruchi, Neocheritina eichorniae எனும் இரு பூச்சிகள் இடப்பட்டன.

ஆற்றுவாழையில் (Water hyacinth) உயிரியல் கட்டுப்பாடு

ஆற்றுவாழையை கட்டுப்படுத்த உயிரியற் கட்டுப்பாட்டு காரணியான *Neochetina bruchi* மற்றும் *Neochetina eichorniae* பூச்சிகள் மாத்தளை, அநுராதபுரம், குருநாகலை, மொனராகலை, அம்பாந்தோட்டை மற்று கண்டி மாவட்டங்களிலுள்ள பனிரெண்டு (12) குளங்களில் அறிமுகப்படுத்தப்பட்டன.

1999, 35 ஆம் இலக்க தாவர பாதுகாப்புச் சட்டத்தை அமுல் செய்வதுதொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுகளிற்கான பயிற்சி

1999, 35 ஆம் இலக்க தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களிற்கு கொய்யாவில் வேர் முடிச்சு நெமற்றோட்டைக் (மெலொய்டிகைனே இனம்) கட்டுப்படுத்துவதில் விசேட கவனம் செலுத்தப்பட்டு பீடைத் தொற்றுக்களின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக ஒரு நாள் பயிற்சிப் பட்டறையொன்று நடாத்தப்பட்டது.

அலிகேட்டர் களைகளை இரசாயன முறையிற் கட்டுப்படுத்தல்

நுவரெலியா நகர எல்லைக்குட்பட்ட தாழ் நில சமவெளிப் பிரதேசமான பராக் பிளேனில் காணப்பட்ட பெரும் எண்ணிக்கையான அலிகேட்டர் களைகள் கட்டுப்படுத்தப்பட்டன. நீர்ப்பாசனத் திணைக்களத்துடன் இணைந்து இரசாயனக் கட்டுப்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டதோடு, இக்களை பரவியிருந்த சுமார் 15 ஏக்கர் நிலப் பரப்பு களைநாசினியால் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தப்பட்டது.

விதைகளைத் தூமமாக்கல்

குண்டசாலை, பெல்வெஹர, பொலன்னறுவை, றிகில்லகஸ்கட, அளுத்தரம ஆகிய இடங்களிலுள்ள அரசாங்கப் பண்ணைகளில் களஞ்சியப் பீடைகளிலிருந்து பாதுகாப்பதற்காகப் பின்வரும் அளவிலான விதைகள் தூமமாக்கப்பட்டன.

விதை நெல்	328 தொன்
நுகர்விற்கான நெல்	20 தொன்
மறுவயற் பயிர்களின் விதைகள் (சோளம், கௌபீ போன்றன)	320 தொன்
மரக்கறி, விதைகள்	31 தொன்

புத்தளம் மாவட்டச் செயலகத்தில் பின்வரும் அளவிலான உணவுப் பொருட்களும் தூபமாக்கப்பட்டன.

நெல்	47 தொன்
பருப்பு	13 தொன்
கோதுமை மா	6 தொன்

கறையானைக் கட்டுப்படுத்துதல்

பேராதனை, கன்னொறுவை ஆகிய இடங்களிலுள்ள விவசாயத் திணைக்களத்தின் பல அலுவலகங்களின் கட்டிடங்கள், கபடாவத்தை, மதுறுகெட்டிய, லபுதுவ ஆராய்ச்சி நிலையங்கள் என்பனவற்றிலும் கறையான் தொற்றுக்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டன.

அரச தாவரவியற் பூங்கா திணைக்களத்தின் வேண்டுகோளிற்கிணங்க பேராதனை, கம்பஹா ஆகிய இடங்களிலுள்ள தாவரவியற் பூங்காக்களிலும் கறையானைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.

கொறிப்பான்களைக் கட்டுப்படுத்தல்

கேகாலை மாவட்ட விரிவாக்க அலுவலர்களிற்கும், விவசாயிகளிற்கும் வயல் எலிகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஒரு பயிற்சி வகுப்பு நடாத்தப்பட்டது. மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் வயல் எலிகள் பெரும் பிரச்சினைகளாகக் காணப்பட்டதோடு 350 விவசாயிகளும், அலுவலர்களும் இப்பயிற்சி நெறியில் பங்கு பற்றினர்.

கேகாலை மாவட்டத்தில் கலிகமுவை பிரதேசத்தில் வயல் எலிகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஒரு வெளிக்கள செய்து காட்டல் மேற்கொள்ளப்பட்டது.

சுகாதாரத் திணைக்களத்தின் தொற்று நோயியல் அலகின் வேண்டுகோளிற்கிணங்க வவுனியா மாவட்டத்தில் மடு பிரதேசத்தில் ஒரு விசேட கொறிப்பான் முகாமைத்துவத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

கொய்யாவில் வேர் முடிச்சு நெமற்றோடு (மெலொயிடிகைனே இனம்)

2010 இல் புத்தளம், அநுராதபுரம், களுத்துறை மாவட்டங்களில் வேர் முடிச்சு நெமற்றோட்டு பிரச்சினை ஒரு தொற்றாகப் பரவியது.

தேயிலை ஆராய்ச்சி நிலையம், சீத்தாஎலிய விவசாய ஆராய்ச்சி நிலையம், மேற்குறிப்பிட்ட மாவட்டங்களின் மாகாண விவசாயத் திணைக்களத்தின் அலுவலர்கள் ஆகியோருடன் இணைந்து அலுவலர்களிற்கும், பொது மக்களிற்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை தாவரப் பாதுகாப்பு நிலையம் நடாத்தியதோடு, கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அமுல் செய்வதற்கு அவர்களது ஒத்துழைப்பும் கோரப்பட்டது.

கொய்யாச் செய்கையாளர்களிற்கென நடாத்தப்பட்ட விழிப்புணர்வுத் திட்டங்களில் பயன்படுத்துவதற்காக சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் கையேடுகள், சுவரொட்டிகள் என்பன தயாரிக்கப்பட்டன.

இப்பிரச்சினையை அறிந்து கொள்ளவும், நாற்று மேடைகளில் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தவும் விதை அத்தாட்சிப்படுத்தும் சேவையினருடன் இணைந்து பதிவு செய்யப்பட்ட

250 தனியார் நாற்றுமேடையாளர்களுக்கு பயிற்சி வகுப்பொன்று ஒழுங்கு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட பிரச்சினையை இனங் காணவும், முகாமைத்துவம் செய்வதற்கும் சீத்தா எலிய ஆராய்ச்சி நிலையம், தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிலையம் என்பவற்றிலுள்ள நெமற்றோ ட்டியலாளர்களின் உதவியுடன் சேவைக்காலப் பயிற்சி நிலையங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடவிதான விசேடத்துனர்களுக்கும் விவசாயக் கல்லூரிகளின் விரிவுரையாளர்களிற்கும் ஒரு நாள் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.

ஏனைய நடவடிக்கைகள் (அண்மையில் இனங்காணப்பட்ட பூச்சிப் பீடைகள்)

வாழை வெண்மூட்டுப்பூச்சி

2009 இல் வட மத்திய மாகாணத்தில் வாழைத் தோட்டங்களில் புதியதொரு வகை வெண் மூட்டுப் பூச்சியான டிஸ்மிகொக்கொஸ் நியோபிறேவிப்ஸ் இனங் காணப்பட்டது. இப்பீடையை இனங்காணல், அதனைக் கட்டுப்படுத்தல் தொடர்பாக ஒரு கையேடு தயாரிக்கப்பட்டதோடு, இப்பிரதேசத்திலுள்ள அனைத்து அரச அலுவலர்களிற்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டு, கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அமுல் செய்வதற்கு அவர்களின் ஒத்துழைப்பும் கோரப்பட்டது.

இவற்றைத் தவிர தொற்றலேற்பட்ட பிரதேச த்திலுள்ள விவசாயிகளிற்கும், நாற்றுமேடை உரிமையாளர்களிற்கும் 2010 இல் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

வெண்மூட்டுப் பூச்சிகளும், கொய்யா காய் துளைப் புழுவும்

பூங்கனியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவன த்தின் பூச்சியியலாளர்களின் ஒத்துழைப்புடன் நாட்டின் சில பிரதேசங்களில் பல்வேறு தாவர ங்களில் ஏனைய வகை வெண் மூட்டுப்பூச்சிகள் பரவுவது கண்டு பிடிக்கப்பட்டதோடு, இவற்றின் தொற்றலை மட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.

புனித வெள்ளரசு மரங்களில் பீடைகளும், நோய்களும்

வேண்டுகோளிற்கிணங்க பல சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பௌத்த ஆலயங்களில் பல புதிய வெள்ளரசு மரங்கள் பரிகரிக்கப்பட்டன.

விவசாயக் கண்காட்சிகள்

பல்வேறு பீடைகள், தாவரபாதுகாப்பு நடவடி க்கைகள் என்பன தொடர்பான கண்காட்சிக்கான பொருட்கள், சுவரொட்டிகள் என்பனவற்றைத் தயாரித்து வழங்கல், கண்காட்சிக் கூடமொன் றை ஒழுங்கு செய்தல் ஆகியவற்றின் மூலம் 2010 இல் பட்டஅத்த அரசாங்கப் பண்ணையில் இடம் பெற்ற கண்காட்சியில் (விவசாயிகள் வாரம்) தாவரப் பாதுகாப்பு நிலையம் முக்கிய பங்கினை ஆற்றியது.

சுவரொட்டிகளையும், கையேடுகளையும் தயாரித்தல்

2010ல் பின்வரும் கையேடுகளையும், சுவரொ ட்டிகளையும் தயாரித்து, அச்சிட்டு, விரிவாக்க அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோரிடையே விநியோகித்தது.

- சல்வீனியாவை உயிரியல் முறையிற் கட்டுப் படுத்தல்
- ஐக்கொனியாவை உயிரியல் முறையிற் கட்டுப் படுத்தல்
- கொய்யாவில் நெமற்றோட்டுப் பிரச்சினையை முகாமைத்துவம் செய்தல்.

2011 இற்கான திட்டம்

- தாவரப் பாதுகாப்புச் சட்டத்தினை அமுல்செய்தல்
- நெல்லிற்கான ஒருங்கிணைந்த பீடை முகாமை த்துவ நிகழ்ச்சிகளை அமுல்செய்தல்
- மரக்கறிகளுக்கான ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ நிகழ்ச்சிகளை அமுல்செய்தல்
- இலைமரக்கறிப் பயிர்களில் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ நிகழ்ச்சிகளை அமுல்செய்தல்
- விவசாய, நீர் வாழ்விடங்களில் ஆக்கிர மிப்பு, அந்நிய களைகளை கட்டுப்படுத்த இரசாயன, உயிரியல் முறைகளைக் கடைபிடித்தல்
- இலக்காகக் கொள்ளப்பட்ட குழுவினரிற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்
- விவசாயிகளின் வயல் நிலைமைகளில் முதற் கட்டமாக புதிய களைநாசினிகளின் உயிரியல் வினைத்திறனை மதிப்பீடு செய்தல்.

- அரச பண்ணைகளிலுள்ள விதைக் களஞ்சிய ங்களை தூமமாக்கல்.
- அரச கட்டிடங்களில் வீட்டுப் பீடைகளைக் கட்டுப்படுத்தல்
- இவற்றோடு தொடர்புடைய ஊடக பொருட்களைத் தயாரித்தல்.
- உட்கட்டமைப்பு அபிவிருத்தி
  - * உயிரியற் கட்டுப்பாட்டு அலகினை மேம்படுத்தல்
  - * வேலி அமைத்தல்
  - * களஞ்சியங்களை அபிவிருத்தி செய்தல்.

உத்தியோகத்தர் பட்டியல்

பதவி நிலை	*எண்ணிக்கை*
பிரதிப்பணிப்பாளர்	01
ஆராய்ச்சி அலுவலர்	01
விவசாய அலுவலர்கள்	03
விவசாயக் கண்காணிப்பு அலுவலர்	01
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்	01
விவசாயப் போதனாசிரியர்கள்	09
ஆராய்ச்சி உதவியாளர்	01
அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை	05
சாரதிகள்	04
காவலாளிகள்	02
லொறி சுத்திகரிப்பாளர்	01
விசேட களஞ்சிய தொழிலாளர்	01
தொழிலாளர்கள்	05
மொத்தம்	*35*

3.1.3 தேசிய தாவரத் தடுப்புக்காப்புச் சேவை கட்டுநாயக்க

தாவரங்கள், தாவரப் பொருட்கள் என்பவற்றின் ஊடாக நாட்டிற்குள் வரும் அல்லது நாட்டிலிருந்து வெளியேறும் பீடைகளை ஒழுங்குப்படுத்துவதே தேசிய தாவர தடுப்புக்காப்புச் சேவையின் பொறுப்பாகும். இதனை அடைவதற்கு இந்நிலையம் தேசிய தாவரத் தடுப்புக்காப்புச் சேவை சட்டத்தை அமுல் செய்தோடு ஆராய்ச்சிகளையும், சேவைகளையும் அடிப்படையாகக் கொண்ட தடுப்புக்காப்பு நடவடிக்கைகளில் அதிக அக்கறை செலுத்தி வருகின்றது.

தாவரச் சுகாதார அத்தாட்சிப்படுத்தல், இறக்குமதி செய்யப்பட்ட, ஏற்றுமதி செய்யப்படவுள்ள தாவரங்கள், தாவரப்பொருட்கள் என்பவற்றை பரிசோதித்துப் பரிகரித்தல், தடுத்து வைக்கப்பட்ட மாதிரிகளைப் பரிசோதித்தல், பயிற்சி, விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சிகளினூடாக அனைத்து தாவர தடுப்புக்காப்பு தொடர்பான அறிவினையும் பரப்பல் என்பனவே இந்நிலையத்தின் பிரதான பணிகளாகும். மேலும் தேசிய தாவர தடுப்புக்காப்புச் சேவையானது தனது பணிகளில் தேசிய ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், ஏனைய நிறுவனங்கள், விவசாயத் திணைக்களத்தின் நிறுவனங்கள், நிலையங்கள் என்பவற்றோடு இணைந்து தொடர்ச்சியாக ஒத்துழைப்பினை வழங்கி வருகின்றது.

பாதீடு

மீண்டுவரும் செலவீனங்கள், மூலதனம், திட்டங்கள் என்பவற்றின் கீழ் ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை, ஏற்பட்ட செலவுகளை அட்டவணை 3.1.3.1 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 3.1.3.1 : வருடாந்த பாதீடு -2010 (ரூபா)

தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு%
மூலதனம்	4,921,100	2,874,328	58
மீண்டும் வரும் செலவீனம்	5,354,060	4,217,015	79
மொத்தம்	10,275,160	7,091,343	69

முன்னேற்றம்

தாவரத் தடுப்புக்காப்புச் செயற்பாடுகள்

2010 ஆம் வருடத்தில் மேற்க்கொள்ளப்பட்ட பணிகள், அடைவு மட்டங்கள் என்பன அட்டவணை 3.1.3.2 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 3.1.3.2 2010இன் போது மேற்க்கொள்ளப்பட்ட பணிகளும் முன்னேற்றங்களும்

	மேற்க்கொள்ளப்பட்ட பணிகள்	முன்னேற்றம் (எண்ணிக்கை)
01	இடை மறிப்புகளிற்காக பதிவு செய்யப்பட்டவை	177
02	அனுப்பப்பட்ட இடைமறிப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை	176
03	பரிசோதனைகளிற்குப் பதிவு செய்யப்பட்டவை	565
04	நுழைவுத் துறைமுகங்களிற்கு அனுப்பிய பரிசோதனை அறிக்கைகளின் எண்ணிக்கை	549
05	பரிசோதனைக்கு பதிவு செய்யப்பட்ட தும்பு உற்பத்திகள்	162
06	பரீட்சிக்கப்பட்ட தும்பு உற்பத்திப் பொருட்களுக்கான அறிக்கைகள்	156
07	பரிசோதனைக்காக சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை	20
08	நடாத்தப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை	08
09	தாவரச் சுகாதார சான்றிதழ்	03
10	அழிக்கப்பட்ட சந்தேகத்திற்குரிய பொருட்தொகுதிகளின் எண்ணிக்கை	647

பூச்சியியல்

2010 ஆம் வருடத்தில் மேற்க்கொள்ளப்பட்டப் பணிகள் வருமாறு; அலங்கார இலைகள், தாவர மாதிரிகளைப் பரிசோதித்தல்

அட்டவணை 3.1.3.3: பூச்சிப் பீடைகள், சிற்றுண்ணிகள், தாவர ஒட்டுண்ணி நெமற் றோடுகள் ஆகியவற்றுக்காகப் பரிசோதிக்கப்பட்ட ஏற்றுமதி அலங்காரத் தாவர மாதிரிகள்

விபரம்	பரீட்சிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை	தொற்றுக்குள்ளான மாதிரிகளின் எண்ணிக்கை
01 தாவர நெமற்றோடுகளிற்கான ஏற்றுமதி அலங்காரத் தாவர மாதிரிகள்	8,625	1,176– நிராகரிக்கப்பட்டவை 64– நிராகரிக்கப்பட்டவை
02 பூச்சிகள், சிற்றுண்ணிகளுக்கான ஏற்றுமதி அலங்காரத் தாவர மாதிரிகள்	1,005	10– பூச்சிகள் 01– சிற்றுண்ணிகள்
03 ஏற்றுமதி ஸ்ரோபரி மாதிரிகள்	40	இல்லை
04 பூச்சிப்பீடைகள் , சிற்றுண்ணிகள்,தாவர நெமற்றோடுகளிற்கான ஏற்றுமதி தும்பு மாதிரிகள்	61	11– மண் 01– பூச்சிகள்

அட்டவணை 3.1.3.4: பூச்சிகள், பீடைகள், சிற்றுண்ணிகள், தாவர ஒட்டுண்ணி நெமற்றோ டுகள் என்பவற்றிற்குப் பரிசோதிக்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட தாவர மாதிரிகள்

பொருள்	மாதிரிகளின் எண்ணிக்கை	நாடு	கண்டுபிடிக்கப்புகள்
அலங்காரத் தாவங்கள்	52	நெதர்லாந்து இந்தியா, ஐப்பான் தாய்வான் இஸ்ரேல் பப்புவா நியுகினியா தாய்லாந்து ஐக்கிய அமெரிக்கா	இல்லை
பழத் தாவரங்கள்	27	தாய்லாந்து	அழுக்கணவன், வெண் மூட்டுப் பூச்சி
உலர்த்தப்பட்ட பழங்கள்	03	ஐக்கிய அமெரிக்கா	இல்லை
விதை உருளைக் கிழங்கு	67	ஜேர்மனி ஐக்கிய அமெரிக்கா இந்தியா நெதர்லாந்து	இல்லை
விதைகள்			
• மரமுந்திரிகை	02	இந்தியா	சிட்டோபிலஸ் இனம் கார்போபிலஸ் இனம்
• சோளம்	152	இந்தியா தாய்லாந்து தென் ஆபிரிக்கா அவுஸ்திரேலியா	ட்றைபோலியம் இனம் சிற்றுண்ணிகள் சிட்டோபிலஸ் இனம் கார்போபிலஸ் இனம்
• நிலக்கடலை	52	இந்தியா	இல்லை
• நார்	02	மெக்சிகோ	இல்லை

- பீடைகளற்ற அலங்காரத் தாவர உற்பத்திகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக ஏற்றுமதி செய்யும் பத்து நாற்று மேடைகள் பரிசோதிக்கப் பட்டன.
- ஏற்றுமதி அலங்காரத் தாவர நாற்றுமேடைகளின் தாவர ஒட்டுண்ணி நெமற்றோடுகளின் நிலைமையைக் கண்காணித்தல்

  பரிசோதிக்கப்பட்ட நாற்றுமேடைகளின் எண்ணிக்கை –15

  பரிசோதிக்கப்பட்ட மண் மாதிரிகளின் எண்ணிக்கை – 692

  தொற்று காணப்பட்ட மண் மாதிரிகளின் எண்ணிக்கை– 191

தாவர ஒட்டுண்ணி நெமற்றோடுகளை முற்றாக அழிப்பதற்காக நாற்றுமேடை முகாமையாளர் களிற்கு தொற்றுக்கள் தொடர்பான தகவல்கள் வழங்கப்பட்டன.

ஆராய்ச்சி நடவடிக்கைகள்

- "எருக்கலை'' இலைப் பிரித்தெடுப்பு, பசும் வெள்ளை பூடு பிரித்தெடுப்பு, வேப்பெண்ணை சிற்றொனெல்லா எண்ணெய், புதிய ஆடாதோடா இலை பிரித்தெடுப்பு என்பன ஏற்றுமதி செய்யப்படும் கிறிஸ்சாந்திமத்தில் வெண் மூட்டு பூச்சிகளை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தின.
- அவுஸ்திரேலியாவின் இறக்குமதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஏற்றுமதித் தரங்களைக் கொண்ட அன்னாசித் தோட்டங்களில் பீடைகளையும், நோய்களையும் கண்டு பிடிப்பதற் காக மேற்க்கொள்ளப்பட்ட ஆய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டன.

பயிற்சி, விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகள்

- பீடைகளை இனங்காணல், முகாமைத்துவம் செய்தல், என்பன தொடர்பான ஏற்றுமதி செய்யப்படும் இலைத் தாவர நாற்றுமேடை அலுவலர் களின் அறிவை மேம்படுத்த இரண்டு பயிற்சிகளும், விழிர்ப்புணர்வூட்டும் பணிகளும் மேற்க்கொள்ளப்பட்டன.
- வட மேல் மாகாணத்தில் ஏற்றுமதிக்காக அந்தூரியம் செய்கைபண்ணுவோர், விவசாய போதனாசிரியர்கள், அலங்காரத் தாவர செய்கையாளர்கள் ஆகியோரிற்கு ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் நிதியுதவியுடன் நான்கு பயிற்சி வகுப்புக்கள் மேற்க்கொள்ளப்பட்டன.
- தாவரத் தடுப்புக்காப்புடன் தொடர்புடைய பூச்சியியல், நெமற்றோட்டியல் என்பவற்றில் 36 டிப்ளோமா தாரிகளும் பட்டதாரி மாணவர்களும் பயிற்றுவிக்கப்பட்டன.
- சமர்ப்பிக்கப்பட்ட 32 மாதிரிகள் பூச்சிப் பீடைகள், சிற்றுண்ணிகள், தாவர நெமற்றோட்டுக்கள் என்பவற்றிகாகப் பரிசோதிக்கப்பட்டன.

நோயியல்

- 2010 இன் போது மேற்கொள்ளப்பட்டப் பணிகள் பின்வருமாறு

அட்டவணை 3.1.3.5: இடைமறிப்பு செய்யப்பட்டு பரிசோதிக்கப்பட்ட தாவர மாதிரிகளின் எண்ணிக்கையும், அவற்றுடன் காணப்பட்ட நோயாக்கிகளும்

மாதிரிகளின் வகை	*மாதிரிகள்/பொருட் டொகுதிகள்/ தாவரங்களின் எண்ணிக்கை*	*கண்டுபிடிப்புக்கள்*
உருளைக்கிழங்கு	20 பொருட்தொகுதிகள் –நெதர்லாந்து –பிரான்சு –ஜேர்மனி	பொதுவான பொருக்கு நோய் ஸ்ரெப்ரோமை ஸஸ் –ஸ்கெபீஸ் வெள்ளி செதில் நோய் ஹெல்மிந்தொஸ்போறியம்சொலனை மென் அழுகல்–ஏர்வினியா இனம் கறுப்பு கறுப்பு செதில் நோய் வெள்ளி செதில் நோய் வலைப்பின்னல் செதில் நோய் ஸ்ரெப்ரோமைஸஸ் றெட்டிகியுலிஸ் கேபீஸ்
சோளம்	161 மாதிரிகள் தாய்லாந்து, தென் ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, இந்தியா	பங்கசு: அஸ்பேர்ஜிலஸ் இனம், மியுகொர இனம், பியுஸாரியம் இனம், பெனிசிலியம் இனம், கொலெற்றோறிகம் இனம், றைஸோபுஸ் இனம், கேர்வுலாரியா இனம்
நிலக்கடலை	95 மாதிரிகள்– இந்தியா, சீனா	பங்கசு:அஸ்பெர்ஜிலஸ் இனம், பெனிசிலியம் இனம், மியுகொர் இனம், றைஸோபுஸ் இனம், கொலெற்றோறிகம் இனம்.

மரமுந்திரிகை	95 மாதிரிகள் – ஐவரிகோஸ்ட்	றைஸோபுஸ் இனம்,பெனிசிலியம் இனம், மியுகொர் இனம், அஸ்பேர்ஜிலஸ் இனம்.
கொக்கோ விதைகள்	14 மாதிரிகள் – இந்தியா, ஐக்கிய இராச்சியம், கானா	பங்கசு: றைஸோபுஸ் இனம், அஸ்பேர்ஜிலஸ் இனம்.
உழுந்து	01 மாதிரி – இந்தியா	பங்கசு– அஸ்பெர்ஸிலஸ், ஓல்டர்நேரியா.
பாசிப் பயறு	01 மாதிரி தாய்லாந்து	பங்கசு: கொலெற்றோறிகம் இனம், பியுசாரியம் இனம், மியுகொர் இனம்
மொட்டுக் காளான் வித்திகள்	01 மாதிரி – அவுஸ்திரேலியா	–
பனை நார்	02 மாதிரி பெல்ஜியம்	–
ட்றம்பிகோ நார்	02 மாதிரிகள் ஐக்கிய அமெரிக்கா	–
வெங்காய விதை	01 மாதிரி– இந்தியா	பங்கசு றைசோபுஸ் இனம்
பால்டிக் பீற் பாசி	01 மாதிரி– நெதர்லாந்து	பங்கசு பியுசாறியம் இனம்
கிளேடியோலஸ் குமிழ்	01 மாதிரி நெதர்லாந்து	–

அட்டவணை 3.1.3.6: மேலதிக பிரகடனத்துடன் தாவர சுகாதார பரிசோதனை அறிக்கைகளுக்காகப் பரிசோதிக்கப்பட்ட மாதிரிகள்

பொருள்	மாதிரிகளின் எண்ணிக்கை	பரிசோதிக்கப்பட்ட காரணி	சென்றடையவுள்ள நாடு
தும்பு	34	பங்கசு, பக்றீரியா	எகிப்து, பிரான்ஸ், நியுஸிலாந்து, துருக்கி டோஹோ கட்டார்
தும்பு	12	மண்ணும் ஏனைய தொற்றுக்களும் இல்லாதிருத்தல்	நியுசிலாந்து
நீர் வாழ் தாவரங்கள்	130		பிரான்சு
அலங்காரத் தாவரங்கள்	50	ஆபத்தான பங்கசு பக்றீயா, பீடைகள் மண் வாழ் உயிரினங்கள்	கொரியா, ஜப்பான், நெதர்லாந்து, ஜேர்மனி சுவிட்சர்லாந்து, சிங்கப்பூர்
அலங்காரத் தாவரம்	15	சிஞ்செட்றியம் எண் டோபயோட்றிகம், கிளேவிபக்டர் மிச்சிக னென்ஸிஸ், சைலெ ல்லா பஸ்டிடியோஸா, கொரைன் பகறீரியம் செபெடோனிகஸ்	கிரேக்கம், ஹோலந்து
அலங்கார தாவரங்கள்	1640	மேலதிக பிரகடனங்கள் இல்லாமல்	நெதர்லாந்து, சூடான் தென் கொரியா, ஜப்பான்
ஏகார் வளர்ப்பூடகத்தில் இழைய வளர்ப்பு தாவரங்கள்	1140	தொற்றுக்கள் இல்லாத தாவரம்	டென்மார்க் ஐக்கிய அமெரிக்கா அவுஸ்திரேலியா
ஏகார் வளர்ப்பூடகத்தில் இழைய வளர்ப்புத் தாவரங்கள்	50	மேலதிக பிரகடனங்கள் இல்லாமல்	நெதர்லாந்து
கொக்கோ விதைகள்	01	கரும்பு காய்கள், செஸ்ட்நட், கீழ் பூஞ்சணம் நோய்	இந்தியா
ஸ்ரோபரி	07	பக்றீரியாக்கள் பங்கசுக்கள்	தென் ஆபிரிக்கா

அட்டவணை 3.1.3.7: நோயாக்கிகளுக்காகப் பரிசோதிக்கப்பட்ட ஏனைய மாதிரிகளின் எண்ணிக்கை

மாதிரி	எண்ணிக்கை	பங்கசு	பக்டீரியா
புல்	02	ஹெல்மிந்தோஸ்போறியம் இனம் கேர்வுலேரியா இனம்	
நெபெந்தஸ் இனம்	13	கொலெற்றோறிகம் இனம் பைடொப்தொரா இனம் நிக்ரொஸ்பொரா இனம்	
லிவிஸ்ரோனியா இனம்	12	கொலெற்றோறிகம் இனம் ஓல்ட்டனோரியா இனம்	அறியப்படாத பக்றீரியா
அந்தூரியம்	03		சந்தொமொனஸ் கெம்பஸ்ரிஸ் பீவீ டிபன்பாக்கியா
அத்தி	03	கேர்வுலேரியா இனம்	அறியப்படாத பக்றீரியா
வேம்பு	05		அறியப்படாத பக்றீரியா
மூங்கிற் தண்டு	03		
அலங்காரத் தாவரங்கள்	07பியுசாறியம் இனம்		அறியப்படாத பக்றீரியா

ஏனைய நடவடிக்கைகள்

- கம்பஹா மாவட்டத்தில் கண்காட்சிகளிற்கும், உலக விஞ்ஞான தினத்திற்கும் பங்களிப்புச் செய்தமை

நாற்று மேடைகளில் நோய்களைக் கட்டுப் படுத்துவதற்காக அந்தூரியம் செய்கையாளர் களிற்கு மூன்று பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டன.

களை விஞ்ஞானம்

- களை விதைகளைக் கண்டு பிடிப்பதற்காக இறக்குமதி செய்யப்பட்ட நூற்றிப் பதினேழு (117) பொருட்டொகுதிகள் பரிசோதிக்கப்பட்டதோடு அவற்றில் நான்கு பொருட்டொகுதிகளில் களை விதைகளின் தொற்றுக்கள் காணப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டது.
- ஏற்றுமதி செய்யப்படவிருந்த இருநூற்றி முப்பதெட்டு (238) கொக்கோ கரி பொருட்தொகுதிகள் பரிசோதிக்கப்பட்டதோடு அவற்றில் 44 பொருட்தொகுதிகளில் உயிர் வாழும் களை விதைகளின் தொற்றுக்கள் காணப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டது.
- 02 தாவரக் குடும்பங்களையும், 04 சாதிகளையும் சேர்ந்து பன்னிரெண்டு (12) புதிய களை இனங்கள் சேகரிக்கப்பட்டு இனங் காணப்பட்டு மூலிகைத் தாள்களில் பாதுகாக்கப்பட்டன.
- 02 தாவரக் குடும்பங்களையும் 05 சாதிகளையும் சேர்ந்த (9) புதிய களை இனங்கள் சேகரிக்கப்பட்டு அவை குழாய்களில் பாதுகாக்கப் பட்டன.
- 100° செல்சியஸ் வெப்பநிலையில் நீராவியால் 20 நிமிடங்களிற்கு பரிகரிக்கும் போது கொக்கோ–கரியிலுள்ள உயிருள்ள கலங்களை அழிக்க முடியும்.

தூமமாக்கல்

- வர்த்தக தூமமாக்கல்

மீதைல் புரோமைட்டைப் பயன்படுத்தி தாவரங்கள், தாவர உற்பத்திப் பொருட்களின் 190 பொருட்தொகுதிகள் தூமமாக்கப்பட்டன.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உதிரிப் பூக்களின் எட்டு (08) பொருட்தொகுதிகள் இடை மறிக்கப்பட்டு இறக்குமதியாளரிற்கு விடுவிக்க முன்னர் அவை தூமமாக்கம் செய்யப்பட்டன.

தூமமாக்கல் விபரங்கள் அட்டவணை 3.1.3.8 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 3.1.3.8: 2010 இல் கட்டுநாயக்க தேசிய தாவர தடுப்புக்காப்பு சேவையில் மேற் க்கொள்ளப்பட்ட வர்த்தகத் தூமமாக்கல்கள்

பொருள் வகை	தூமமாக்கலின் எண்ணிக்கை
அலங்காரத் தாவரங்கள்	06
வெட்டுப் பூக்கள்	08
மரங்களும்/மரப் பொருட்களும்	34
தும்பு உற்பத்திகள்	126
ஜேர்பறா	08
தூளாக்கப்பட்ட மூலிகைகள்	08

தடுப்புக்காப்பு பரிகரணங்களை மேற்பார்வை செய்தல்

ஏற்றுமதியாளர்களின் வேண்டுகோளுக் கிணங்க தனியார் தூமமாக்குவோரால் மேற் கொள்ளப்பட்ட மரத்திலான முப்பத்தி நான்கு (34) மரப் பொதி செய்யும் பொருட்களை தூமமாக்கல்கள் அத்தாட்சிப்படுத்தல் நோக்கத்திற்காக பரிகரண தொழில்நுட்பப் பிரிவு அலுவலர்களினால் மேற் பார்வை செய்யப்பட்டது.

2011 ஆம் ஆண்டிற்கான திட்டம்

- ஏற்றுமதி மாதிரிகளைப் பரிசோதித்தல்
- இடை மறிக்கப்பட்ட மாதிரிகளைப் பரிசோதித்தல்
- விதை உருளைக்கிழங்குத் பொருட்டொகுதிகளை நுழைவிடத்தில் பரிசோதித்தல்
- விதை உருளைக்கிழங்கு மாதிரிகளைப் பரிசோதித்தல்
- தாவர ஒட்டுண்ணி நெமற்றோட்டு நிலைமைகளை ஆராய்வதற்காக ஏற்றுமதிக்கான தாவர நாற்று மேடைகளிலிருந்து மண் மாதிரிகளை சேகரித்தல்
- சுற்றாடல் நேயமுள்ள முறைகளைப் பயன்படுத்தி ஏற்றுமதிக்கான அலங்கார நாற்று மேடைகளின் தாவர ஒட்டுண்ணி நெமற்றோடுகளைக் கட்டுப்படுத்துதல்
- ஏற்றுமதிக்கான வாய்ப்புகளைக் கொண்ட பழங்களில் (மா, பப்பாசி, ரம்புட்டான்) காணப் படும் உள்நாட்டு பழ ஈ இனங்களை கட்டுப்படுத்த காமாக் கதிர்வீச்சை அபிவிருத்தி செய்தல்
- உசாத்துணைக்காக பூச்சிகளை சேகரிப்பதற் கான வெளிக்கள விஜயங்கள்
- உசாத்துணைக்காகப் பூச்சிகளைச் சேகரித்தல்
- அலங்காரத் தாவரங்களில் பனிப்பூச்சிகளை இனங்காண்பதற்கான ஆய்வுகள்
- செதில் பூச்சிகளைக் கட்டுப்படுத்த சில தாவரங்களில் விரட்டியடிக்கும் தாக்கங்களை ஆராய்தல்
- தேசிய தடுப்புக்காப்பு சேவையிடம் சமர்ப்பிக்கப் பட்ட மாதிரிகளிலுள்ள நோயாக்கிகளை இனங்காணுதல்
- பங்கசுகளுக்கான நிரந்தர வழுக்கிகளை தயாரித்தல்
- தாவர நோயாக்கியின் தூய வளர்ப்புக்களைப் பராமரித்தல்
- தாவர நோயாக்கிகளை இனங்காண்பதற்கான ஆய்வுகூட வழிக்காட்டிகளை மேம்படுத்தல். (புத்தகங்களை நிழற்பட பிரதியெடுத்தல், நிழற் படங்கள், அச்சிடப்பட்ட தாள்கள்)
- எதிர்காலப் பயன்பாட்டிற்காக விதை உருளைக் கிழங்கு மாதிரிகளைப் பேணுதல்
- 'எலிசா' நடைமுறையைப் பயன்படுத்தி வைர சுகளையும்/ பக்றீரியாக்களையும் இனங்காணுதல் (வைரசுகளிற்கு 200 உருளைக்கிழங்கு மாதிரிகள் பக்றீரியாக்களிற்கு 200 உ.கி. மாதிரிகள், பக்றீ ரியாவிற்கு 400 சோள மாதிரிகள், 200 ஏனைய மாதிரிகள்)
- ஏற்றுமதி செய்யப்படும் தும்பு உற்பத்திகளில் காணப்படும் தடுப்புக்காப்பிற்கான முக்கிய நோய்களை இனங்காணுதல்
- இலங்கையில் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட நாற்றுமேடைகளிலே நீர் வாழ் தாவரங்களிலுள்ள நோய்களை இனங்காணுதல்
- அந்தூரியம் இலை வெளிறல் நோயின் தற்போதைய நிலையையும், முகாமைத்துவ உபாயங்களையும் ஆய்வு செய்தல்
- களை மூலிகைத் தோட்டமொன்றைப் பராமரித்தல் (பல களை இனங்களை சேகரிக்க எதிர்ப்பார்க்கப் படுகின்றது)
- களை விதை உசாத்துணை சேகரிப்பை பராமரித்தல்
- நீரில் வாழும் உயிருள்ள தாவரச் சேகரிப்புகளை பராமரித்தல்

- ஏற்றுமதி, இறக்குமதி பொருட்தொகுதிகளிலுள்ள களை விதைகளைக் கண்டுப்பிடித்தலும், இனங்காணுதலும்
- தேசிய தாவரத் தடுப்புக்காப்புச் சேவையில் வர்த்தக தூமமாக்கல்
- தூமமாக்கலை மேற்பார்வை செய்தல்
- பரிசோதனைக்கும், கணக்காய்விற்கும் தூமமாக்கும் கம்பனிகளிற்கு விஜயம் செய்தல்
- பரிகரண நியமங்களை விருத்தி செய்தல்
- ஏற்றுமதி அலங்காரத் தாவரங்கள், தும்பு உற்பத்திகள் தொடர்பான அறிக்கைகள்
- இடைமறிப்பு மாதிரிகளின் அறிக்கைகள்
- நுழைவுக்குப் பின்னரான தடுப்புக்காப்பு விடயங்கள்
- பட்டதாரி மாணவர்களையும், டிப்ளோமாதாரிகளையும் பயிற்றுவித்தல்
- பங்காளர்களுக்கான பயிற்சி, அறிவூட்டும் நிகழ்ச்சிகள்
- கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், மாநாடுகள், என்பவற்றில் பங்குபற்றுதல்
- கையேடுகள், சுவரொட்டிகளைத் தயாரித்தல்
- பீடை ஆபத்துப் பகுப்பாய்வு
- தாவரச் சுகாதார சான்றிதழ்களை விநியோகித்தல்
- சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகளைப் பரிசோதித்தல்
- தாவர பாதுகாப்புச் சட்டத்திற்கு விரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை அழித்தல்

உத்தியோகத்தர் பட்டியல்

பதவி நிலை	எண்ணிக்கை
பிரதிப் பணிப்பாளர்	01
ஆராய்ச்சி அலுவலர்கள்	06
விவசாய கண்காணிப்பு அலுவலர்	05
நிகழ்ச்சி உதவியாளர்	06
விவசாய போதனாசியர்கள்	11
ஆராய்ச்சி உதவியாளர்கள்	05
அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை	07
சாரதிகள்	04
மின்னியலாளர்	01
விசேட தொழிலாளர்கள்	01
தொழிலாளர் – நிரந்தம்	04
தொழிலாளர் – ஒப்பந்தம்	08
காவலாளி	02
அலுவலக சேவையாளர்கள்	03
மொத்தம்	64

3.1.4 பீடைகொல்லிப் பதிவாளர் அலுவலகம் பேராதனை

1980 ஆம் ஆண்டின் பீடைநாசினிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் சட்டத் தேவைகளை அமுல் செய்வதே பீடைநாசினிகள் பதிவாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பாகும். நாட்டிற்குள் பீடைநாசினிகளை இறக்குமதி செய்வது அவற்றினால் பரிகரிக்கப்பட்ட பயிர்களை விற்பனை செய்வது முதல் பீடைநாசினிகளின் வாழ்க்கை வட்டத்தை முகாமைத்துவம் செய்வது அடங்கலாக பீடை நாசினிகளைப் பதிவு செய்வதே மிகவும் முக்கியமான பணியாகும்.

பாதீடு

பல்வேறு தலைப்புகளின் கீழ் பெறப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள், செலவுகள் என்பன அட்டவணை 3.1.4.1 இல் தரப்பட்டுள்ளன.

முன்னேற்றம்

பீடைநாசினிகளைப் பதிவு செய்தல்

இந்த நடைமுறையில் பதிவு செய்யவுள்ளோர் சமர்ப்பித்த சம்பந்தப்பட்ட தகவல்கள், ஆவணங்கள் என்பன மதிப்பீடு செய்யப்படும். இம் மதிப்பீட்டின் முடிவுகள் திருப்திகரமானதாக அமையுமாயின் சுட்டி, கொள்கலன்கள் என்பனவற்றிற்கான அனுமதி பதிவு செய்யப்படும். பதிவு இலக்கத்துடன் பதிவு செய்தமைக்கான சான்றிதழை வழங்க பதிவுக் கட்டணம் அறவிடப்படும். மீளாய்வு செய்யப்படும் வருடத்தில் இந்நடைமுறையின் ஊடாக மொத்த வருமானமாக ரூபா 2,467,500.00 பெற்றுக் கொள்ளப்பட்டது.

அட்டவணை 3.1.4.1: வருடாந்த பாதீடு -2010 (ரூபா)

தலைப்பு	*ஒதுக்கீடு*	*செலவு*	*செலவு %*	*வருமானம்*
மூலதனம்	1,691,000	1,234,548	73	
மீண்டு வரும் செலவீனம்	2,091,48	1,961,641	94	
பதிவு, மீள் பதிவுக் கட்டணம்				2,467,500
விற்பனையாளர் அத்தாட்சிப்படுத்தற் கட்டணம்				583,605
மொத்தம்	*3,782,480*	*3,196,189*	*84*	*3,051,105*

பீடைநாசினிகளை மீள் -பதிவு செய்தல்

எந்தவொரு உற்பத்தியினதும் பதிவு 3 வருடங்களிற்கு மாத்திரமே செல்லுபடியாகும். இதன் பின்னர் அச்சமயத்தில் நிலவும் நியமங்கள், கண்டுபிடிப்புகள், பாதுகாப்பு விடயங்கள் என்பன வற்றை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட உற் பத்தி மீள மதிப்பீடு செய்யப்படும். இதன் கீழ் 141 விண்ணப்பங்கள் ஆராயப்பட்டன. அதன் மூலம் பெறப்பட்ட மொத்த வருமானம் ரூபா 705,000.00 ஆகும்.

புதிய மூலக்கூறுகளின் உற்பத்திகளை மதிப்பிடலும், பதிவு செய்தலும்

உள்நாட்டு பரிசோதனைகளின் போது பாதுகாப்பான, சுற்றாடல் நேயமுள்ள பீடைநாசி னிகள் இனங் காணப்பட்டு, ஊக்குவிக்கப்பட்டன. சந்தையில் காணப்படும் ஆபத்தான உற்பத்திகளை இல்லாதொழிப்பதற்கு இந் நடைமுறை உதவும். ஆவணங்களை வினைத்திறனாகவும், விரை வாகவும் மதிப்பீடு செய்வதற்கு பீடை நாசினிப் பதிவுகளில் பீடைநாசினிகளை மதிப்பீடு செய்வத ற்கு கருத்தரங்கு முறையிலானதொரு அணுகு முறையை அறிமுகப்படுத்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. இம்முறையில் பெறப்பட்டதொரு நன்மை பல்வேறு துறைகளில் பரந்த அறிவினைப் பகிர்ந்து கொள்ளக் கூடியதாயிருந்தமை ஆகும். 67 இற்கும் அதிகமான கலவைகள் மதிப்பீடு செய்யப்பட்டதோடு அவற்றில் அவை; நான்கு மாத்திரம் பதிவு செய்யப்பட்டன.

- இன்டொக்சாகார்ப் 15.8%
- புரோபிலெனெஜிகொல் மொனொலெளரேட்
- தியொகிளேம் ஹட்ரஜன் ஒக்சலேட்
- புளுசினாம்

பீடை நாசினிகளின் பொதுவான பாவனை வினைத்திறன், தரம், பாதுகாப்பு அம்சங்கள் என்பனவற்றிற்காக பதிவு செய்வதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத் தொகுதிகள் மிகவும் கவனமாகவும், முழுமையாகவும் மதிப்பீடு செய்யப்பட்டதோடு, விருத்தி செய்யப்பட்ட வழிகாட்டல்களின் மூலம் தேவையான தரவுகள் மேலும் ஒழுங்குபடுத்தப்பட்டன. இவ்வருடத்தில் பொருள் செயற்பாட்டு மூலகங்கள், வீட்டுப் பாவனைக்கான பீடைநாசினிகள் உட்பட முப்பது (30) பீடைநாசினிகளின் உற்பத்திகள் பதிவு செய்யப்பட்டன.

இறக்குமதி அனுமதிகள்

தேவையான தர நியமங்களுடன் சரியான மூலாதாரத்திலிருந்து பொருள் இறக்குமதி செய்யப்பட்டதையும், தேவைக்கதிகமாக இறக்குமதி செய்யப்படுவதையும், இப்பணிகள் உறுதி செய்யும். இவ்வருடத்தின் போது இந் நோக்கத்திற்காக இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை விநியோகிக்க முன்னர் இறக்குமதியாளர்கள் சமர்ப்பித்த 906 தரச் சான்றிதழ்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

கூட்டிகளையும் விளம்பரங்களையும் கண்காணித்தல்

இறுதிப் பயனீட்டாளர்களிற்கு சரியான தகவல்களை வழங்குவதற்கு சுட்டிகளை அங்கீகரிக்கும் பணி உதவும். இந்நடைமுறை யை இலகுவாக்க சுட்டிகளில் காணப்படும் உள்ளடக்கங்களின் தரத்தை விருத்தி செய்வதற்கு எல்லா வகையான விவசாயப் பீடைநாசினிகளிற் கான சுட்டி வடிவங்கள் (கட்டமைப்புகள்) விருத்தி செய்யப்பட்டன. இவ்வருடத்தின் போது 445 சுட்டிகளும், 85 விளம்பரப் பொருட்களும் தெரிவு செய்யப்பட்டன. அண்மையில் பீடை நாசினிகளின் சிபாரிசுகளில் திருத்தம் செய்யப்பட்டமையி னால் இவ்வருடத்தின் போது சுட்டி அனுமதிக்கு திருத்தம் செய்யும் முயற்சிகளின் எண்ணிக்கை இரு மடங்காகியது. இதற்கமைய பீடை நாசினி சுட்டிகளில் "பயன்படுத்தப்படும் அளவுகள்" பிரிவில் அதிகளவிற் பயனீட்டாளர் நேயமுள்ள அறிவுறுத்தல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

வெளிக்கள அமுலாக்கம்

பீடை நாசினிகள் பதிவாளர் அலுவலகம் வெளிக்கள அமுலாக்க அலுவலர்களான மாகாண, மாகாணங்களிற்கு இடைப்பட்ட, மஹாவலி அதிகார சபை உத்தியோகத்தர்களுடன் தொடர்ந்தும் இடம் பெறும் பீடை நாசினிகள் விற்பனையாளர் அத்தாட்சிப்படுத்தல் திட்டத்தி ற்கான ஒருங்கிணைப்பை மேற்கொண்டது. சட்டத்தின் கீழ் விற்பனை நிலையங்களை அத்தாட்சிப்படுத்தல் தொடர்பாக பீடைநாசினி விற்பனையாளர்களிற்கு மொத்தமாக 23 ஒரு நாள் பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டன. குறிப்பிட்ட காரணங்களிற்காக இரத்துச் செய்யாவிடில் பீடை நாசினிகள் விற்பனையாளர் சான்றிதழ் ஒரு வருடத்திற்குச் செல்லுபடியாகும். சான்றிதழொ ன்றை விநியோகிப்பதற்கான தேவைகளின் ஒரு பாகமாக கட்டணம் அறவிடப்படும். இவ்வகையின் கீழ் பெறப்பட்ட மொத்த வருமானம் ரூபா 583,605.00 ஆகும்.

பயிற்சியும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகளும்

விற்பனையாளர்களிற்கும் (23), அலுவலர்களிற் கும் பல பயிற்சி வகுப்புகள் (06) நடாத்தப்பட்டன. 2010 இல் சுமார் 654 பயிற்சிச் சான்றிதழ்களும், 936 விற்பனைச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

ஆய்வுப் பணிகள்

பீடைநாசினிகள் கலவை பகுப்பாய்வு

வினைத்திறனுடன், சுற்றாடலிற்கும், மனித ஆரோக்கியத்திற்கும் நாசினியால் ஏற்படும் தாக்கம் என்பனவற்றைக் கண்டு பிடிக்க பீடை நாசினி யின் தரம் ஒரு பிரதான காரணியாகும். உணவு விவசாய ஸ்தாபனம், உலக சுகாதார நிறுவனம் போன்ற சர்வதேச முகவராண்மை நிறுவன ங்களினால் விதிக்கப்பட்ட பௌதீக – இரசாயன நியமங்களை அனைத்து பதிவு செய்யப்பட்ட பீடை நாசினிகளும் கொண்டிருக்க வேண்டும். இதற்கமைய உள்நாட்டு பரிசோதனைகள் உறுதி செய்யப்படுமாயின் ஒவ்வொரு பொருட்தொகுதியும் விற்பனை செய்வதற்காக அனுமதிக்கப்படும். 2010 இல் 796 தொகுதிகளில் 1833 கலவைப் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதோடு, இதன் மூலம் மொத்தமாக 815,467 கிலோ கிராமையும், 4,530,941 லீற்றரையும் விற்பனைக்கு அனுமதிப்பது சாத்தியமாகியது.

விசேட பணிகள்

தேசிய சேதன நியமங்களும், அத்தாட்சிப்படுத்தும் கருத்திட்டமும்

பீடைநாசினிகள் பதிவாளரின் அலுவலக ஆய்வுகூட வசதிகளை விரிவாக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதோடு, அங்குவைத்தே எதிர்காலத்தில் மேலதிக பகுப்பாய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பீடைநாசினி சிபாரிசுகள்

விவசாயத் திணைக்களத்தினால் வெளியிட ப்பட்ட பீடைநாசினிச் சிபாரிசுகள் என்னும் பிரசுரத்தின் மூலம் பொருத்தமானதொரு பீடை நாசினியைத் தெரிவு செய்தல், அதன் கலவை, பயன்படுத்தப்படும் முறை என்பன உறுதி செய்யப் படுகின்து. விவசாயத் திணைக்களத்தின் சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவங்களின் ஒத்துழை ப்புடன் பீடைநாசினி சிபாரிசுகள் என்னும் பிரசுரம் திருத்தம் செய்யப்பட்டு 2010 இல் வெளியிடப்பட்டது.

பீடைநாசினிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 26ம் பிரிவின் கீழான ஒழுங்கு விதிகள்

1980 இன் 33ம் இலக்க பீடைநாசினி கள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் பீடைக் கட்டுப்பாட்டுச் சேவைகளை வழங்குவோர் தொடர் பாக மே 25, 2010 முதல் புதிய ஒழுங்கு விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. (1655/7 இலக்கமுடைய 25 மே 2010 இல் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிக்கை). இவ்வருடத்தில் இப்பணி மூலம் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 120,000.00 ஆகும்.

விவசாயிகளிற்கு மேலும் வினைத்திறனான சேவையை வழங்குவதற்காக பீடைநாசினிகள் விற்பனை நிலையங்களிற்கு பீடைநாசினிகள் விற்பனை உதவியாளர்களையும், தொழில்நுட்ப அலுவலர்களையும் நியமனம் செய்வது தொடர்பில் ஒரு தொகுதி புதிய ஒழுங்கு விதிகள் நிர்வாகத்தி ற்கு முன்மொழியப்பட்டது.

ஏனைய நடவடிக்கைகள்

அட்டவணை 3.4.1.2 2010 இல் மேற்கொள்ளப்பட்ட ஏனைய பணிகளின் முன்னேற்றம்

உப பணிகள்	மொத்த வருடாந்த பௌதீக இலக்கு	வருட இறுதி வரையான அடைவு மட்டம்	%
• தெரிவு செயயப்பட்டப் பின்னரும், விண்ணப்ப இலக்கத்தினையும் ஒதுக்கிய பின்னர் ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள்	150	179	19
• மூலப் பதிவு விண்ணப்பங்களின் மதிப்பீடு	60	67	112
• மூன்றாம் தரப்பு பதிவு விண்ணப்பங்களின் மதிப்பீடு	140	94	64
• மீள் பதிவு விண்ணப்பங்களின் மதிப்பீடு	140	141	100
• உள்நாட்டுப் பரிசோதனைக்குத் தரவுகளை மதிப்பிடல்	30	52	173
• இறக்குமதி அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல்	1000	1357	136
• பீடைகொல்லி தரச் சான்றிதழ்களின் மதிப்பீடு	1000	906	99
• அனுமதிக்காக சுட்டிகளைத் தெரிவு செய்தல்	600	447	75
• அனுமதிக்காக விளம்பரப் பொருட்களைத் தெரிவுசெய்தல்	175	88	50
• தொழிற்சாலைகளைப் பரிசோதித்தல்	12	06	50
• அனுமதிக்கப்பட்ட மீள பொதி செய்யும் வசதிகளையும், களஞ்சியங்களையும் பரிசோதித்தல்	02	04	200
• தூமமாக்கல், வீட்டுப் பீடைகளை கட்டுப்படுத்தும் சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் இடங்களைப் பரிசோதித்தலும் அத்தாட்சிப்படுத்தலும்	12	10	83
• கணக்கீட்டு அடிப்படையில் தடுப்புக்காப்பிற்கும் கப்பலில் ஏற்றுவதற்கு முன்னாரான பரிகரணத்திற்கு எதிலீன் புரோமைட்டைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதி	50	49	98
• கட்டுப்படுத்தப்பட்ட பீடைநாசினிகளைக் கொள்வனவு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிற்கு அனுமதிகளை வழங்குதல்	100	63	63
• விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான பொருத்தமாத் தன்மை தொடர்பான பரிசோதனை அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ள மருத்துவ ஆராய்ச்சி நிலையத்திற்கும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திற்கும் மாதிரிகளை அனுப்பி வைத்தல்	25	26	104
• பொருட்தொகுதி அடிப்படையில் மாதிரிகளின் தரப் பகுபாய்விற்கு அமைய பொதி செய்வதற்கான அனுமதியை வழங்குதல்	700	796	114
• விற்பனை நிலையங்களைப் பரிசோதித்தல்	100	39	39
• அலுவலர்களிற்கானப் பயிற்சி வகுப்புக்கள்	05	06	120
• விற்பனையாளர்களிற்கான பயிற்சி வகுப்புக்கள்	26	23	88
• விற்பனையாளர் பயிற்சிச் சான்றிதழ்களை வழங்கல்	1000	654	65
• விற்பனையாளர் சான்றிதழ்களை வழங்குதல்	2000	936	47
• வெளிக்கள முறைப்பாடுகள்	10	10	100
• சட்ட நடவடிக்கைகள்	04	01	25
• தொழில்நுட்ப ஆலோசனைக்குழுக் கூட்டங்கள்	06	01	17
• கலவைப் பகுப்பாய்வு	600	18	0.033
• மீதிப் பகுப்பாய்வு	200	76	0.38
• தரத்தை உறுதி செய்வதற்காக பீடை நாசினிகள் பதிவாளர் அலுவலகத்தினால் சேகரிக்கப்பட்ட மாதிரிகள்	12	6	50

• பழைய இருப்புக்களை அழித்தல்	04	00	00
• தொழில்நுட்ப வல்லுனராக/ அங்கத்தவராக/ வளவாளாராக திணைக்களத்தில் அல்லது திணைக்களங்களிற்கிடையிலான கூட்டங்களில் சேவைகளை வழங்கல் அல்லது பங்குபற்றல்	04	01	25
• ஏனைய நிறுவனங்களிலிருந்து வரும் அழைப்புகளிற்கு வளவாளராக பங்குபற்றல்	10	19	190
• முக்கிய தரவுகளைச் சேகரித்தலும், தொகுத்தலும் இறக்குமதி புள்ளி விபரங்களை வழங்குதல் (மத்திய வங்கி, பல்கலைகழங்கள், ஆராய்ச்சியாளர்கள், அரச நிறுவனங்கள் போன்றன)	40	28	70
• வெளிக்கள ஆய்வுகள் போன்ற ஏனைய பணிகள்	04	02	50

எதிர்காலத் திட்டம் – 2011

- தெரிவின் பின்னர், பதிவுக்காக விண்ணப்பங்களை ஏற்றுகொள்ளலும் விண்ணப்ப இலக்கங்களை வழங்குதலும்
- மூலப் பதிவு விண்ணப்பங்களின் மதிப்பீடு
- மூன்றாம் தரப்பு பதிவு விண்ணப்பங்களின் மதிப்பீடு
- மீள்– பதிவு விண்ணப்பங்களின் மதிப்பீடு
- உள்நாட்டு பரிசோதனைக்குத் தரவுகளை மதிப்பிடல்
- இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல்
- பீடைநாசினிகள் தரச் சான்றிதழ்களின் மதிப்பீடு
- அனுமதிக்காக சுட்டிகளைத் தெரிவு செய்தல்
- அனுமதிக்காக விளம்பரப் பொருட்களைத் தெரிவு செய்தல்
- தொழிற்சாலைகளைப் பரிசோதித்தல்
- அனுமதிக்கப்பட்ட மீளப் பொதி செய்யும் இடங்களையும், களஞ்சியங்களையும் பரிசோதித்தல்
- தூமமாக்கல், வீட்டுப் பீடைகளை கட்டுப்படுத்தும் சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் இடங்களைப் பரிசோதித்தலும் அத்தாட்சிப்படுத்தலும்
- கணக்கீட்டு அடிப்படையில் தடுப்புக்காப்பிற்கும் கப்பலில் ஏற்றுவதற்கு முன்னாரான பரிகரணத்தி ற்கும் எதிலீன் புரோமைட்டைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதி
- கட்டுப்படுத்தப்பட்ட பீடைநாசினிகளை கொள்வனவு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்க ளிற்கு அனுமதிகளை வழங்குதல்
- பொருட்டொகுதி அடிப்படையில் மாதிரிகளின் தரப் பகுபாய்விற்கு அமைய பொதி செய்வதற்கான அனுமதியை வழங்குதல்
- செய்திக் கடிதத்தை வெளியிடல்
- விற்பனை நிலையங்களைப் பரிசோதித்தல்
- அலுவலர்களிற்கானப் பயிற்சி வகுப்புக்கள் நடாத்துதல்
- விற்பனையாளர் பயிற்சி வகுப்புக்களை நாடாத்துதல்
- விற்பனையாளர் பயிற்சி சான்றிதழ்களை வழங்கல்
- விற்பனையாளர் சான்றிதழ்களை வழங்குதல்
- வெளிக்கள முறைப்பாடுகளும் சட்ட நடவடிக்கைகளும்
- கலவைப் பகுப்பாய்வு
- மீதிப் பகுப்பாய்வு
- தரத்தை உறுதி செய்வதற்காக பீடை நாசினிகள் பதிவாளர் அலுவலகத்தினால் சேகரிக்கப்பட்ட மாதிரிகள்

- பழைய இருப்புக்களை அழித்தல்
- தொழில்நுட்ப வல்லுனராக/ அங்கத்தவராக/ வளவாளாராக திணைக்களத்தில் அல்லது திணைக்களங் களிக்கிடையிலான கூட்டங்களில் சேவைகளை வழங்கல் அல்லது பங்குபற்றல்
- ஏனைய நிறுவனங்களிலிருந்து வரும் அழைப்புகளிற்கு வளவாளராக பங்குபற்றல்
- முக்கிய தரவுகளைச் சேகரித்தலும், தொகுத்தலும், இறக்குமதி புள்ளி விபரங்களை வழங்கலும் (மத்திய வங்கி, பல்கலைகழங்கள், ஆராய்ச்சியாளர்கள், அரச நிறுவனங்கள் போன்றன)

அலுவலர்களின் பட்டியல்

பதவிநிலை	எண்ணிக்கை
ஆராய்ச்சி அலுவலர்கள்	04
விவசாய போதனாசிரியர்கள்	07
ஆராய்ச்சி உதவியாளர்கள்	04
விவசாய கண்காணிப்பு அலுவலர்கள்	02
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் (விவசாயம்)	02
ஆராய்ச்சி உப உதவியாளர்கள்	01
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	05
சாரதிகள்	03
காவலாளிகள்	02
தொழிலாளர்கள்	02
அலுவலக தொழிலாளி	01
ஒப்பந்த தொழிலாளி	01
மொத்தம்	*34*

3.1.5 தாவர மரபணு மூலவளங்கள் நிலையம் கன்னொறுவை

நாட்டின் தாவரக் கருமூலவளங்களை பாதுகாப்பதும், அவற்றை, தற்போதைய, எதிர் கால சந்ததிகளின் நன்மைக்குப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதுமே தாவரக் கரு மூலவள நிலையத்தின் பிரதான நோக்கங்கள் ஆகும். இதனை அடைவதற் குத் தாவரக் கருமூலவளங்கள் நிலையம் உணவு பயிர்களினதும், அவற்றின் உறவின இனங்களின தும் மரபணு பல்லினத்தன்மையைக் கண்டு பிடித்தல், சேகரித்தல், அறிமுகப்படுத்தல், பாதுகாத்தல், மதிப்பீடு செய்தல், ஆவணப்படுத்தல் ஆகிய பணிகளில் ஈடுப்பட்டு வருகின்றது.

பாதீடு

2010 இற்கான வருடாந்த பாதீட்டு அட்டவணை 3.1.5.1 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 3.1.5.1: பாதீடு- 2010 (ரூபா)

தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு %
மீண்டுவரும் செலவு	9,921,400	8,569,794	86
மூலதனச் செலவீனம்	3,095,000	2,813,506	91
திட்டங்கள்			
இலங்/அமெரி			
ஒத்தழைப்பு கருவள			
அபிவிருத்தித் திட்டம்	5,930,000	4,110,000	69
FAO- NISM-GPA			
திட்டம்	819,360	306,971	37
மொத்தம்	19,765,760	15,800,271	80

முன்னேற்றங்கள்

தாவரக் கரு மூலவளங்களைக் கண்டுபிடித்தலும், சேகரித்தலும்

மீளாய்வு செய்யப்படும் வருடத்தில் **மொத்தமாக** 82 மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. இதில் அறி முகப்படுத்தப்பட்ட 12 இனங்களும், ஏனைய நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட 31 இனங்களும் கடந்த வெளிக்கள சேகரிப்புகளிலிருந்து மதிப்பீடு செய்யும் அலகினால் தெரிவு செய்யப்பட்ட 39 உப மாதிரிகளும் உள்ளடக்கியுள்ளன.

விதைகளைப் பாதுகாத்தல்

விதைப் பொருட்களைப் பாதுகாத்தல்

இவ் வருடத்தில் 129 புதிய சேகரிப்புகள் மரபணு வங்கியில் பாதுகாக்கப்பட்டதோடு இனப்பெருக்கம் செய்யப்பட்ட 104 மாதிரிகளும் பாதுகாக்கப்பட்டன. 2010 இறுதி வரை மரபணு வங்கியில் மொத்தமாகச் சேகரிக்கப்பட்ட இன ங்களின் எண்ணிக்கை 12,778 ஆகும்.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கருவளங்கள்

அவரைத் தானியங்கள்,எண்ணெய்ப் பயிர்கள் ஆராய்ச்சி,அபிவிருத்தி நிலையத்தின் வேண்டு கோளிற்கிணங்க ஆராய்ச்சி நோக்கங்க ளுக்காக மாத்திரம் கௌபீயின் பன்னிரெண்டு (விக்னா அங்கியுலாட்டா எல்) சேகரிப்புகள் இறக்குமதி செய்யப்பட்டன.

அட்டவணை 3.1.5.2: 2010 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மரபணு வங்கியிலுள்ள சேகரி ப்புகள்

பயிர் வகை	சேகரிப்புக்கள் எண்ணிக்கை
நெல்லும் அதனோடிணைந்த இனங்களும்	4,518
ஏனையத் தானியங்களும் உறவினர் இனங்களும்	1,629
அவரைத் தானியங்களும் உறவினர் இனங்களும்	1,969
மரக்கறி அவரைகள்	1,295
சொலனேசியே மரக்கறிகளும் சரக்குப் பயிர்களின் உறவினர்களும்	1,201
குக்கர்பிற்றே மரக்கறிகள்	764
பிரக்கேசியே மரக்கறிகள்	31
அலியம்கள்	20
ஏனைய மரக்கறிகள்	371
கீரைகள்	166
வேர், கிழங்குகள்	09
கடுகும் உறவினர் இனங்களும்	124
எண்ணெய்ப் பயிர்கள்	425
நார்ப் பயிர்கள்	66
மூலிகைத் தாவரங்கள்	27
பழங்கள்	163
மொத்தம்	12,778

கருவளங்களை விநியோகித்தல்

வேண்டுகோளிற்கிணங்க பல்வேறு பயிர்களின் 446 சேகரிப்புகள் ஆராய்ச்சி நிறுவனங்கள் அரச சார்ப ற்ற நிறுவனங்கள், விவசாயிகள்,பல்கலைக் கழக ங்கள் என்பவற்றிற்கு விநியோகிக்கப்பட்டன.

விதைகளின் நடத்தை தொடர்பான ஆய்வு

உயிர்ப்பான சேகரிப்பு, 1989 இலிருந்து சேகரிப்பட்ட மரபணு வங்கியின் மூலச் சேகரிப்புகள் என்பவற்றின் வாழ்தகவைக் கண்காணிக்க ஆய்வொன்று நடாத்தப்பட்டு. மூலச் சேகரிப்புகளிலிருந்து நூற்று எழுபத்து நான்கு (174) சேகரிப்புகள், உயிர்ப்பான சேகரிப்புகளிலிருந்து 1566 சேகரிப்புகள் என்பன வாழ்தகவிற்காகப் பரிசோதிக்கப்பட்டன. நெல், எள்ளு என்பவற்றின் வாழ்தகவு ஆரம்ப முளைதிறனை ஒத்திருந்ததோடு லெகுமினேசியே பயிர்களிலும் (கௌபீ, பாசிப்பயறு, உழுந்து, சோயா அவரை, நிலக்கடலை, கொள்ளு) சொலனேசியே மரக்கறிகளிலும் (கத்தரி, தக்காளி, களிமிளகாய்) 5% இழப்பை முடிவுகள் வெளிப்படுத்தின. உயிர்ப்பான சேகரிப்புகளில் சொலனேசியே மரக்கறிகளில் (கத்தரி, ஏனைய இனங்கள், தக்காளி, கறிமிளகாய்) 5–25% இழப்பும், அவரை மரக்கறிகளிலும்(போஞ்சி, பயற்றை, சிறகவரை,பலா போஞ்சி, வாற் போஞ்சி, ஏனைய போஞ்சி இனங்கள்) அவரைத் தானியங்களிலும் (கௌபீ, பாசிப் பயறு, உழுந்து, சோயா அவரை, நிலக்கடலை, கொள்ளு) 1–5% இழப்பும் அவதானிக்கப்பட்டது.

பண்ணைகளில் பாதுகாத்தல்

உஸ்ஸாபிட்டிய, எடன்துவாவ கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட ஐந்து விவசாயிகளிற்கு தக்காளி, கத்தரி, பாகல், சிறகவரை, மிளகாய் ஆகிய ஆறு மரக்கறிகள் பண்ணைகளில் பாதுகாப்பதற்காக வழங்கப்பட்டன. நான்கு விவசாயிகள் இவற்றை வெற்றிகரமாகச் செய்கைப்பண்ணியதோடு, கடும் மழையின் காரணமாக ஒரு விவசாயியின் பயிர் அழிந்தது.

தாவரக் கருவளங்களை இயல்புபடுத்தல் இனப்பெருக்கம் செய்தல், புத்துயிரளித்தல்

தாவர கருவளங்களை பெருக்கம் செய்தல்

கௌபீயில் 42 சேகரிப்புகளும், தினையில் 25 சேகரிப்புகளும், பெருக்கம் செய்யப்பட்டு மரபணு வங்கியில் பாதுகாக்கப்பட்டன.

பண்புரு தொகுப்புகளை வெளியிடல்

2011 பெப்ரவரியில் தக்காளி, பீர்க்கு, கத்தரி என்பவற்றிற்கான பண்புரு தொகுப்புகள் வெளியிடப்பட உள்ளன.

செய்கைபண்ணப்படும் வெண்டி வர்க்கமான எம். ஐ 7 உடன் மஞ்சட் சித்திர வடிவ வைரசிற்கான எதிர்ப்பினை ஒன்றிணைத்தல்

மஞ்சட் சித்திர வடிவ வைரசிற்கு எதிர்ப்புக் கொண்ட மரபணுவை வழங்கும் பெற்றோராக அபெல்மொஸ்கஸ் எங்குலொசஸ் ஐக் பயன்படுத்தி செய்கைப்பண்ணப்படும் வெண்டி வர்க்கமான எம். ஐ 7 இற்குள் உயிரியற் தொழில்நுட்பப் பிரிவினால் உட்புகுத்தப்பட்டது. இது 40 சந்ததிகளை உருவாக்கியதோடு 2010/2011 கால போகத்தின் போது தோட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இவற்றில் விரைவில் 4வது பின்முகக் கலப்பு மேற்கொள்ளப்படும்.

கருவளங்களை இயல்புபடுத்தல்

தக்காளியில் (லைக்கோபேர்சிகொன் எஸ்கியுலான்டம் மில்) 23 சேகரிப்புகளும், பீர்க்கு (லூவ்பா எக்கியுடாங்கியுலா L) கத்தரி (சொலனம் மெலொன்ஜினா எல்) ஆகிய ஒவ்வொன்றிலும் 25 சேகரிப்புகள் வீதம் பண்புருப்படுத்தல் செய்யப்பட்டு சேனன்–வீவர் (எஸ் எச். டப்ளியு) உம், "நீ" இனது பல்லினச் சுட்டியும் ஒவ்வொரு காரணிக்கும் பொறுப்பான எதிருருக்களின் எண்ணிக்கையும் மேற்குறிப்பிட்ட பயிர்களில் கண்டு பிடிக்கப்பட்டு அவை முறையே அட்டவணை 3.1.5.3 4,5 ஆகியவற்றிற் தரப்பட்டுள்ளன. அதிகளவான ஒற்றுமை/வேற்றுமைகளைக் கொண்ட சேகரிப்புகளை இனங்காண கொத்துப் பகுப்பாய்வும் மேற்கொள்ளப்பட்டது.

அட்டவணை 3.1.5.3 தக்காளியில் பல்லினச் சூட்டிகளும், ஒவ்வொரு காரணியையும் பாதிக்கும் எதிருருக்களின் எண்ணிக்கையும்

காரணி	எஸ்.எச்	நீ	எதிருருக்கள்
பூக்க எடுக்கும் காலம்	1.6.7	0.741	7
மகரந்தம் முழுமையாக உருவாகிய நிலையில் மகரந்தக்கூட்டுடன் குறியின் நிலை	0.387	0.227	2
முதிர்ச்சியடைய எடுக்கும் காலம்	1.132	0.609	4
காயின் பிரதான வடிவம்	1.469	0.752	5
கனியின் புறத்தோற்ற நிறம்	1.616	0.756	7
பழத்தின் உறுதியான தன்மை	0.877	0.529	3
ஆரைக்குறிய வெடிப்பு	1.036	0.563	4
பழத்தின் நீளம்	2.834	0.938	18
பழத்தின் அகலம்	3.075	0.953	22
பீ.எச்	2.894	0.941	19
மொத்தமாகக் கரையும் திண்மங்கள்	3.015	0.949	21
பழத்தின் சராசரி நிறை	2.955	0.945	20

அட்டவணை 3.1.5.4 பீர்க்கில் பல்லினச் சூட்டிகளும், ஒவ்வொரு காரணியையும் பாதிக்கும் எதிருருக்களின் எண்ணிக்கையும்

காரணி	எஸ்.எச்	நீ	எதிருருக்கள்
பூக்க எடுக்கும் காலம் (கேசரத்திற்குரியது)	1.898	0.797	10
பூக்க எடுக்கும் காலம் (யோனிற்குரியது)	1.79	0.8	8
பச்சை நிலையில் அறுவடை செய்ய எடுக்கும் காலம்	1.459	0.736	5
முதிர்ச்சியடைய எடுக்கும் காலம்	1.839	0.826	7
காயின் நிறை	2.443	0.896	14

அட்டவணை 3.1.5.5 கத்தரியில் பல்லினச் சூட்டிகளும், ஒவ்வொரு காரணியையும் பாதிக்கும் எதிருருக்களின் எண்ணிக்கையும்

காரணி	எஸ்.எச்	நீ	எதிருருக்கள்
பூக்கும் பருவத்திற் தாவர உயரம் (ச.மீ)	3.165	0.957	23
பூக்க எடுக்கும் காலம்	1.771	0.779	8
உடற்றொழில் அடிப்படையில் கனிந்தநிலையில் பழத்தின் நிறம்	0.387	0.227	2
ஒரு தாவரத்திலுள்ள காய்களின் எண்ணிக்கை	1.40	715	5
ஒரு தாவரத்தின் காய் விளைச்சல் (உண்ணும் நிலை முதிர்ச்சி)	2.955	0.945	20
உண்ணும் நிலையில் காயின் நிறை	2.502	0.907	14

உயிரிதொழில்நுட்பம்

நெல் மூலவுயிருருவை மதிப்பிடலும், கபிலநிற தாவரத் தத்திகளிற்கு (நிலாபார்வட்டா லூஜென்ஸ் (ஸ்டோல்) அவற்றி ன் எதிர்ப்புத் தன்மை, பரம்பரை அலகுகளை இயல்பு படுத்தலும்

கபில நிறத் தாவரத் தத்தி எதிர்த்தாக்கத்திற்கு 60 நெல் மூலவுயிருருக்கள் தெரிவு செய்யப்பட்டதோடு, இவற்றில் 3 சேகரிப்புகள் எதிர்ப்புத் தன்மையையும், 14 சேகரிப்புகள் மத்தியளவான எதிர்ப்புத் தன்மையையும் கொண்டிருந்ததோடு மீதியானவை பாதிக்கப்பட்டன. வர்க்க அபிவிருத்தித் திட்டத்தில் கபில நிறத் தத்தி எதிர்ப்புத் தன்மைக்கான ஆதாரமாக எதிர்ப்புத் தன்மை கொண்ட மூலவுயிருருக்கள் மேலும் ஆராயப்பட்டன. அடுத்தடுத்த ஆய்வுகள் மூலக் கூற்று, பரம்பரையியல் ஆய்வின் ஊடாக எதிர்ப்புத் தன்மைக்குக் காரணமான மரபணுக்களை இயல்புபடுத்தலையும், வரைப்படமாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

நெல் மூலவுயிருருவை மதிப்பிடலும், பனிப்பூச்சி (ஸ்டென்கீட்டோதிரிப்ஸ் பைபோமிஸ்) இற்கு எதிர்ப்புத் தன்மையைப் இயல்பு படுத்தலும்

தாவரக் கரு மூலவள நிலையத்தின் வெளிக்கள நிலைமையில் பீடைகளிற்காக 135 மூலவுயிருருக்கள் கண்காணிக்கப்பட்டன. தஹனல அதிக எதிர் ப்புத் தன்மையைக் காட்டியது. சேகரிப்பு 3134, சேகரிப்பு 10941, சேகரிப்பு 3147, சேகரிப்பு 10508, சேகரிப்பு 10941, சேகரிப்பு 3147, சேகரிப்பு 3147, சேகரிப்பு 11522, சேகரிப்பு 11470, சேகரிப்பு 11489, என்பனவும் குறிப்பிடத்தக்களவு அதிகளவான எதிர் ப்புத்தன்மையைக் காட்டின. பல மூலவுயிருருக்கள் மத்தியவான எதிர்ப்புத் தன்மையையும் காட்டின.

வர்க்க அபிவிருத்தித் திட்டத்தில் எதிர்ப்புத் தன்மைக்கான மூலாதாரங்களாக இவ்வெதிர்ப்புத் தன்மை கொண்ட மூலவுயிருருக்கள் மேலும் ஆய்வு செய்யப்பட்டு, அவற்றிற்கான வாய்ப்புக்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அடுத்தடுத்த ஆய்வுகள் மூலக் கூற்று பரம்பரையியல் ஆய்வின் ஊடாக எதிர்ப்புத் தன்மைக்குக் காரணமான மரபணுக்களை இயல்புபடுத்துவதையும், வரைப்படமாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

நுண் முறையில் இனப்பெருக்கம் செய்யப்பட்ட புளி வாழையில் மூலக்கூற்று கலவியல் பகுப்பாய்வின் உடலியல் வேறுபாடுகளைக் கண்டுபிடித்தல்

வேறுபாடுகளை கொண்ட 7 தாவரங்கள் ஒரு ஆரோக்கியமான தாவரம் என்பவற்றின் DNA களுடன் PCR பகுப்பாய்வுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு பல்லுருத் தோற்றம் ஆராயப்பட்டது. வேறுபாடுகளைக் கொண்ட தாவரங்களிற்கிடையேயும் ஆரோக்கியமான தாவரங்களிற்கும், வித்தியாசமான தாவரங்களிற்கும் இடையிலும் ஏழு முன்னோடிகள் பல்லுருத் தோற்றப்பாட்டிகனைக் காட்டின. பல்லுருப் பட்டிகளைப் பகுப்பாய்வு செய்தபோது வித்தியாசமான தாவரங்களிற்கிடையில் 21% வேறுபாட்டைக் காட்டின. வேறுபாடுகளைக் கொண்ட தாவரங்களிற் கிடையில், ஆரோக்கியமான, வேறுபாடான தாவரங்களிற்கிடை யிலும், பரம்பரையியல் வேறுபாடுகள் காணப்பட்டதை கொத்துப் பகுபாய்வு தெளிவாகக் காட்டியது. நுண் இனப்பெருக்கம், இவ்வாழைத் தாவரங்களை உற்பத்தி செய்யும் போது ஏற்பட்ட உடலியல் மாற்றங்கள் இந்த மரபணு வேறுபாட்டிற்கான காரணமாக அமைந்திருக்கலாம்.

உள்நாட்டில் விருத்தி செய்யப்பட்ட 2 கலப்பினத் தக்காளி வர்க்கங்களான: பஹுதிய மஹேசி, சோளக் கலப்பினமான: சம்பத் என்பவற்றிற்கான தூய தன்மையைப் பரிசோதிப்பதற்கான மூலக்கூற்று அடையாளப்படுத்திகளை அபிவிருத்தி செய்தல்

பல்லுரு அடையாளப்படுத்திகளைக் கண்டு பிடிக்க எளிமையான தொடர் மீள் முன்னோடிகளுடன் சம்பந்தப்பட்ட உள்ளக, கலப்பினப் பெற்றோர் சந்ததிகளின் DNA ளுடன் PCR பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. 2010இன் போது இரண்டு தக்காளி கலப்பின வர்க்கங்களிற்கு 20 எளிமையான தொடர் மீள் முன்னோடிகளுடன் PCR பகுப்பாய்வு பூர்த்தி செய்யப்பட்டது. எனினும் இவற்றில் எந்தவொரு எளிமையான தொடர் மீள் முன்னோடியும் 2 கலப்பின வர்க்கங்களின் உள்ளகக் கலப்புப் பெற்றோர் சந்ததிகளில் பல்லுருவைக் காட்டவில்லை. பெற்றோர் சந்ததிகளிக்கிடையே பல்லுருவைத் தரக்கூடிய நம்பிக்கையான அடையாளப்படுத்திகளை இனங் காண்பதற்கு இந்த பகுப்பாய்வு மேற்கொள்ளப்படும்.

கலப்பின வர்க்கமான சம்பத் இற்கு 14 எளிமையான தொடர் மீள் முன்னோடிகளுடன் PCR பகுப்பாய்வு பூர்த்தி செய்யப்பட்டது. இரண்டு பெற்றோர் சந்ததிகளிற்கிடையே இரண்டு அடையாகப்படுத்திகள் பல்லுருவைக் காட்டின. இவற்றின் செயற்பாட்டை உறுதி செய்வதற்கு மேலும் ஆய்வுகள் மேற்க்கொள்ளப்படும். இவற்றின் மூலம் நம்பிக்கை தரும் முடிவுகள் பெறப்பட்டால் சம்பத் கலப்பின வர்க்கத்தின் வர்த்தக தொகுதிகளைப் பரிசோதிக்க மேற்குறிப்பிட்ட இரண்டு அடையாப்படுத்திகளையும் பயன்படுத்த முடியும்.

உள்ளக நிலைமைகளில் பாதுகாத்தல்

உள்ளக நிலைமைகளின் கீழ் 08 வாழைகள், 115 வற்றாளை, 60 வள்ளிக் கிழங்கு, 15 உருளைக் கிழங்கு மூலவுயிருருக்கள் பராமரிக்கப்பட்டன. மேலும் வற்றாளை, வள்ளிக் கிழங்கு, மூலவுயிருருக்களின் மீள் தோன்றல்களும் தாவர வீட்டில் சாடிகளில் பராமரிக்கப்பட்டன.

விசேட திட்டங்கள்

இலங்கை – ஐக்கிய அமெரிக்க திட்டம்

நுன் இனப்பெருக்கத்தின் ஊடாக வாழை, தேன் தோடை என்பவற்றின் நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்வது தொடர்பான இலங்கை – ஐக்கிய அமெரிக்க ஒத்துழைப்பு மூலவுயிருரு அபிவிருத்தித் திட்டத்தின் 1ம் இலக்கத் திட்ட நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்க்கொள்ளப்பட்டன. இது 2009 ஆகஸ்டில் ஆரம்பமாகியது. இதன் பிரதான நோக்கம் வாழை, தேன் தோடை என்பவற்றில் நோயற்ற நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்வதாகும். உள்ளக நிலைமையில் நுன் ஒட்டு முறையில் வாழை நுன் இனப்பெருக்கம், தேன் தோடை வர்க்கங்களில் மத்தியளவான நுன் – ஒட்டு என்பவற்றிற்காக சரியான நடைமுறைகளை விருத்தி செய்வதற்கு 2010 ஜனவரி முதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

வாழையில் நுன் இனப்பெருக்கம்

செவ்வாழை, அம்பன், பூவாழை, சீனி, அக்ரா (கோழி கூட்டு) கன்டுலு (இரு நோக்கங்கள்) பிரசாத் (கறி வாழை) புளதிசி (சமைப்பதற்கானது) என்பவற்றின் உள்ளக நிலைமையின் கீழான வளர்ப்புகள் ஸ்தாபிக்கப்பட்டன. அம்பன், பிரசாத், பூவாழை, புளி வர்க்கங்களின் சுமார் 177 தாவரங்கள் இனப்பெருக்கம் செய்யப்பட்டு அவை தற்போது வன்மைப்படுத்துகின்ற நிலையில் உள்ளன. இன்னும் ஒரு சில மாதங்களில் தோட்டங்களில் நடுவதற்கு இவற்றை விநியோகிக்கக் கூடியதாயிருக்கும். இத்திட்டத்தில் வாழையின் பல்வேறு வர்க்கங்களின் நுன் இனப்பெருக்கம் செய்யப்பட்ட 1000 வளர்ப்புகள் பல்வேறு வளர்ச்சி நிலைகளில் உள்ளதோடு சீனி, அம்பன், செவ்வாழை வர்க்கங்களின் 60 புதிய வெற்றிகரமான வளர்ப்புகள் 2010 இன் இறுதியில் ஆரம்பக் கட்டத்திற் காணப்படும்.

தேன் தோடையில் நுன் இனப் பெருக்கம்

தேன் தோடை வர்க்கங்களின் நுன், அரை நுன் ஆப்பொட்டில் அடிக்கட்டையாகப் பயன் படுத்த பல்வேறு சித்திரசு இனங்களின் விதைகள் சேகரிக்கப்பட்டன. இவ்வர்க்கங்கள் சிட்ரஸ் ஜம்பிறி (ரவ் லெமன், நீண்ட எலுமிச்சை, லீமா, யக்தெஹி) சிட்ரஸ் அவுரன்டியம் (புளி தோடை) சிட்ரஸ் மடுரென்சிஸ் லெளரிரோ அல்லது சிட்ரோபோர்டுனெல்லா மிடிஸ் (பிலிப்பைன்ஸ் சிவப்பு எலுமிச்சை) என்பவற்றை மேற்குறிப்பிடட வர்க்கங்கள் உள்ளடக்கியிருந்தன. இத்திட்டத்தின் கீழ் பல உள்ளக நிலைமை வளர்ப்பு ஒட்டுத் தாவரங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. எனினும் இதன் வெற்றியளித்த வீதம் குறைவானதோடு 2010 இன் இறுதியில் ஆரம்பக் கட்டத்திலுள்ள 60 சிறு தாவரங்களையும், வன்மைப்படுத்தும் நிலையிலும் 75 சிறு தாவரங்களையும் பெறக் கூடியதாயிருக்கும். அரை நுன் ஆப்பொட்டில் வெற்றியளிக்கும் வீதம் ஒப்பட்டளவில் அதிகமானதாகும். 2010இன் முடிவில் மத்தியளவான – நுன் ஆப்பொட்டில் 30 சிறு தாவரங்கள் ஆரம்பக் கட்டத்திலும், 60 சிறு தாவரங்கள் வன்மைப்படுத்தும் கட்டத்திலும் காணப்பட்டன.

தாவரக் கரு மூலவள தகவல் முகாமைத்துவத் தொகுதி

தாவரக் கரு மூலவள தரவுத்தளம்

தரவுத்தளத்தின் அபிவிருத்தி, தரவுத்தளத்தில் தரவுகளைச் சேர்த்தல் ஆகிய பணிகள் தொடர் ந்தும் மேற்கொள்ளப்பட்டதோடு, தற்போது இத்தரவுத் தளத்தின் 12,620 சேகரிப்புகளிற்கான கடவுச்சீட்டுத் தரவுகளையும், நெல், சோளம், தினை, சோயா அவரை, உழுந்து, கௌபீ, பாசிப்பயறு, துவரம் பருப்பு, நிலக்கடலை, அமரந்தஸ், போஞ்சி, சிறகவரை, பயற்றங்காய், கத்தரி, தக்காளி, கறிமிளகாய், வெண்டி, பூசணி, பாகல், புடோல், பீர்க்கு, கடுகு, எள்ளு உட்பட 25 பயிர்களின் பண்புத் தரவுகளையும் கொண்டுள்ளது.

உணவு விவசாய ஸ்தாபனம்; ஆசியாவில் தாவரக் கருமூலவளங்களைப் பாதுகாப்பதை ஊக்குவித்தலும் அவற்றை நிலைபோறாக் பயன்படுத்த வலுவூட்டலும்

உணவு விவசாயத்திற்கு தாவரக் கரு மூலவளங்களைப் பாதுகாக்கவும் அவற்றை நிலைபேறாக பயன்படுத்தவும் பூகோள செயற் பணிக்கான திட்டத்தினை மேற்கொள்ள ஒரு தேசிய பரிமாற்ற பொறி முறையை உருவாக்கல்

இலங்கை உட்பட்ட 150 நாடுகளின் பிரதி நிதிகள் கலந்து கொண்ட ஜெர்மனியிலுள்ள லிப்சிக் நகரில் 1996 ஜூனில் இடம்பெற்ற தாவரக் கரு மூலவளங்கள் தொடர்பான நான்காவது சர்வதேச மாநாட்டில் உணவு விவசாயத்திற்கு தாவரக் **கரு மூலவளங்களைப் பாதுகாக்கவும்** அவற்றை நிலை பேறாக பயன்படுத்தவும் பூகோள செயற்பணிற் கானத் திட்டம் முறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இத்திட்டம் உள்ளூர், தேசிய, பிராந்திய, சர்வதேச மட்டங்களில் இனங் காணப்பட்ட முன்னுரிமை அடிப்படையிலான பணிகளைக்

கொண்டுள்ளதோடு, உறுதியானதொரு அத்திவார த்துடன் பாதுகாப்பு, பயன்படுத்தற் பணிக்காக ஒரு பணிச் சட்டத்தையும் வழங்குகின்றது.

உணவு விவசாய ஸ்தாபனத்தின் 'ஆசியாவில் தாவரக் கரு மூலவளங்களைப் பாதுகாப்பதை ஊக்குவிக்கவும் அவற்றை நிலைப்பேறாகப் பயன்படுத்தவும் வலுவூட்டல்' (GCP/RAS/240/JPN) திட்டத்தின் கீழ் 2009 இலிருந்து அமுல் செய்யப்பட்ட பூகோள செயற்பணிக்காக திட்ட தேசிய தகவற் பரிமாற்ற பொறிமுறை 2010 இலும் தொடர்ந்தும் மேற்க்கொள்ளப்பட்டது. இதற்கமைய அதிகளவான பங்காளிகளின் ஒத்துழைப்புடன் தரவுத்தளம் காலத்திற்கேற்ப புதுப்பிக்கப்பட்டு மேம்படுத்தப்படும்.

திட்டத்தின் தேசிய பங்காளிகளின் முதலாவது பட்டறை தாவரத் கரு மூலவள நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டதோடு, நீர்கொழும்பிலுள்ள பரடைஸ் பீச் ஹோட்டலில் 2010 ஜூன் 14 முதல் 15 வரை இடம் பெற்றது. பல்வேறு பங்காளி நிறுவனங்களிலிருந்து மொத்தமாக 35 பேர் இதில் பங்குபற் றியிருந்தனர். திட்டத்தின் நோக்கங்களும் பின்பற்ற வேண்டிய நடைமுறை களும் நிறுவனத்தின் தலைவர்களிற்கு எடுத்துரை க்கப்பட்டதோடு தொடர்பு கொள்ள வேண்டிய நபர்களும் இனங்காணப்பட்டனர். திட்டத்தின் தேசிய பங்காளிகளின் இரண்டாவது பட்டறை பேராதனை, கன்னொறுவையிலுள்ள தாவரக் கரு மூலவள நிலையத்தில் 2010 ஆகஸ்ட் 27இல் இடம் பெற்றது. மொத்தமாக 49 பேர் இதில் பங்குபற்றி யதோடு திட்ட தேசிய தகவற் பரிமாற்ற பொறி முறை – பூகோள செயற்பணி திட்டத்திற்கான (NISM-GPA) கணினி மென் பொருள் பிர யோகமும் செய்து காட்டப்பட்டது. தரவுத் தளத்திற் கான அடிப்படைத் தகவல்களை வழங்குமாறு பங்காளிகளிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. 2010 நவம்பரில் தரவுகளை சேகரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

சர்வதேச உயிரியற் பல்லின வருடக் கொண்டாட்டம்

சர்வதேச உயிரியற் பல்லின வருடத்தை நினைவு கூறுவதற்காக தாவரக் கரு மூலவள நிலையத்தினால் 27 டிசம்பர் 2010இல் தம்பானை யிலுள்ள கலாசார நிலையத்தில் பயிற்சிப் பட்டறை யொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. இப்பட்டறை யின் நோக்கம் தாவரக் கரு மூலவளங்களை விவசாயத்திற்கென பாதுகாப்பதையும், அவற் றைப் பயன்படுத்துவதையும் ஊக்குவிப்பதற்காக விவசாயிகள், வேடுவ விவசாயிகளிடையே ஒருங்கிணைந்த திட்டங்களை அமுல் செய்வதும் ஆகும்.

ஹசலக்கப் பிரதேசத்தைச் சேர்ந்த இருபத்தியிரண்டு விவசாயிகள், 53 வேடுவர்கள், விவசாய திணைக்களத்தின் 31 அலுவலர்கள் தம்பானை கலாசார நிலையத்தைச் சேர்ந்த ஓர் அலுவலர் ஆகியோர் இப்பட்டறையில் பங்குபற்றி னர். வேடுவர்களின் தலைவரான ஊரு வரிகே வன்னியா (வன்னிலா எத்தோ) இங்கு கௌரவ விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்

உயிரியற் பல்லினத்தன்மை பற்றியதொரு அறிக்கை, கலந்துரையாடல், செய்துகாட்டல்கள்; மற்றும் தற்போதைய தாவரக் கரு மூலவளங்களை விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்காகப் பாதுகாத்தல், பயன்படுத்தல் திட்டத்தை ஆரம்பிப்பதையும், வலுவூட்டுவதையும் இலக்காகக் கொண்டு பொருட்களைப் பரிமாறல் என்பவற்றை இந்நிகழ்ச்சி உள்ளடக்கியிருந்தது.

வேடுவ தலைவரிற்கு விதை மாதிரிகள் வழங்கப்பட்டன. இது எள்ளு வர்க்கமான உமா, ஒரு கெக்கரி சேகரிப்பு ஒரு தினை சேகரிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது. வயற் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனத்திலிருந்து பெற ப்பட்ட இரண்டு மிளகாய் வர்க்கங்களும் (வன்னி மிளகாயும் , விருத்தி செய்யப்பட்ட பரம்பரையான எம்ஐசிஎச் –06) உம் இங்கு விநியோகிக்கப்பட்டன. இத்திட்டம் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும்

பயிற்சியும், விழிப்புணர்வு நிகழ்வுகளும்

60 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர் களிற்கும், 08 ஆசிரியர் குழுக்களிற்கும், பல்கலைக் கழகங்களின் 20 மாணவக் குழுக்களிற்கும், வன சீவராசிகள் திணைக்களத்தைச் சேர்ந்த அலுவலர் களின் நான்கு குழுக்களிற்கும், விவசாய கல்லூரி களைச் சேர்ந்த 03 மாணவக் குழுக்களிற்கும், 03 விவசாய சங்கங்களிற்கும், பொதுச் சுகாதார உத்தியோகத்தர் குழுவொன்றிற்கும், ஏனைய 04 குழுவினரிற்கும், 62 அறிவூட்டல் நிகழ்வுகள் நடாத்தப்பட்டன. மொத்தமாக 2262 பேர் இவற் றில் பங்குபற்றியிருந்தனர். நைவலையிலுள்ள உயர் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த 05 மாணவர்களிற்கும் இந்நிலையத்தில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

உயிரியல் தொழில்நுட்பப் பிரிவு பின்வரும் விசேட பயிற்சிகளையும் வழங்கியது.

- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வருகை தந்த மூன்று மாணவர்களுக்கு உயிரியல் தொழில்நுட்பம் தொடர்பான 03 மாதகாலப் பயிற்சி வழங்கப்பட்டது.
- களனி பல்கலைக்கழகத்திலிருந்து வருகை தந்த மூன்று மாணவர்களுக்கு உயிரியல் தொழில்நுட்பம் தொடர்பான 02 மாதப் பயிற்சி வழங்கப்பட்டது.

- றுஹுணு பல்கலைக்கழகத்திலிருந்து வருகை தந்த இரண்டு மாணவர்கள் 05 மாதங்கள் பயிற்றுவிக்கப்பட்டதோடு தங்களது பட்டப் படிப்பை நிறைவு செய்வதற்கான ஒரு பகுதியாக தமது ஆராய்ச்சிக் திட்டத்தைப் பூர்த்தி செய்தனர்.
- பேராதனை பட்டப்பின் விவசாயக் கல்வி நிறுவனத்தின் ஒரு மாணவர் ஆறு மாதகால பயிற்சியைப் பெற்றதோடு தனது விஞ்ஞான முதுமானி பட்டத்திற்கான ஆராய்ச்சி திட்டத்தையும் பூர்த்தி செய்தார்.

கண்காட்சிகள்

பள்ளேகலவில் இடம் பெற்ற தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் தாவரக் கரு மூலவ நிலையம் பங்குப்பற்றியதோடு பாதுகாப்புப் பணிகள், பயிர்களின் பல்லினத் தன்மை என்பன தொடர்பாகவும் பொது மக்களிற்கு எடுத்துக் காட்டியது.

2010 ஆம் ஆண்டுக்கான திட்டம்

- விசேடமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்டப் பிரதேசங்களில் கண்டு பிடிப்பதையும், சேகரிப்பதையும் தொடர்ந்தும் மேற்கொள்ளல்
- விதை மரபணு வங்கி, பரிசோதனைக் குழாய் வடிவம், பசிய வீடுகளில், வெளிக்கள மரபணு வங்கிகளில் பாதுகாப்பதை தொடர்ந்தும் மேற் கொள்ளல்
- மூலவுயிருருக்களை பரிமாற்றம் செய்வதை மேற்கொள்ளல்
- மஞ்சட் சித்திர வடிவ வைரசு நோயிற்கு எதிர்ப்புத் தன்மை கொண்ட வெண்டி வர்க்கம் எம். ஐ-7 இனை விருத்தி செய்வதற்கான பின்முக கலப்பு இனவிருத்தி நடைமுறையைத் தொடர்ந்து மேற்கொள்ளல்.
- கபிலநிறத் தாவரத்தத்தி நிலாபாவட்டா லூஜன்ஸ் (ஸ்டோல்); பனிப்பூச்சி, ஸ்டென் கீட்டோதிறிப்ஸ் பிபோட் ஆகியவற்றுக்கான நெல் மூலவுயிருருவினை மதிப்பிடுதலும், இயல்புபடுத்தலும்.
- உள்ளூரில் விருத்தி செய்யப்பட்ட கலப்பின வர்க்கங்களான தக்காளி, கத்தரி, சோளம் என்பவற்றின் கலப்பினத் தன்மையைப் பரிசோதிக்க டிஎன்ஏ அடையாளப்படுத்திகளை அடிப்படையாகக் கொண்ட செயன்முறைகளை அபிவிருத்தி செய்தல்
- ராம்பூர் வெங்காய வர்க்கங்களின் விதைகளிற் கிடையே பரம்பரை தூய நிலையைப் பகுப்பாய்வு செய்வதற்கு மூக்கூற்று பகுப்பாய்வு
- வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் விருத்தி செய்யப்பட்ட சோளத்தின் உள்ளகக் கலப்பின தோன்றல்களிடையே உள்ள மரபணு உறவுகளை ஆராய்தல்.
- நுன் ஆப்பொட்டு மூலம் நோய்களற்ற வாழை, தேன் தோடை நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்தல்
- நெல் மூலவுயிருருக்களின் தோற்றவமைப்பு, மூலக்கூறுகளை வரட்சிக்கு இயல்புபடுத்தல்.
- உயிரியற் தொழில்நுட்பம், மரபணு மாற்றப்பட்ட அங்கிகள், மரபணு மாற்றப்பட்ட உயிரினங்களின் ஆபத்து மதிப்பீட்டு, உணவு, தீவனங்கள், பதப்படுத்தப்பட்ட பொருட்கள் என்பவற்றில் விழிர்ப்புணர்வூட்டல், செய்து காட்டல்கள், பயிற்சிகள்
- தற்போதைய தகவல் முகாமைத்துவ தொகுதியை பராமரித்தலும், மேம்படுத்தலும்.

அலுவலர்களின் பட்டியல்

பதவி நிலை	எண்ணிக்கை
பிரதிப் பணிப்பாளர்	01
ஆராய்ச்சி அலுவலர்கள்	08
நிர்வாக அலுவலர்	01
நிகழ்ச்சி திட்ட உதவியாளர்கள்	03
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	08
விவசாய போதனாசியர்கள்	05
ஆராய்ச்சி உதவியாளர்கள்	04
ஆய்வு கூட உப உதவியாளர்கள்	05
அலுவலகத் தொழிலாளி	01
சினிமா இயக்குபவர்	01
சாரதிகள்	04
களஞ்சியப் பொறுப்பாளர்கள்	01
லொறி சுத்தகரிப்பாளர்	01
தச்சர்	01
மின்னியலாளர்	03
சுற்றுலா விடுதிக் காப்பாளர்	01
காவலாளிகள்	06
தொழிலாளர்கள்	21
மொத்தம்	79

3.2 விதை மற்றும் நடுகைப்பொருட்கள் அபிவிருத்தி நிலையம், பேராதனை

விதைகள் மற்றும் நடுகைப்பொருட்கள் அபிவி ருத்தி நிலையத்தின் நோக்கம் தரம் உறுதிப்படுத்தப்பட்ட விதைகள் மற்றும் நடுகைப்பொருட்களை நியாயமான விலையில் இலங்கையிலுள்ள விவசாய சமூகத்தி ற்கு வழங்குவதாகும். நாட்டின் விதையுற்பத்தியில் விதைகள் மற்றும் நடுகைப்பொருட்கள் அபிவிருத்தி நிலையம் முக்கிய பங்கு வகிக்கிறது. சிபாரிசு செய்யப்பட்ட உள்ளூர் இனங்களுக்கான அடிப்படை விதைகள், விதைகள் மற்றும் நடுகைப்பொருட்கள் அபிவிருத்தி நிலையத்தின் கீழுள்ள 18 அரச விதை உற்பத்திப் பண்ணையில் உற்பத்தி செய்யப்படு கிறது.

மேலும் நெல், மறுவயற்பயிர், மரக்கறி வகைகளின் சிபாரிசு செய்யப்பட்ட விதையுற் பத்தியானது தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக் கமக்காரர்களினூடாக உற்பத்தி செய்யப்படுகிறது. விதைகள் மற்றும் நடுகைப்பொருட்கள் அபிவிருத்தி நிலையம் தனது செயற்பாடுகளை 13 பிராந்திய உதவி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) ஊடாக மேற் கொண்டு வருகிறது.

பாதீடு

அட்டவணை 3.2.1: வருடாந்த பாதீடு – 2010 (ரூபா)

தலைப்பு/திட்டம்	*மொத்த ஒதுக்கீடு (ரூபா.மில்லியன்)*	*மொத்தச்செலவு (ரூபா.மில்லியன்)*	*செலவு %*
பொதுவான மூலதனம் (திரட்டு நிதி)	18.85	18.40	97.6%
பொதுவான நடைமுறைச் செலவு (திரட்டு நிதி)	53.22	51.39	96.6%
விதை உற்பத்தியும் கொள்வனவும்	174.5	163.56	93.7%
"நாம் பயிரிடுவோம் நாட்டைக் கட்டி எழுப்புவோம்"	5.75	4.91	85.4%
கூட்டெரு உற்பத்தி	0.5	0.02	4.0%
கலப்பின சோள விதையுற்பத்தி	1.275	0.79	61.9%
நீர்ப்பாசன வசதிகள்	13.0	11.2	86.2%
"நாம் பயிரிடுவோம் நாட்டைக் கட்டி எழுப்புவோம் – அன்னாசி"	0.546	0.306	56.0%
மொத்தம்	***267.6***	***250.6***	***93.6%***

முன்னேற்றம்

விதைநெல் உற்பத்தியும், வழங்கலும்

அரச விதை உற்பத்திப் பண்ணைகளில் அடிப்படை விதை நெல் உற்பத்தி

சிபாரிசு செய்யப்பட்ட 28 நெல் இனங்களின் அத்திவார, பதிவு செய்யப்பட்ட விதை நெல் வகுப்புகள், 7 அரச விதை உற்பத்திப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டது. அத்திவார விதைகள் பத்தலகொட நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், போம்புவல பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், அம்பாந்தோட்டை நெல் ஆராய்ச்சி நிலையம், லபதுவ விவசாய ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றில் உற்பத்தி செய்யப்படுகிறது. 2010 ஆம் ஆண்டில் 105,243 புசல் (2,157.5 தொன்) பதிவு செய்யப்பட்ட விதைநெல் உற் பத்தி செய்யப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 6.42% அதிகமாகும். மேலும் அரச விதையுற் பத்திப் பண்ணைகளின் அடிப்படை விதையுற்பத்தி செய்யப்படாத நிலங்களில் சிபாரிசு செய்யப்பட்ட விதை உற்பத்தி செய்யப்பட்டது. இவற்றுடன் சிபாரிசு செய்யப்பட்ட விதையும் தரம் தாழ்த்தப்பட்ட அடிப்படை விதைகளுமாக மொத்தமாக 17,729 புசல் (363.5 தொன்) சிபாரிசு செய்யப்பட்ட விதைகள் அரச விதையுற்பத்திப் பண்ணைகளில் 2010 இல் உற்பத்தி செய்யப்பட்டது.

அட்டவணை 3.2.2: 2010 ஆம் ஆண்டில் அரச விதையுற்பத்திப் பண்ணைகளில் விதை நெல் உற்பத்தி (Mt)

விதைப்பண்ணை	2009/10 பெரும்போகம்			2010 சிறுபோகம்			மொத்தம்		
	FSP	RSP	CSP	FSP	RSP	CSP	FSP	RSP	CSP
அளுத்தரம	10.72	140.06	75.79	5.55	79.48	46.17	16.27	219.54	121.96
அம்பலாந்தோட்டை	1.93	65.99	19.06	1.84	39.87	44.36	3.77	105.86	63.42
பட்டாஅத்த	1.09	23.70	19.23	1.27	12.05	29.33	2.36	35.75	48.56
கந்தளாய்	8.63	266.87	1.72	13.75	250.20	2.93	22.38	517.07	4.65
மஹஇலுப்பள்ளம	22.86	212.50	66.97	15.27	169.08	–	38.13	381.58	66.97
மல்வத்த	11.77	174.66	43.62	8.92	150.62	3.98	20.69	325.28	47.60
பொலன்னறுவ	16.23	242.00	10.29	11.91	330.40	–	28.14	572.4	10.29
மொத்தம் (தொன்)	*73.23*	*1125.78*	*236.68*	*58.51*	*1031.70*	*126.77*	*131.74*	*2157.48*	*363.45*
மொத்தம் (தொன்)	*3572*	*54916*	*11546*	*2855*	*50327*	*6184*	*6426*	*105243*	*17729*

ஒப்பந்தக் கமக்காரர்களினூடாக சிபாரிசு செய்யப்பட்ட விதை நெல் உற்பத்தி

ஒப்பந்த கமக்காரர்களினூடாக சிபாரிசு செய்யப்பட்ட விதை நெல் உற்பத்தியானது விதை நடுகைப் பொருள் அபிவிருத்தி நிலையத்தினால் 2009/10 காலபோகம் மற்றும் 2010 சிறுபோகம் என்பவற்றிற்குமாக 60,000 புசல் இலக்காக நிர்ணயிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டது. (ஒரு போகத்திற்கு 30000 புசல்). பொருத்தமான காலநிலை, உயர் விலை காரணமாக விவசாயத் திணைக்களத்தினால் 83,776 புசல் விதை நெல் கொள்வனவு செய்யப்பட்டது. அட்டவணை 3.2.3ல் காட்டப்பட்டவாறு 9 பிராந்திய விதை நடுகைப் பொருள் அபிவிருத்தி நிலையத்தினால் 2010 ஆம் ஆண்டில் விதை நெல் கொள்வனவு செய்யப்பட்டது.

வர்த்தக ரீதியாக நெற் செய்கையில் தரமான விதைநெல் பாவனையை அதிகரிப்பதற்காக தனியார் நிறுவனங்களை உள்ளடக்கிய பல்வேறுபட்ட நிறுவனங்களுடனான பங்களிப்புடன் இணைந்த தரமான விதை நெல் உற்பத்தித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் அடிப்படை விதை நெல் வழங்கப்பட்டு விவசாயத் திணைக்களத்தின் விதை அத்தாட்சிப்படுத்தும் சேவையின் உதவியுடன் சிபாரிசு செய்யப்பட்ட விதை நெல் உற்பத்தி செய்யப்பட்டது. மேலும் தரமான விதை நெல் உற்பத்தியை உறுதிப்படுத்துவதற்காக இடைநிலை விதைப்பண்ணை திட்டத்தின் கீழ் அத்திவார விதை நெல் வழங்கப்பட்டது.

பல்வேறுபட்ட அரச, தனியார் நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்பட்ட சிபாரிசு செய்யப்பட்ட விதை நெல் அளவுகள் அட்டவணை 3.2.4 இல் தரப்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்களால் உண்மையில் உற்பத்தி செய்யப்பட்ட விதை நெல்லின் அளவு அட்டவணையில் தரப்பட்ட அளவிலும் அதிகமாகும். ஏனெனில் சில தனி யார் கம்பனிகள் திணைக்கள விதை அத்தாட்சிப்படுத்தல் திட்டங்களின் கீழ் பங்குகொள்வதில்லை. அவை தமக்கென சொந்தமான தரக்கட்டுப்பாட்டு முறைகளைக் கைக்கொள்கின்றனர். திணைக்களத்தின் கீழான சிபாரிசு செய்யப்பட்ட விதை நெல்லாக 17624.18 தொன் (859718 புசல்) 2010 இல் உற்பத்தி செய்யப்பட்டது. (அட்டவணை 3.2.4) இது மொத்த விதை நெல் தேவையில் 15.6% ஆகும். 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 6% அதிகரிப்பு காணப்பட்டது. சிபாரிசு செய்யப்பட்ட விதை நெல் பாவனை ஏறத்தாழ மொத்த விதை நெல் தேவையில் 15% ஆகக் காணப்படுவது திருப்திகரமான நிலையாகும்.

அட்டவணை 3.2.3: சிபாரிசு செய்யப்பட்ட விதை நெல் கொள்வனவு

உதவி விவசாயப் பணிப்பாளர் பிராந்தியம்	கொள்வனவு செய்யப்பட்ட அளவு 2009/2010 பெரும்போகம் (தொன்)	2010 சிறுபோகம் (தொன்)	மொத்தம் (தொன்)	மொத்தம் (புசல்)
அநுத்தரம	147.8	129.48	277.29	13527
அம்பாறை	255.7	191.04	446.74	21792
பட்டாஅத்த	42.13	67.22	109.35	5334
கந்தளாய்	59.79	132.89	192.68	9399
மஹஇலுப்பள்ளம	103.09	48.95	152.04	7417
நிகவெரட்டிய	131.34	142.27	273.61	13347
பெல்வெஹர	31.65	37.82	69.47	3389
பொலன்னறுவ	42.60	103.33	145.96	7120
வவுனியா	50.24	–	50.24	2451
மொத்தம் (தொன்)	*864.36*	*853.05*	*1717.41*	
மொத்தம் (தொன்)	*42163.74*	*41612.47*		*83776*

அட்டவணை 3.2.4: இணைந்து சிபாரிசுசெய்யப்பட்ட விதைநெல் உற்பத்தி

நிறுவனம்	காலபோகம் 2009/10		2010 சிறுபோகம்		வருடம் 2010		உற்பத்தி	
	வழங்கப்பட்ட விதைநெல் லின் அளவு (மெ.தொ)	சிபா. செய்.நில. அளவு (ஏக்.)	வழங்க. விநெல். அளவு (மெ.தொ)	சிபா.செ. நிலத்தின் அளவு (ஏக்.)	வழங்கப். விதைநெல். அளவு (மெ.தொ.)	சிபாரிசு செய்ய. நி.அளவு (ஏக்கர்)	மெ.தொ	பு ச.
விவ.திணைக்களம்							1706.9	3265
மாகாணம்	93.05	2153.0	93.21	1879.5	186.26	4032.5	3720.0	181463
மாகா.இடை	58.26	1187.5	45.98	1034.5	104.24	2222.0	2049.8	99990
கமநல சேவை	15.27	272.5	35.53	811.5	50.8	1084.0	10000.0	48780
மஹாவலி	33.97	781.5	15.21	281.0	49.18	1062.5	980.2	47813
- மத்திய வங்கி அறிக்கை, வரவு செலவுத்திட்ட உரைக்கான தகவல்களை வழங்குதல்
- 50 மில்லியனுக்கும் மேலான கருத்திட்டங்களின் முன்னேற்ற அறிக்கைகளைத் தொகுத்தல்

பணிக்குழுவினர்

பதவியணி	*இல*
பிரதிப் பணிப்பாளர்	01
விவசாயப் பொருளியலாளர்	02
மொழி பெயர்ப்பாளர்	03
வேலைத்திட்ட உதவியாளர்	02
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	02
சாரதி	03
கே.கே.எஸ்	01
தொழிலாளி	03
காவலாளி	02
மொத்தம்	***19***

3.5 இயற்கை வள முகாமைத்துவ நிலையம் (இ.வ.மு.நி.) பேராதனை

இ.வ.மு நிலையம் தேசிய உற்பத்தியை நிலை பேறாக்கும் வண்ணம் விருத்தி செய்வதற்கும், நில, நீர் வளங்களை விஞ்ஞான அடிப்படையில் அனுகூலமான முறையில் பயன்படுத்துவதற்கும் முயற்சிக்கின்றது. மண் பாதுகாப்பும் நீரேந்து பிரதேச முகாமைத்துவமும் பற்றிய ஆராய்ச்சி நிலப் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுதல், பயிர் கண்காணிப்பும் முன்னறிவிப்பும், விவசாய வானியல், மற்றும் கால நிலை மாற்றம் நிலத்தின் உற்பத்தித் திறனை மேம்படுத்தல், மண் மற்றும் நீரின் தரம் பண்ணையிடத்திலான நீர்பாசன முகாமைத்துவம் என்பன இந்நிலையத்தின் செயற்பாடுகளாகும். நாட்டின் விவசாய வானியல் அவதான நிலைய வலையமைப்பினைப் பேணுதல், மண் பாதுகாப்புச் சட்டத்தை அமுல்படுத்துதல், தொழில் நுட்பத்தைப் பரப்புதல், சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பான தொழில்நுட்ப உதவியினை வாடிக்கையாளருக்கு வழங்குதல், பல்வேறு அபிவிருத்தி கருத்திட்டங்களை சூழல் ரீதியாக மதிப்பிடுதல் என்பன நிலையத்தின் ஏனைய பொறுப்புக்களாகும்.

பாதீடு

அட்டவணை 3.5.1: வருடாந்த பாதீடு (ரூபா) 2010

தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	% செலவு
மூலதனம்	2,173,000.00	1,324,934.00	61
மீண்டுவரும் செலவு கருத்திட்டங்கள்	2,226,500.00	1,804,003.00	81
மழை நீரின் சேமிப்பு	1,300,000.00	653,616.00	50
மண் பாதுகாப்பு சட்டத்தை அமுல்படுத்தல்	968,000.00	384,103.00	49
வாரி புபுதுவ	495,991.00	488,939.00	99
வரட்சி தணிப்பு கருத் திட்டங்கள்	225,000.00	221,118.00	98
நில அபிவிருத்தி திட்டங்கள்	191,200.00	97,840.00	51
மொத்தம்	***7,579,691.00***	***4,974,552.00***	***66***

முன்னேற்றம்

ஆராய்ச்சி

இலங்கையின் பிரதான நெற் செய்கை பிரதேசங்களில் பெரும்போகத்திலும் சிறு போகத்திலும் மழை ஆரம்பிக்கும் காலத்தை தீர்மானித்தல்

உலர் வலயத்திலும் இடை வலயத்திலும் உள்ள நெற்செய்கை பண்ணப்படும் 03 சூழல் தொகுதிகளின் பிரதான நீர்ப்பாசன கால்வாய்களை அண்டிய பிரதேசங்கள் சிறு நீர்ப்பாசனக் கால்வாய்களை அண்டிய பிரதேசங்கள் மழை நீரைக் கொண்டு செய்கைபண்ணப்படும் பிரதேசங்கள் ஆகிய வற்றில் சிறுபோக பெரும் போகங்களிலும் பிரதான நீர்ப்பாசனக் கால்வாய்களை அண்டிய பிரதேசங்கள் மட்டுமே மழை வீழ்ச்சியுடன் குறைந்தளவான இசைவுத் தன்மையை காட்டுகி றது. இவ்விரு மழைக் காலங்களும் குறுகிய தாகையால் பயிர் வளர்ச்சிக்கு தேவைப்படும் இப் பெறுமதிமிக்க காலம் பயனின்றி விரயமாவதைத் தடுப்பதற்காக கூடிய வரையில் விரைவாக நெற் பயிரை வயலில் ஸ்தாபிப்பது மிக முக்கியமான தாகும். இலங்கையில் பிரதான நெற் செய்கைப் பிரதேசங்களில் பெரும் போகத்திலும் சிறு போகத்திலும் மழை ஆரம்பிக்கும் கால எல்லையை தீர்மானிப்பதற்காக கடந்தகாலங்கள் மீது அவதா னம் செலுத்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டு போகங்களில் பொதுவாக மழை ஆரம்பிக்கும் காலத்தில் தனித்துவமான பரம்பல் காணப்படுவது இவ் ஆய்வின் மூலம் கண்டறி யப்பட்டது. எவ்வாறாயினும் காலநிலை மாற்றம் காரணமாக மழை வீழ்ச்சிக் கால எல்லையில் மாற்றம் ஏற்பட்டாலும் கூட நாட்டின் பிரதான நெற் செய்கை பிரதேசங்களில் பொதுவாக மழை ஆரம்பமாகும் காலம் மாற்றமின்றியிருந்தது.

கண்டி மாவட்டத்தில் மலைநாட்டு வன தோட்ட செய்கை முறையின் கீழ் பழப்பயிர் களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்

மலை நாட்டு வனத் தோட்டச்செய்கை முறை யின் கீழ் பழச்செய்கை தொடர்பில் தாக்கம் செலுத்தும் நிலம் தொடர்பான வரையறைகளை இனங்காணல் உயர் முகாமைத்துவ முறைகளூடாக ஒழுங்கமைப்பதற்காக நடவடிக்கைகளை எடுக்கும் நோக்குடன் 2006 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாய்வுப் பணிகள் நிறைவு செய்யப்பட்டன. இவ் ஆய்வின் போது மண், சமூக பொருளா தாரம் நிலம் தொடர்பான வரையறைகள் என்பன இனங்காணப்பட்டன. பழச் செய்கைக்காக நிழல் அற்ற இடங்களை தெரிவு செய்தல், தடை கொண்ட கான்களை பயன்படுத்தி மண் பாதுகாப்பை மேற்கொள்ளல், நீர் விரயமாவதை தடுப்பதற்காக தோண்டப்பட்ட ஊடுருவும் குழிகளை பயன் படுத்தல், தனித்தள மேடைகளைப் பயன்படுத்துதல், மண்ணீரின் கிடை அசைவு நீர்குழிகளைப் பயன் படுத்தி மழை நீர் முகாமைத்துவம், நாற்றுக்களைப் பாதுகாக்கும் நுண் வேலிகள், பழக் கன்றுகளை பாதுகாப்பதற்காக பயிர் நடுகைக்கு மூன்று வாரங்களிற்கு முன்னர் குழிகளில் சுண்ணாம்பு இடுதல் நடுகை செய்யும் போது குழிகளில் சாணம் இடுதல், பழங்கள் காய்க்கும் காலம் வரைக்கும் சிபாரிசு செய்யப்பட்ட அளவில் இரசாயனப் பசளையிடுதல் தேவையான அளவில் பீடைக் கட்டுபாட்டை மேற்கொள்ளல் பழ மரங்களில் சிபாரிசு செய்யப்பட்ட விதத்தில் கத்தரித்தல் பயிற்றுவித்தல் செயற்பாடுகளை மேற் கொண்டு பொருத்தமான விதானத்தை பெற்றுக் கொள்ளல். என்பன சிபாரிசு செய்யப்பட்டன. இத் தொழில் நுட்பம் தொழில்நுட்ப வெளியீட்டுக் குழுவுக்கு சமர்ப்பிப்பதற்கு ஏற்பாடாகியுள்ளது.

கண்டி மாவட்டத்தில் மலைநாட்டு வனத்தோட்ட செய்கை முறையின் கீழ் மீண்டும் மரக்கறிச் செய்கையை அறிமுகம் செய்தல்

மலை நாட்டு வனத் தோட்டச் செய்கையின் கீழ் மரக்கறிச் செய்கையில் தாக்கம் செலுத்தும் நிலம் தொடர்பான வரையறைகளை இனங்காணுவதற்கும் மரக்கறிச் செய்கையை மீள அறிமுகப்படுத்துவத ற்கும் உயர் முாமைத்துவ பொதி ஒன்றை ஒழுங்கமைத்தல் செயற்பாடுகளை மேற் கொள்ளவதற் குமாக ஐந்து விவசாயிகளின் பங்குபற்றலுடன் 2009 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இவ் ஆய்வுப் பணிகள் நிறைவு செய்யப்பட்டன. உலோகத் தட்டொன்றில் வைக்கப்பட்ட மண் கொண்ட சாடிகளில் மரக்கறி களை செய்கை பண்ணுவதற்காக உலோகக் கட்ட மைப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டதோடு இத் தொழில்நுட்பம், தொழில்நுட்ப வெளியீட்டுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நீர்பாசன மூலமான விவசாயத்தின் போது பண்ணை மண் முகாமைத்துவத்திற்காக வயற் துண்ட எண்ணக்கருவை உருவாகுதல் (மண் பரிசோதனைக்கும் உரச் சிபாரிசுக்குமான எளிய முறை)

கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவர் நிலையத்தினாலும் (CIDA) யப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிலையத்தினாலும் (JICA) கிடைக்கப்பெற்ற நிதியுதவிகளை பயன்படுத்தி மண் பரிசோதனைகளையும் உரச் சிபாரிசுகளையும் மேற் கொள்ளவதற்காக தொலையுணர்த்தும் மற்றும் புவியியற் தகவல் முறைகள் (GIS) தொழில்நுட்பத்தி ற்கு அடிப்படையான விவசாயகளின் பங்குபற்றலுட னான குறைந்த செலவினைக் கொண்ட பல் நோக்கு செயற்பாடுடைய முறையொன்றை உருவாக்கி களத்திலே பரிசோதிக்கப்பட்டது. இம்முறையை வயலிலே பரிசோதித்து உறுதிப்படுத்துவதற்காக வறிய மக்களின் பொருளாதார முன்னேற்றமும் சமூக முன்னேற்றமும் தொடர்பாக பணியாற்றும்

கருத்திட்டமொன்றின் (PEACE) நிதியினைப் பயன்படுத்தி கல்கமுவை அம்பகொலவெல மற்றும் சிராவஸ்திபுர ஹித்தோகம ஆகிய கிராமங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவ் ஆய்வுகளின் மூலம் இதனை களத்தில் பயன் படுத்துவது பொருத்தமானதென காட்டப்பட்டது.

செங்குத்தான நிலங்களின் பாரிய நில நகர் வினால் ஏற்பட்ட மேற்பரப்பு விரயத்தை சீர்செய்ய குறைந்த செலவில் விரைவாகப் பாதுகாப்பு அரண்களை ஏற்படுத்தல்

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்துடன் (NBRO) சேர்ந்து பேராதனை நகரின் மண் சரிவை சீர்திருத்தி உறுதியாக்கும் வேலைத்திட்டத்தில் குறைந்த செலவில் உள்ளூரில் பெற்றுக் கொள்ளக் கூடிய மூலப்பொருட்களை கொண்டு செங்குத்தான நிலங்களின் இருந்து பாரிய நில நகர்வினால் ஏற்பட்ட மேற்பரப்பு விரையத்தை சீர்செய்து ஸ்திரப்படுத்தும் பாதுகாப்பு அரண் அபிவிருத்தி செய்யப்பட்டு பரீசிலனைகுட்படுத்தபட்டது. இவ் அணுகு முறை சில படிமுறைகளை உள்ளடக்கியது. விரயமான மேற்பரப்பை மட்டம் செய்தல், வளர்ச்சி ஊடகங்களைக் கொண்டு அப்பரப்பை 15cm ஆழத்திற்கு காப்புச் செய்தல், வளர்ச்சி ஊடகத்தை 2cm தடிப்பில் உக்கிய தாவர மீதிகளால் மூடுபடை இடல், இம் மூடுபடையின் மேலாக உலோக வலையை வைத்து வலையை பூமியுடன் பெரிய ஆணிகள் (ஆப்பு) கொண்டு இறுக்கல். தாவர வெட்டுத் துண்டங்களைப் பயன்படுத்தி ஒரு உயிர் மூடுபடையை உருவாக்கி அதனைப் பராமரித்தல்.

இம் முறை விருத்தி செய்யப்பட்டு பரீசிலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஆரம்ப பிரதிப்பலன்கள் மிகவும் வெற்றிகரமாக நடாத்திச் செல்லக் கூடியதும் மேற்பரப்பு விரையத்தையும் மண் அரிப்பையும் தடுத்து உறுதிப்படுத்தக்கூடிய ஒரு முறையென காட்டியது.

சூற்றளவு, மண் மற்றும் பயிர் பொருத்தபாட்டு ஆய்வுகள்

பட்டஅத்த, நீராவிய, அம்பேபுஸ்ஸ பண்ணைகளில் மேற் கூறிய ஆய்வுகள் முடிந்துள்ளது. நிலவுகின்ற காலநிலை தரவுகளைக் கொண்டு வரைபடங்கள் மற்றும் பயிர்களுக்கான பொருத்தப்பாட்டு அறிக்கை என்பன தயாரித்து சமர்பிக்கப்பட்டுள்ளது.

பண்ணைகளின் விஸ்தீரணங்கள் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 3.6.2 ஆய்வுக்குட்படுத்தப்பட்ட நிலப்பரப்பு

பண்ணை	விஸ்திரணம்
பட்டஅத்த	600 ஏக்கர்
நராவிய	400 ஏக்கர்
அம்பேபுஸ்டே	200 ஏக்கர்
தொளுவ பிரதேச செயலக பிரிவு	80 ஏக்கர்

''தேயிலை சிறு தொழில் முயற்சியாளர்' வேலைத் திட்டத்தில் 80 ஏக்கர் காணி மண் பாதுகாப்பு திட்டத்திற்குக் குறிப்பிடப்பட்டு விவசாய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொலுவை கிராம சேவையாளர் பிரிவில் பல இடங்களில் ஆரம்பிக்கப்பட்டது.

தொழில்நுட்பத்தை பரப்புதல்

மண், நீர் பாதுகாப்பு அதனுடன் தொடர்புடைய பயிற்சிகள்

- 71 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு மண் பாதுகாப்பும் நில அபிவிருத்தியும் பற்றிய இரு 5 நாள் பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டன.
- வடமேல் மாகாண விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த 40 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு மண் பாதுகாப்பும் நில அபிவிருத்தியும் பற்றிய 4 நாள் பயிற்சி வகுப்பு நடாத்தப்பட்டது.
- விவசாய தொழில் முயற்சி அபிவிருத்தி தகவல் சேவை (AgEdis) யுடன் கூட்டாக வர்த்தக ரீதியில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள 30 விவசாயிகளுக்கு மண் பாதுகாப்பு, நில அபிவிருத்தி பற்றிய 3 நாள் பயிற்சி நடாத்தப்பட்டது.
- மண் பாதுகாப்பு, நீரேந்து பிரதேச முகாமைத்துவம் பற்றிய இரண்டு 2 நாள் பயிற்சிகள் தென் மாகாண விவசாயத் திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கும் ஹதபிமையைச் சேர்ந்த விவசாயிகளுக்கும் நடாத்தப்பட்டதோடு இதில் 50 பேர் கலந்து கொண்டனர்.
- மண் பாதுகாப்பு, நீரேந்து பிரதேச முகாமைத்துவம் மற்றும் நில அபிவிருத்தி பற்றிய ஐந்து ஒரு நாள் பயிற்சிகள் 681 மாணவர்களுக்காகவும் விவசாயிகளுக்காகவும் நடாத்தப்பட்டது.
- 460 தோட்டத் தொழிலாளர்களுக்கு 'பிளான் சிறி லங்கா' (Plan sri lanka) உடன் கூட்டு சேர்ந்து மண் பாதுகாப்பு பற்றிய 22 ஒரு நாள் பயிற்சிகள் நடாத்தப்பட்டது.

- சர்வதேச விவசாய அபிவிருத்திற்கான நிதியை (IFAD) பெறும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி கருத்திட்டத்தினை முன்னின்று நடாத்தும் 380 விவசாயிகளுக்கு நிலப் பாவனை திட்டமிடல் பற்றிய 12 ஒரு நாள் பயிற்சிகள் நடாத்தப்பட்டன.
- தென் மாகாண விரிவாக்கற் உத்தியோகத்தர்கள், 'வேல்ட் விசன் சிறிலங்கா' தாபனத்தின் நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் ரஜரட்ட பல்கலைகழக விவசாய பீட மாணவர்களுக்கும் மழை நீரை சேமித்து அறுவடை செய்தல் பற்றிய 3 நாள் பயிற்சி நடாத்தப்பட்டது.

மண், நீர் பாதுகாப்பு பற்றிய செய்து காட்டலும், கண்காட்சியும்

- நாட்டிலுள்ள வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த இறுதிப் பயனாளிகளின் நலன் கருதி தற்போதுள்ள மண் பாதுகாப்பு, நீரேந்து முகாமைத்துவ தொழில்நுட்பங்களை செய்து காட்டும் நோக்குடன் 2004 ஆம் ஆண்டு கன்னொறுவ விவசாயப் பூங்காவில் அமைக்கப்பட்டு இச் செய்து காட்டல் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதற்கிணங்க 7,647 விவசாயிகள் 62,995 பாடசாலை மாணவர்கள் 5,411 ஆசிரியர்கள் 17,337 பொது மக்கள் இச் செய்து காட்டல் பகுதிக்கு வருகை தந்தனர்.
- கலன் பிந்துனுவெவ பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மரதன்கல்ல கிராமத்தில் செய்துகாட்டல் மேற்கொள்ளப்பட்டது. நீரேந்துப் பிரதேசத்தில் அமைந்துள்ள 50 ஹெக்டயார் நிலப்பரப்பொன்றில் 21 விவசாயிகளுக்கு சொந்தமான அண்ணளவாக 20 ஹெக்டயார் மானவாரி மேட்டு நிலங்கள் 10,077m நீளமான மண் அணைக்கட்டுகளைக் கொண்டு நுட்பமாக பாதுகாக்கப்பட்டன.
- பலுகஸ்வெல, தனமல்வில பிரதேச செயல பிரிவில் மழை வீழ்ச்சியின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக மழை நீர் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் பற்றிய இரண்டு செய்து காட்டல்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இச் செய்துகாட்டல்கள் பலுகஸ்வெவவில் உள்ள இரண்டு விவசாயிகளுக்கு சொந்தமான 3 ஏக்கர் நிலப்பரப்பையும் தனமல்விலயில் உள்ள 4 விவசாயிகளுக்கு சொந்ததமான 4 ஏக்கர் நிலப்பரப்பையும் உள்ளடக்கியது.
- 2010 பெப்ரவரி குண்டசாலை (தயட்ட கிருல) தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் செய்து காட்டல் இடமும் கண்காட்சி கூடமும் அமைக்கப்பட்டது.
- 2010 செப்டெம்பர் பட்டஅத்த பண்ணையில் விவசாயிகள் வாரம் (கொவி சத்திய) கண்காட்சியில் செய்து காட்டலும் கண்காட்சி கூடமும் அமைக்கப்பட்டது.

தொலைக் காட்சி வானொலி நிகழ்ச்சிகள்

- மண் பாதுகாப்பு, நீரேந்து பிரதேச முகாமை, மழை நீர் பெற்றுக் கொள்ளல் தொடர்பான 5 தொலைக்காட்சி, 4 வானொலி நிகழ்ச்சிகளில் அலுவலர்கள் பங்கு பற்றினார்கள்
- உலக நீர் தினம் 2010ல் 'சுகாதாரத்திற்காக நீர்' என்ற தலைப்பில் ஒரு செயலமர்வு 95 பேரின் பங்குபற்றலுடன் நடாத்தப்பட்டது.

தொழில் நுட்ப உதவி

வெவ்வேறு வாடிக்கையாளர்களுக்கு நிபுணத்துவம் வாய்ந்த தொழில்நுட்ப உதவியினை வழங்குவது நிலையத்தின் பிரதான செயற்பாடுகளில் ஒன்றாகும். இவ்வாண்டு நிலையம் பின் வரும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கியது.

- மகாவலி அதிகார சபையின் நிரவியா பண்ணையில் மண் ஆய்வு செய்தமையும் அதன் 40 ஹெக்டயர் நிலத் துண்டுகளுக்கான நிலப் பொருத்தபாட்டு வரைபடத்தை தயாரித்தமையும்.
- பேராதனை நகரில் பாரிய மண் சரிவினால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் மேற் பரப்புக்களையும் NBRO வின் வேண்டுகோளுக்கிணங்க நிலைப்படுத்தலில் உதவியமை.
- மாவதுர– ஹதபிம பயிற்சி பண்ணையில் மண் பாதுகாப்பை விருத்தி செய்தலும் பராமரித்தலும்
- வர்த்தக ரீதியான பண்ணை அபிவிருத்தியை பற்றிய ஒரு பயிற்சி மாதிரியை சிறிய அளவிலும் மத்திய தர அளவிலும் AgEdis க்காக தயாரித்தல்
- வர்த்தக ரீதியான பண்ணை அபிவிருத்திக்காக நில அபிவிருத்தி சம்மபந்தமான சிறிய மற்றும் மத்திய அளவிலான திட்டங்களை AgEdis க்காக தயாரித்தல்.

ஏனைய செயற்பாடுகள்

மண் பாதுகாப்பு சட்டத்தை அமுல்படுத்தல்

- சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு தேவையான தகவல்களை வழங்குவதன் மூலம் புதிய சட்ட திருத்தங்களின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளும் பணி தொடர்ந்து மேற் கொள்ளப் பட்டது.

தரவுத் தளத்தைப் பேணல்

- பல்வேறு வாடிக்கையாளர்களுக்கு தகவல்களை வழங்குவதற்காக விவசாய காலநிலை, நில, நீர் வளங்கள் பற்றிய தரவுத்தளம் பேணப்பட்டது.

விவசாய வானிலை அவதான நிலைய வலையமைப்பினை பேணுதல்

- 70 மழை அளவீட்டு நிலையங்களுடன் 28 வானிலை அவதான நிலையங்கள் உள்ளடக்கிய விவசாய வானிலை அவதான வலையமைப்பை உலக சுகாதார அமைப்பின் (WHO) பிரமாண ங்களுக்கேற்ப பராமரிக்கப்பட்டது.

தொழில் நுட்ப குழுக்களின் பங்குபற்றல்கள்

கீழ் வரும் விடயங்களுக்கு இ.வ.மு.நி பணிப் பாளர்கள் தங்களின் சேவையை வழங்கினர்.

- வடமாகாணத்திற்காக முலோபாய சுற்றாடல் மதீப்பீட்டு நிகழ்ச்சி நிரலை வழங்கினர்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தொழில் நுட்ப குழுக்கள் பல்வேறு கருத்திட்டங்களுக்கு சுற் றாடல் பாதுகாப்பிற்கான உத்தரவாத்தை வழங்கி யது. உதாரணமாக; காணியை பிரித்தல் (30 துண்டு கள்) மெட்டல் கற் ஆலைகள் (10) சிறிய நீர்மின் விநியோகத் திட்டங்கள் (50) வெட்டு மரங்கள் மூலம் பலகை பெற்றுக் கொள்ளல் (60)

- மஹாவலி அதிகார சபையின் நீர் முகாமைத்துவ குழாமின் உறுப்பினராக சேவையாற்றியது.

2011 ஆம் ஆண்டிற்கான திட்டம்

ஆராய்ச்சி

- தெரிவு செய்யபட்ட விவசாய சுற்றுச் சூழல் பிராந்தியங்களில் பருவகாலங்களுக்கிடையில் வேளாண்மை செய்வதற்கான பொருத்தப்பாட்டை தீர்மானிப்பதற்கான மழை வீழ்ச்சித் தரவுகள் பற்றிய ஆழமான பகுப்பாய்வு
- இலங்கையில் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் வரட்சியினால் விவசாயத்திற்கு ஏற்படக்கூடிய தாக்கத்தை மட்டுப்படுத்துதல்
- கண்டி பிராந்திய வீட்டுத் தோட்டங்களில் விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்கான சிபாரிசுகளை விருத்தி செய்தல் வட்டபொல கிராமத்தில் ஒரு நேரடி விடய ஆய்வு.
- உலர் வலயத்தில் பெரிய அளவிலான மானாவாரி சோள– எள்ளு சுழற்சி முறை பயிரி டுதலில் உற்பத்தியை அதிகரிப்பதற்கான சிபா ரிசுகளை விருத்தி செய்தல்: மரதன்கல்ல கிரா மத்தில் ஒரு நேரடி விடய ஆய்வு
- மண் ஈரலிப்புக் களஞ்சியம், பரம்பல் மீதான மழைநீரைப் பெற்றுக் கொள்ளும் நுட்பங்களி னால் ஏற்படுத்தும் தாக்கத்தை மதிப்பிடுதல்.
- பல்வேறு பயிர் வளர்ப்பு முறைகளுக்கான வினை திறன் மிக்க நீர்வள முகாமைத்துவத்தை அறிமுகப்படுத்தல்.
- வினைத் திறனான நீர் முகாமை பிரயோகத்தை கொண்டு நிலத்தில் இருபோகங்களிலும் பயிர் செய்யும் வகையை அறிமுகப்படுத்துவதற்காக நிலத்தையும், நீர் சேமிப்பு துறை செயல் விளக்க த்தையும் அடையாளம் காணல் (நில அபிவிருத்தி மற்றும் மழை நீரை பெற்றுக் கொள்ளும் முறை).
- பருவகாலங்களுக்கிடையேயான பயிர்ச் செய் கையை ஊக்குவிப்பதற்காக சரியான (DL1a) நிலப்பகுதிகளை இனம் காணல்
- மகாவலி நிலப்பகுதியில் இருந்து தகுதிவாய்ந்த நிலங்களை பயிர் விதானத்திற்காக (பல்வகைப் பயிர்களை பயிரிட) இனங்காணல்.
- வட பிராந்தியத்தில் வர்த்தக அளவிலான விவசாயத்திற்கு பொருத்தமான புதிய நிலங்களை இனங் காணல்
- வட பிராந்தியத்தில் கைவிடப்பட்ட நிலங்களை விவசாயத்திற்காக இனங்காணல்
- கிழக்கு மாகாணத்திலுள்ள நெற் காணிகளின் கணிப்பீடும் விளைச்சலை எதிர்வு கூறலும்.
- இலங்கையின் விவசாய சூழல் உப வலயங்களை முன்னரை விட சிறப்பாக்கல்.
- இலங்கையின் மண் வளங்கள் பற்றிய வரைப் படங்களை மேம்படுத்துதல் (வட பிராந்தியத்தின் மண் மாதிரி ஒன்றின் வரைபட விளக்கம்)
- வட பிராந்திய ஆழமற்ற நீரையும் நீரின் தரத்தையும் மதிப்பிடுதல்
- விவசாய சூழல் பகுதிகளில் வரட்சியடைந்த நிலங்களை அடையாளம் காணுதல்
- வரட்சியை தடுப்பதற்கான தொழில்நுட்பத்தை அடிப்படையாக கொண்டுள்ள நிலங்களை அபிவிருத்தி செய்தல்
- நில அடிப்படையில் வரட்சித் தணிப்பின் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்தல்.
- அதிக ஈரப்பதன் தாக்கத்தை தகுந்த தொழில்நுட்பங்களின் ஊடாக தடுத்தல்
- சிறுபோக அடிப்படையில் மண் முகாமைத்துவத்தை அபிவிருத்தி செய்தல்

தொழில்நுட்பத்தைப் பரப்புதல்

- மண் மற்றும் நீரினைப் பாதுகாத்தல், இயற்கை வள முகாமைத்துவம் பற்றி அலுவலர்கள், விவசாயிகளுக்கான பயிற்சி
- சிபாரிசு செய்யப்பட்ட மண் பாதுகாப்பு நடவடிக்கைகளை செய்து காட்டல்
- விவசாயத்திற்காக மழை நீரை சேமித்தல் பற்றிய செயலமர்வு (உலக நீர் தின செயலமர்வு)
- மொனராகல மாவட்டத்தில் விவசாய வரட்சியின் தாக்கங்களைக் குறைத்தல்

தொழில்நுட்ப உதவி

- அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக மண் பாதுகாப்பு, வெள்ள நீர் வடிகாலமைப்பு முகாமைத்துவத் திட்டங்களைத் தயாரித்தல்
- மண், நீர் பாதுகாப்புத் தொடர்பான தொழில்நுட்ப உதவியினை பல்வேறு முகவர்களுக்கு வழங்குதல்

ஏனையவை

- மண் பாதுகாப்புச் சட்டத்தை அமுல்படுத்துதல்
- விவசாய காலநிலை, நிலம், நீர் வளங்கள் பற்றிய தரவுத்தளத்தைப் பேணுதல்.
- விவசாய வானியல் அவதான வலையமைப்பினைப் பராமரித்தல்
- அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்குவதற்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள், சுற்றாடல் கண்காணிப்புக் குழுக்கள் போன்ற தொழில்நுட்பக் குழுக்களில் பிரதிநிதித்துவம் வகித்தல்.

அலுவலர்களின் பட்டியல்

பதவி நிலை	எண்ணிக்கை
மேலதிகப் பணிப்பாளர்	01
ஆராய்ச்சி அலுவலர்கள்	07
விவசாய அலுவலர்	02
பாட விதான விசேடத்துனர்	01
ஆராய்ச்சி உதவியாளர்	02
விவசாய போதனாசியர்கள்	06
நிகழ்ச்சி திட்ட உதவியாளர்	03
மண் ஆய்வாளர்	05
உப ஆராய்ச்சி உதவியாளர்	02
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	07
KKS	01
சாரதி	01
காவலாளி	02
தொழிலாளி	03
மொத்தம்	48

3.6 விரிவாக்கல், பயிற்சி நிலையம் பேராதனை

உணவு பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற் காகவும் விவசாய சமூகத்தின் வாழ்க்கைத் தர த்தினை மேம்படுத்துவதற்காகவும் உணவுப் பயிர் துறையில் உச்ச அளவிலான உற்பத்தித் திறனை அடைதல் விரிவாக்கல் பயிற்சி நிலையத்தின் நோக்கமாகும். இப்பிரிவின் நடவடிக்கைகள் ஐந்து பிரதான பரப்புகளை நோக்காகக் கொண்டவை; விரிவாக்கல், பயிற்சி, தொடர்பாடல், கல்வி, மற்றும் பரீட்சை என்பனவாகும். இப்பிரிவின் நோக்கங்களை அடைவதற்காக பின்வரும் நடவடிக்கைகளை குறித்த அலகுகளினால் மேற் கொள்ளல் வேண்டும்.

- பாரிய நீர்பாசன திட்டங்களில் ஆறு மாகாணங்களுக்கிடைப்பட்ட அலகுகளினால் மேற்கொள்ளப்படுகின்ற நேரடியான விரி வாக்கல் நிகழ்ச்சிகள்
- குறித்த பிரதேசங்களின் மகாவலி அதிகார சபை, மாகாண விவசாய திணைக்களம் என்பவற்றின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுகின்ற விரிவாக்கல் நிகழ்ச்சிகள்
- விரிவாக்கல் அலுவலர்கள், விவசாயிகள், தொழில் முயற்சியாளர்கள் ஆகியோருக்கும் ஏனையவர்களுக்கும் சேவைக்கால பயிற்சி நிலையம், மாவட்ட விவசாய பயிற்சி நிலையங்கள், மற்றும் பண்ணை இயந்திர வியல் பயிற்சி நிலையங்கள் என்பவற்றில் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- குண்டசாலை, பெல்வெஹர, அங்குணகொல பெலஸ்ஸ, வவுனியா, கரபிஞ்சா ஆகிய விவசாயப் பாடசாலைகளில் இரண்டு வருட விவசாய டிப்ளோமா பாட நெறிகளை நடாத்துதல்.
- பண்ணை ஒலிபரப்பு அலகுகள், ஒலி, ஒளி நிலையம், அச்சகம், மற்றும் தகவல் நிலையம் என்பவற்றினால் மேற் கொள்ளப்படுகின்ற இலத்திரனியல் அச்சுப் பதிப்பு ஊடகங்களின் மூலம் தகவல்களை சேகரித்தல், முகாமைத்துவம் செய்தல், பரம்பலடையச் செய்தல்.
- நடமாடல் விரிவாக்கல் நிகழ்ச்சிகள், இளம் விவசாயிகள் கழகச் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- தேனீ அபிவிருத்தி அலகுகள் இரண்டிலும் விவசாய அபிவிருத்திப் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வளமாக்கி பிரிவின் மூலம் பசளை அலகின் சேதன விவசாய நிகழ்ச்சிகளை மேற்கொள்ளல்
- விவசாய நிறுவன அபிவிருத்தி, மறு வயற் பயிர்கள் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பிபிலை பூங்கனியியல் பயிர்கள் பயிற்சி அபிவிருத்தி நிலையத்தில் பூங்கனியியல் பயிர்கள் தொடர்பான பயிற்சி, அபிவிருத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல்.

விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி உதவியாளர் களுக்கு வாரியப்பொலை, அனுராபுதரம், லபுதுவ விவசாயப் பாடசாலைகளிலும் பிபிலை பூங்கனியில் பயிர்கள் பயிற்சி, அபிவிருத்தி நிலையத்திலும் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துதல்

பாதீடு

பல்வேறு தலைப்புகளின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் செலவீனங்களை அட்டவணை 3.6.1 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 3.6.1: வருடாந்த பாதீடு ஒதுக்கீடு -2010 (ரூபாய்)

தலைப்பு	ஒதுக்கீடு	செலவீனம்	செலவீனம் %
மூலதனம்	27,200,000	20,038,000	74
மீண்டு வரும் செலவு	130,720,000	94,150,000	91
கருத்திட்டங்கள்			
பயிற்சி தகுதி மேம்பாடு	8,000,000	7,484,000	94
விவசாயப் பயிற்சிப் பண்ணைகள்	16,000,000	14,618,000	91
ஊடக நிகழ்ச்சித் திட்டம்	18,000,000	17,400,000	97
உணவுப் போசணைப் பாதுகாப்பினை			
பிரபல்யப்படுத்தல்	905,000	653,000	72
தேன் உற்பத்தியை அதிகரித்தல்	540,000	540,000	100
சமூகம் சார்ந்த விதை உற்பத்தி	600,000	514,600	86
பயிர் வளர்ப்போம் நாட்டைக் கட்டி எழுப்புவோம்			
எனும் நிகழ்ச்சியின் கீழ் ஊடக நிகழ்ச்சிகள்	7,850,000	7,850,000	100
நுண் நீர்ப்பாசனம் மூலம் பழ, மரக்கறிகள்			
உற்பத்தி திறனை அதிகரித்தல்	9,700,000	3,477,000	36
சேதன வளமாக்கி உற்பத்தி பயன்பாட்டினை			
ஊக்குவித்தல்	48,500,000	30,826,000	64
வீட்டுத் தோட்டம்	6,000,000	5,900,000	98
நெல் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டம்	2,000,000	2,000,000	100
மொத்தம்	***249,015,000***	***205,450,600***	***83***

முன்னேற்றம்

விஷேட கருத்திட்டங்கள்

1. பயிற்சியும் தகுதி மேம்பாடும்

இந்த கருத்திட்டத்தின் கீழ் முன்று உப கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

- விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களுக்கான ஒரு வருடப் பயிற்சி; இந்த கருத்திட்டத்தின் மூலம் 222 விவசாய ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளர்கள் பயிற்றப்பட்டனர்.
- விவசாயப் பாடசாலையில் பயிற்சியும் தகுதி மேம்பாடும்; விவசாய டிப்ளோமா பாட நெறியின் கற்பித்தல் செயன்முறையின் தரத்தினை மேம்படுத்துவதற்காக ரூபா 2.142மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.
- சேவை கால பயிற்சி நிலையம் பண்ணை இயந்திர மயமாக்கல் பயிற்சி நிலையம் என்பவற்றில் தகுதிமேம்பாட்டு வசதிகளையும் அதிகரித்தல்.
- 03 பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சி வசதிகள் மேம்படுத்தப்பட்டதுடன் மற்றும் பயிற்சி ஆதாரங்களும் வழங்கப்பட்டன.
- கண்ணொறுவ சேவை கால பயிற்சி நிலையத்தின் கணினி வசதிகளை மேம்படுத்துதல்.
- விடுதியின் தரமும் கொள்ளளவும் அதிகரிக்கப்பட்டன.
- பயிற்சி வகுப்புக்களுக்கான வசதிகள் மேம்படுத்தப்பட்டன.

விவசாய பயிற்சிப் பண்ணைகள்

இக் கருத்திட்டத்தின் கீழ் விவசாயப் பாடசாலைகளினதும், சேவைக்காலப் பயிற்சி நிலையங்களினதும், மாவட்ட விவசாய பயிற்சி நிலையங்களினதும் பயிற்சிப் பண்ணை நிலங்கள் மேம்படுத்தப்பட்டன.

ஊடக நிகழ்ச்சிகள்

- 100 தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு, ஒளிப்பரப்பப்பட்டன.
- 1400 வானொலி நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு ஒலிப்பரப்பப்பட்டன.
- 2,409,272 தொழில்நுட்ப பிரசுரப் பிரதிகள் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

வீட்டுத் தோட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

அனுராபுதரம், அம்பாரை, அம்பாந்தோட்டை, ஹசலக, மொனராகலை, பொலன்னறுவை, ஆகிய மாகாணங்களுக்கிடைப்பட்ட பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட 7700 வீட்டுத் தோட்டங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. இவ்வீட்டுத் தோட்டங்களுக்கு விதை, நடுகைப் பொருட்கள் வழங்கப்பட்டன. மேலும் அரகன்வில, அங்குனகொலபெலஸ்ஸ சேவைக்கால பயிற்சி நிலையங்களிலும் வீரவிலை மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்திலும் அனுராபுதரம், கரபிஞ்ச, லபுதுவ, பெல்வேஹர, வவுனியா, அங்குணகொலபெலஸ்ஸ வாரியபொல ஆகிய இடங்களிலும் மாதிரி வீட்டுத் தோட்டங்கள் அமைக்கப்பட்டு தற்போது இருப்பவை தரம் மேம்படுத்தப்பட்டன. மேலதிகமாக, பூங்கனியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனத்திலுள்ள வீட்டுத் தோட்டம் மேம்படுத்தப்பட்டது.

பண்ணை மகளிர் அமைப்பினால் உணவு போசணை ஊக்குவிப்பு

50% பங்களிப்புடன் விவசாயிகளுக்கு நடமாடும் விற்பனைப் பிரிவுகள் வழங்கப்பட்டன. தேசிய மட்டத்திலான உணவு, போசணை தொடர்பான கேள்வி பதில் நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.

தேசிய தேன் உற்பத்தி அதிகரிப்பு

- இக்கருத்திட்டத்தின் கீழ் 30 தேன் உற்பத்தி கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு 5 பயிற்சி நிலையங்கள் உருவாக்கப்பட்டின.
- 100 உத்தியோகத்தர்களுக்கு 650 தேன் உற்பத்தியாளர்களுக்கும் விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டன.
- 400 தேனீப் பெட்டிகளும் 200 புகையூட்டிகளும் உற்பத்தி செய்யப்பட்டன.

பழச் செய்கையிலிருந்து உயர் விளைச்சலை பெற்றுக்கொள்வதற்காக நுண் நீர்ப்பாசன தொகுதிகளை அமைத்தல்

- நுண் நீர்ப்பாசன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதனூடாக பழ உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக விவசாயிகளுக்கு 122 நுண் நீர்ப்பாசன தொகுதிகள் மானிய விலையில் வழங்கப்பட்டன.
- நுண் நீர்ப்பாசன தொழில்நுட்பம் தொடர்பான 22 பயிற்சிகள் நடாத்தப்பட்டன.

தனியார் அளவில் "குறுஷி சேவா பியஸ" எனும் விவசாய வழங்குதல் நிலையங்கள் ஆரம்பிக்கப்படல்

மாவட்ட மட்டத்தில் "குறுஷி சேவா பியஸ" அமைப்பதன் மூலம் தகவல்களையும், உள்ளீடுகளையும் விவசாயிகளுக்கு வழங்குவதே இக்கருத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். 2010 ஆம் ஆண்டின் இறுதியில் 19 நிலையங்களை தாபிப்பதே பிரதான நோக்கமாகும்.

விவசாய தொழில்நுட்ப பூங்கா, கண்ணொறுவ,

இரு தொழில்நுட்ப பூங்காக்கள் பின்வரும் காரணங்களுக்காக பயன்படுத்தப்படும்.

- உயிருள்ள தாவர மாதிரிகளை கொண்டு தொழில்நுட்பத்தை மரிமாற்றம்
- புதிய, பழைய விவசாய தொழில்நுட்ப செயன்முறை கல்வி
- உள் நாட்டு வெளி நாட்டு சுற்றுலா பயணிகளிடத்தில் விவசாய சுற்றுலாத் துறையை முன்னேற்றல்
- விவசாய தொழில்நுட்ப தகவல்களை வழங்குகின்ற மத்திய நிலையமாக செயற்படும்.
- கண்னொறுவையிலும் பட்டஅத்தவிலும் அமைந்துள்ள எக்ரோ பூங்கா எக்ரோ தொழில்நுட்ப பூங்கா என்பவற்றிக்கு 202,584 பார்வையாளர்கள் 2010 ஆம் ஆண்டில் வருகை தந்தனர்.

சேதன வளமாக்கி உற்பத்தி, ஊக்குவித்தல் நிகழ்ச்சி

சேதன பசளை உற்பத்தி தொடர்பாக 253 உத்தியோகத்தர்களுக்கும் 5293 விவசாயிகளுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

பசுந்தாட் பசளை விவசாயம் தொடர்பான 1309, ஒருங்கிணைந்ததாவர போசணைத் தொகுதி தொடர்பாக 3466 செயன்முறை பயிற்சிகள் நடாத்தப்பட்டன.

விவசாய விரிவாக்கல் சேவை- மாகாணங்களுக்கிடைப்பட்ட பகுதிகளில்

கீழே தரப்பட்ட அட்டவணையில் 2010ம் ஆண்டு மாகாணங்களுக்கிடைப்பட்ட பகுதியில் மேற்கொண்ட விரிவாக்கல் நடவடிக்கைகள் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 3.6.2 : மாகாணங்களுக்கு இடைப்பட்ட பிரதேசத்தில் விரிவாக்கல் நடவடிக்கைகள்

	IPஅனுராபுரம்		IP பொலன்னறுவை		IPமொனராகலை		IPகண்டி		IPஅம்பாறை		IPஅம்பாந்தோட்டை		மொத்தம்	
காட்டிகள்	2009/10	2010	2009/10	2010	2009/10	2010	2009/10	2010	2009/10	2010	2009/10	2010	2009/10	2010
	பெரும் போகம்	சிறு போகம்	பெரும் போகம்	சிறு போகம்	பெரும் போகம்	சிறு போகம்	பெரும் போகம்	சிறு போகம்	பெரும் போகம்	சிறு போகம்	பெரும் போகம்	சிறு போகம்	பெரும் போகம்	சிறு போகம்
யாய நிகழ்ச்சியின் மொத்த நிலப்பரப்பு(ha)	29527	12553	31598	27404	13057	3417	13503	9688	75195	59006	15353	15465	178233	127533
யாய நிகழ்ச்சியின் நிலப்பரப்பு(ha)	1085	1239	14846	16834	816	1230	1613	76	42551	40325	10159	8492	71070	68196
விவசாயிகளின் எண்ணிக்கை	1641	3631	15718	13627	945	1390	2180	1305	26702	27335	12386	10258	59572	57546
யாய எண்ணிக்கை	156	104	534	535	74	65	111	1086	1105	1195	239	215	2219	3200
அதிக விளைச்சல் முன்மாதிரி யாய எண்ணிக்கை (சருகெத)														
நிலப்பரப்பு(ha)	537	695	1501	1732		77	1167	947	9550	9793	1250	1111	14005	14355
விவசாயிகளின் எண்ணிக்கை	867	1194	1213	1786		90	1635	76	10150	10182	1028	990	14893	14318
யாய எண்ணிக்கை	126	68	117	128		6	70	59	497	494	66	44	876	799
பாரிய அளவிலான புதிய வர்க்கங்கள் அறிமுகம்(VAT)	3	3	3	4	2		4	3			3	3	15	13
சிறிய அளவிலான அறிமுகம் (VAT)			2	31	8			7			1	2	11	40

அட்டவணை 3.6.3 : மாகாணங்களுக்கு இடைப்பட்ட பிரதேசத்தில் விரிவாக்கல் நடவடிக்கைகள்

	IPஅனுராபுரம்		IP பொலன்னறுவை		IPமொனராகலை		IPகண்டி		IPஅம்பாறை		IPஅம்பாந்தோட்டை		மொத்தம்	
காட்டிகள்	2009/10	2010	2009/10	2010	2009/10	2010	2009/10	2010	2009/10	2010	2009/10	2010	2009/10	2010
	பெரும் போகம்	சிறு போகம்	பெரும் போகம்	சிறு போகம்	பெரும் போகம்	சிறு போகம்	பெரும் போகம்	சிறு போகம்	பெரும் போகம்	சிறு போகம்	பெரும் போகம்	சிறு போகம்	பெரும் போகம்	சிறு போகம்
விவசாயிகளின் எண்ணிக்கை	4180	4885	19885	14215	1442	2178	11600	8652	2550	25581	11591	9820	51248	65331
யாய எண்ணிக்கை	156	104	534	535	74	65	111	1086	1105	1195	239	215	2219	3200
மண் வளம்; உமிக்கரி பாவனை நிலப்பரப்பு(ha)	500	147	1616	823	80	94	185	393	950	972	1448	1305	4779	3734
விவசாயிகளின் எண்ணிக்கை			16	83	6		35		37	33	14	8	108	124
மண் வளம்; உமிக்கரி பாவனை நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	310	2469	5710						45780	46891	4069	4081.2	52318	56992.2
விவசாயிகளின் எண்ணிக்கை		4491	7814						25050	25054	3841	3489	33382	36357
மாதிரிகளின் எண்ணிக்கை			1	5	1						16		21	2

அட்டவணை 3.6.4 : மாகாணங்களுக்கு இடைப்பட்ட பிரதேசத்தில் விரிவாக்கல் நடவடிக்கைகள்

	IPஅனுராபுரம்		IP பொலன்னறுவை		IPமொனராகலை		IPகண்டி		IPஅம்பாறை		IPஅம்பாந்தோட்டை		மொத்தம்	
காட்டிகள்	2009/10	2010	2009/10	2010	2009/10	2010	2009/10	2010	2009/10	2010	2009/10	2010	2009/10	2010
	பெரும் போகம்	சிறு போகம்	பெரும் போகம்	சிறு போகம்	பெரும் போகம்	சிறு போகம்	பெரும் போகம்	சிறு போகம்	பெரும் போகம்	சிறு போகம்	பெரும் போகம்	சிறு போகம்	பெரும் போகம்	சிறு போகம்
CSP உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம் நிலப்பரப்பு(ha)	122	317	202	16.2	52	62	84.6	760	741	168.1	295.2	1445.3	1374.8	
ஏனைய நிறுவனங்களுடனான விதைநெல் உற்பத்தி நிலப்பரப்பு(ha)	112.4	208	272	115		12.2	8.6	280	265	13	55.2	689.6	651.8	
IPM நிகழ்ச்சி நிலப்பரப்பு(ha)	292	202	262	410	63	102	11	815	698	346	597	1817	1981	
IPM யாய எண்ணிக்கை	28	23	18	6	10	15	32	27	25	30	118	96		
நெல் மறுவயற்பயிர் மரக்கறி பழங்கள் பயிற்சிகளின் எண்ணிக்கை	181	104	259	432	176	91	503	366	2606	677	405	191	4126	1861
இப்பருவத்தின் புதிய விவசாய சங்கங்கள் எண்ணிக்கை (பெரும் சிறு போகம்)	234	213	263	473	57	76		254	705	374	407	1182	1874	

அபிவிருத்தி நடவடிக்கைகள்

நெல் உற்பத்தித் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக வருட ஆரம்பத்தில் ரூபா 13.4 மில்லியன் ஒதுக்கப்பட்டது.இரண்டாவது காலாண்டில் இந்நிதியானது ரூபா 2.0 மில்லியனாக வரையறுக்கப்பட்டது. மாகாணங்களுக்கிடைப்பட்ட பிரதேசத்தில் இந்நிலைமையின் கீழ் சிறந்த பெபேறுகள் கிடைக்கப் பெற்றன.யாய நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் உற்பத்தியின் தரத்தினையும் அளவினையும் அதிகரிப்பதற்கான விவசாயிகள் பயிற்சி, தாவர நோய் ஆய்வு நிகழ்ச்சி முன்மாதிரிச்செய்கைகள் போன்ற பல்வேறு தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் நாம் பயிரிடுவோம் எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நெற்காணிகளின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக மாகாண, இடை மாகாண பிரதேசங்களில் இடைப் பருவ பயிர்ச் செய்கை ஊக்குவிக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் இக்கருத்திட்டத்தினால் பின்வரும் அடைவுகள் பதியப்பட்டன.

யாய களங்களின் எண்ணிக்கை 758

யாயவின் கீழுள்ள நிலப்பரப்பு 19,585 ha

பயிற்சிகளின் எண்ணிக்கை 2,483

பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை 17, 967

சேவைக்கால பயிற்சி நிலையம்- கண்ணொறுவை

விவசாய உத்தியோகத்திர்கள், தொழில் முயற்சியாளர்கள், விவசாயிகள், விவசாயத்தில் ஆர்வமுள்ளவர்கள் போன்றோரின் அறிவு, ஆற்றல் மனப்பாங்கு என்பவற்றை விருத்தி செய்வதற்கான மிக முக்கிய விவசாய பயிற்சி நிறுவனமாகும். 2010 ஆம் ஆண்டில் மொத்தமாக 352 பயிற்சிகள் (6958 மனித நாட்கள்) நடாத்தப்பட்டன. இவற்றில் அதிகாரிகளுக்காக 80 (5811 மனித நாட்கள்), விவசாயிகளுக்காக 7 (907 மனித நாட்கள்) களப் பயிற்சிகள் 38 (709 மனித நாட்கள்) ஆகும். மேலும் 89 பயிற்சிப்பட்டறைகள், மாநாடுகள்,கூட்டங்கள் நடாத்தப்பட்டன. (8848 மனித நாட்கள்), மேலும் 5 வெளிக்கள பயிற்சிகள் (142 மனித நாட்கள்) நடாத்தப்பட்டன.

சேவைக்கால பயிற்சி நிறுவகம் - அங்குணகொலபெலஸ்ஸ

இந்நிறுவனமானது காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் விவசாய உத்தியோகத்தர்கள், விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குகின்றது. இந்நிறுவனத்தினால் மொத்தமாக 95 பயிற்சிகள் (3949 மனித நாட்கள்), நடாத்தப்பட்டன. இவற்றில் அதிகாரிகளுக்கு 42 உம் (3036 மனித நாட்கள்), விவசாயிகளுக்கு 13 உம் (424 மனித நாட்கள்)ஆகும். மேலும் 4 பயிற்சி பட்டறைகள் மாநாடுகள், கூட்டங்கள், கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளன (186 மனித நாட்கள்). அத்துடன் 4 களப் பயிற்சிகள் (480 மனித நாட்கள்), 5 வெளிக்கள பயிற்சிகள் (234 மனித நாட்கள்) ஆகியனவும் நடாத்தப்பட்டன.

சேவைக்கால பயிற்சி நிலையம், ஹன்ஸயாபாலம - அரலகன்வில

இந்நிறுவனமானது விஷேடமாக மஹாவலி பி,சி,ஜி, வலயங்கள்; அம்பாரை, பொலன்னறுவ,மஹியங்கன ஆகிய பிரதேசங்களிலுள்ள விவசாய உத்தியோகத்திர்கள் விவசாயிகளுக்குரியது. இந்நிறுவனத்தினால் மொத்தமாக 55 பயிற்சிகள் (4667 மனித நாட்கள்) நடாத்தப்பட்டன. இவற்றில் 19 அதிகாரிகளுக்காகவும் (527 மனித நாட்கள்) 36 விவசாயிகளுக்காகவும் (4620 மனித நாட்கள்) நடாத்தப்பட்டன. மேலும் 41 களப்பயிற்சிகள் (1872 மனித நாட்கள்) 01 வெளிகளப் பயிற்சிகள் (35 மனித நாட்கள்) ஆகியனவும். நடாத்தப்பட்டன.

பண்ணை இயந்திரமயமாக்கல் பயிற்சி நிலையம் (FMTC)

அநுராதபுரத்தில் அமைந்துள்ள இந்நிறுவனமானது பண்ணை இயந்திரங்கள் தொடர்பான பயிற்சி வழங்குகின்ற தேசிய மட்டத்திலான ஒரே ஒரு நிறுவகமாகும்.FMTC ஆனது பல்வேறு பண்ணை இயந்திரங்கள் உபகரணங்களான டிராக்டர்கள்,நீர் இறைக்கும் இயந்திரம், தாவர காப்பு உபகரணங்கள், நெல் விதைக்கும் உபகரணங்கள் அருவி வெட்டிகள் இணைந்த அருவி வெட்டிகள் கை வலு உபகரணங்கள் என்பன தொடர்பான பயிற்சிகளை வழங்குகின்றன. மேலும் இந்நிறுவனமானது நுண் நீர்ப்பாசன தொழில்நுட்பத்தினை விவசாயிகள் மத்தியில் பிரபல்யப்படுத்தவும் முயற்சிகளை மேற்கொள்கின்றன.மேலும் விவசாயிகள் விவசாய உத்தியோகத்தர்கள் , பல்கலைக்கழக மாணவர்கள் விவசாயப் பாடசாலை மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், போன்றோருக்கும் பண்ணை இயந்திரங்கள் தொடர்பான தனியார் நிறுவனங்களுக்கும் தமது சேவைகளை வழங்குகின்றன.

இவ்வருடத்தில் இந்நிறுவனத்தினால் அதிகாரிகளுக்காக (695 மனித நாட்கள்), விவசாயிகளுக்காக 5 பயிற்சிகள் (252 மனித நாட்கள்) 34 களப் பயிற்சிகள் (3610 மனித நாட்கள்), 05 பயிற் சிப் பட்டறைகள், மாநாடுகள், கூட்டங்கள் (272 மனித நாட்கள்), 01 வெளிகளப் பயிற்சிகள் (20 மனித நாட்கள்) போன்றவற்றை நடாத்தியுள்ளது.

மாவட்ட விவசாயிப் பயிற்சி நிலையம் – வீரவில

இந் நிலையமானது, இவ்வருடத்தில் விவசாயிகளுக்கான 13 பயிற்சி நிகழ்ச்சிகளையும், அலுவலருக்கான 06 பயிற்சிகளையும், பாடசாலை மாணவர்களுக்கான 11 பயிற்சிகளையும் நடாத்தியது. அத்துடன் 21 விவசாய ஆராய்ச்சி உதவியாளர் களுக்கான (தொகுதி 2009) ஒரு பயிற்சியை மே 2010 ல் நிறைவு செய்தது.

மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் – அம்பாறை

மொத்தமாக 33 பயிற்சி நிகழ்ச்சிகள் (3324 மனிதநாட்கள்) நடாத்தப்பட்டன. இவற்றுள் 91 நிகழ்ச்சிகள் அலுவலர்களுக்காகவும் (261 மனித நாட்கள்) விவசாயிகளுக்காக 15 உம் (502மனித நாட்கள்) 09 ஏனையோருக்கும் (841 மனித நாட்கள்) 25 வயல் தரிசனங்களும் (600 மனித நாட்கள்) விவசாயிகளுக்கான 06 வெளியகப் பயிற் சிகளும் (250 மனிதநாட்கள்) அடங்கும்.

பெண்களுக்கான விவசாய விரி வாக்கல் நிகழ்ச்சிகள்

"பண்ணை பெண்கள் அமைப்பின் ஊடாக உணவு, போசனை தரமுயர்த்தல்" எனும் விசேட நிகழ்ச்சித் திட்டம் ஒன்றும், செறிவூட்டல் பட்ட 150 நாள் அபிவிருத்தி திட்டம் ஒன்றம் 28 மாகாண மாகாணங்களுக்கிடைப்பட்ட பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. பெண்கள் விவசாய விரிவாக்க திட்டத்தின் கீழ் 234 விரிவாக்க உத்தியோகத்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டன. மானி டப் போசனை, விவசாய வர்த்தக உற்பத்திகள், வள முகாமைத்துவ ஆகிய துறைகளில் 25,057 பண்ணைப் பெண்கள் பயிற்றுவிக்கப்பட்டன.

1148 அங்கத்தவர்களுடன் கூடிய 456 விவசாய அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டன.

50% பண்ணையாளர்களின் பங்களிப்புடன் கூடிய 31 நடமாடும் விற்பனைப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன.

விவசாய உற்பத்தி நிறுவன அபிவிருத்தி தகவல் சேவை (AgEDIS)

AgEDIS ன் சட்டங்கள் மூலம் புதிய விவசாய உற்பத்தி நிறுவனங்களைத் தொடங்கவும் இருக்கின்ற விவசாய உற்பத்தி நிறுவனங்களை அபிவிருத்தி செய்யவும் தேவையான தகவல்களையும், சேவைகளையும் வழங்க முடிகிறது. இவ்வருடத்தில் விவசாய வர்த்தக உற்பத்தி நிறுவன அபிவிருத்தி தொடர்பாக 10 பயிற்சி நிகழ்ச்சிகளையும் (499 மனித நாட்கள்) நடாத்தியது. அத்துடன் விவசாய அமைச்சின் நிதியுதவியுடன் விவசாய உற்பத்தியாளர் களுக்கு சேவை வழங்கும் நோக்குடன் பொது மக்கள் – தனியார் இணை நிகழ்ச்சியுடன் சேர்ந்த ஒரு விஷேட நிகழ்ச்சித் திட்டமாகிய "குருசி சேவா பியச" ஒருங்கிணைக்கப்பட்டு நடாத்தப்பட்டது.

தேனீ அபிவிருத்திப் பிரிவு பிந்துனுவெவ – பண்டாரவெல

பிரதான தேனீ வளர்ப்புப் பிரிவு பண்டார வெலயில் அமைந்துள்ளதுடன் அதன் உப பிரிவு மாவத்தகமவிலும் அமைந்துள்ளது. இவ்வருடம் பின்வரும் செயற்பாடுகள் நடைமுறை ப்படுத்தப்பட்டன.

- தேனீ வளர்ப்பு
- தேனீ உற்பத்தி, பதப்படுத்தல் பயிற்சி.
- தனியார் உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட தேனீ வளர்ப்பு உபகரணங்கள் தொடர்பான பயிற்சி.
- தனியார் – அரச நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி.
- தேனீ அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சி நிகழ்ச்சிகள்.

இவ்வருடம் 307 கிலோ கிராம் தேனீ உற்பத்தி செய்யப்பட்டதுடன், 73 தேன் வதைகளும், 826 தேனீ பெட்டிகளும் உற்பத்தி செய்யப்பட்டன. அலுவலர் களுக்கான தேனீ வளர்ப்பு தொடர்பான 04 பயிற் சிகளும் (219 மனித நாட்கள்) விவசாயிகளுக்கான 11 நிகழ்ச்சிகளும் (492 மனித நாட்கள்) தேனீ வளர்ப்பு உபகரணங்களின் உற்பத்தித் தொடர்பான 04 பயிற்சி நிகழ்ச்சிகளும் (86 மனித நாட்கள் நடாத்தப்பட்டன.

இளைஞர் விவசாயிகள் கழகம் (YFC), நடமாடும் விரிவாக்கல் சேவைப் பிரிவும்

கிராம மட்டத்தில் நிலைபேறான நிறுவன ங்களை உருவாக்குவதன் மூலம் சுயமாக வாழக் கூடிய இளைஞர்களை உருவாக்குதல், நவீன விவசாய தொழில்நுட்ப அறிவினடிப்படையில் விவசாயிகளை உருவாக்குதல், தொழில்முயற் சிகளை உருவாக்கக்கூடிய ஆற்றல்களை உருவா க்குதல் வேலை இல்லாப் பிரச்சினையை விவசாயம் மூலம் குறைத்தல் என்பன இளைஞர் விவசாய கழகத்தின் முக்கிய நோக்கமாகும்

இவ்வருடத்தில் இளம் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக நாடளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. மொத்தமாக 07 பயிற்சிகள் உத்தியோகத்தர்களுக்காகவும் 35 பயிற்சிகள் இளம் விவசாயிகள் கழகத்தின்

அங்கத்தவர் களுக்காகவும் 83 கலாசார நிகழ்ச்சிகள், 95 சமய நிகழ்ச்சிகளும், 87 கல்வி நிகழ்ச்சிகளும், 87 சமூக நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன.

நீர்ப்பாசன முகாமைத்துவம், உயர்தர விவசாய தொழில்நுட்பப் பிரிவு

இவ்வருடத்தில் இப்பிரிவானது நுண் நீர் ப்பாசனத்தை, பிரபல்யப்படுத்தல் பாதுகாக்கப்பட்ட விவசாயம், பப்பாசிப் பயிர் அபிவிருத்தி (AWRN) நாற்றுமேடை, தனியார் அரச நிறுவனங்களிற்கான நீர்பாசன, பசளைப்பிரயோகம் ஆகிய துறை களில் உயர் தர தொழில் நுட்பம் தொடர்பான நிகழ்ச்சிகளை நடாத்தியது.

மேலும் இந்நிறுவனம் நுண் நீர்ப்பாசனம் பாதுகாக்கப்பட்ட விவசாயம்,பாரிய அளவிலான வியாபார பண்ணைகளை அமைத்தல் போன்றவை தொடர்பான பயிற்சிகளை வழங்குவதுடன் இத்தொ ழில் நுட்பங்களிற்கான பிரதான வளநிலையமாகவும் தொழில்படுகின்றது.

திட்டமிடல், முன்னேற்ற கண்காணிப்புப் பிரிவு

இப்பிரிவானது திட்ட நடவடிக்கைகளை தயாரித்தல், நிதி, தொழில்நுட்ப நடவடிக்கைகளின் கண்காணிப்பும் மதிப்பீடும், விரிவாக்கல் பயி ற்சி பிரிவால் மேற்கொள்ளப்படுகின்ற விசேட கருத்திட்டங்கள் தொடர்பான பொறுப்புக்களையும் கொண்டது. வருடாந்தம் மேற்க்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சிகளின் அடைவுகளை தீர்மானிப்பதிலும் பிரிவுகளின் தகவல்களை வழங்குதவதன் மூலம் விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த நிருவாக அறிக்கையைத் தயாரிப்பதற்கும், மத்திய வங்கி அறிக்கைக்கும், பாதீட்டு உரைக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் இப்பிரிவு உதவி செய்கிறது. விசேட கருத்திட்டங்களின் ஊடாக நிகழ்ச்சிகளை பொறுபேற்று மேற்கொள்கின்றது.

தொலைக்காட்சி, பண்ணை ஒலிபரப்புச் சேவை

இச் சேவையானது மும்மொழிகளிலும் நாடளாவிய ரீதியில் விவசாய நிகழ்ச்சிகளை பல்வேறு வானொலி அலைவரிசைகளினூடாக ஒலிப்பரப்புச் செய்கின்றது.

ஒலி, ஒளி நிலையம்

கண்ணொறுவை, படஅத்தவில் அமைந்துள்ள விவசாய தொழில்நுட்பப் பூங்காக்களை பரிபாலனம் செய்தல் ஒலி, ஒளி நிலையத்தி னால் மேற் கொள்ளப்படுகின்றது.கண்ணொறுவ விவசாய பல்கூட்டுத் தொகுதியானது 2004ம் ஆண்டு அயனமண்டல விவசாயப் பூங்கா / விவசாய விஞ்ஞான தோட்டம் / பயிர் நூதன சாலையாக மாற்றப்பட்டது. அதிக பொது மக்கள் மாணவர்கள், விவசாயிகள், தொழில் முயற்சி யாளர்கள், போன்றோரை பெரிதும் கவர்கின்ற இடமாகத் திகழ்கின்றது.

தேசிய விவசாய தகவல் வலையமைப்பு (சைபர் விவசாய விரிவாக்கல்)

விவசாய துறையில் விரைவான தகவல் பரிமாற்ற வலையமைப்பினை ஏற்ப்படுத்தல் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். எதிர்காலத்தில் அனைத்து கமநல சேவைகள் நிலையத்திலும் கிராமிய தகவல் நிலையங்களை ஏற் படுத்தி அவற்றை விரிவாக்கல் பயிற்சிப் பிரிவுடனும் விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களுடனும் தனியார் நிறுவனங்களுடனும் தொடர்புப்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. ஆரம்பக் கட்டமாக குறுந்தட்டுக்களின் உதவியுடன் தகவல் பரிமாற்ற அமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டது.

கிராமிய மட்ட விரிவாக்கல் உத்தியோகத்தர கள் குறைந்த செலவிலான கற்கை ஆதார ங்களைத் தயாரிப்பதற்கான வழிகாட்டியாக ஏற் கனவே ஒலி, ஒளி நிலையத்தினால் புரட்டும்தாள் தொழில்நுட்பம் தொடர்பான குறுந்தட்டொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

DOA இன் கட்புல செவிபுல நிறுவனத்தினால் புரட்டும் தாள் தொடர்பான CD ROM உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இவை கிராம மட்டங்களில் கிராமிய விரிவாக்க உத்தியோகத்தர்களால் இலகுவாகவும் குறைந்த செலவிலும் கட்புல செவிப்புல சாதனங்களை உற்பத்தி செய்து பயிற்சி வகுப்புகளை நடாத்த உதவும் பண்ணையாளர்கள் இப்பிரிவுக்கு உயிர் மாதிரிகளை கொண்டு வந்து மின் தகவல் அனுப்பும் தொழில்நுட்பத்தின் ஊடாக ஆராய்ச்சி நிலையத்திற்கு படங்களை அனுப்புகின்றனர்.

மேற்படி தகவல் வலையமைப்பின் பெறுமதியை உணர்ந்த கிழக்கு மாகாண சபை 31 பிரிவுகளை தங்களது நிதியுதவியுடன் ஆரம்பித்துள்ளது. வர்த்தக ரீதியிலான விவசாயிகளுக்கு சந்தைப் படுத்தலில் உதவும் முகமாக பூச்சிய விரி வாக்கல் பிரிவினால் ஓர் தகவல் தளம் அறி முகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தகவல் தளத்தில் விவசாயிகளின் பெயர், பயிரிடப்பட்ட பயிர் வகை, பயிர்ச்செய்கை விஸ்தீரணம், பயிர் எதிர்வுகூறல் ஆகியன உள்ளடக்கப்பட்டன.

கட்புல செவிப்புல நிலையத்தினால் 2010 இல் உருவாக்கப்பட்ட ஏனையவை வருமாறு; 101 ஒளி, வானொலி நிகழ்ச்சிகள், 1622 வரைபட தொடர் பாடல்கள், 8 பயிற்சிகள், 44398 ஆலோசனை சேவைகள் என்பனவாகும்.

தகவல் நிலையம்

DOA இன் அச்சிடப்பட்ட வெளியீடுகளை பகிர்ந்தளிப்பதுவும் இப்பிரிவின் கடமையாகும். பிரதான விற்பனை நிலையம் பேராதனையில் அமைந்துள்ளதுடன் நாடு முழுவதும் 34 துணை விற்பனை நிலையங்களும் காணப்படுகின்றன. இந்த வருடத்தில் 115, 729 வெளியீட்டுப் பிரதிகளும், 1387 CD Rom களும் விற்பனை செய்யப்பட்டு வருமான மாக 4,045,026/- பெறப்பட்டது.

விவசாயக் கல்வி

குண்டசாலை, பெல்வெஹர, அங்குணகொலபெலஸ்ஸ, வவுனியா, கரபிஞ்ஞா ஆகிய இடங்களிலுள்ள 5 விவசாயக் கல்லூரிகளும் 2 வருட விவசாய டிப்ளோமா பட்டத்துக்கான நிகழ்ச்சிகளை தொடருகின்றன. லபுதுவ, வாரிய பொல, அநுராதபுர ஆகிய விவசாயக் கல்லூரிகள் விஷேடப் பயிற்சி நிலையமாக தொழிற்படுவதுடன் விவசாயத்தில் குறுகிய கால பயிற்சிகளை வழங்குகின்றன. மேற்படி 5 விவசாயக் கல்லூரி களிலும் 226 மாணவர் விவசாய டிப்ளோமா கற் கையின் இரண்டாம் வருட பயிற்சி நிகழ்ச்சியில் இவ்வருடத்தில் உள்ளனர். விவசாயக் கல்லூரிகளில் உள்ள மாணவர்களின் விபரங்கள் அட்டவணை 3.6.5 இல் தரப்பட்டுள்ளன. 2010ம் ஆண்டில் 106 மாணவர்கள் விவசாய டிப்ளோமா பட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளனர்.

விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி உற் பத்தி உதவியாளர்களுக்கான (ARPA) ஒரு வருட விவசாயச் செய்முறை பயிற்சி நெறி

மேற்படி ARPA மாணவர்கள் கமநல அபிவிருத்தி திணைக்களத்துடன் இணைக்கப்படுகின்றன. 2010/2011 ல் பயிற்றுவிக்கப்பட்ட ARPA களின் விபரம் வருமாறு (அட்டவணை 3.6.6).

அட்டவணை 3.6.5 அச்சுப்பிரதிகளின் விற்பனை (சிங்களம், தமிழ்)

தலைப்பு	சிங்களம்	தமிழ்
வீட்டுத் தோட்டம்	30,187	1,241
தேனீ வளர்ப்பு	3,683	281
நோயற்ற வாழைச் செய்கை	1,085	
காளான் செய்கை	5,267	349
தோடையும் நாரத்தையும்	2,061	
போசணை	54	
கிழங்குகள் சார்ந்த உணவு வகைகள்	329	
பழப்பயிர்களில் பீடைகளை அடையாளம் காணல்	627	145
நீர்வளர்ப்பு	303	
குட்டையான அம்பரல்லா	466	
வீட்டுத் தோட்டப் பயிர் சார்ந்த உணவுகள்	426	
ஆனைக்கொய்யா		129
இலங்கையின் மழை வீழ்ச்சியும் சூழலியல் வலயங்களும்	1,021	
பழங்களின் அறுவடைக்கு பின்னான தொழில் நுட்பம்	1,036	
நீர்ப்பூசணிச் செய்கை	1,043	76
வீட்டுத் தோட்ட பயிர்களிலான முறுக்கு	1,303	
ஒருங்கிணைந்த தாவரப் போசணை தொகுதி	175	122
மா செய்கை	1,531	
நெல்லிற்கான பசளைப் பாவனை	552	
நெற்செய்கையின் நோய்கள்	3,064	139
விவசாய தொழில்நுட்பம்	8,000	1,201
சிபாரிசு செய்யப்பட்ட நெல் வர்க்கங்கள்	723	143
இலங்கையில் விவசாய சூழலியல் வரைபடம்	356	
கொய்யாச் செய்கை		118
ரம்புட்டான் செய்கை		160
திராட்சை செய்கை		276

தலைப்பு	சிங்களம்	தமிழ்
மரக்கறி செய்கை	9,774	781
சேதனப் பசளை பாவனை	9,584	691
வாழையின் பிரதான பீடைகள்	2,639	
அன்னாசி	934	
பெரிய வெங்காய செய்கை	594	541
மர நடுகை	584	
அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல் உற்பத்தி	1,072	194
நெற் செய்கையிலிருந்து அதிக விளைச்சல்	1,341	282
பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்	688	
விதைகளைக் களஞ்சியப்படுத்தல்	867	274
கொடிதோடை	865	
சுய விதைநெல் உற்பத்தி	662	
இலங்கையின் பழங்களின் போசணைப் பெறுமானம்	476	
இளையவளர்ப்பு	1,202	
வீட்டு உணவு தொழில்நுட்பம்	1,200	
அரசியிலிருந்து புதிய சுவை	1,070	
கத்தரிச் செய்கை	407	
நெற்செய்கையில் களப்பிரச்சினைகள்	2,075	239
மாதுளைச் செய்கை	1,550	373
தேன் உற்பத்திற்கான தேனீ வளர்ப்பு	613	
மங்குஸ்தீன்	203	121
பலாச் செய்கை	94	82
வேம்பு		190
விளாச் செய்கை		136
மிளகாய்ச் செய்கை		181
வாழைச் செய்கை		565

அட்டவணை 3.6.5: 2010ம் ஆண்டில் விவசாயப் பாடசாலைகளின் மாணவர் எண்ணிக்கை

விவசாயப் பாடசாலை	வருடம்	மொழி மூலம்						மொத்தம்	முழு மொத்தம்
		சிங்களம்		தமிழ்		ஆங்கிலம்			
		ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்		
குண்டசாலை	01ஆம்	33	29	17	12	08	10	109	207
	02ஆம்	24	20	06	14	12	07	98	
அங்குணகொல பெலஸ்ஸ	01ஆம்	22	10	–	–	–	–	32	82
	02ஆம்	40	10	–	–	–	–	50	–
பெல்வெஹர	01ஆம்	30	12	–	–	–	–	42	88
	02ஆம்	38	08	–	–	–	–	46	–
வவுனியா	01ஆம்	–	–	10	08	–	–	18	50
	02ஆம்	–	–	13	19	–	–	32	–
கரபிஞ்சா	01ஆம்	23	–	–	–	–	–	23	23
	02ஆம்	–	–	–	–	–	–	–	–
மொத்தம்		***210***	***89***	***51***	***56***	***16***	***28***	***450***	***450***

அட்டவணை 3.6.6: 2010ம் ஆண்டில் பயிற்சிகளின் முன்னேற்றம்

பயிற்சி நிலையம்	ARPA எண்ணிக்கை		ARPA மொத்த எண்ணிக்கை
	குழு *1*	குழு*11*	
விவசாயப் பாடசாலை அநுராதபுரம்	21	19	40
விவசாயப் பாடசாலை வாரியபொல	36	40	76
விவசாயப் பாடசாலை லபுதுவ	20	34	54
பூங்கனியியல் பயிற்சி, அபிவிருத்தி நிலையம், பிபில	26	34	60
முழுமொத்தம்	***101***	***128***	***229***

பரீட்சைப் பிரிவு

பின்வரும் பரீட்சைகள் 2010ம் ஆண்டில் பரீட்சை பிரிவினால் நடாத்தப்பட்டது.

- விவசாயப் பாடசாலைகளுக்கான புதிய அனுமதி (அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை 225)
- டிப்ளோமா பாடநெறிப் பரீட்சைகள் (416 மாணவர்கள்)
- விவசாயப் போதனாசிரியர்களுக்கான திணைக்களப் பரீட்சை (186 விவசாயப் போதனாசிரியர்கள்)
- விவசாயப் பாடசாலைகளில் ஒரு வருட கற்கை நெறிக்கான பரீட்சைகள் (198 ARPAs)
- SLAgS உத்தியோகத்தர்கள், விவசாயப் பொறியியலாளர்கள், சாரதிகள், விதை தொழில்நுட்பவியலாளர்கள் ஆகியோருக்கான தடைகாண் பரீட்சைகள்
- வாய் மூலப் பரீட்சை (சிங்களம், தமிழ்)

2011ம் ஆண்டிற்கான திட்டம்

விசேட கருத்திட்டம்

ஊடக நிகழ்ச்சிகள் – நிதி ஒதுக்கீடு ரூபா 20 மில்லியன்கள்

விவசாயப் பாடசாலைகளிலும் பயிற்சி நிலையங்களிலும் நில அபிவிருத்தி

விவசாயப் பாடசாலைகளிலும் பயிற்சி நிலையங்களிலும் பயிற்சி, தகுதி மேம்பாடு

விவசாய பூங்கா– கண்ணொருவை, படஅத்த

இடை மாகாணப் பிரதேசத்தில் அவரைத் தாவரச் செய்கை

சேதன வளமாக்கி உற்பத்தியும் பாவனையும்

நாம் பயிரிடுவோம் தேசத்தைக் கட்டியெழுப்புவோம் நிகழ்ச்சியின் ஊடாக நிகழ்ச்சிகள்

மாகாணங்களுக்கிடையிலான பிரதேசங்களில் மறுவயற்பயிர்களை நடல்

தேன் உற்பத்தியை அதிகரித்தல்

நெல் உற்பத்தி திறன் மேம்பாடு

சமூகம் சார்ந்த விதை உற்பத்தி நிகழ்ச்சிகள்

பிபிலை HTDI சித்திரசு தாவர உற்பத்தி

பிபிலை HTDI சோளச் செய்கை

மாதிரி கிராமங்களை உருவாக்குதல்

வேறு வழமையான விவசாய நிகழ்ச்சிகள்

மாகாணங்களுக்கிடையிலான பிரதேசம்

நெல் யாய எண்ணிக்கை 73,332

யாயவின் கீழுள்ள பரப்பு 249,742 ha

நெல் பயிற்சி வகுப்புக்களின் எண்ணிக்கை 24,213

நெல் பயிற்சி வகுப்புக்களின் பங்குப்பறியோர் எண்ணிக்கை 551, 437

அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைநெல் உற்பத்தி நிகழ்ச்சி பரப்பு 9116 ha

அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைநெல் உற்பத்தி நிகழ்ச்சி விவசாயிகளின் எண்ணிக்கை 44,388 ha

விவசாய தகவல் தொடர்பாடல்

'கொவிகம் சங்கராவ' அச்சிட்டு விநியோகித்தல் 32,000 பிரதிகள்

'Agtec'அச்சிட்டு விநியோகித்தல் 28,800 பிரதிகள்

வானொலி நிகழ்ச்சிகள் 3,488

குறுந்தகவல்கள் 3,036

கேள்வி பதில் நிகழ்ச்சிகள் 720

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் 100

விவசாய ஆலோசனைச் சேவை 37,200 விவசாயப் பிரச்சினைகளுக்கு ஆலோசனை வழங்குதல்

விவசாய கற்கை

டிப்ளோமா பாடநெறி மாணவர்கள் எண்ணிக்கை 480 (1ம் 2ம் வருடங்கள்)

பயிற்சிகள்

உத்தியோகத்தர்கள், விவசாயிகள், விவசாயப் பாடசாலை மாணவர்கள் மற்றும் விவசாயம் தொடர்பான ஏனையவர்கள் என 33,087 பயிற்சிகள்

உத்தியோகத்தர் பட்டியல்

தொழில் தலைப்பு	இல
பதில் கடமை பணிப்பாளர்	01
பிரதிப் பணிப்பாளர்	01
பதில் கடமை பிரதி பணிப்பாளர்	02
உதவி பணிப்பாளர்	28
விவசாய உத்தியோகத்தர்	13
விரிவுரையாளர்	61
பாடவிதான விசேட நிபுணர்	16
இயந்திரவியல் பொறியியலாளர்	01
விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர்	27
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்	36
ஊடக உதவியாளர்	03
ஒலி ஒளி உதவியாளர்	05
விவசாய போதனாசிரியர்	349
ஆராய்ச்சி உதவியாளர்கள்	02
பண்ணை இயந்திரப் போதனாசியரியர்	01
இயந்திரவியல் அலுவலர்	01
விவசாய விரிவாக்கல் சேவை அலுவலர்	01
புகைப்பட வல்லுனர்	01
தொகுப்பாளர்	03
பழுதுப்பார்ப்பவர் (ஒலி ஒளி தொழில்நுட்பம்)	01
ஓவியர்	02
தேனீ வளர்ப்பவர்	06
தேனீ போதனாசிரியர்	01
இயந்திரம் இயக்குபவர்	02
இயந்திரம் இயக்குபவர்	05
இயந்திரம் மூலம் வெட்டுபவர்	03
சினிமா இயக்குனர்	04
நூலகப் பொறுப்பாளர்	01
நிருவாக உத்தியோகத்தர்	02
முகாமைத்துவ உதவியாளர்	109
சேவை (மொழிப்பெயர்ப்பாளர் ஆங்கிலம்)	01
களஞ்சியப் பொறுப்பாளர்	03
புத்தகம் கட்டுபவர் (அச்சகம்)	01
பணணை எழுதுவினைஞர்	05
காரியாலய உதவியாளர்	15
நேரப்பொறுப்பாளர்	01
உணவுப் பொறுப்பாளர்	01
சமையலாளர்	30
பாதுகாப்பு உத்தியோகத்தர்	60
துப்பரவு செய்பவர்	09
சாரதி	71
லொறி உதவியாளர்	4
உலோக ஒட்டு வேலை செய்பவர்	01
உலோக வேலை செய்பவர்	01
நிறப்பூச்சு வேலை செய்பவர்	01
நில அசைவு இயந்திரம் ஓட்டுபவர்	11
நீர் இறைக்கும் இயந்திரம் இயக்குவர்	01
இயந்திர அறை உதவியாளர்	02
தொழிலாளர் (3ம் வகுப்பு)	250
மொத்தம்	1158

4.1 நிருவாகப் பிரிவு - பேராதனை

நியமனத்திலிருந்து ஓய்வு பெறும் வரை யான காலப்பகுதியின் போதுள்ள பல்வேறு தாபன விடயங்கள் பற்றிய செயலாற்றல் என நிருவாகப் பிரிவின் பங்கினை சுருக்கமாக வரையறுக்கலாம். அத்துடன் கல்வி விடுமுறை வழங்கல் பொதுவான நடத்தைகள் என்பவற்றுடன் தொடர்புடைய விடங்களும் இப்பிரிவின் பணிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப்பிரிவானது பல்வேறு முறைப்பாடுகள் தொடர்பாக, அரசாங்க சேவை ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம், பராளுமன்ற ஆலோசனைக்குழு, பாராளுமன்ற விவகார ஆணையாளர் அலுவலகம் போன்ற அமைப்புகளுடன் ஏனைய அமைச்சுகள் திணைக்களங்கள் ஆகியவற் றுடன் தொடர்பு கொள்ள வேண்டியுள்ளது. விவசாய அமைச்சின் வழிகாட்டல் அறிவுறுத்தல் என்பவற்றுக்கிணங்க இவ் அனைத்து செயன்முறை களையும் ஒருங்கிணைக்கும் பணி இப்பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பாதீடு

2010 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவுகளும் பெறப்பட்ட நிதியொதுக்குகளும் அட்டவணை 4.1.1 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 4.1.1:வருடாந்த பாதீடு - 2010 (ரூபா)

தலைப்பு	நிதியொதுக்குகள்	செலவுகள்	செலவு வீதம்%
மூலதனம்	5,020,000	4,819,244	96
மீண்டுவரும் செலவு	10,938,535	10,255,934	94
மொத்தம்	15,958,535	15,075,178	94

முன்னேற்றம்

நியமனங்கள்

